


வற்றாப்பளைக் கண்ணகி அம்மன்
கருணை மலர்
இராஜ கோபுர மணிக்கோபுர
மஹா கும்பாபிஷேக
சிறப்பு மலர் 2011







வரலாற்றுப் புகழ்மிக்க வற்றாப்பளை

# ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய

பஞ்சதள இராஜகோபுர, மணிக்கோபுர

# மஹா கும்பாபிஷேகம்

**20-04-2011 புதன்கிழமை**

நிகழும் மங்களகரமான கர வருஷம் சித்திரை மாதம் 7ம் நாள் (20-04-2011) புதன்கிழமை பகல் 9 மணி 39 நிமிடம் முதல் 11 மணி 20 நிமிடம் வரையுள்ள விசாக நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் மிதுன லக்கினமும் கூடிய சுபவேளையில் புதிதாக அமைக்கப்பெற்ற இராஜகோபுரம், மணிக்கோபுரம் ஆகியவற்றிற்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் அடியார்கள் வருகைதந்து அம்பிகை அருள்பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

**கிரியாகால விபரம்**

**சித்திரை 05ம் நாள் (18-04-2011) திங்கட்கிழமை**

பகல் 11.59 மணிக்கு கர்மாரம்பம், அனுக்ஞை, திரவியயாகம், திரவியசுத்தி, கணபதி ஹோமம், கிராமசாந்தி, பிரவேசபலி, நவக்கிரகஹோமம்.

மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கும்பபூஜை, தூபிஸ்தாபனம், கலஸ்தாபனம், கடஸ்தாபனம், யாகபூஜை, பஞ்சாக்கினி, விம்பசுத்தி, தீபாராதனை, வேத பஞ்சபுராண பாராயணம், விபூதி பிரசாதம் வழங்கல்.

**சித்திரை 06ம் நாள் (19-04-2011) செவ்வாய்க்கிழமை**

காலை 8.00 மணிக்கு புண்ணியாகவாசனம், குருவழிபாடு, யாகபூஜை, திரவ்யஹோமம், தீபாராதனை வேத பஞ்சபுராண பாராயணம்

மாலை 4.00 மணிக்கு புண்ணியாகவாசனம், குருவழிபாடு, யாகபூஜை, நியாசங்கள், மூர்த்திஹோமம், தீபாராதனை, வேத பஞ்சபுராண பாராயணம், விபூதி பிரசாதம் வழங்கல்

**சித்திரை 07ம் நாள் (20-04-2011) புதன்கிழமை**

காலை 6.00 மணி விநாயக வழிபாடு, குருவழிபாடு, யாகபூஜை, ஹோமவழிபாடு பூர்த்தி, கும்ப உத்தாபனம்

காலை 9.39 முதல் 11.20 வரையான முகூர்த்த வேளையில் இராஜகோபுர, மணிக்கோபுரத் தூபிகள் கும்பாபிஷேகம் நடைபெறும் தொடர்ந்து மூலமூர்த்தி அபிஷேகமும் விசேட பூஜையும் நடைபெற்று அம்பிகை கோபுர தரிசனம் இடம்பெறும்.

**ஆலய பிரதம குரு சிவாகமதுரந்தரர் பிரம்மஸ்ரீ சிவ கந்ததாசக் குருக்கள்**

## அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!

ஆலய பரிபாலன சபை

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் : ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்
ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

தொலைபேசி: 021 222 2870

## ஆசிச் செய்தி

வரலாற்றுச் சிறப்பு மிக்கவற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவிலில் இராஜகோபுரம் அமைத்துக் கும்பாபிஷேகம் காண்பதும் அது தொடர்பாகச் சிறப்பு மலர் வெளியிடுவதும் சைவ உலகினர் யாவருக்கும் மகிழ்ச்சி அளிக்கின்ற செய்தி.

கால்களாற் பயனென்? என வினவிய அப்பர் பெருமான் அழகான கோபுரம் சூழப்பெற்ற ஆலயத்தை வலம் வந்து வணங்குவதேயாகும் என்கிறார்.

அகில உலக நாயகியாக விளங்கும் அம்பிகையானவள் கண்ணகி என்ற நாமத்தோடு வற்றாப்பளையில் வீற்றிருந்து அருளாட்சி நல்குகின்றாள். அன்னையின் அடியவர்கள், ஆலயப் பெருமைகளை மனதிருத்தி அழகான பஞ்சதள இராஜகோபுரத்தை அன்னைக்கு அர்ப்பணமாக்கியுள்ளனர்.

இப்பெருமைமிகு பணிக்காக உழைத்த அனைத்து அடியவர்களுக்கும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கோபுரக் கும்பாபிஷேகம், கும்பாபிஷே மலர் வெளியீடு முதலிய கைங்கரியங்கள் சிறப்புற அமையப் பிரார்த்திக்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

## பரிபாலன சபைத் தலைவரின் செய்தி

**திரு.மு.குகதாசன்**
**தலைவர்**
**பரிபாலனசபை**

வரலாற்றுப் பெருமை மிக்க எங்களுடைய ஆலயத்துக்கு இராஜகோபுரம் அமைக்கும் பெரும்பணி 1982 இல் அன்றைய பரிபாலனசபைத் தலைவர் அமரர் தா. குமாரையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது அதன்பின் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் அடிக்கடி தடைப்பட்ட வேலைகள் யாவும் நிறைவுபெற்று தற்போது அழகிய இராஜகோபுரம் கம்பீரமாக எழுந்து நிற்பதனைக் காண மனம் நிறைவுறுகின்றது.

இராஜகோபுரத்துக்கு அணிசேர்க்க அழகிய மணிக் கோபுரம் அதனருகில் காட்சிதருகின்றது. அதற்குரிய மணியை இலண்டனில் இருந்து செய்வித்து தருவித்து தந்த கணுக்கேணியைச் சேர்ந்த திரு.பூ.கிருபாகரனுக்கு அம்மனின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

இன்றைய நாளில் அம்மனின் இராஜகோபுர மணிக்கோபுர கும்பாபிஷேக நிகழ்வுகள் நிறைவுறுகின்ற நிலையில் இதனை யொட்டி வெளியிடப்படுகின்ற கருணை மலருக்கும் அதன் ஆக்கக் குழுவினருக்கும் அம்மனின் அருள் கிட்டப் பிரார்த்திக்கிறேன்.

# வாழ்த்துச் செய்தி


**சு.கிருஷ்ணமூர்த்தி**

**செயலாளர்**

**ஆலயபரிபாலனசபை**


வன்னி மாவட்டத்திலே மிகப் பழம் பெருமை வாய்ந்த ஆலயமாகவும் தனக்கென பல தனிச் சிறப்புக்களையும் கொண்டு விளங்குவது வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயமாகும். இவ்வாலயத்தின் இராஜகோபுரம் மணிக்கூட்டுக் கோபுரம் என்பவற்றின் பணிகள் நிறைவு பெற்று கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளிவருகின்ற இவ்வேளையிலே வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

பல்வேறுபட்ட இடர்களுக்கு மத்தியிலும் இன்றும் தலை நிமிர்ந்து காட்சி அளித்துக்கொண்டிருக்கும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் இலங்கையில் மட்டுமல்ல கடல் கடந்தும் மக்களுக்கு இன்னருள் பாலித்துக் கொண்டிருக்கின்றாள் இவ் அம்மனின் பெருமை சொல்லிற்கடங்காதது. அம்மனின் அனுக்கிரகத்தாலும் இராஜகோபுரம், மணிக்கோபுரம் என்பவற்றின் பணிகள் முற்றுப்பெற்று கும்பாபிஷேகம் நடந்தேறியநிலையில் இன்று அதன் சிறப்பம்சமாக கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளிவருகின்றது இந்த வேளையில் கும்பாபிஷேக மலர் சிறப்பமைய வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்

**"மேன்மைகொள்சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

## மலராக்கக் குழுவினரின் செய்தி!..

ஈழத்திருநாட்டின் ஒப்பற்ற திருத்தலங்களுள் எங்களின் வற்றாப்பளைக்கண்ணகி அம்மன் ஆலயமும் ஒன்று. வளங்கள் நிறைந்த வன்னி ஒருகாலத்தில் பிச்சைக்காரர்கள் இல்லாத தேசம் என்று புகழ் பெற்றது. இன்றும் வன்னியின் தெருக்களில் வன்னியின் வாசிகள் எவரும் ஐயம் இரப்பதில்லை அதற்கெல்லாம் காரணம் எங்கள் அன்னையின் அருள்தான்.

"வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ...."

என்பதற்கிணங்க அவள் அனைத்தும் அறிந்தவள் நாங்கள் செய்த செய்கின்ற வினைகளுக்கேற்ப எங்களை தண்டித்தும் கண்டித்தும் திருத்துபவள் அவள்தான்.
அரசியல் பிழைத்தவர்க்கு அவளே கூற்றுவனாவாள் அக்கிரமத்தை அழிப்பதில் அவள் ஒருபோதும் பின்னிற்பதில்லை மதுரையையே தகனம் செய்தவளல்லவா அவள்.... அவளுக்கு அக்கிரமக்காரர்கள் எவர் என்று யாரும் சொல்லிக்காட்டத் தேவையில்லை.


அப்படிப்பட்ட எங்களின் தாய் ..எங்களது மண்ணில் உள்ளவர்களுக்கு அவர்களது வீடுகளில் இருக்கின்ற பெத்தாச்சி
அவளை பரிபூரணமாக நம்புபவர்களுடன் அவள் வாய் பேசுவாள்
இவ்வாறான எங்கள் தாய்க்கு இராஜகோபுரம் அமைக்கும் முயற்சி 1982இல் அப்போதய பரிபாலனசபைத் தலைவரும் பிரபல வர்த்தகருமான அமரர்.தா.குமாரையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. சிவதர்ம வள்ளல் "மில்க்வைற்" கனகராசா அவர்களும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் அடிக்கல் நாட்ட ஆரம்பமான திருப்பணி மூன்று தசாப்தங்களினை அண்மிக்கும் நிலையில் முற்றுப் பெற்றுள்ளது.

இன்று மணிக்கோபுரம், இராஜகோபுரம் என்பன கம்பீரமாகக் காட்சிதர அன்னை வீற்றிருக்கின்றாள். இந்த இராஜகோபுர, மணிக்கோபுர கும்பாபிஷேகம் 20.04.2011 இல் நடைபெற்றது.
இதனையொட்டி இந்த கருணைமலர் வெளியிடப்படுகின்றது.

இந்தப் புனிதபணியில் எம்மை ஈடுபட வைத்த எங்களுடைய தாயாம் கண்ணகித்தாய்க்கு சிரம் தாழ்த்துகின்றோம்!


-மலராக்கக் குழு-

# வட இலங்கைப் பட விளக்கம்



| ஆறுகள் | பட்டினங்கள் | குளங்கள் |
|---|---|---|
| 1. கனகராயன் ஆறு | 9. யாழ்ப்பாணம் | i. இரணைமடு |
| 2. பேராறு | 10. பரந்தன் | ii.முத்து ஐயன்கட்டுக்குளம் |
| 3. நாயாறு | 11. முல்லைத்தீவு | iii.பதவியாக் குளம் |
| 4. மா ஓயா | 12. மாங்குளம் | iv. இராட்சதக் குளம் |
| 5. யான் ஓயா | 13. ஒட்டு சுட்டான் | |
| 6. அருவியாறு | 14. நெடுங்கேணி | |
| 7. பறங்கியாறு | 15. புளியங்குளம் | |
| 8. மண்டதெல் ஆறு | 16. வவுனியா | |
| | 17. மதவாச்சி | |
| | 18.திருகோணமலை | |
| | 19. தலைமன்னார் | |
| | 20. வற்றாப்பளை | |

# வற்றாப்பளைப் பிரிவுப்பட விளக்கம்




## ஆறுகள்

1. பேராறு
2. வாவெட்டிக்குளம்
3. கணுக்கேணிக்குளம்
4. பாலைக்கட்டுவான் குளம்
5. சிலாவத்தைக் குளம்
6. இறால் குளம்
7. உடுப்புக் குளம்
8. முல்லைத் தீவு
9. சிலாவத்தை
10. தண்ணீரூற்று
11. குமாரபுரம்
12. முள்ளியவளை
13. வற்றாப்பளை
14. கேப்பா பிலவு

## ஆலயங்கள்

1. வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயம்
2. ஊற்றங்கரைப் பிள்ளையார் ஆலயம்
3. கல்யாணவேலவர் ஆலயம்
4. காட்டா விநாயகர் ஆலயம்
5. சித்திரவேலாயுதர் ஆலயம்
6. கற்பகப் பிள்ளையார் ஆலயம்
7. வீரகத்திப் பிள்ளையார் ஆலயம்
8. வட்டுவாகல் கன்னியார் ஆலயம்

# மலராக்கக் குழு

1. திரு.க. ஜெயவீரசிங்கம்
2. திரு.க. சபாஜிதன்
3. திரு.ப. தங்கவடிவேலு

தண்ணீரூற்று கலைவாணி அச்சகத்தினரின் ஒத்துழைப்புடன்........

அச்சுப்பதிப்பு கணனி வடிவமைப்பு - SPS ஆதவன் அச்சகம்
மில் வீதி, வவுனியா.

## நிர்வாக உறுப்பினர்கள் -2011

1. திரு.மு.குகதாசன் (தலைவர்)
2. திரு.க.ஜெயவீரசிங்கம் (உபதலைவர்)
3. திரு.சு.கிருஸ்ணமூர்த்தி (செயலாளர்)
4. திரு.இ.சபேசன் (பொருளாளர்)
5. திரு.செ.பாலகிருஸ்ணன்
6. திரு.ந.வன்னியராசா
7. திரு.கு.கிருஸ்ணபவன்
8. திரு.கு.முல்லைக்குமார்
9. திரு.செ. காசிப்பிள்ளை
10. திரு.இ.ரவீந்திரன்
11. திரு.க.சபாஜிதன்
12. திரு.ப.தங்கவடிவேலு
13. திரு.க.தயாநிதி
14. திரு.ம.விக்கினேஸ்வரன்
15. திரு.த.பேரின்பராசா
16. திரு.சு.சிவஞானம்
17. திருமதி.த.சிவபாலன்
18. திரு.இ.வேதநாதன்
19. திரு.ஆ.கோபாலசிங்கம்
20. திரு.சு.கணேசலிங்கம்
21. திரு.இ.மனோகரன்
22. திரு.வி.வினோஜன்
23. திரு.ந.பரஞ்சோதி
24. திரு.இ.சிவநாதன்
25. திரு.க. சின்னராசா
26. திரு.த.பரமானந்தம்

கணக்குப்பரிசோதனை

1) திரு.த.நிறோஜன்
2) திரு.க.கணேந்திரன்

# நிரந்தர அங்கத்தவர் விபரம்

1.) குலசேகரம் குடும்பம் பூசாரியார்) வற்றாப்பளை

2.) சின்னையா கந்தையா குடும்பம் வற்றாப்பளை

3.) கோணர் உடையார் - முருகேசு குடும்பம் தண்ணீரூற்று

4.) கதிர்காமர் - ஆறுமுகம் உடையார் குடும்பம் வற்றாப்பளை

5.) தம்பையா முதலியார் சபாரத்தினம் குடும்பம்

6.) ஆ.மு. கனகசபாபதி முதலியார் குடும்பம்


7.) தாமோதரி விதானையார் குடும்பம் - தண்ணீரூற்று

8.) வி.கணபதிப்பிள்ளை குடும்பம் - தண்ணீரூற்று

9.) சின்னையா உடையார் குடும்பம் முள்ளியவளை

10.) கிளாக்கர் வேலுப்பிள்ளை குடும்பம்

11.) போஸ்ற்மாஸ்ரர் பொன்னையா குடும்பம்



# பொருளடக்கம்


1. ஆலயமும் பிரதேச வழமைகளும் - திரு.மு.குகதாசன்

2. வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பொங்கல் கிரியா கரும விளக்கம் - திரு.சி.பாலகிருஸ்ணன்

3. அறநெறியும் நமது சமூக விழுமியமும் - திருமதி.த.சிவபாலன்

4. வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவில் பொங்கலும் கதிர்காமக் கரை யாத்திரையும் - திரு.ந.மயில்வாகனம்

5. வாழ்த்துப்பாமாலை - விஸ்வப் பிரம்மஸ்ரீ.செ.சண்முகநாதன்

6. வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயம் எதிர்கொண்ட சவால்களும் அவற்றின் பின்னான வளர்ச்சியும் - திரு. சு.கிருஸ்ணமூர்த்தி

7. என்தாயின் நினைவில் - திரு.ப.வரதன்

8. வற்றாப்பளைக் கண்ணகியின் அற்புதம் - திரு.கி.உதயகுமார் (உதவிகல்வி பணிப்பாளர்)

9. ராஜகோபுரம் - திரு.ச.லலீசன் (விரிவுரையாளர்)

10. ஈழத்து சக்தி வழிபாட்டு மரபில் வன்னிப்பிராந்தியம் - ஞானவேல் (விரிவுரையாளர்)

11. சக்தி வழிபாடு - பேராசிரியர் ஆ.வேதநாதன் Ph.D தலைவர் இந்து நாகரிகத்துறை

12. சிலம்பு கூறல் - தொகுப்பு அரியான் பொய்கை

13. அம்மன் ஆலய பூசாரிமார்களுக்கு அம்மன் காட்டிய அற்புதங்களும் வரலாறும் - திரு.கு. கிருஸ்ணபவன்

14. ஆலயக்காட்சிகள் - புகைப்படத்தொகுப்பு

# ஆலயமும் பிரதேச வழமைகளும்

திரு.மு.குகதாசன்
தலைவர்
பரிபாலனசபை

இந்து ஆலயங்களின் வழிபாட்டு முறைகள் பெரும்பாலும் ஒரே மாதிரியானவையாகவே அமைந்துள்ள போதும் ஆகம முறைப்படியான நித்திய வழிபாட்டுடன் கிராமிய பாரம்பரிய முறைப்படியான பொங்கல் நிகழ்வு எமது ஆலயத்தில் நடைமுறையிலுள்ளது. அதேபோல் ஆலய வருடாந்த கிரிகைகளைச் செய்யும் குடிமக்களின் கடமைகள் நிகழ்வுகளில் அயற்கிராம மக்களின் பங்களிப்பு நம்பிக்கைகள் ஆலயத்தை நிருவகிக்கும் பரிபாலன சபையும் அதன் உறுப்பினர்கள் தெரிவுசெய்யும் முறையும் என்பன தனித்துவமுடையன அவற்றினை விளக்குவதே இக்கட்டுரையின் முனைப்பாகும்.

வற்றாப்பளைக் கண்ணகையம்மன் ஆலயத்தின் விசேடதினமாக வாரந்தோறும் திங்கட்கிழமைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. திங்கட்கிழமைகளிலேயே ஆரம்பகாலத்தில் பூஜை ஒரேநேரமாக நடந்து வந்தது தற்போது எல்லா நாட்களும் மூன்று காலப்பூஜை நடைபெற்ற போதும் திங்கட்கிழமைகளில் மக்கள் வரவு அதிகமாகவே காணப்படுகின்றது. திங்கட்கிழமைகள், வெள்ளிக்கிழமைகள், மாதப்பூரணைதினங்கள் ஆடிஅமாவாசை, ஆடிச்செவ்வாய், நவராத்திரி, சிவராத்திரி, ஆடிப்பூரம், பங்குனி உத்தரம், வருடப்பிறப்பு, தைப்பூசம், மாசிமகம் முதலான சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆலய நாட்காட்டியில் அபிஷேகதினங்களும் உபயகாரர் விபரங்களும் அடக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் பங்குனி மாதத்திங்கள் தினங்கள் கார்த்திகைமாதத் திங்கட்கிழமைகள் விசேடதினங்களாகவும் அதிகமக்கள் கூடும் தினங்களாகவும் உள்ளன கடைசிப்பங்குனித்திங்களன்று மஞ்சோற்சவம் நடைபெறும்

வருடாந்தப் பொங்கல் தினம் வைகாசி (தமிழ்) மாதம் பூரணையும் விசாகமும் சேர்ந்த அல்லது அண்மித்த திங்கட்கிழமை நடைபெறும் பொங்கல் நிகழ்ச்சியின் ஆரம்பக்கிரிகை பாக்குத்தெண்டல் எனப்படும் இந்நிகழ்ச்சி பொங்கல் நடைபெறும் திங்கட்கிழமைக்கு பதினைந்து நாட்கள் முன்னதாகவுள்ள திங்கட்கிழமை (அமாவாசைக்கண்மித்த திங்கள்) அதிகாலை நடைபெறும் இதற்கடுத்த திங்கட்கிழமை பிற்பகல் தீர்த்தமெடுத்தல் நிகழ்வு நடைபெறும் மூன்றாவது திங்கள் பொங்கல் தினமாகும்.

இப்பொங்கலுக்குரிய கிரிகைகளை பரம்பரையாகச் செய்துவரும் பிராமணக்குருக்கள், மாப்பாண வேளாளர் குலத்தவரான பூசாரியார், அவர்களின் குடிமக்கள் அல்லது உதவியாளர்களான கோபியர், தச்சர், வண்ணார், பறையறைவோர், ஆகியோர் பங்குபற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் பரம்பரை பரம்பரையாக ஈடுபடுவோராவார். பயபக்தியாக விரதம் அனுட்டித்து இக் கருமங்களைச் செய்யுமிவர்கள் நோற்பாளர்கள் என அழைக்கப்படுவதுடன் ஒரே இடத்தில் தங்கி சமைத்து உணவுட்கொண்டு கடைமைகளைச் செய்வர்.

முதல் நிகழ்வான பாக்குத் தெண்டல் தீர்த்தமெடுத்தல் ஆகிய கிரிகைகள் முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள கண்ணகையம்மன் கோயில் மண்டபத்தில்லேயே ஆரம்பிக்கப்படுவது வழமை இதற்கான காரணம் என்ன? என விளங்கிக் கொள்வது நன்று

இளஞ்சிங்கமாப்பாணன் என்னும் வேளாளத் தலைவன் முள்ளியவளைப் பகுதியை தனதாட்சிக்குட்படுத்தித் தனது குடிமக்களுடன் குடியேறி வாழ்ந்ததாக வரலாறுண்டு முள்ளியவளை ஆட்சிப்பிரிவினுள் வற்றாப்பளைக்கிராமமும் அடங்கியிருந்தது வற்றாப்பளை முள்ளியவளையின் ஒரு பகுதியாக இருந்ததுடன் இருகிராமங்களிலும் வாழ்ந்த மக்களும் ஒரே குடும்பத்தினராகவும் உறவினராகவும் இருந்துள்ளனர். காட்டாவிநாயகராலயமே இரு கிராமங்களுக்கும் ஆலயமாயிருந்துள்ளது. அம்மன் வற்றாப்பளையில் அமர்ந்திருக்குமிடம் அப்போது வயல் நிலமும் சுற்றவரக் காடடர்ந்த வனவிலங்குகளின் நடமாட்டமுள்ள இடமாகவும் இருந்துள்ளது. 1900 ஆம் ஆண்டும் அதன் பிற்பட்ட காலத்திலுமே தற்போதைய ஆலயச் சூழலில் மக்கள் குடியமர்ந்தனர் இதன் காரணமாக மக்கள் குடியிருப்புக்களினதும் இரு கிராமங்களுக்கும் பொதுவான ஆலயமான காட்டா விநாயகராலயத்தில் அம்மன் கோயில் அமைத்து கும்பத்தில் அம்மனை ஆவாகனம் செய்து ஏழு

இரவுகளும் அங்குதங்கி மடைகளையம் காவியம் படித்தல் போன்ற கிரிகைகளையும் செய்ததுடன் பொங்கற் பணிபுரியும் ஐயரின் வாழ்விடமான கல்யாண வேலவர் ஆலயத்திற்கண்மையில் மடைப்பண்டம் எடுக்கும் கிரிகையையும் செய்தனர் தற்போது காட்டாவிநாயகராலயத்தண்மையிலேயே நோற்பு மடமும் மடைப்பண்டம் எடுப்பதும் நடைபெறுகின்றது.பொங்கல் சம்பந்தமான கிரிகைகள் பாக்குத்தெண்டல் குறித்த திங்கட்கிழமை விடிய முன் இரவு ஒரு மணிவரையில் பூசாரியார் நீராடி ஆசார சீலராகக் காட்டாவிநாயகராலயம் சென்று விநாயகரை வணங்கி அங்குள்ள அம்மன் ஆலயத்துள் மடைபரப்பி பூசை செய்து இறையருள் வேண்டி எல்லாக் கிரிகைகளிலும் பங்கு கொள்பவரும் குடிமகனுமான கோபியரை ஆசீர்வதித்து மங்கலப்பொருட்களைக் குறித்த ஒன்பது வீடுகளில் பெறும் பொருட்டு விடை கொடுப்பார் அவர் வெள்ளைத்துணியினால் வாயை மூடிக்கட்டியபடி மௌனமாக ஆசாரசீலராக முள்ளியவளை வற்றாப்பளை தண்ணீரூற்று ஆகிய கிராமங்களிலுள்ள குறித்த ஒன்பது வீடுகளின் வீதியோரக் கேற்றுக்களை அடையும்போது அதற்கெனவே எதிர்பார்த்திருந்த உரிமையாளர்கள் ஆசாரசீலராகக்குறித்த மங்கலப் பொருட்களான வெற்றிலை, பாக்கு, மஞ்சள் தட்சணை என்பவற்றைக்கொடுப்பார். தான் கொண்டுவந்த தூய மஞ்சள் தேய்த்த துணியில் அவற்றை ஏற்று மீண்டும் ஆலயத்திற்குச் செல்வர். வாய்பேசாது மௌனமாக இக்கடமையை அதிகாலை ஐந்துமணிக்குமுன் நிறைவேற்றி அவற்றை ஆலயத்திலமைந்துள்ள வேப்பம் மரக்கிளையில் பாதுகாத்துக் கொள்வர். குறித்த ஒன்பது வீட்டுப் பரம்பரையினர் ஆரம்பகால ஆலயபராமரிப்பாளர்களெனவும் மிக அண்மைக்காலம்வரை பொங்கல் செலவுகளுக்காக தலா 15 மரக்கால் நெல் வீதம் ஆலயத்துக்கு வழங்கியும் வந்தனர் எனவும் அறியமுடிகின்றது.

**தீர்த்தமெடுத்தல்**

பாக்குத்தண்டலுக்கு அடுத்த திங்கட்கிழமை பிற்பகல் 2மணி அளவில் குறிப்பிட்ட அம்மன் மண்டபத்தில் பொங்கல் குருக்கள் பூசை வைப்பார். அம்மன் சன்னிதானத்தில் உரியவர் வெள்ளை விரிக்க பித்தளைக்குடமொன்று அதன்மேல் வைத்து தூபதீபாராதனை செய்து விபூதி தரித்து வெள்ளைத்துணியினால் காப்பிட்டு பாக்குத்தண்டிய அதேகுடிமகனிடம் பூசாரியார் குடத்தினைக் கையளிப்பார். தோளில் வைத்த குடம் ஏனைய குடிமக்கள் சேரவர மேலாப்பு மங்கலப் பறைமுழக்கத்துடன் கள்ளப்பாட்டுக் கடற்கரை நோக்கிப்புறப்படும். புதறிகுடா, ஊற்றங்கரை தண்ணீரூற்று பிரதானவீதி வழியாக மூன்றாங்கட்டைச்சந்தியில் இறக்கி இளைப்பாறுவர். அதன்பின் சிலாவத்தையை அடைந்து அங்கிருந்து இந்துசமுத்திரக் கரையை அடைவர் அயற்கிராம மக்கள் ஆசார சீலராக பெரும் திரளாக ஊர்வலத்தில் கலந்து கொள்வர்.

கடற்கரையில் கள்ளப்பாடு ஆதி வைரவர் கோயிலைச் சேர்ந்த தொண்டர்கள் கோயில் ஒன்று அமைத்து தீர்த்தக் குடத்தினை வரவேற்பர். அங்கு குடம் இறக்கப்பட்டு கடல்அனுபவம்மிக்க கள்ளப்பாட்டுத் தொண்டர்களின் பாதுகாப்புடன் நெஞ்சளவு ஆலமுள்ள நீரில் இறங்கி எதிர்பார்த்திருந்து பெரிய அலை வரும்போது முதலில் குடம் சுத்தம் செய்யும் முகமாக நீரேந்திக் கழுவியபின் அதன்பின் வரும் பெரிய அலையின்போது நீருள்மூழ்கி குடத்தில் நீர்நிரப்பப்படும். நிரப்பிய குடம் வெள்ளைத்துணியினால் காப்பிடப்பட்டு மீண்டும் தற்காலிகக் கடற்கரை ஆலயத்தில் இறக்கி வைத்து பூசை செய்வித்து சற்று நேரம் இளைப்பாறிய பின் குடம் தோள்மீது ஏற்றப்படும். இதேநேரம் கடற்கரையில் எடுத்த மணல்முடிச்சு ஒன்றினை உதவியாளர் ஒருவர் கொண்டு வருவார். குறித்த ஊர்வலம் வீதி எங்கும் நிறைகுடம் வைத்து தேங்காய் உடைத்து மக்கள்வரவேற்பைப் பெற்று சிலாவத்தையிலுள்ள அம்மன் ஆலயத்தில் இறக்கப்பட்டு பூசை செய்யப்படும். நோற்பாளருக்கு இளநீர் கொடுப்பார்கள். இவ்வாலயத்தைச் சுற்றியுள்ள கிராமமக்கள் கூடி தீர்த்தக்குடத்தினைத் தரிசிப்பார்கள். சிலாவத்தை ஆலயத்தில் தூக்கிய தீர்த்தக்குடம் வீதியோர மக்களதும் ,ஊற்றங்கரை விநாயகர் ஆலயத்தினதும் மங்கலஆராத்திவரவேற்புடன் சென்று புதறிகுடாக்குளத்தைக் கடந்து அதற்கெனகுறிப்பிட்ட ஓர் இடத்தில் அமைக்கப்பெற்ற பந்தரில் இறக்கப்பட்டு, இளநீர் அருந்தி இளைப்பாறியபின் பவனி ஆரம்பமாகும். இப்பவனி முள்ளியவளை மக்களின் பெருவரவேற்புடன் காட்டாவிநாயகர் ஆலய அம்மன்மண்டபத்தை அடையும்.

இதேவேளை தீர்த்தக்குடத்தை கையளித்த பூசாரியார் வற்றாப்பளை அம்மனது ஆலயஞ் சென்று வழிபாடு இயற்றி அனுமதி பெற்றபின் தமது வீட்டருகே மங்கலப்பொருட்களான சிலம்பு, பிரம்பு,

அம்மானை போன்றவற்றைப்பாதுகாப்பாக வைத்திருக்கும் மண்டபத்தில் காவல்வைரவருக்கு பொங்கல் செய்து வழிபட்டபின் குறித்த மங்கலப்பொருட்களுடன் நாவற்காட்டிலுள்ள பத்தஞானி சமாதியடைந்த இடத்திற்கு வெள்ளை விரிப்பவரான குடிமகன் ஒருவருடன் மௌனமாகச் சென்று வழிபாடு செய்வர். தீர்த்தக்குடம் ஆலயத்தை அண்மிக்க இவர்களும் அங்கு சென்று சேர்வார். அதன்பின் முதலாவது மடைபரப்பி கொண்டுவரப்பட்ட மணல் பொதியின் மீது மண்பானை வைத்து திரியிட்டு நீரில் விளக்கேற்றி அம்மனுக்கு பூசை வழிபாடு ஆரம்பிக்கப்படும் (ஆரம்பத்தில் பால்கறக்கும் கலையம் எனப்படும் மண்பானையிலேயே விளக்கேற்றியதால் அதேபோன்ற மண்பாத்திரம் விளக்கேற்றப்பயன்படுத்தப்படுகின்றது) இவ்விளக்கினைத் தொடர்ந்து எரியும்படி பராமரிப்பது,சிந்து ,அம்மானை, குளிர்ச்சி, ஆகியபாடல்கள் பாடும்போது உடுக்குஇசைப்பது போன்ற கடமைகள் ஒருகுடிமகனுக்குரியது. அதேபோல மேலாப்புப்பிடித்தல் நிலவிரிப்பு விரித்தல் தேவையான இடங்களில் வெள்ளை கட்டுதல், விரித்தல், தூயஆடைகளை குருக்கள் பூசாரியார் ஆகியோருக்கு வழங்குதலை ஒருபரம்பரையினரும், பாதைகளில் மங்களமுரசறைதல், பூசையின்போதும் பூசாரியார் குருக்கள் ஆகியோர் கச்சுநேருதல் தூளிபிடித்தல்வளந்துநேருதல் ஆகிய காலங்களில் தாளலயம் தப்பாமல் முரசறைதலினை உரிய பரம்பரையினர்கள் செய்வார்.

**மக்களின் நம்பிக்கையும் செயற்பாடும்**

இப்பகுதி மக்கள் இன்பத்திலும் துன்பத்திலும் நினைவிலும் மறந்த நிலையிலும் அம்மனையே வாய்பேசும் அளவிற்கு ஒன்றுகலந்தநிலையில் இருப்பவர்கள். பொங்கல் கால ஆரம்பநிகழ்வான பாக்குத்தெண்டலுடன் விரதனுட்டானம் ஆரம்பிப்பர். வீடுகளில் எந்தவிதமான நிகழ்ச்சிகளையும் (திருமணம், வீடுகுடிபுகுதல் உட்பட) செய்யமாட்டார்கள். ஆலயங்களிலும் கூட விழாக்கள் எதுவும் நடைபெறாது. மரணம் சம்பவித்தாலும் பறைஒலி முதலிய ஆரவாரம் எதுவும் இல்லாமலே அமைதியான நல்லடக்கம் நடைபெறும். பொங்கல் முடிந்து வரும் அடுத்து வரும் வெள்ளிக்கிழமை முன்னிரவு பத்தஞானி ச்மாதியடைந்த இடத்தில் பொங்கல் நடைபெறும். பத்தஞானிக்கான பிரதான பொங்கல் தச்சர் மரபினரால் நிறைவேற்றப்படும். இதற்கு பொங்கல் செய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்டவர்களே செல்வதும் மௌனமாகச் செல்வதும் மரபு பொங்கிப் படைத்தவுடன் சூகை எனப்படும் (கட்டெறும்பு வகையைச்சேர்ந்தகடி எறும்பு) அவ்விடம் முழுவதும் பரவி ஊர்வதும் தற்போதும் நிகழ்கின்றது ஆச்சரியமானதே இந்நிகழ்வுடன் கோயிலின் பொங்கல் கிரிகைகள்யாவும் முடிவடைகின்றன.

பரிபாலனசபையும் உறுப்பினர் தெரிவும்

வன்னியின் இப்பகுதிக்குறுநில ஆட்சித்தலைவர்களின் ஆதரவுடன் சீராகவிருந்த இவ்வாலயம் ஐரோப்பியர் இப்பிரதேசங்களைக் கைப்பற்றி ஆட்சியுரிமைகளைப்பறித்ததுடன் இந்து எதிர்ப்புக்கொள்கையையும் கடைப்பிடித்ததனால் வருமானம் இன்மையும் வளர்ச்சியும் இன்றி இருக்கும் நிலை ஏற்பட்டது. நிலவுடைமையாளர்களான கமக்காரக்குடும்பங்கள் சிலரது ஆதரவுடன் கோயில் பாதுகாக்கப்பட்டு வந்தது. அவர்களில் ஒருவரே பூசாரியாராக கோயில் கடமைகைளைச் செய்து வந்துள்ளார். அக்காலத்திலே சமய எதிர்ப்புக் காரணமாக கோயிலை இடிக்க வருகைதந்த பறங்கித் துரைக்கு பனிச்சமரம் காய்களால் அடித்துத் துரத்தியதும் வற்றாப்பளை பாதுகாப்பான இடம் ஆனது.சமயம் மாற்றுபவர்களோ எதிர்ப்பாளர்களோ இங்குவருவதில்லையாம். அதனால் வன்னியின் ஆட்சியுரிமையை இழந்தபரம்பரையைச் சேர்ந்த பலர் இக்கிராமத்தில் குடியேறி பாதுகாப்பாக வாழ்ந்ததாகவும் அக்காலத்திலேயே சின்னவன்னி என்ற அரசபரம்பரையினரால் ஆலயத்துக்கு வயல்தானம் செய்யப்பட்டதாகவும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. சில காலம் பொங்கல் செய்வதைப் பூசாரியாரும் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் பிராமண குலத்தவர்களும் பூசை செய்துவந்துள்ளனர். கோயிலின் வருவாய்களும் இருபகுதியினருமே பெற்றனர்

ஆலயவளர்ச்சியின் மீது அக்கறை கொண்ட கிராமத்தவர்களும் அயற்கிராமத்தவர்களும் சட்டத்தரணி தம்பையாமுதலியார் சபாரத்தினம், முதலியார் ஆ.மு கனசபாபதி ஆகியோரது வழிகாட்டலின்படி

ஆலயத்தினைப் பொது ஆலயமாக்குதற்கான சட்ட சம்பிரதாய நடவடிக்கைகளை எடுத்தனர் இதற்காக 1958 ஆம் ஆண்டு எடுத்த முயற்சியின்படிபொதுவான ஆலயமாக்கியதுடன்அதற்கான விதிகள் அடங்கிய யாப்பொன்றினை ஆக்கியதுடன் அதற்கான இலங்கை மகாதேசாதிபதியவர்களின் ஒப்புதலைப்பெற்று கையொப்பத்தினையும் பெற்றுள்ளனர். சட்டசபைஉறுப்பினராயிருந்த சபாரத்தினம்அவர்களும் திரு.தா.நடராசபிள்ளையவர்களும் மகாதேசாதிபதியவர்களிடம் சென்றவர்களாவார்.இதனடிப்படையிலான வரைவினடிப்படையில் ஆலயபரிபாலனசபை தெரிவு செய்யப்படுகின்றது. 31உறுப்பினர்களைக் கொண்ட சபை உறுப்பினர்களும் 11பேர் வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு ஆகிய கிராமங்களிலிருந்து நிரந்தர உறுப்பினராயுள்ளனர். யாப்பில் குறிப்பிட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைவாக குடும்பங்களின் வாரிசு உரிமையாளராக இவர்கள் இருக்கின்றனர்.

மிகுதி 20உறுப்பினர்கள் வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, குமுழமுனை, அளம்பில், செம்மலை, முல்லைதீவு, சிலாவத்தை, முள்ளிவாய்க்கால், அம்பலவன்பொக்கணை ஆகிய கரைதுறைப்பற்று பிரதேசச் செயலாளர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்படுகின்றனர்.

நல்லொழுக்கம் சமயநடைமுறை சேவைமனப்பாங்கு சமூகநன்மதிப்பு போன்ற தகைமைகளைக் கருத்திற் கொண்டு உறுப்பினர்கள் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படுகின்றனர். குறித்த31 உறுப்பினரும் சேர்ந்த இச்சபையினர் தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர் ஆகியோரைத் தெரிவு செய்வர்.



# வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பொங்கல் கிரியா கரும விளக்கம்

திரு.சி.பாலகிருஸ்ணன்

அருட் பதியாகிய இவ்வற்புதத் தலத்திலே கண்ணகித் தெய்வத்திற்குப் பொங்கலிடும் திருக்கரும நெறிமுறைகளை என்புல்லிய அறிவினால் தெள்ளிதில் விளக்க முடியாதென அஞ்சுகின்றனம். ஆயினும் அம்மையாரின் அருள் என்னை ஊக்குவிப்பதால் அடியேன் கண்டு கேட்டுற்ற விடயங்களைப் பணிவுடன் உங்கள் முன்வைக்கின்றேன்.

இக்கட்டுரையில் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் வருடாவருடம் வைகாசித் திங்களில் பொங்கலிட்டு வழிபாடாற்றும் தினத்துடன் ஒட்டி அதன் முதல்நாள் இவ்வாலயத்தில் இருந்து மூன்றரைக்கல் தொலைவில் அமைந்த முள்ளியவளைக் காட்டாவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும் பொங்கலும் அதன் முந்திய பிந்திய நாட்களில் நடைபெறும் கருமங்களையும் சுருக்கமாகக் கூறுதலே நோக்கமாகும். அஃதாவது பாக்குத் தெண்டல் என்ற கருமத்தில் இருந்து பத்தனுனியார் பொங்கல் வரையான பத்தொன்பது நாட்களுள்ளும் அடங்கிய பொங்கலோடு சம்பந்தமுடைய ஆசார, பூசார வழமைப்படியான திருக்கருமங்களையும் கிரியா முறைகளையும் கூறுதலாகும். இவைபற்றி அவ்வவற்றுடன் தொடர்புடையவர்களுடன் கலந்து அவர்களின் கூற்றுப்படி இவற்றினை வரிசைப்படுத்தி இங்கே தருகின்றனம். இவ்வாலயப் பொங்கலுக்கான முதற் கருமம் “ பஞ்சாங்கம் ஆளல்” எனப்படும்.

### பஞ்சாங்கம் ஆளல்

ஒவ்வொருவருடமும் அம்மனார் பொங்கல் பண்டையநாளில் கண்ணகி மாடுமேய்த்த சிறுவர்க்குக் காட்சி கொடுத்த தினமான வைகாசித் திங்கள் விசாகஞ்சேர் பௌர்ணமியைக் கிட்டிய (திங்களில்) சோமவாரம் வரும் நாளில் நடைபெற்று வருவதால் அத்தினத்தையும் அதற்கு முந்திய “பாக்குத்தெண்டல்” தீர்த்தமெடுத்தல் ஆகிய தினங்களையும் தீர்க்கமாக அறிவான் பொருட்டு பஞ்சாங்கத்தில் அத்தினங்களை அறிந்து கொள்ளுவதையே பஞ்சாங்கம் ஆளல் எனப்படும்.

பிரதி வருடமும் சித்திரை வருசப்பிறப்பன்று பூசாரியார் ஆகிய கட்டாடும் உடையாரும் மற்றும் கோவிற் தொடர்புடைய பெரியார்களும் சேர்ந்த ஓர் அவையிலே மேற்படி பொங்குதல் தீர்த்தமெடுத்தல் பாக்குத்தெண்டுதல் ஆகிய கரும தேதிகளைப் பஞ்சாங்கத்தில் அறிந்து நிர்ணயித்துக் கொள்வார்கள். இதன்படி உரிய தினத்தில் பாக்குத்தெண்டல் நடைபெறும்.

### பாக்குத்தெண்டல்

மங்கலகரமான அந்தவழமையான (பொங்கல்) கருமம் நடைபெறப் போகின்றதென்பதை உபகரிப்புக்காரருக்கும் மற்றும் பொதுசனங்களுக்கும் புலப்படுத்துதலே அதன் நோக்கமாகும். பொங்கலுக்கான அரிசி மடைக்கான பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், வளந்து ஆதியாம் பொருட்களை இப்பகுதியிலுள்ள சில பெரியார்கள் தொண்டு தொட்டு இன்றுவரை வழமையாக உதவி வருகின்றார்கள். இவர்களையே உபகரிப்புக்காரர் எனக் கூறுவர். இந்த உபகரிப்புக் காரர்களிடம் மங்கலப்பொருட்களான மஞ்சள், பாக்கு, வெற்றிலை என்பவற்றைப் பெறுதலையே பாக்குத்தெண்டல் எனக் கூறுவர். முற்கூறியபடி பஞ்சாங்கமாளலில் கரும நாட்களை அறிந்து வைத்துள்ள பூசாரியார் பாக்குத்தெண்டும் தினத்துக்கு மூன்று நாட்களுக்கு முன் பாக்குத்தெண்டும் காரியமியற்றுதற்கு நியமிக்கப்பட்ட கோபியக் குடிமகனார்க்குச் சம்பிரதாய முறைப்படி அறிவிப்பார். அவரும் அதனை ஏற்று அத்தினத்துக்கு முதனாள் ஞாயிற்றுக்கிழமை இரவே காட்டுவிநாயகர் ஆலயத்தில் பூசாரியாருடன் வந்து தங்கி இரவு 3மணியளவில் நியம அனுட்டானங்களை முடித்து ஆசாரசீலராகி விநாயகரையும் அம்மனையும் பூசித்து நேர்த்தி செய்து பூசாரியாரால் கொடுக்கப்படும் மஞ்சள் சீலைத்துணியில்

பொதியப்பட்டுள்ள ஒரு வெற்றிலை, ஒரு பாக்கு, சிறுமஞ்சள் துண்டு ஆகிய பொருட்களைப் பயபக்தியுடன் கையேற்று விடியமுன்னதாக முள்ளியவளையிலுள்ள உபகரிப்பாளரின் வீட்டு வாயிலில் தமது வாயை வெண்துணியினால் மூடிக்கட்டி வாய்பேசாது வந்து நிற்பார். இவருடைய வருகையை முன்பே எதிர்பாத்திருப்பவரான அவ்வீட்டுக்காரர் தானும் முன்பே முழுகிக்குளித்து, ஆசாரமுடன் பாக்குத்தெண்ட வாயிலில் வந்து நிற்கும் அவர் வைத்திருக்கும் மஞ்சட்சீலை சிறுபொதியுள் தான் தயாராக வைத்திருந்த பொருட்களான மஞ்சள்துண்டு, பாக்கு, வெற்றிலை தட்சணைப்பணம் ஆகிய மங்கலப்பொருட்களை வைத்துவிடுவார். இக்கருமம் இனி வரப்போகின்ற பொங்கலுக்கு வேண்டிய தன்னால் வழமையாக உதவப்பட்டனவற்றை இப்பொழுதும் செய்வதற்குத் தனக்குப் பரிபூரண விருப்பம் என்பதை உபகரிப்புக்காரர் காட்டிக்கொள்ளும் ஒரு சம்பிரதாய நிகழ்ச்சியாகும். இவ்வண்ணம் பாக்குத்தெண்ட வருபவர் முள்ளியவளையிலும், பின்பு தண்ணீரூற்றிலும், அதன் பின் வற்றாப்பளையிலுமாக வழமைப் பிரகாரம் ஒன்பது உபகரிப்புக்காரர் வீடுகளுக்குச் சென்று அவர்களால் கொடுக்கப்படும் பாக்காதியாம் மங்கலச் சம்மதப்பொருட்களை வாங்கிக்கொண்டு அன்றுகாலை ஏழு மணிக்குமுன் திரும்பவும் காட்டாவிநாயகர் பதிக்கு வருவார். அதன்பின் அந்த ஆலய வளவில் நிற்கும் வேப்பமரக் கொம்பரில் அந்தபாக்கு முடிச்சைக் கட்டிவிடுவது வழக்கமாகும். இங்ஙனம் பாக்குத்தெண்டல் வைபவம் வற்றாப்பளைப் பொங்கலுக்கு முன்னதான பதினைந்தாம் நாள் சோமவாரத்தில் நடைபெறுவது வழமையாகும் இது இலங்கையில் நாமறிந்த வேறெந்தத் தெய்வ தலத்திலும் மேற்கொள்ளப்படாத இத்தலத்துக்கே விசேடமாய் உரியதான ஒரு வழமை நிகழ்ச்சியாகும். இப்பாக்குத் தெண்டல் தினமுற்றதும் இப்பகுதிவாழ் மக்கள் பொங்கல் வந்துற்றதெனப் பொலியும் மனத்தினராய் மிக்க மகிழ்வுற்று இதற்கடுத்த எட்டாம்நாள் தீர்த்தமெடுத்தல் நிகழப்போகின்றதே என்று எண்ணி சந்தோசிப்பார்காள். அஃதேபோல் அத்தினத்திற்கு எட்டாம் நாளாகிய சோமவாரம் வந்தபோது.....

**தீர்த்தமெடுத்தல்**

பாக்குத்தெண்டிய நாளுக்குப் பின்னும் பொங்கலுக்கு முன்னுமாகிய எட்டாம் நாள் திங்கட்கிழமை கண்ணகியின் அழியாத அற்புதத்தை உலகில் வேறெங்கும் நடைபெற்றுவராத மகிமை நிறைந்த செயலை மக்களுக்கு உணர்த்தி வருவதான தீர்த்தமெடுத்தல் வைபவம் சிறப்பாக நடைபெறும். அன்று இப்பகுதிவாழ் மக்கள் விரதானுட்டானமுடன் இருந்து பிற்பகல் ஒரு மணியளவில் காட்டுவிநாயகர் ஆலயத்தில் தீர்த்தமெடுக்கச் செல்லும் வைபவத்தில் கலந்துகொள்வதற்காகச் செல்வர். அங்கு தீர்த்தமெடுக்கக் கொண்டு செல்லும் வெண்கலப் பாத்திரத்தின் வாயை வெண் துணியால் மூடி அதற்குப் பூசனைகள் செய்து விநாயகப்பெருமானையும் அம்மனையும் வேண்டித் தோத்திரஞ்செய்து தீர்த்தமெடுக்கப் புறப்பட ஆயத்தமாவார். இதுவரை பிற்பகல் மூன்று மணி நேரம் ஆகிவிடும். தீர்த்தமெடுக்கும் பாத்திரத்தைச் சுமந்து செல்லவேண்டிய கடமையைச் செய்பவர் (பாக்குத்தெண்டியவர்) தன்வாயை வெண்துணியால் மறைத்துக் கட்டி அப்பாத்திரத்தைப் பூசாரியார் மற்றும் உரிமை சேர்ந்தவர்கள் கைதொடத் தூக்கித் தன் தோளில் பக்திசிரத்தையுடன் வைத்துக்கொண்டு மேலாப்புப் பிடித்துவர பறைமேளங்கள் முழங்க விரதம் அனுட்டிக்கின்றவர்களும் அம்பாள் அடியார்களும் பின்தொடர இவ்வாலயத்திலிருந்து பாதசாரிகளாகப் புறப்படுவார்கள். இந்த வைபவத்தில் பூசாரியாரும், ஐயரும் பெண்களும் தீர்த்தமெடுக்கச் செல்வதற்குக் கூடப் போவதில்லை. இங்கிருந்து குறுக்கு வழியாகச் சென்று மாங்குளம் - முல்லைத்தீவுப் பிரதான வீதியைக் கடந்து முள்ளியவளை

வற்றாப்பளை வீதியால் சென்று பக்தி நிறைந்த மக்கள் போலும் பங்கயம் நிறைந்த குஞ்சுக்களம் தாண்டி பொய்க்கரி உரைத்ததால் பூசனைக்கு விலக்கப்பட்டாலும் நறுமணங் குறையா மடல் மலர்கள் மலிந்த தாளை நிறைந்த வழிபோந்து புன்னை மரஞ்சூழ் புதரிகுடா என்னும் புனல்சேர் இடத்தினூடாக உம்பரும் போற்றும் ஊற்றங்கரைப் பதியை நண்ணி மீண்டும் தண்ணீரூற்று ஆலடிச்சந்தியில் மாங்குளம் முல்லைத்தீவுப் பிரதானவீதியில் செல்வார்கள் இவ்வூர்வலத்தில் மேலும் ஆங்காங்கு அடியார்களும் சிறுவர்களும் சேர்ந்து கொள்வார்கள். இங்ஙனம் பிரதானவீதியிற் சென்றவர்கள் முல்லைத்தீவையும் தண்ணீரூற்றையும் இணைத்து நிற்கும் பெரும்பாலம் தாண்டி சிறிதுதூரம் சென்றதும் சிலாவத்தை என்னும் கிராமத்துக்குச் செல்கின்ற பாதையிற் பிரிந்து செல்வார்கள் உலகத்திலே வேறெங்குமில்லாத அற்புதத்தீர்த்தம் தன்னிடத்தே உண்டென்று அகங்களிக்கும் ஆழி சூழ்ந்ததால் சிறப்புப் பெற்ற சிலாவத்தை என்ற அக்கிராமத்தினூடாகத் தீர்த்தம் எடுக்கவேண்டிய வடகடலின் கரையை அண்முவர். இவர்கள் வருகையை எதிர்பார்த்து முன்னதாகவே கரையோர மக்கள் நறுங்கனிகள் நல்கிடும் நாவல் மரங்கள் நிறைந்த நிழலுடைய இக்கரையில் நிறைகுடம் வைத்து மடைபரவி ஊர்வலத்தினரை வரவேற்கச் சிரத்தையுடன் காத்திருப்பர். இவர்களின் மடையில் தரித்துப் பூசைவழிபாடாற்றி சிரமந்தீர்த்துக் கொண்டு கடலில் தீர்த்தம் அள்ளும் காரியத்தில் ஈடுபடுவர். தீர்த்தமெடுக்கும் பாத்திரத்துடன் அதை கொண்டுவந்தவரும். அவருக்கு உதவியாக மற்றும் இருவரும் சேர்ந்து மூவருமாகக் கரையில் இருந்து அலைவீசி ஆர்ப்பரிக்கின்ற ஆழியில் இறங்கி வாயூறு நீர்வரைக்கும் சென்று நிற்பார். பேரலைகள் வந்து வந்து அவர்களை மோதிமோதிச் செல்லும் பேரலை வருகின்ற நேரத்தில் பாத்திரத்தைக்கழுவி மீண்டும் தோளில் வைத்துக்கொண்டு அடுத்த அலை வந்து மூடும் பொழுது பாத்திரத்தில் நீரை நிறைத்துக் கொள்வார். இரண்டாவது அலைவந்து போனதும் நிறைந்தாலும் நிறையாவிடினும் (அனேகமாக நிறைவது வழக்கம்) கரையேறி விடுவார்கள். நீர் நிறைந்த பாத்திரத்தை திரும்பவும் அங்குள்ள மடையில் வைத்துப் பூசனைகளை நிறைவேற்றிய பின் மாலை ஆறுமணியளவில் அங்கிருந்து புறப்படுவார். அப்போது அக்கரையின் வெண்மணலில் சிறிதளவு ஒரு துணியில் முடிந்துகொண்டு தீர்த்தக்குடத்துடன் வேறொருவர் இம்முடிச்சையுங்கொண்டு வர போனவழியிலே திரும்பவும் வருவார்கள் இப்பொழுது "தீர்த்தக்குடம் வருகின்றது" என்று சொல்லப்படும் தீர்த்தக்குடம் வரும் வழி நெடுகிலும் குடிசனமுள்ள பகுதிகளில் மாவிலை தோரணங்கள் தூக்கிப் பந்தரிட்டு அலங்கரித்து நிறைகுடம் வைத்து குத்துவிளக்கேற்றி தூப தீப ஆராதனையுடன் தீர்த்தக் குடத்தை வரவேற்று வழிபட்டு நிற்பார். அம்மனே திருவுலா வருகின்றாள் என்று எண்ணுவதுபோல் பயபக்தியுடன் வணங்கி வரவேற்று "கண்ணகி அம்மனுக்கு அரோகரா" என்று திருக்கோசமெழுப்பி அடியார்களுக்கும் தாகசாந்தி செய்வித்து வழியனுப்பி நிற்பர். இங்ஙனம் தீர்த்தக்குடம் வரும்போது இருட்டிவிடுவதால் வீதியின் இருமருங்கும் நிறைகுடம் குத்துவிளக்குகளின் வரிசை அலங்கார எழில்தனை என்னென்றுரைப்ப இங்ஙனம் வரிசையாக வைக்கப்பட்ட நிறைகுடப்பந்தர்களில் தரித்துத் தரித்து இடையிடையே வைக்கப்பட்ட மடைகளையும் கண்டு அன்று இரவு ஒன்பது மணியளவில் காட்டு விநாயகர் ஆலயத்தை திரும்பவும் அண்மிக்கும். விநாயகர் ஆலயத்தில் தீர்த்தக்குடத்தை வரவேற்க விசேட பூசைகள் நடைபெறும். இத்தருணம் அடிக்கப்படும் ஆலயமணியின் ஓசையும் பறைமேளங்களின் ஒலியும் சேர்ந்து அப்பகுதி எல்லாம் பரவி அடியார்களின் மெய்சிலிர்த்து அவர்களின் உள்ளமெல்லாம் அம்மனை வழிபட்டு நிற்க வைக்கும். தீர்த்தக்குடம் ஆலயத்துள் வந்ததும் அதனை அம்மன் மண்டபத்துள் இறக்கி வைப்பார்கள். இத்துடன் தீர்த்தமெடுத்தல் தீர்த்தக்குடம் வருதல் ஆகிய வைபவங்கள் முற்றுப்பெற கொணர்ந்த உப்புநீரில் ஒப்பரிய அற்புத விளக்கை எரிக்கும் திருக்கருமம் தொடங்கும்.

## உப்பு நீரில் விளக்கு எரித்தல்

அன்று இரவு 10மணியளவில் காட்டுவிநாயகர் அலயத்தில் உள்ள அம்மன் மண்டபத்தில் அம்மன் கும்பம் வைத்து மடைகள் பரவி கொண்டுவரப்பட்ட உப்புத்தீர்த்தத்தில் ஒரு சிறிய மட்கலத்தில் கொள்ளக்கூடிய நீரினை எடுத்து அதனை அம்மடையருகே கும்பத்துக்கு ஒளி வீசக்கூடிய வகையில் கடற்கரையில் எடுத்துவரப்பட்ட வெண்மணல் முடிச்சின் மீது வைத்து துணியில் ஆக்கிய ஒரு திரியினை அந்த மட்கலய நீரில் அதன் நடுப்பாகம் உப்புநீரில் நனையும் விதத்தில் திரியின் இரு முனைகளையும் கலயத்தின் வாய்விளிம்பில் பதியவைத்து அடியார்களின் அரோகரா ஒலி வானில் எழுந்து வையம் பரவ பறையும் மணியும் பரவசமூட்ட அத்திரியின் ஒரு முனையில் தீயிட்டு அந்த அற்புத விளக்கை ஏற்றிவைப்பார்கள்.அந்த விளக்கு சுடர்விட்டுப் பொலிய அடியார்களின் உள்ளத்திலும் அம்மன் பக்தி சுடர்விட்டெரியத் தொடங்குகின்றது .நீரில் நனைந்தும் நிறையாது நின்றெரியும் சோதி மணிவிளக்கின் தொன்மையான பெருமைதனை விஞ்ஞானம் வியக்கும் விந்தைதனை எங்ஙனம் சொல்லக்கூடும். விளக்கேற்றியதும் கும்பபூசனைகள் செய்து உடுக்கடித்து அம்மன் சிந்து பாடி,அம்மனை வழிபட்டு நிற்பர். அத்தருணம் கண்ணகி காப்பியமான “சிலம்பு கூறல்” என்னும் ஏட்டுப் பிரதிக் காப்பினைச் சொல்லிப் படிப்பதைத் தொடக்கி வைக்கப்படும் இக்காப்பியம் இன்றிலிருந்து ஏழு நாட்களுக்குத் தொடர்புபடுத்தி இருவர் படிக்கும்பொழுது ஏனைய அடியார்கள் சூழ இருந்து அம்மனின் திரு அவதாரத்தினையும் அதுசார்ந்த வரலாற்றினையும் அறிந்து இன்புறுவர்.

இத்தினத்தில் இருந்து அம்மன்பக்தர்களும் அடியார்களும் பொங்கல் வரும்வரை எட்டு நாட்களும் விரதம் அனுட்டித்து நிற்பர். தீர்த்தமெடுத்த நாளில் இருந்து அம்மன் பொங்கலுக்கு அடுத்தநாள் செவ்வாய்வாரம் வரை இப்பகுதி மக்கள் காடுகரம்பை போன்ற இடங்களுக்குச் செல்லமாட்டார்கள். இப்பகுதியில் எவ்விடத்திலும் பறை அடித்தல் நட்டுவம் ஒலித்தல் என்பன செய்யமாட்டார்கள். இவ்வண்ணம் மக்கள் அத்திருநாளுக்குப் பெருமதிப்பளித்துப் பயபக்தி உடையவர்களாய் இருப்பார். இந்த எட்டு நாட்களுக்கும் கோயில் வழிபாடு சம்பந்தமான சில கருமங்களை மேற்கொள்வதற்காக சிலபேர்களை வழமையாக நியமிப்பார்கள். இவர்களை நோற்புக்காரர் என அழைப்பர்.

நோற்புக்காரர்

இவர்கள் இவ்வெட்டு நாட்களும் நோன்பிருந்து ஆசாரமுடன் காட்டுவிநாயகர் ஆலயத்தில் இவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள நோற்பாளர் மடத்தில் தங்கித் தமது வீடுகளுக்குச் செல்லாமல் தமக்கு வழமையாக உள்ள பணிகளைத் தவறாது இயற்றிடுவர். இந்நோற்பாளர்களில் பூசாரியார், தச்சர், கோபியர், வண்ணார், பறையர், வேளாளர், ஐயர் என்னும் இவ்வர்ணத்தவர்கள் அடங்குவர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி பணிகள் உண்டு.

ஐயர்

இவர் நோற்பாளர் மடத்தில் தங்காது கோயிலில் தங்கி இருப்பார். இவர் விதிமுறைகளுக்கு அமைய அருச்சனை, பூசை முதலியவற்றை நிறைவேற்றுவதுடன் பொங்கலுக்கான கைங்கரியங்களிலும் பூசாரியாருக்கு உதவுவார்.

பூசாரியார்

அம்மனுக்குரிய பொங்கலைச் செய்பவர் அத்துடன் மடைபரவுதல் வளந்து நேரல் பொங்கிப் படைத்துப் பூசித்துக் கட்டாடுதல். அம்மனை கும்பத்தில் ஆவாகனம் செய்தல். அம்மன் சிந்து தோத்திரம் ஆகியவற்றைச் செய்தல் வேளை விபூதி கொடுத்தல். என்பன இவரின் வழமையான கருமம்.

கோபியர்

இவரே பாக்குத்தெண்டல், தீர்த்தமெடுத்தல். உபகரிப்பாளரால் கொடுக்கப்பட்ட நெல்லைக் குற்றி அரிசியாக்கி பொங்கலுக்கும், நோற்பாளர் சமையலுக்கும் உதவுதல். பொங்கிப் படைக்கின்ற கருமங்களுக்குதவுதல் என்பன இவரது பணிகளாகும். (நோற்பாளருக்கான நெல்லைக்குற்றுதலை நோற்புக்குற்றல் என்பர்)

தச்சன்

தீர்த்தமெடுக்க உதவியாகச் செல்லல் தீர்த்த விளக்கை நிறையாது வேளாவேளைக்குத் தீர்த்தக்குடத்தில் உள்ள உவர் நீரை விளக்கிற்கு விடுதல். மடைபரவுவதற்கு உதவுதல், சிந்து

படிக்கும் போது உடுக்கை அடித்தல், அம்மனின் சின்னப்பேழையை மடைப்பண்டத்துடன் கொண்டு செல்லுதல் பக்த ஞானிக்குப் படைத்தல் ஆகிய கருமங்களுக்கு உரியவர்.

**பறையர்**

தீர்த்தமெடுக்கச் செல்லும்போதும் மற்றும் பூசனைக்குரிய காலங்களிலும் பறையை ஒலித்து பக்தியை மேலிட வைத்தல்.

**வண்ணான்**

வேண்டிய நேரம் மேலாப்பு பிடித்தல் கச்சு நேரும் துணியை உதவுதல், தூளி பிடித்தல் என்பன இவரின் பணிகளாகும்.

**வேளார்**

பொங்குதற்குரிய வழந்துகளைச் (மட்பாத்திரங்களை) செய்து கொடுப்பவராகும். இவர்கள் ஒவ்வொருவரும் பொங்கலில் ஓர் அங்கமாகி தம்மால் ஆகவேண்டிய பணிகளைச் செய்து வருவர். இங்ஙனம் நோற்பாளர்கள் நீரில் விளக்கேற்றி அதை அணையாது பாதுகாத்து வருவதுடன் தொடர்ந்து காட்டுவிநாயகர் ஆலயத்தில் நடைபெறுகின்ற ஏழுநாள் கருமங்களையும் இனி நோக்குவோம்.

**காட்டுவிநாயகர் ஆலயத்தில் தொடர்ந்து ஏழு நாட்கள்**

இங்கு தீர்த்த விளக்கேற்றிய திங்கள் இரவு போல் அடுத்து வரும் புதன், வெள்ளி ஆகிய இரண்டு இரவுகட்கும் பழைய கும்பம் குலைக்கப்பட்டு புதிதாக வைக்கப்படும். மடைபரவி அம்மன் பூசனைகள் நிகழும். இக்கருமங்களை நோற்புக்காரர்களே செய்து வருவார்கள். கும்பம் மற்றும் மடைக்கான பொருட்களை உபகரிப்புக்காரர் வழமைபோல் உதவிவருவார்கள். சிலம்பு கூறல் கதைத்தொடர் ஒவ்வொரு இரவும் தொடர்ந்து படிக்கப்படும். ஏழாவது நாளாகிய ஞாயிற்றுக்கிழமை இரவு மற்ற இரவுகளைப்போலல்லாது, மிகச் சிறப்பான இரவாக அமைந்ததாயிருக்கும். இத்தினத்தில் காலையில் இருந்தே பல இடங்களிலுமிருந்து இவ்வாலயத்தில் இரவு நடைபெற இருக்கும் பொங்கலைக் காணவும் நேர்த்திக்கடன்களைச் செய்யவும் வந்து கூடுவர். தங்கள் தங்கள் விருப்பப்படியான நேர்த்திகளை நிறைவேற்றி அர்ச்சனை முதலியவற்றையும் செய்வித்து வழிபடுவார்கள். இந்த இரவுதான் கண்ணகி அம்மையார் இவ்வாலயத்தில் நடைபெறும் பொங்கல் மடைகளைக்கண்டு அடுத்தநாள் திங்கள் காலை வற்றாப்பளைக்கு ஏகினாள் என்பது ஐதீகம். இதனை ஆதாரபாவனையாகக் கொண்டுதான் இத்தினத்தில் இங்கு பொங்கல் விழா நடைபெறுகின்றது. இவ்விரவு பத்துமணியின்மேல் பொங்கலுக்கான ஆரம்பம் நடைபெறும். விநாயகருக்கு ஒரு வளந்தும், இருபக்க வளந்துகளும் அம்மனுக்கும் ஒரு வளந்தும் வைத்துப் பொங்கப்படும். இப்பொங்கலுக்கு பச்சைஅரிசியும், பசுப்பாலும்தான் சேர்க்கப்படும். சற்கரை பயறு என்பவை சேர்ப்பதில்லை மாட்டுக்காரச் சிறுவர் படைத்த பாலமுதை நினைவு கூருவதாக இது அமைகின்றது. ஒருபுறம் பொங்கற்கருமம் நடைபெற்றுக்கொண்டிருக்க இன்னொரு புறத்தில் "சிலம்புகூறல்" காவியம் படிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் படிப்பவரைச் சுற்றி அம்மன் அடியார்கள் கண்ணகியின் மகிமை நிறைந்த கதைதன்னைக் கேட்டு ஆனந்தக்கண்ணீரும், புளாங்கிதமுறலும் மெய்யுருகலுமாகி நேரில் காண்கின்ற மனதுடையார் போன்று கதையில் ஒன்றிடுவார்கள்.

இவ்வண்ணமிருக்க பொங்கி முடிவுற்றதும் முன்பு வைக்கப்பட்ட மடைகளிலேயே அம்மனுக்கும் விநாயகருக்கும் நிவேதித்து தூபதீப ஆராதனை செய்து வழிபட்டு அம்மனின் அருள் பெற்று வேளைவிபூதி பிரசாதம் முதலியனவும் பெற்றுக்கொள்கிறார்கள். இங்கு மேற்படி கருமங்கள் யாவும் நிறைவேற திங்கள் அதிகாலை நாலு மணியாகிவிடும். இத்தருணத்தில் மடைப்பண்டம் கொண்டு செல்கின்ற கருமவைபவம் ஆரம்பிக்கும்.

மடைப்பண்டம் செல்லுதல்

காட்டுவிநாயகர் ஆலயத்தில் பொங்கல் வழிபாடுகள் முடிவுற்றதும் அடுத்தநாள் திங்கள் இரவு வற்றாப்பளைக் கண்ணகி ஆலயத்தில் நடைபெறும் பொங்கலுக்குரிய மடைக்கு உரிய பொருட்களை இவ்வாலயத்தில் இருந்தே கொண்டு செல்வது வழமையாகும் இதனையே "மடைப்பண்டம் செல்லுதல்" எனப்படும். இவ்வாலயத்தில் இருந்து மூன்றரைக்கால் தொலைவில் உள்ள கண்ணகி ஆலயத்துக்கு

மடைக்குரிய பொருட்களான வாழைப்பழக்குலைகள், பாக்கு, வெற்றிலை, முதலியனவும் பொங்குதற்குரிய அரிசி வளந்து என்பனவும் அம்மன் கும்பம் வைப்பதற்கான சாமான்கள் நீர்விளக்கு தீர்த்தக்குடம் என்பனவும் மற்றும் அம்மன் பத்ததிச் சின்னங்களடங்கிய பேழையும் ஆகிய இப்பண்டங்களை திங்கள் அதிகாலை ஐந்து மணியளவில் வற்றாப்பளை கண்ணகி ஆலயத்துக்குக்கொண்டு செல்வதற்காக நோற்புக்காரர்கள் எடுத்துவர, பறைமேளம், சங்கு, சேமக்கலம் முதலிய வரிசை வாத்தியங்களுடன் தீவெட்டிகள் ஏந்தி கண்ணகித்தாயாருக்கரோகரா, அம்மனுக்கரோகரா என்ற பக்திமிகு ஒலிபரவ பயபக்தியுடன் மடைப்பண்டம் செல்லத்தொடங்கும்.

"கண்ணகித்தாயே தயாபரியே நீ செல்லும்வழியே நாமும் உன்னைப்பாடி பரவி பணிந்தேத்தி உன்கூடவே வருவோம்." என்பதேபோல் பல்லடியார்களும் இந்த மடைப்பண்டத்துடன் செல்லுவார்கள். இவ்வாலயத்திலிருந்து நேராகச் சென்று மாங்குளம் முல்லைத்தீவுப் பிரதான வீதியைக் கடந்து முத்தமிழ் வளர்த்து வரும் முள்ளியவளைப்பதியை விடுத்து முள்ளியவளை வற்றாப்பளை வீதிவழியாகச் சென்று முப்போதும் கதிறுக்க விளைதரும் களனி சூழ்ந்த பள்ளவெளி வீதியால் மடைப்பண்டம் செல்லும் பின் வற்றாப்பளை-முல்லைத்தீவு வீதியைத்தாண்டி தெய்வம் உறைந்திடு திருப்பதியாம் வற்றாப்பளையை நோக்கி ஆலயவீதியால் சென்றுகொண்டிருக்கும் மடைப்பண்டம் ஆலயத்தை அண்மிக்கின்ற வேளையில் அம்மனின் பொங்கல் கண்டு அடியார்கள் பேரானந்தக்கடலில் மூழ்கிடும் காட்சிதனைக் கண்டின்புறுவான் போல் ஆதவனும் ஆழியில் நீங்கித்தன் எழில் கிரணங்களைப்பரப்பி எழுகின்றபோது பல்லோரும் பார்த்திருந்த அந்த திங்கட் பொழுது புலரத் தொடங்கும், பொழுது புலர அடியார்கள் மனமும் மலர்ந்து நிற்கும். மடைப்பண்டம் அம்மன் ஆலயத்துள் பிரவேசித்ததும் வரவேற்று உரிய இடங்களில் வைக்கப்படும். இந்நேரம் திங்கள் காலை ஆறுமணி ஆகிவிடும். இத்துடன் இக்கருமம் முடிய ஏழுநாட்களாக முள்ளியவளைக் காட்டுவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற திருக்கருமங்கள் நிறைவுபெறும். மடைப்பண்டம் வந்ததில் இருந்து வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பொங்கல் விழாக்கருமங்கள் ஆரம்பித்து வைக்கப்படும். அம்மன் கும்பம் வைத்து மடைபரவுதல் முதற்கருமமாக அமையும்.

## கும்பம் வைத்தல்

சிவாகம விதிப்படியாக வைக்கப்படும் கும்பத்திற்கும் (கடஸ்தாபனம்) இக்கண்ணகி ஆலயத்தில் வைக்கப்படும் கும்பத்திற்கும் நோக்கம் ஒன்றாயினும் வைக்கும் முறையில் பேதமுண்டு. இங்கு வைக்கப்படும் கும்பத்திற்கு நூல் சுற்றி நவதானியங்கள் இடப்படுவதில்லை. மாவிலைக்குப் பதிலாக தென்னம்பாளை நெட்டுக்களையே வைக்கப்படும். மாவிலைகள் வைப்பதில்லை. இங்ஙனம் வைக்கும் முறையிலுள்ள வேற்றுமைக்குக் காரணங்களைச் சரியாக அறிந்துகொள்ள முடியவில்லை.

மடைப்பண்டத்துடன் கொண்டுவரப்பட்ட கும்பப்பாத்திரங்களையும், அதற்குரிய மற்றும் பொருட்களையும் உபயோகித்தே இங்கு கும்பம் வைக்கப்படும். கும்பம் வழமையாக வைக்கப்படும் இடத்தை நீரினால் சுத்திகரித்து அவ்விடத்தில் அரிசியை வட்டமாகப் பரவி அதன்மேல் அம்மன் மந்திரம் தாவி அதன்மேல் கும்பப்பாத்திரத்தை நிறுத்தி அதன்மீது தேங்காயை வைத்து மாவிலைக்குப்பதிலாக இளம்தென்னம்பாளை நெட்டுக்களையும் வைத்து அம்மன் முகவடாகத்துள் மஞ்சட்காப்பு சாத்தி அம்முகவடாகத்தை கும்பத்தின் சிரசான தேங்காயில் பதித்து பட்டுவஸ்திரம் சாத்தி பூக்கள் இட்டு அம்மனை அக்கும்பத்தில் பூசனைக்காக ஆவாகனம் செய்து கொள்வதே கும்பம் வைத்தலாகும். இதனைப் பூசாரியாரே செய்துகொள்வார். இத்தருணத்தில் மடைப்பண்டத்துடன் கொண்டுவரப்பட்ட உவர் நீரில் எரிகின்ற விளக்கும் இங்கு ஏற்றிவைக்கப்படும். கும்பம் வைத்து நீர்விளக்கை ஏற்றி ஆனதும் மடைபரவுதல் செய்யப்படும் அம்மடைபரவுதற்குமுன் கச்சுநேரல் என்ற வழமையான கருமம் நடைபெறும்.

## கச்சுநேரல்

மடைக்குரிய பொருட்களைப் பரவுதற்கு வெள்ளைத்துணியை நேருதலையே கச்சு நேரல் என்பர். வண்ணானால் கொடுக்கப்படும் தூயதான இத்துணியைப் பூசாரியார் வாங்கி அதனைக் கொய்து அதன்

ஒரு அந்தம் முழுவதையும் இரு கைகளாலும் அடக்கிப்பிடித்து நான்குதிக்கும்முகமாக நின்று ஒவ்வொரு திசையுமுள்ள காவல் தேவாதிகளை வேண்டி நேருதலையே கச்சுநேரல் எனக் கூறப்படுகின்றது. இந்நேரம் பறைமேளம் முழுங்கப்படும். பூசாரியார் உருக்கூடிய நிலையில் காணப்படுவார். இங்ஙனம் நேர்ந்து முடிவுற்றதும் கும்பத்தின் முன் மடைபரவுமிடத்தில் அத்துணியை விரித்து விடுவார்கள். அதன்மேல்தான் மடைபரவப்படும்.

**மடைபரவுதல்**

மடைப்பண்டங்களாகக் கொண்டுவரப்பட்ட வாழைப்பழம், பாக்கு, வெற்றிலை என்பவற்றில் ஒவ்வொன்றிலும் ஆயிரம் ஆயிரமாக எண்கணக்கிட்டு வைக்கப்படுதல் வழமையாகும்.

முன்கூறியபடி நேர்ந்து விரிக்கப்பட்ட வெண்துணியின் மீது வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு இளநீர் ஆதியாம் பொருட்களுடன் இளந் தென்னம்பாளையின் மலர்கள் உதிர்த்திப் பரப்பிவிடுவார்கள். இது இங்குள்ள மடையின் ஒரு விசேடமாகும். இங்ஙனம் மடைபரவியதும் கும்பபூசனை வழிபாடு நடைபெறும் "கும்பத்தழகி" என்று கூறப்படும் கண்ணகித் தெய்வத்தைக் கும்பத்தில் ஆவாகித்து அருளைப் பெறுவான் பொருட்டு வழிபாட்டைத் தொடங்கி வைத்தும் இந்த நேரத்தில் இருந்து அடியார்கள் நேர்த்தியாளர்கள் தங்கள் விருப்புக்களுக்கேற்ற முறையில் நேர்த்திக்கடன்களைச் செய்து வழிபாடாற்றி தமது தலையாய நோக்கினை நிறைவு செய்துகொள்வார்கள்.

**நேர்த்திக்கடன் நிறைவேற்றல்**

அம்மனை வேண்டியதால் தங்களுக்குற்ற நோய் பிணிகள் நீங்கிச் சுகமடைந்தமைக்கும் தமது இஸ்டங்கள் பூர்த்தியாகி நல்வாழ்வு பெற்றமைக்கும் அடியார்கள் அம்மனின் சன்னிதியில் அங்கப்பிரதட்சணம், அடியளித்தல், தீக்குளித்தல், காவடி, பாற்செம்பு, தீச்சட்டிஎடுத்தல், பொங்குதல், அர்ச்சனை செய்வித்தல், மடிப்பிச்சை கொணர்தல், நேர்த்தியின்போது தாங்கள் தீர்மானித்த பொருட்களை காணிக்கையாகச் செலுத்தல் என்பன போன்ற வகையில் தமது நேர்த்திகளைப் பூர்த்தியாக்கிக் கொள்வர். இங்கனம் அடியார்கள் நேர்த்திகளைச் செய்தும், கண்ணோய், வெப்புநோய் முதலியவற்றால் வாழ்க்கை பாதிக்கப்படாமலும், மற்றும் கஸ்டதுன்பங்கள் நீங்கி சுகவாழ்வு பெறவும், மறுமையில் நற்பேற்றையடையவும் கதிர்காமக் கரையாத்திரை போவதற்கு உத்தரவு பெறவும் கண்ணகித்தாயாரை மனங்கசிய வேண்டி நின்று பிரார்த்தித்துக்கொள்வார்கள். அடியார்களின் ஆடல்கள் பாடல்களும், ஆனந்தக் கூத்துகளும், வீதி எங்கணும் நிலவிநிற்கும்.
இக்கட்டுரை பொங்கற்கிரியா கருமங்களை விளக்க வேண்டுமென்னும் நோக்கமுடையதாதலின் அந்நோக்கம் மாசுறும் என்பதாலும் கட்டுரை விரியும் என்றஞ்சியும் இனிப் புறக்கரும நிகழ்ச்சிகளைக் கூறாது விடுகின்றேன்.

திங்கள் அதிகாலையில் இருந்தே கோயில் வீதி எங்கும் வந்து நிறைந்துள்ள அடியார்கள் அந்திப் பொழுது எப்போது வரும் அம்பாளின் பொங்கல் மடைகண்டு பூசித்து மகிழ்வோம் எனக் காத்திருப்பர். இவர்களின் மனம் சலிப்புற நேருமே என்று அஞ்சியும், தான் பெற்ற இன்பம் மற்றவர்க்கும் என்பதுபோல் ஆதவனாகிய தான் அன்றுபகல் முழுவதும் அம்மனின் ஆலயத்தில் கண்ட அரிய காட்சிதன்னை அம்புலியும் காணவைத்து விடவேண்டும் என்ற ஆசை மிகுதியாலும் கிழக்கெதிர்சாய அம்மன் அடியார்கள் தவங்கிடந்த அந்த மகிமைபெற்ற திங்கள் இரவு மெல்லென வருகின்ற வேளையிலே

தேவியாருக்குரிய பொங்கல் ஆரம்பிக்கத்தொடங்கிவிடும். இத்தினத்தின் தாட்சியிலாத பகலும் மாட்சியுடைய இரவும் சங்கமிக்கின்ற அந்த அந்திப் பொழுதிலேதான் கண்ணகிக்குப் பொங்கல் செய்ய அடியார்கள் காத்திருப்பார்கள்.

இந்த அந்தி நேரத்தில்தான் இப்பதியில் கிழவி ரூபத்தில் வந்த கண்ணகித் தெய்வம் மாடு மேய்த்திடும் சிறுவரிடம் தான் " பசியால் வாடுகிறேன்" என்று தன்வாய்திறந்து கூறியதினாலே அந்திப்பொழுதான நேரத்தில்தான் அச்சிறுவர்கள் அத்தாயாருக்கு அமுது படைத்து நின்றார்கள். மேலும் தான் கண்ணகி என்பதை அவர்களுக்குணர்த்தி " வருடாவருடம் இத்தினத்தில் இப்பொழுதில் இங்கே வழிபாடாற்றினால் நான் உங்களுக்கருள்வேன்." ஏன்று மறைத்தாய் எனவே அடியார்கள் அந்தி நேரம் வந்ததுமுதல் வெளிவீதியில் அம்மன் சன்னிதானம் முன்பாக அமைந்த இடங்களில் நிலத்தில் அடுப்புவெட்டி தங்கள் விருப்பப்படியான பாத்திர பண்டங்களில் பொங்கல் செய்து படைத்து வழிபாடாற்றுவர் ஏனைய அடியார்கள் தங்கள் விருப்பப்படியான முறைகளில் அம்மனை பூசித்து நிற்பர். இதேவேளையில் ஏழு இரவுகளில் காட்டுவிநாயகர் ஆலயத்தில் தொடர்ந்து எடுத்து வரப்பட்ட "சிலம்பு கூறல்" காவியம் அதன் மிகுதிப்பகுதியை இவ்வாலயத்தின் ஒரு புறத்தில் குத்துவிளக்கேற்றி அனுபவமுடையவர்கள் படித்துக்கொண்டிருப்பர் (இக்காவியம் வழமையாக இந்த இரவு படித்து முடிக்கப்படும்)

அடியார்களின் பொங்கல் வழிபாடுகளுக்கு நேர வசதியை அளித்து இரவு ஒன்பது மணியின்பின் பூசாரியார் பொங்குகின்ற கருமம் நடைபெறத்தொடங்கும். மகாமண்டபத்தின் முன்பதாக பொங்கல்வழமையாகச் செய்யப்படும். இடத்தில் நிலத்தில் மூன்று அடுப்புக்கள் வெட்டப்படும். இவற்றில் நடு அடுப்பில் அம்மன் வளந்தும், இருபக்கஅடுப்புக்களிலும் பக்கவளந்துகள் இரண்டும் வைத்துப் பொங்கப்படுதல் வழமை. வளந்து என்பது பொங்குதற்கு உபயோகிக்கப்படும் இரண்டரை அடி உயர்முடைய பருமனான மட்பாத்திரமாகும். இந்த வளந்துகளை பொங்க அடுப்பிலேற்றமுன் நூல்சுற்றல் வளந்து நேரல் என்ற விசேட கருமங்களுக்கு உட்படுத்தப்படும்.

நூல் சுற்றுதல்

பொங்கலுக்குரிய அம்மன் வளந்திற்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்பட்டு கும்பத்திற்கு நூல் சுற்றப்படுவதுபோல் சுற்றப்படும். ஐயரோ, பூசாரியாரோ வளந்திற்கு நூல் சுற்றுவதை மேற்கொள்வர். இதே போன்று மற்ற இரு வளந்துகளிற்கும் நூல் சுற்றப்படுவதில்லை. இங்ஙனம் நூல் சுற்றிமுடிவுற்றதும் "வளந்து நேரல்" ஆரம்பிக்கப்படும்.இந்தநேரம் கட்டாடும் உடையாரின் ( பூசாரியார்) பூசகத்தோற்றத்தையும் குருக்களுக்கும் இருவருக்குமுள்ள சமய விதிமுறையில் அமைந்த பேதத்தையும் சிறிது நோக்குவோம். இருவருக்கும் ஆகமவிதியில் அமைந்த தமது உடல், உடை பூண்டிடும் சமயச்சின்னங்கள் என்பனவற்றின் தோற்றங்களில் வேறுபாடுகள் அநேகமுண்டு.

பூசாரியார் குருக்களைப்போன்று சைவ ஆகமவிதிப்படியான நித்திய நைமித்திய பூசனைகளுக்குரிய மந்திர சுலோகங்களை அறிந்தவராகவோ அன்றேல் அவற்றில் பூசனை வழிபாடு இயற்றக்கூடியவராகவோ இருக்கவேண்டுமென்ற நியதியில்லை. அப்படி இருப்பதுமில்லை பூணூல் தரித்திடுதல் இல்லாதவராவார். கும்பம்வைத்தல், மடைபரவுதல், பொங்குதல், படைத்தல், கட்டாடுதல் வேளை விபூதி, மஞ்சள்காப்பு அடியார்களுக்கு அளித்தல் ஆதியாம் கருமங்களை மாத்திரம் இயற்றுவார். இப்பதியில் கண்ணகி வந்து காட்சித்த கால முதல் வருடா வருடம் பொங்கலைச் செய்து வழிபட்டு வரும் வற்றாப்பளையைப் பிறப்பிடமாகக்கொண்ட பரம்பரையினரான உயர் வேளாளர் குலத்தின் தோன்றல் ஒருவரே இக்கட்டாடும் உடையார் ஆகும்தகைமையுடையர் கட்டு ஆடிச் சொல்லுகின்றபடியால் கட்டாடும் உடையார் என்பர். உயர்வேளாளரை உடையார் என்று அழைப்பர். முற்காலத்தில் இங்ஙனம் பொங்கலிடும் காலங்களில் பூசாரியாருக்கு (உடையார்) தேவியின் அருள் கிடைக்கப் பெற்று உருவந்து ஆடிக்கட்டுச் சொல்வார்.

கட்டுச் சொல்லல்

என்பதற்குப் பலவித கருத்துக்கள் இருப்பினும், இங்கு யாரைப்பற்றியோ, அல்லது எதனைப்பற்றியோ, எக்காலத்திலோ அறிந்துகொள்ள முடியாமல் மூடமாக இருக்கும் அல்லது இருக்கச் செய்யப்பட்ட விடயத்தை சிலவேளைகளில் சூசகமாகவும், சிலவேளைகளில் விளக்கமாகவும் தெரியக் கூறல் என்பதாகும். ஆனால் இக்காலங்களில் இது நடைபெறுவதில்லை.

கட்டாடும் உடையார் வமிசத்தில் தோன்றிய பூசாரியார் முற்கூறப்பட்ட பூசாகருமங்களைச் செய்பவராய்,

பூசனைக்குரிய காலத்தில் தேகத்தில் தீட்சைப் பூச்சுகளுடன், நெற்றியில் சந்தணம் குங்குமம் பொலிய எட்டுமுழமுடைய புதிய வெள்ளை வேட்டி அணிந்து அதன்மீது இடுப்பில் சால்வைதனை வரிந்துகட்டி வேப்பம் பத்திரியும், வெள்ளி சுற்றிய பிரம்பும் இடையில் சொருகியிருப்பார். காதில் வெண்வைரக்கல் பதித்த கடுக்கன் அணிந்து இடக்கையில் வெள்ளிக்காப்பு (இரட்சாபந்தனம்) தரித்து ஆசாரம் நிறைந்து காணப்படுவர். இப்பூசாரிய பரம்பரை இயற்றிவந்த பொங்கல் முறைகளை பிறிதொரு காலத்துப் "பக்தஞானி" என்னும் ஒரு பெரியார் நெறிப்படுத்தி உதவினார். இவருடைய பத்ததிப்படியே இப்பொழுது அம்மனுக்குப் பொங்கல் நடைபெற்று வருகின்றது. இவரைப்பற்றி பிறிதோர் இடத்திற் கூறுவோம். இத்துடன் இனி அடுத்த திருக்கருமத்தினை அணுகுவோம்.

## வளந்து நேரல்

நூல் சுற்றப்பட்ட வளந்து நேரலுக்குத் தயாரான அம்மன் வளந்தினை முற்கூறிய தோற்றமுடைய பூசாரியார் தன் இருகைகளாலும் எடுத்துக் கொள்வார். மகா மண்டபத்துக்கு முன்னால் பொங்கலிடும் இடத்துக்கண்மையில் வந்து நின்று அம்மனை தோத்தரித்து பின் அட்டதிக்குப் பாலகரையும் தேவாதிதேவுக்களையும் வேண்டுதல் செய்து இங்கே நடைபெறப்போகின்ற பொங்கல்தனை அவர்களுக்குத் தெரிவித்து அவர்களின் பாதுகாப்பை வேண்டிநிற்பர். இச்சமயத்தில் தன் இரு கரங்களாலும் அந்த வளந்தினை மேலெறிந்து திக்குக்களை நோக்கிப் பக்தி பரவசமாய் உருஏறிய நிலையில் ஆடுவார். பறைமேளத்தின் ஒலித்தாளத்துக்கமைய இவர் லயந்தவறாது வளந்தினைஎண்திசையும் நின்று எறிந்தேந்தி ஆடுவார். இந்நேரம் அம்மனின் பரியலங்கள் என்று கூறப்படும் தேவாதிகளுக்குப் பச்சரிசி வானத்தில் எறியப்படும். பொங்கல் இனிது நிறைவுறத் தேவாதிகளை வேண்டுதலையே வளந்து நேரல் என்பார்போலும். நடுவான அடுப்பில் வைக்கப்படும் அம்மன் வளந்தினை மாத்திரம் நேர்த்திக்குள்படுத்தி, இரு வளந்துகளையும் உட்படுத்தாமல் மூன்று வளந்துகளையும் நீர் நிறைத்து அடுப்பில் ஏற்றுவார் பூசாரியார் இவற்றைத் தொடங்கிவிட மற்ற நோற்பாளர்களில் உரிமையானவர்கள் அடுப்பை எரித்துப் பொங்குதற்குத் துணையாய் நிற்பர். பானையில் முதல் அரிசியை இடுவதும் பூசாரியார்தான். பின் மற்றவர்கள் நிறைவேற்றிக் கொள்வர். பசுப்பாலும் பச்சரிசியும் தவிர வேறு எவையும் சேர்ப்பதில்லை.பறைமேளம் முழங்கிக்கொண்டிருக்க, பொங்கலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அடியார்கள் இத்திருப்பொங்கலை மிகப்பயபக்தியுடன் சூழ இருந்து கவனித்துக்கொள்வார்கள். வருடத்தில் ஓர்முறை இவ்வாலயத்தில் நடக்கும் அதிமுக்கியமான கருமம் அல்லவா இதற்காகத்தானே பல இடங்களிலும் இருந்து யாத்திரீகர்கள் வந்திருக்கின்றார்கள் இன்றிரவு பொங்கி முடிவுற்றதும் அந்த அமுதினை அம்மனுக்குப் படைக்கின்றதைப் பூசாரியார் மேற்கொள்வார். இதற்குமுன் பட்டுநேரல் என்று ஒரு கருமம் நடைபெறும்.

## பட்டு நேரல்

அம்மன் அணிதற்கான வழங்குதல் போலும், ஒரு பட்டுச்சேலையை நேர்ந்து கும்பத்தில் அணிய வைப்பது ஒரு வழமை. இதற்கென உள்ள ஒரு பட்டுத்துணியைப் பூசாரியார் கைகளில் எடுத்து நான்கு திக்குமுகமாகவும் காட்டி நேர்ந்து அதை கும்பத்தில் சார்த்துவார். இதன்பின் இரவமுது அக்கும்பத்தின் முன்பதாகப் படைக்கப்படும் பொங்கலைப் பத்ததி முறையாக நெறிப்படுத்தியவரான பக்தஞானியார் மறைந்தவிட்டாலும் அவரின் ஞாபகமாக அவருக்கும் இத்திருவமுதை ஓர்பால் புறம்பாகப் படைக்கப்படுகின்றது.

அம்மனுக்குப் படைக்கப்பட்டதும் பூசாவழிபாடுகள் ஆரம்பமாகும். அடியார்கள் இந்நேர வழிபாட்டை மேற்கொள்வதற்கு மிக ஆவலுடையவராய் ஆலயத்தின் மண்டபத்தை நிறைத்துநிற்பர். இப்பூசையைக் காண்பது பெரும்பேறெனக் கொள்வர். இதனைக்காண்பதால் இங்குவந்து வழிபாடாற்றியதன் முழுப்பயனையும் அடைந்ததாகக்கொள்வர். இதனால் இந்நேரம் அடியார்கூட்டம் முண்டியடித்துத் தேவியின் இப்பூசையைக் காண நிற்பார்கள். கண்ணகைத் தாயாருக்கு அரோகரா அம்மனுக்கு அரோகரா என்று பக்தி வயபாட்டால் அடியவர் கூட்டம் இட்ட ஒலிதனைக் கேட்டு ஓடியே வருவதேபோல் செவ்வாய் தினமும் அதிகாலை ஐந்துமணிப் பொழுதாகி வந்துகொண்டிருக்க அம்மன் சிந்து படிக்கப்பட்டு பூசனைகள் முடிவுற மறுகருமமாகிய தூாிபிடித்தல் என்பது ஆரம்பமாகும்.

## தூளிபிடித்தல்

இக்கருமத்தின் கிரியா நோக்கம் என்ன என்பதைத் திட்டமாகக் கூற முடியாவிட்டாலும் இக்கருமம் நடைபெறுகின்ற வழமைகளை யாவரும் கூறுகின்றனர். முற்கூறிய கருமங்கள் முடிவடைந்ததும் வெளியே இரு வண்ணார் ஒரு வெண்துணியை படுக்கைப்பாட்டில் விரித்துப் பிடித்துக் கொள்ள பூசாரியார் அத்துணியின் நடுவே 11 பாக்கு 11வெற்றிலை ஆதியாம் பொருட்களை வைத்துப் பூசனைசெய்து சிலம்பதனை எடுத்துக் குலுக்கி உரு ஏறிய நிலையில் உள்ளவராய், நான்குதிக்கும் நின்று நேர்த்தி செய்து நிற்க வெற்றிலையுள் ஒரு பாக்கை வைத்துக் கூம்புபோல் சுருட்டிக் கொடுக்க அதனையும் நான்கு திக்கும் நேர்ந்து தூளியின் மேலால் மறுபுறத்தே வீசுவார். இதேபோன்று கொளுத்திக் கொடுத்த எரியும் திரிதனைத் தன்கையால் உயரப்பிடித்து நாற்புறமும் நேர்த்தி செய்து முன்கூறியபடி தூளியின் மேலால் எறிவார். இது அம்மனின் பரிய (க) லங்கள் என்று சொல்லப்படுகின்ற தேவாதிகளைப் பிரீதிப்படுத்துதல் எனக்கூறகின்றார்கள். இதன்பின் அம்மன் குளிர்த்தி பாடப்படும்.

## திருக்குளிர்த்தி பாடுதல்

ஏட்டிலேயுள்ள அம்மன் திருக்குளிர்த்திதனை பூசாரியாரும் மற்றும் அதற்கு உரியோரும் பாடுவர். அம்மனின் உள்ளத்தைக் குளிர்விப்பதால் அவளின் கருணைதனை பெற்றுக்கொள்ள வாய்ப்பாகும் என்று நோக்கியே திருக்குளிர்த்தி பாடப்படுகின்றது. அன்னையாகிய கண்ணகியை வரவேற்று அவர்க்கு அமுதாதியன படைத்துப் பூசித்து அவளின் மனங்குளிரக் குளிர்த்திபாடி அவளின் விருப்புக்கிசைந்த விளையாட்டாகிய அம்மானை விளையாட்டும் விளையாடப்படும்.

## அம்மானைப் பாடலும் ஆடலும்

குளிர்த்தி பாடி முடித்ததும் அம்மானைப் பாட்டுப் பாடப்படும் அங்ஙனம் பாடுகின்ற நேரத்திலே பூசாரியார் தன்கரத்தில் வைத்திருக்கின்ற வெள்ளியாற் செய்யப்பட்ட மூன்று சித்திரக்காய்களை மேலெறிந்து ஏந்துவார். பாட்டின் இறுதியந்தத்திலே இப்படிச் செய்துகொள்ளுவார். இவ்விளையாட்டைப் பற்றிய நோக்கம் எதுவெனில் கண்ணகியார்க்கு இவ்விளையாட்டில் மிகவிருப்பம் போலும். அம்மானை முடிவுற்றதும் மடைபிரித்து பிரசாதம் வழங்கப்படும்.

## பிரசாதம் வழங்கல்

அம்மானையும் பாடிமுடிய செவ்வாய்க்கிழமை காலை ஏழு மணியளவாகிவிடும். கும்பத்திற்குப் பரவப்பட்ட மடைகளை மாத்தி அதிலுள்ள பழம் பாக்கு வெற்றிலை பிரசாதம் என்பவற்றை அடியார்களுக்கு வழங்குவார்கள். பிரதானமாக கதிர்காமக்கரை யாத்திரை போகின்ற அடியார்களே இந்நேரத்தில் இங்கே கூடுதலாகக் காணப்படுவர். அவர்களே அம்மனின் பிரசாதங்களைத் தவறாது வாங்கிக்கொள்வார்கள். அத்துடன் மஞ்சட்காப்பும் வாங்கிக்கொள்வர். இம்மஞ்சட்காப்பு என்று சொல்லப்படும் பொருளை மருந்துக்குப் பதிலாக யாத்திரையில் நோய்வரில் அடியார்கள் பாவித்துக் குணமடைவதால் பிணிபோக்கும் இதனைப்பெற்று யாத்திரை செய்வதையே விரும்புவர். யாத்திரை அடியார்கள் பிரசாதம் பெற்று அம்மனை வழிபட்டதும் தமது யாத்திரையை முதலில் கண்ணகி பாடலைப்பாடி முன்செல்ல மற்றைய அடியார்கள் தொடர்ந்து பாடிக்கொண்டு பின் செல்வார்கள். பின் கண்ணகி மண்டபத்தின் முன்வந்து வணங்கி கண்ணகிக்கும் கதிர்க்கந்தனுக்கும் அரோகரா ஒலித்து கோயிலின் முன்வாயிலால் வெளியே செல்லக் கண்ணகி ஆலயக்கதவுகளும் மூடிக்கொள்ளும் அம்மனும் அவர்களுடன் செல்கிறாள் என்பதைக் காட்ட இக்கதவினை மூடுகிறார்கள் எனக் கூறப்படுகின்றது. இப்பொங்கலுடன் சம்பந்தமுடையதெனக் கூறப்படும் இன்னொரு கருமம் இத்தினத்தைத் தொடர்ந்துவரும் வெள்ளிக்கிழமை வழமையாக நடைபெற்று வருகின்றது. பத்தஞானி பொங்கலெனப்படும் இக்கருமம் இக்கண்ணகி ஆலயத்திலிருந்து மூன்றுமைல் தொலைவில் உள்ள நாவற்காடு என்னும் இடத்தில் செய்யப்படுவதுடன் இப்பொங்கல் பெருவைபவம் முற்றுப்பெறுகின்றது என்று கூறலாம்.

## பத்தஞானி பொங்கல்

கட்டாடும் உடையார் மரபில் வந்த பூசாரியார்கள் ஒழுங்கு முறையில்லாத வகையில் பூசை செய்து வருகின்றகாலமதில் கண்ணகை அம்மனின் திருவுள ஆங்ஞைப்படி இந்தியாவில் தஞ்சாவூர் என்னும் இடத்திலிருந்து பத்தஞானி என்னும் ஒருவரும் அவருடைய சீடரும் இலங்கை

வந்து வற்றாப்பளை அடைந்து தான் அம்மனின் பக்தன் எனவும் அவரின் திருவுளப்படி பொங்கலைச் சீர்மையுறச் செய்ய வந்துள்ளதாகவும் தன்னிடம் அதற்கான பக்தி முறைகளும் சின்னங்களும் வைத்திருப்பதாகவும் கூறி இதுவரை காலமும் பொங்கல் நடந்த முறையினை மாற்றியமைத்து நெறிப்படுத்தி உதவினார். அவர் தன் இறுதிக்காலம்வரை பத்ததி முறையான பொங்கல் நடைபெற உதவினார் என்று கூறுவர். அவரை நினைவு கூருதற் பொருட்டே அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் பொங்கல் கழித்த வெள்ளிக்கிழமை மாலையில் பொங்கல் செய்து சிறுமடை பரவித் திரும்புவர். இதற்கு தச்சனும் ஐயரும் மற்றும் சிலருமே பங்குகொள்வார்கள். பூசாரியார் இங்கு செல்வதில்லை. இந்த வைபவத்துடன் அவ்வருட பொங்கல் வைபவம் கோலாகல நிறைவு பெறுகின்றது.

"சக்தியொரு வடிவான கண்ணகையாள் பதம் பணிவோம்"

குறிப்புக்கள்

1) வடகடல் - வங்காளக்குடாக்கடல்
2) அம்மனை ஒரு விளையாட்டு
3) பக்தஞானியை சிலர் பொற்கொல்லர் வம்சம் என்றும் சிலர் தச்சர் என்றும் சிலர் அவை அல்லரென்றும் கூறுவர் இவர் யாராயினும் பக்தர்கள், ஞானிகள், அறிவாளர் ஆகிய இவர்கள் உலக ஆன்மாக்கள் எல்லாவற்றிற்கும் பொது என உணராது தத்தமர் எனப் போட்டியிடும் பேதமையாளர் குணம் நகைத்தற்குரியதாகும் இவர் எவ்வருணத்தாரெனினும் கண்ணகியின் அருள்பாலிப்பு உடையவராய் அம்மனின் பக்தராய் இருந்துள்ளார் என்பதைப் பலரும் ஒப்புக்கொள்கின்றார்கள்.

பொங்கல் கிரியா கரும விளக்கம்



# அறநெறியும் நமது சமூக விழுமியமும்

திருமதி.த.சிவபாலன் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்)

நமது இலங்கைத்தீவில் அன்று அறநெறியைப் பின்பற்ற வேண்டிய விழுமியத்தை மக்களுக்கு எடுத்துரைத்து தமிழையும் சைவத்தையும் வளர்த்தெடுத்தார் யாழ்ப்பாணத்தில் பிறந்த பெரியார் ஆறுமுகநாவலர் அவர்கள். 1822 இல் பிறந்து 1879ம் ஆண்டு சிவபதம் அடையும் வரை சைவத்தையும் தமிழையும் ஐரோப்பிய ஆட்சி மழுங்கடிக்காது பேணிக்காத்து சைவசமயம் நிலைத்து நிற்க பெரும் பணியாற்றியவர் அவர். அச்சைவப்பயிர் பல இடையூறுகளுக்கு மத்தியில் வாடி வதங்கும் சூழல் ஏற்பட்டஞான்று அதை பேணிக்காக்கும் பெரும் பொறுப்பை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்று மாவட்டங்கள் தோறும் ஆலயங்களின் சார்புடன் அறநெறிப்பாடசாலைகளை ஏற்படுத்தி அதன் மூலம் இந்து சமயத்திற்கும் கலாசாரத்திற்கும் அளப்பரிய சேவையாற்றிவருகின்றது. ஆயினும் எம்மாவட்டத்தில் உள்ள மக்களும் மாணவர்களும் ஒன்றிணைந்து நல்ல முறையில் பயன்படுத்தி தக்கதொரு விழிப்புணர்வை பெற்றுக்கொள்ளும் நோக்கம் மிகமிக குறைவாகவே காணப்படுகின்றது. அதற்கான காரணங்களை ஆராயும் போது போர்க்கால சூழ்நிலையில் இருந்து இன்னும் சரியான மனநிலைக்கு மக்கள் திரும்பாமையொன்று மற்றது பாடசாலை மாணவர்கள் மேலதிக வகுப்புக்கு செல்லவேண்டியுள்ளதால் முறையாக அறநெறிப்பாடசாலைக்கு முகம் கொடுக்காமை அடுத்ததாக ஏட்டுக்கல்வியே முக்கியமானது என்ற விளங்காத் தன்மையான மனப்பாங்கு இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து மக்களையும் மாணவர்களையும் விடுவிப்பதற்கு காலந்தான் பதில் சொல்ல வேண்டும் இந்த நிலை நீடிக்குமானால் எங்கள் சமயமும் சமய விழுமியங்களும் அறநெறியும் எங்கே போய் முடியுமோ என்ற மனத்தாக்கம் எங்கள் மத்தியில் பெரும் வேதனையைத்தரும் ஒரு விடயமாக மாறிக்கொண்டிருக்கின்றது.

இந்த உலகில் எதுவுமே நிலையில்லாதது என்பதும் தர்மம் மட்டுமே தலைகாக்கும் என்பதும் நினைவு கூரப்படவேண்டும். பாவபுண்ணியங்கள் தவறாமல் அதற்குரிய பலன்களை எமக்கு தந்தேதீரும். இறைவன்மட்டுமே நிரந்தரமானவன் என்பதும் அவன் அடியினை நோக்கியே எங்கள் செயற்பாடுகள் அமையவேண்டும் என்பதும் ஆத்மீக சிந்தனை உடையவர்கள் எமக்குக் காட்டிய பாடமாகும். சிந்தனைகளுக்கு இதுவே காரணம் என்றும் 1990ம் ஆண்டில் வெளியான இளைஞர் ஆணைக்குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

அப்படியான ஆத்மீக சிந்தனையின் பெறுபேற்றை நடந்து முடிந்த போரானது எமக்கு அறிவுறுத்தியிருக்கின்றது. அப்படியிருந்தும் எங்கள் மத்தியில் இன்னும் விழிப்புணர்வு ஏற்படவில்லை உயிர் இழப்பினதும் பொருள் இழப்பினதும் தாக்கத்தில் இருந்து எம்மவர் விடுபடவேண்டும். இதற்கு அறநெறியும் அதனால் ஏற்படும் ஆத்மீகமுமே நமக்கு நல்வழி காட்டும் என்ற உறுதிப்பாடு எம்மக்கள் நெஞ்சங்களில் புகுத்தப்படவேண்டும். இல்லாவிட்டால் இத்துயரத்தின் பிடியில் இருந்து விடுபடமுடியாது.

இத்துயரத்திற்கு கடவுள்தான் காரணம் என்று கடவுளின்மேல் பழியைப்போட்டு கடவுள்சிந்தனை கோயில் வழிபாடு என்பவற்றை மறந்து உலகப்பற்றில் அமிழ்ந்து மேன்மேலும் பாவங்களையே செய்து கொண்டிருக்கின்றோம் இந்த செயற்பாடே எம்மைப் பாவமென்ற படுகுழிக்குள் தள்ளி மேலும் அழிவையும் துன்பத்தையும் ஏற்படுத்தும் என்பதை ஏனோஉணரவில்லை. பாடசாலைக்கல்வி பட்டத்தையும் பதவியையும் தந்து வல்லவன் ஆக்கலாம் ஆனால் நல்லவன் ஆக்கமுடியாது. நல்ல பண்பும் அறநெறி வாழ்க்கையும் மனிதனை நல்லவன் ஆக்கும் என்பது சமய அறிவாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அதாவது சமயம் சார்ந்தநெறிமுறைகளும்உயர்ந்த பண்புகளான அன்பு, சத்தியம், நேர்மை, இன்சொல், பொறுமை, சேவை, தியாகம், அகிம்சை, தர்மம், மனஅடக்கம், அமைதி என்பவற்றை நாம் எம்மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். அத்துடன் பெரியோரை, பெற்றோரை, குருவை, நலிந்தோரை மதித்தல் பிறருக்கு உதவுதல்போன்ற நற்குணங்கள்தற்போதய மாணவர் மத்தியில் அருகிக்கொண்டே வந்துவிட்டது. இப்பண்புகளை பெற்றோரும் ஆசிரியர்களும் அறநெறியாளரும் மதகுருமாரும் மிகக்கவனமெடுத்து வருங்கால சந்ததிகளுக்கு புகட்டியே ஆகவேண்டும். இந்தப் பண்புகள் இல்லாததால்தான் துன்பத்தையும் துயரத்தையும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். பாடசாலைக் கல்வி அறிவையும் பரீட்சையையும் குறிக்கோளாகக் கொண்டே போதிக்கப்படுகின்றது. இதன்விளைவாக பிள்ளைகளின் மனநிலையினிலோ அல்லது அவர்தம் வாழ்விலோ சமயம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்றும் குறிப்பாக எமது நாட்டில் இளைஞர் மத்தியில் முரன்பாடானசமய போதனை என்பது அறிவாக மட்டுமல்லாமல் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த நெறியாக அமையவேண்டும். ஐம்பெரும் காப்பியங்களும், கம்பராமாயணம், மகாபாரதம், போன்ற இதிகாசங்களும் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், பகவத்கீதை போன்ற சமயநூல்களும் கதைமூலமான நன்னெறிகளைப் புகட்டகின்றன. இதைக்கவனத்தில் கொண்டுதான் எம் மூதாதையர் மடாலயங்கள் அமைத்து இவற்றைப்படித்து பயன் சொல்லி மக்களின் மனதில் பதியும்படியாக நன்னெறிகளை சமூகரீதியாக வளர்த்தனர் பெற்றோர் மனதில் இந் நன்னெறிகள் வேரூன்றியதால் தம்மக்களையும் அந்தரீதியில் வளர்த்தெடுத்தனர். அதனால் சமூக விழுமியங்கள் சிறந்ததாக காணப்பட்டன.


நாங்கள் சிறுபிள்ளைகளாக இருக்கும்போது பாட்டிமார் இக்கதைகளை எமக்கு வாய்மொழியாகக் கூறியதால் நற்பண்புகளும் சமய நம்பிக்கைகளும் எம்மனதில் நன்கு வேரூன்றின இளமையிலேயே வேரூன்றிய எண்ணங்கள் எம்மை நல்வழிப்படுத்தின. அக்காலமக்கள்பண்புசார்பழக்கவழக்கங்களையும்சமயவிழுமியங்களையும் பேணிப்பாதுகாத்தனர் இதனால் பரஸ்பர நல்லுறவும் ஒற்றுமையும் அவர்கள் மத்தியில் காணப்பட்டதால் அவர்கள் மிகவும் சந்தோசமாக வாழ்ந்தனர் கார்காலத்தில் பயிர்ச்செய்கையும் கூதிர்காலத்தில் அறுவடையும் வசந்தகாலத்தில் சமயவிழாக்களும் கலைவிழாக்களும் மேற்கொண்டு கலைகலாசாரத்தைவளர்த்து அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மனிதவாழ்வின் மேம்பாட்டை பறைசாற்றினர்.

விஞ்ஞானம் வளர வளர மெய்ஞானம் மறைந்து அஞ்ஞானம் நிலைகொண்டுவிட்டதால் சந்தோசமோ மனநிம்மதியோ அற்று பரபரப்பான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து அளவுக்குமிஞ்சிய ஆசையைவளர்த்து அதன்நிமித்தம் பல பாவங்களைச் செய்துகொண்டும் நேரமில்லை நேரமில்லை என்றும் ஓடிக்கொண்டிருக்கின்றோம். அத்துடன் போட்டியும் பொறாமையும் அவதூறும் ஆக்கி வாழ்க்கையை சந்தோசமற்ற ஒரு விரக்தி நோக்கோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்நிலை ஒழியவும் ஒரு பண்பாடான சூழ்நிலை உருவாகவும் நல்லுறவு வளரவும் சமயப்பற்று மேம்படவும் இறைநம்பிக்கை மூலம் இறைவனிடம் இரண்டறக்கலந்து பேரின்பம் அடையவும் அறநெறிவகுப்புக்களும் செயன்முறைக்கல்வியும் எமக்குவழிகாட்டும்.

மகாத்மகாந்திஅவர்கள் கூறியதுபோல சிலசமயங்களில் “அறிவு நமக்கு வழிகாட்டுவதில்லை அப்போது நமது நம்பிக்கையே வழிகாட்டுகின்றது. ஆகவே நம்பிக்கை அறிவிற்கு முரண்பாடானது அல்ல அறிவிற்கும் அப்பாற்பட்டது. அறிவு நம்மைக் கைவிடும்போது நம்பிக்கை நமக்கு உதவுகின்றது.,,இதுவே கடவுள் நம்பிக்கை ஆகவே நாம் அற்ப ஆசைகளை உண்மையானது நிரந்தரமானது என எண்ணி வாழ்நாளை பாழாக்காது இம்மை, மறுமை இன்பங்களை அடையும் பொருட்டு இறைவன்மேல் முழு நம்பிக்கையை வைத்து நற்பண்புகளை மேற்கொண்டு வாழும்காலத்துக்குள் பெறவேண்டிய நற்பண்புகளைப் பெறவேண்டும் என்று திடசங்கற்பம் கொள்வோம் இதைத்தான் வள்ளுவரும்

“நாள் என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும் வாளது உணர்வார்ப் பெறின்,,…. என்று கூறியுள்ளார். ஒவ்வொரு செக்கனும் எங்கள் வாழ்க்கையின் ஆயுட்காலம் கழிந்துகொண்டே இருக்கின்றது என்பதை உணர்ந்து உடனேயே மனங்களை மாற்றி நல்லவராக வல்லவராக இறையடியை நோக்கி பயணிப்போமாக. இக்குறிக்கோளுடன்தான் சமயமும் அறநெறியும் நமக்கு வழிகாட்டுகின்றது. ஆகவே எல்லோரும் அதாவது பெரியோரும் சிறியோரும் அறநெறியைப் பின்பற்றுவோமாக அறநெறி வகுப்புக்களில் பங்குபற்றி வாழ்வின் பயனை பெறுவோமாக.

வணக்கம்



# வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவில்பொங்கலும் கதிர்காமக் கரையாத்திரையும்

திரு.ந.மயில்வாகனம்

## ஆதிவரலாறு

ஆதியில் ஒருநாள் வற்றாப்பளையில் கண்ணகி அம்மன் மாட்டிடைச்சிறுவர்களுக்கு காட்சி கொடுத்து மறைந்ததாக வரலாறு கூறுகின்றது. அப்போது கண்ணகி அம்மன் ஒரு கிழவி வடிவில் காட்சி கொடுத்து சிறுவர்களை "பொங்குங்கோ மக்கள் சாப்பிடுவம்" என்றார் சிறுவர் பொங்க கிழவி தலையை விரித்து தலையை வகிர்ந்து பேன் பார்க்கச் சொன்னாள். ஆச்சியர்மேல் அன்பு மறுக்கமுடியவில்லை. தலையை வகிர்ந்து பார்த்தார்கள், தலையெல்லாம் கண்களாக இருக்கக் கண்டு பயந்தார்கள். பயந்த சிறுவரைத் தேற்றிக்கொண்டாள் கிழவி. அதிசயித்த சிறுவர் யாரென வினவினர். அதற்குக் கிழவி "யான் சோழநாட்டினள் கதிர்காமம் போக வந்தேன் " என்றாள் (சிலம்பு கூறல்) சான்று பகர்கிறது

அமைந்திடு மவ்வேளை தன்னில்
ஆச்சியரும் ஈது சொல்வார்
உறைந்திடல் காண் சோழநகர்
உற்றுவந்தேன் கதிர்காமம்

பின் தான் கண்ணகி என்பதை உணர்த்தி ஒவ்வொரு வருடமும் வைகாசி விசாகமும் பறுவத்தைச் சேர்ந்த திங்கட்கிழமை பொங்கி வழிபடுவீர்களாகில் இத்தலத்திற்கு வருடம் ஒருமுறை வந்து பொங்கல் முடிய இங்கிருந்து கதிர்காமம் கரையாத்திரை போவதாகவும் கூறி ஆதி வரலாற்றின்படி வற்றாப்பளை அம்மன் பொங்கல் முடிந்த மறுநாட்காலை கதிர்காமம் கரையாத்திரை செய்வதும் வழமையாகிறது. அம்பாள் இங்கிருந்துதான் கரையாத்திரை புறப்படுவதால் அடியார்களும் அம்பாளைப் பின்பற்றிஅம்பாளைத் தொடர்ந்து கரையாத்திரை செய்து வருகின்றார்கள். அம்பாளைத் தொடர்ந்து கரையாத்திரை செய்வதற்காக பல பகுதிகளிலிருந்தும் அடியார்கள் வற்றாப்பளைக்கு வருவர். இங்கிருந்து ஆரம்பிப்பதே கரையாத்திரை என்ற பெயர் பெறும். பல்வேறு இடங்களிலிருந்தும் அடியார்கள் கூட்டம் கூட்டமாக கதிர்காமம் யாத்திரை செய்பவர்களை கரையாத்திரீகர் என்று சொல்வதில்லை. கரையாத்திரையுமாகா. உண்மையில் வற்றாப்பளையிலிருந்து பொங்கல் முடியவற்றாப்பளைக் கண்ணகி அம்பாள் புறப்பட்டு கரையோரமாக போகும் போது அம்பாள் செல்லும் பாதையில் அம்பாளுடன் கூடி அம்பாள் சென்ற வழி தப்பாமல் பின் தொடர்ந்து செல்வதே கரை யாத்திரையாகும். அம்பாளைத் தொடர்ந்து கரையாத்திரை செய்வதால் இஷ்டசித்திகளைப் பெறலாம் என்று நம்பினர். நம்பியபடி நற்பலன் பல பெற்றவர்கள் இன்னும் தொடர்ந்து வருடா வருடம் பொங்கல் முடிந்து மறுநாள் கரையாத்திரை போகின்றார்கள்.

## பொங்கல்

வைகாசி விசாகம் அதை அடுத்த பறுவம், அந்தப்பறுவத்தையடுத்த திங்கட்கிழமை வற்றாப்பளைக் கண்ணகி அம்பாளுக்குப் பொங்கல் ஒரு திங்கட்கிழமை பாக்குத்தெண்டி அதற்கடுத்த திங்கட்கிழமை தீர்த்தமெடுத்து அதற்கடுத்த திங்கட்கிழமை பொங்கல் நடைபெறும். ஊரெங்கும் திரள்கிறார்கள் பொங்கலிடப் பக்தர்கள். ஆயிரங்கண்ணுடைய அம்பாள் கடைக்கண்ணோக்கம் நல்கவேண்டும் ஆயிரங்கண்ணுடைய அம்பாளுக்கு ஆயிரங்கண்பானை அதனுள்ளே கற்பூரம் சோதி சுடரொளி உப்புத்தண்ணீரில் விளக்கு எரிகிறது. ஆலயத்தில் ஆகா! என்ன அற்புதம் தீச்சுவாலை பவளம் போலும் நெருப்புத்தணல் தீக்குளிக்கின்றார்கள். பாற்செம்பு, கரகம், அங்கப்பிரதட்டை, பாற்காவடிஆட்டம், ஆரார்காவடி, அம்மன்காவடி, தாளத்திற்கிசைந்து சாய்ந்து சரிந்து மயிலெனத் தோனுது பச்சைப்பசேலென பவளக் கண்ணாடி இறகு கோலமயில் கூட்டம்போல் ஆலயத்தை வலம்வருகின்றது. அடியார் கூட்டம் அளவிடமுடியா தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால் சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால் ஆடுவார் பாடுவார் எனப்பல பேர்கள். பொங்கற் பானைகள் நிரம்பி வழிந்த பொங்கலுமோ பாற்பொங்கல் பக்குவமான பொங்கல் அருந்திடும் தாயின் உள்ளக்கருணை கூறவும் கூடுமோ. நோய் பிணி தீர்ந்து ஆசிகள் பெற்றனர் அடியார். குளிர்த்தி பாடுகிறார்கள்……
அம்மானை கூறுகிறார்கள் ……………..
பட்டுச்சாத்துகிறார்கள் ………………….. வழி வெட்டப்படுகிறது ……………….

## கரையாத்திரை

பரிவாரங்கள் எங்கே! மெய்யடியார் கூட்டம் எங்கே! யாவரும் ஆலயத்தைச் சூழ்ந்து தவம் கிடக்கிறார்கள். உத்தரவு கேட்கிறார்கள் உத்தரவு கிடைத்தவர்கள் அடப்பங் கட்டுகிறார்கள். ஒரு தேங்காய் ஒரு பணங்காசு, ஒருகொத்து பச்சையரிசி, ஒருபாக்கு, ஒருவெற்றிலை இவை யாவும் அடப்பத்தில். அடப்பம் அம்பாள் வாசலில் வழிக்குத்துணை வெற்றி வேலாயுதம் வேலைக் கையிலேந்திய வண்ணம் அடியார் கூட்டம் (அ) முத்துக்குமாரசாமி வேல் கூட்டம் (ஆ) சன்னதி வேல் கூட்டம் (இ) இயக்கச்சி சாமியார் வேல்கூட்டம் (ஈ) சடையம்மா கூட்டம் ஒருவர்பின் ஒருவராக வேலை முன்னே கொண்டு செல்ல தலையில் அடப்பங்களுடன் ஆலயத்தை வலம் வருகிறார்கள். வழி நடைச் சிந்து பாடிக்கொண்டு…… கோபுர வாசலில் வந்து கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைக்கிறார்கள். எல்லோர் களுத்திலும் உருத்திராக்க மாலை காவி உடை நீறு துதைந்த மேனியராகக் காட்சி அளிக்கின்றார்கள். அவர்கள் வாய் அரோகரா…….. அரோகரா……. என்று மீட்டுக் கொண்டே இருக்கிறது. வற்றாப்பளை அம்மனுக்கு அரோகரா, வற்றாப்பளை அம்மனுக்கு அரோகரா கந்தனுக்கு அரோகரா…. வள்ளிதெய்வானைக்கு அரோகரா வழிக்குத்துணையாய்வரும் வெற்றி வேலாயதத்திற்கு அரோகரா…… என்று அரோகரா துதிபாடிக் கொண்டிருக்க வற்றாப்பளை அம்பாள் கதிர்காமம் போகும் காட்சி பலவடியார்களுக்கு தோற்றுகின்றது. சில அடியார்கள் பக்திப் பரவசமாய் காட்சியளிக்கின்றார்கள் சன்னதம் (உரு) பத்தி ஆடுகின்றார்கள் அரோகரா கோசம் தொடர்ந்து ஒலிக்க அடியார் கூட்டத்துடன் கதிர்காம யாத்திரை முதல்வியாம் கண்ணகியார் பயணமாகிறார். வேலேந்தியபடி வேல்சாமியார் - முன்னே செல்ல ஒருவர் பின் ஒருவராக தலையில் அடப்பங்களுடன் அடியார்கள் அரோகராச் சொல்லிக்கொண்டு போகும் காட்சி அருமையான காட்சி அன்றோ! வற்றாப்பளைக் கண்ணகி அம்பாள் கதிர்காமம் போகும் பாதையில் அடியார் கூட்டம் செல்கிறது. சென்றவழி தப்பாமல் செல்கிறார்கள். செவ்வாய்க்கிழமை காலை தண்ணீரூற்று ஊற்றங்கரைப்
பிள்ளையார் கோவிலுக்குச் சென்று ஆலயத்தை வலம்வந்து வேலை ஆலயத்தில் ஓரிடத்தில் நிறுத்திக் கொண்டு அடியார்கள் குளித்து பின் பூஜை செய்து பூஜை முடிய அவ்வூர் அன்பர்கள் அளிக்கும் அன்னதானத்தை ஏற்றுக்கொண்டு மாலையாக தலை பூஜை முடித்துக்கொண்டு அன்னங்கொடுத்த அடியார்களுக்கு அரோகரா சொல்லி விடைபெற்று மாமுலை என்னும் இடத்திற்குப் போவார்கள்.

அங்கே அடியார்கள் வரவை வழிமேல் விழியாகக் காத்திருப்பார் இயக்கச்சிச்சாமியார். (தற்போது கூடு விட்டு விட்டார்) அவருடைய தவச்சாலை பெருந்தலமாக மாறுகிறது. அரோகரா ஒலி கேட்கிறது. அடியார் கூட்டம் தவச்சாலையில் வேலை நாட்டி இயக்கச்சிச்சாமியார் கொடுக்கும் தேனீரை முதலில் குடித்துக்கொண்டு அப்பால் அவ்வூரன்பர்கள் வரவேற்று அடியார்களை ஆதரித்து அமுதூட்டி வழியனுப்பி வைக்க கணுக்கேணிப்பிள்ளையார் கோவிலுக்குச் செல்வர். அங்கிருந்து குமுழமுனை கொட்டுக்கிணற்றடிப்பிள்ளையார் கோவிலுக்குச் செல்வர். அங்கே இரண்டுநாட்கள் தங்குவர். அடியார் வரவை வரவேற்று அவர்களுக்கு அன்னமளித்து வழியனுப்பி வைப்பது ஒவ்வொருகிராமத்திலும் நடைபெறும். யாத்திரீகர் சமைத்துச் சாப்பிட வேண்டிய தேவை இராது. எனினும் மிகச்சில இடங்களில் சமைத்தே உண்ண வேண்டி நேரும். செம்மலை, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய் என்னும் கிராமங்களில் உள்ள தலங்களைத் தரிசித்தக் கொண்டு புல்மோட்டை செல்வர். அங்கே முஸ்லிங்களும் தமிழர்களும் சேர்ந்து வாழ்கின்றார்கள். அவர்கள் அடியவர்களை வரவேற்று உபசரித்து வழியனுப்பி வைப்பார்கள். அப்பால் திரியாய், கும்புறுபிட்டி, குச்சவெளி என்னும் கிராமங்களின் ஊடாகச் செல்வர். அங்கிருந்து பலமைல் தூரம் நடந்துதான் உப்புவெளி தாண்டவேண்டும். வழிநடைச்சிந்துகள் பாடி அம்பாளை நினைக்க அம்பாள் கிருபையால் வழி குறுகி கோபாலபுரத்தை அடைவார்கள் கோபாலபுரத்திலிருந்து நிலாவெளி சென்றடைவர். அங்கே அடியார்களுக்கு மிகுந்த வரவேற்பு அளிப்பார்கள். மாரியம்மன் கோவில், கண்ணகைஅம்மன் கோவில் இரண்டிலும் அடியவர்கள் அடப்பம் கட்டுவார்கள். இங்கு இரண்டுநாட்கள் தங்கி யாத்திரையைத் தொடர்வர். கன்னியாய் போகும்பாதை மிகவும் கரடு முரடானது ஏற்றஇறக்கம் உடையது நீண்டவழிநடந்து கன்னியாய் செல்வர். அங்கே ஏழுவிதமான நீரூற்றுக்கள் பொருந்திய வெந்நீர்க் கிணறுகள் உண்டு. இது ஒரு சிறந்த தீர்த்தமாகும். பாவநாச தீர்த்தம் என்று கூறுவர் இராவணன் இதில் தீர்த்தமாடி தாய்க்கு ஈமக்கிரியைகள் செய்தான் என்பது ஐதீகம். இத்தீர்த்தமாடி அங்கிருந்து தென்கைலாயமாம் கோணேசர் பதியை நோக்கிச் சென்று திருகோணமலையை அடைந்ததும் அங்கே சிவன்கோவில் அம்மன்கோவில் இரண்டும் அடியார்க்கு உறைவிடமாக விளங்க அங்கு அடப்பங்கட்டி இரவுதங்கி மாலை கோணேசர் தீர்த்தமாடி பாடல்பெற்றதலமாகிய கோணமாமலை ஏறி பார்வதிதேவியாரோடும் ஈசனைத் தரிசிப்பர். மறுநாள் தம்பலகாமம் கோணேசரை தரிசிப்பர். இப்படி 108 தலங்கள் சூழ கோணேசர் வீற்றிருப்பதால் ஏனையதலங்களையும் முறையே தரிசிக்கும்பொருட்டு இங்கே ஒரு வாரம் தங்க நேரிடும். திருகோணமலை அன்பர்கள், அடியார்கள், கரையாத்திரை செய்யும் அடியார்களை பெரிதும் மதிப்பவர்கள். குருலிங்க சங்கம வழிபாடு நிரம்பியவர்கள். இறைவனோ தொண்டர் உள்ளத்தொடுக்கம் தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே என்று கரையாத்திரை செய்யும் அடியாரை வணங்குவார், போற்றிமதிப்பர். நெய்ப்பொரியல் பால் தயிர் தேன் கூட்டி மிக்கசுவையும் புனிதமும் ஒருங்கே அமைய அமுதளிப்பர். சுருங்கச்சொல்லின் பிரமாதமான உணவு அடியார்களுக்குக் கொடுப்பார். அடியார்களை இருத்தி அவர்கள் முன் உணவு படைத்து அடியார்களுக்கு தீபதூபம் காட்டி அடியார்களை வணங்கி சுவாமிபசியிருந்த பிழையை பொறுத்துக்கொண்டு சாப்பிடுங்கள்" என்று வேண்டிக்கொள்வர். அடியார் முகம் வாடினால் அம்பாள் முருகன் முகம்வாடியதற்கு சமன் என்று அச்சம்குடிகொண்டவர்களாக மிகுந்த பயபக்தியுடன் நடந்து கொள்வர். கரையாத்திரை அடியார்களுடன் வற்றாப்பளை அம்பாளும் மானிடவடிவமெடுத்து யாத்திரை செய்துகொண்டிருப்பதனாலேயே இவர்கள் இவ்வாறு பக்தி சிரத்தை காட்டுகின்றார்கள். கொக்கட்டிச்சோலை சென்று சிவன் கோவிலை அடைவர். அங்கே சுயம்புலிங்கம் ஒன்று இருக்கின்றது. இலிங்கங்களில் தலைசிறந்தது சுயம்புலிங்கம். சுயம்புலிங்க மூர்த்தியை தரிசித்த பின்னர் சாந்தமலை செல்வர். அங்கே குன்றில் ஆடும் குமரன் கோவில் குடிகொண்டிருக்கின்றான். குன்றின் அடிவாரத்தில் கேணியும் பழைய கோவில் இடிபாடுகளும் மரம்செடிகளால் மறைந்து கிடக்கின்றன. புதிதாக குன்றின் மேல் ஆலயம் கட்டுகின்றார்கள். இங்கே தரிசனம் செய்த பின்னர் வனத்திலிருக்கும் கௌபீனதாரி ஒருவரைக்காணலாம். யோகசாதனங்களுடன் வாழ்கிறார். தனித்து வனத்தில் இருக்கும் இவரின் தவநிலை அதிசயமானது. அவரின் ஆசியைப் பெற்றுக்கொண்டு மண்டூர் கந்தனிடம் செல்வார். அங்கே தங்கி இரவுப்பூசை கண்டுகொள்வார். கதிர்காமத்தைப் போல் வாய்கட்டித்தான் பூசை செய்வர். வள்ளி தெய்வானைக்கு புறம்பான ஆலயங்களும் உண்டு. நீர்வசதி பொருந்த விருட்சங்கள் நிழல் கொடுக்க அமைதியான ஒரு வழிபாட்டுத் தலமாக இத்தலம் சிறந்து விளங்குகின்றது. மண்டூரில் இருந்து அமிர்தகழி சென்று அங்கு ஒரு நாள் தங்குவர் இங்கே சீதாப்பிராட்டியார் மணலால் சிவலிங்கம் ஸ்தாபித்து பூசைசெய்ததாக ஐதீகம் கூறகிறார்கள்.

சீதாபிராட்டியார் ஆடும் பொருட்டு தோற்றிய தீர்த்தம் இங்கே உண்டு. இதன் பெயர் மாமாங்கத் தீர்த்தம் என்பதாகும். மாமாங்கத் தீர்த்தம் ஆடி விநாயகரை வழிபட்டு இங்கிருந்து புறப்பட்டுச் செல்வார். மட்டக்களப்புப் பட்டணத்தை அடைந்து பலதலங்களையும் தரிசித்துக் கொண்டு யாத்திரையைத் தொடர்வர். பின் கிளிவெட்டியை அடைந்து அம்பாளைத் தரிசிப்பர்.
இங்கிருந்து பறப்பட்டு வெருகலம்பதியை அடைவர். வெருகல் தீர்த்தமாடி ஆலய தரிசனம் செய்வர். அண்மையிலிருக்கும் வனத்தில் ஓர் குன்று அக்குன்றிலிருந்து ஒருவர் தவமியற்றுகிறார். இவரோ முருகபக்தர். இவரைத் தரிசித்து ஆசிகள் பெற்றுச் சென்றால் நீண்டவழிபோகநேரும். வழிநடைச்சிந்து, சிவனாமவழி, அரோகரா துதி முதலிய பக்திப்பாடல்களைப் பாடியவாறு வழிநடந்து களை இல்லாதவாறு சங்குமாங்கடியைச் சென்றடைவர். செல்லும் பாதையில் வேடர் வாழும் கிராமங்கள் உண்டு. அவ்விடங்களில் அன்னதானம் கொடுக்கும் வழக்கம் இல்லை. மர நிழலில் தங்கி சமைத்துச் சாப்பிடுவார். சங்கு மாங்கடிப்பிள்ளையார் வனத்தின் மத்தியில் அடியார்கள் ஏதும் கொண்டு வருவார்கள் என்று காத்துக்கொண்டிருப்பார். வன விலங்குகளும் குரங்குக் கும்பலும் இங்கே நிரம்பிக் காணப்படும். பிள்ளையாருக்குப் பொங்கி மோதகம் அவித்துப் படைத்து வணங்கிடுவர். இங்கிருந்து பொத்துவில் போகவேண்டும். போகும் வழியோ மிக நீண்டது அதனால் அடியார்கள் அரோகரா, அரோகரா, அரோகரா என்று கூறிக்கொண்டு செல்வர். அரோகரா என்ற ஒலி மீட்டவே அடியார்கள் பொத்துவிலை அடைவர்.

பொத்துவில் என்னுமிடத்தில் ஒரு வாரம் தங்குவர். இதிலிருந்து புறப்பட்டால் சனசஞ்சாரம் குறைந்து காணப்படும். கடை தெருக்கள் இல்லை எனவே காட்டுப்பாதைக்குக் கொண்டு செல்லத் தேவையான மிளகாய்த்தூள், அரிசி, தேங்காய், மா, கற்பூரம் முதலிய பொருட்களை போதியளவு வாங்கி ஆயத்தஞ் செய்வர். காசு தேவையானவர்கள் தங்கள் தங்கள் ஊரில் இருந்து தபால் தந்தி மூலம் பணத்தை வரவழைத்துக் கொள்வர். இந்த இடம் தப்பினால் கிட்டத்தட்ட பத்து நாட்களின் பின் கதிர்காமம் தபாற்கந்தோரைக் காணலாம். பொத்துவிலை விட்டுப் புறப்பட்டு காட்டில் நாவலாறு என்னும் ஆற்றில் இரவு அடப்பங்கட்டி தங்குவார். இங்கே தீவளப்பார். யானைகளும் இந்த ஆற்றில் தண்ணீர் குடிக்க அடியார்களும் ஒருபக்கத்தில் தண்ணீர் குடிப்பர். ஆனால் அம்பாள் கிருபையாலும் முருகன் கிருபையாலும் ஒரு தீங்கும் நேர்வதில்லை காலை இங்கிருந்து புறப்பட்டு மத்தியானம் பாணகை என்னும் வேடர் கிராமத்தை அடைவர் இங்கே சிங்களவர் தமிழர் இருசாதியாரும் கலந்து மணம்முடித்து ஒற்றுமையாகவே வாழ்கின்றார்கள். இவர்கள் இப்போது திருத்தமடைந்து பள்ளிக்கூடம் போய்ப் படிக்கின்றார்கள். இங்கிருந்து மத்தியானம் புறப்பட்டு மாலை சந்நியாசி மலையை அடைவர். அடர்ந்த காட்டு மத்தியில் இம்மலை இருக்கின்றது. இங்கே ஆதியில் சன்னாசம் (சன்னியாசி) ஒருவர் தவமியற்றினார். அவரடியில் இரவு தங்குவது வழக்கம். அவர் இப்போது இல்லை வழமைபோல் அவ்விடத்தில் தங்கித்தான் போகின்றார்கள் மலையில் கட்டடங்கள் கட்டப்பட்டதற்கு சான்றுகள் உள தூண்கள் புழங்காலத்து செங்கட்டிகள் உண்டு. இங்கே கேணி ஒன்றும் உண்டு. இது தண்ணீர் குடிக்க பெரிதும் உதவியாக விளங்குகின்றது. காட்டில் கிணறு இல்லை. இதன் உதவிதான். சன்னியாசி மலையின் அடியில் ரொட்டி, அவல் நிவேதிப்பர். பெரிய தீவளர்த்து அதைச் சூழ்ந்து அடியார் வீற்றிருப்பர். தேவார திருவாசகம் பாடுவர் ஒரே ஆனந்தமும் அதிசயமுமாக அன்றிரவு இருக்கும். வனத்தின் மத்தியில் அடியார் கூட்டம் மிருகங்களின் ஒலி ஒருபுறம் அடியார் பாடல் ஓசை ஒருபுறம் ஒரு புதிய சூழல். இங்கிருந்து தீயை அணைத்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றால் சிறு அடிப்பாடு (சிறு ஒற்றைக்கால் பாதை) தப்பாமல் செல்ல வேண்டும் வாகனப் புழக்கமில்லை சன நடமாட்டம் இல்லை இப்படியான காட்டில் ஆறு குறுக்கிடும் ஆற்றின் ஆழம் யாரறிவர், முருகன் திருநாமமும் அம்பாள் திருநாமமும் ஒலிக்க அடியார்கள் வழி நடப்பர். வழிக்குத் துணையான வெற்றிவேலாயுதத்தின் பின் அடியார்கள் சென்று எதுவித கஸ்டமும் இன்றி உகந்தமலையை அடைவர்.உகந்த மலையைப்பற்றி ஒரு ஐதீகம் உண்டு. கதிர்காமத்தில் முருகன் வள்ளி திரமணம் முடித்து வீற்றிருந்தகாலை தெய்வானை பழனியிலிருந்து இது அறிந்து பக்தன் மாணிக்கவாசனாம் பெரும் முனிவனை முருகனை அழைத்து வரும்படி ஏவ அவர் கதிர்காமம் சென்று அறுகோணத்தில் முருகனை மந்திரித்துக்கொண்டிருக்கையில் முருகன் ஈர்க்கப்படுகிறார். அந்தவேளை முருகன் அறிந்து வள்ளியம்மனுடன் இங்கே வந்தார். வரும்போது கரையோரமாக கடல்மார்க்கமாக தங்கக் கப்பல் வெள்ளிக் கப்பல் என தனித்தனிக் கப்பலில் வந்து உகந்தையில் உகந்து வீற்றிருப்பதாக ஐதீகம். இங்கே அவர்கள் ஏறிவந்த தங்கக் கப்பல் வெள்ளிக் கப்பல் இரண்டும் கிடக்கக் காணலாம். அவர்கள் ஆடிய முப்பத்திரண்டு தீர்த்தமும்

மலையில் இன்றும் விளங்குவதைக் காணலாம். இத்தலத்தில் முருகனுக்கு ஓர் ஆலயமும் உண்டு இங்கு குடிகள் இல்லை அன்பர் ஒருவர் கட்டிய ஆலயம், மடம் கிணறுகள் மாத்திரம் உண்டு. இத்தலத்தில் இரண்டு நாட்கள் தங்குவர். அதன்பின் வேடர் வாழும் பூமுனையைத் தாண்டி குமுக்கன் ஆற்றங்கரையில் மத்தியானம் விடுதிவிடுவர். இவ்வாறு வற்றும் பெருக்குமுள்ளது ஆனால் அடியவர்களை விழுங்கியது என்றுங் கிடையா இவ்வாற்றோரத்தில் சமண்டலை மரங்களும் சில பூமரங்களும் புளியமரம் விளாத்திமரங்களும் உண்டு பூவெடுத்து வேலுக்குப் பூசைசெய்வார்கள். இவ்விடங்களிலுள்ள மரவேரில் தலையை வைத்து துயில்வர். சருகுகளைக் கூட்டித் துப்பரவு செய்தால் அதுவும் ஒரு இரம்மியமான உறைவிடமாக இருக்கும். காட்டில் அசுங்கிலியங்கள் இல்லை துப்பரவாக இருக்கும். சமைப்பதற்கு அல்மினியப்பாத்திரம் கொண்டு செல்வர் சிலர் "கவ்வன்கேற்" பேணியில் சமைப்பார் குறைந்தளவு பாத்திரங்களே கொண்டு செல்வர் சிறுபாத்திரம் பேணி போன்றவற்றையே வாளிக்குப் பதிலாக பாவிப்பர். ஒருவரிடமுள்ளதை மற்றவருக்கும் கொடுத்து உதவுவர். சமைக்க வசதியில்லாமல் வரும் அடியாருக்கும் சாப்பாடு கிடைக்கத்தான் செய்யும் இது தாயின் திருவருள், குமுக்கனிலிருந்து புறப்பட்டால் ஒரே வனம் பாதை கிடையாது மனித சஞ்சாரம் கிடையா மான் கூட்டம், ஆயிரம், மரைக் கூட்டம் ஆயிரம், மயிற் கூட்டம் ஆயிரம், யானைக்கூட்டம் ஆயிரம், காட்டெருமைக் கூட்டம் ஆயிரம், பன்றிக் கூட்டம் ஆயிரம், கொக்கினமும் குருவியினமும் ஆயிரம், ஆயிரம் என்னும் அளவில் இவை கண்கொளாக்காட்சி கானல்நீர் சில இடங்களில் தோன்றும் தண்ணீர் கிடையாது இந்த இடத்தில் கையில் தண்ணீர் கொண்டுசெல்ல வேண்டும் கொண்டு செல்லாதவர்களும் தண்ணீர் குடிக்கிறார்கள். காட்டில் இடைவெளியில் கிழவி தண்ணீர் பேணியுடன் நின்று தாகசாந்தி செய்துவைக்க சிங்களச் சிறுவன் வழிமாறியஅடியவர்களுக்கு சாமி இந்த நேரில் போங்கோ என்று சொல்ல அடியார்கள் வழிமாறாமற் செல்வார்கள். கிழவியாரும் சிங்களச் சிறுவனும் யாவர்? வற்றாப்பளைக் கண்ணகியாரும் கதிர்காமக் கந்தனுந்தான். வாதரை வெட்டையில் வேப்பமரத்தடியில் அடப்பம் கட்டுவார்கள். மார்க்கண்டு முதலாளி என்னும் அன்பர் இங்கே இரண்டு கிணறுகள் கட்டி வைத்திருக்கின்றார் விளாத்தி மரங்கள் தண்ணீர்ச் செம்பளவு பெரிய தேன்போலும் விளாம்பழங்களைக் கொட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். மயிலிறகும் மான் மரைக் கொம்புகளும் புலிப்பல்லும் புலிநகமும் கொட்டுப்பட்டுக் கிடக்க அடியார்கள் இவற்றை மெல்லன நீக்கி கால்வைத்துச் செல்ல நேரும். உடல் வேலம் பற்றைகளும் முட்களும் நிரம்பக் காணலாம். யானைகள் முன்னே செல்ல அடியார்கூட்டம் பின்னே செல்ல மானினம் அவர்களைத் தொடர வள்ளியம்மா வள்ளியம்மா என்று கூப்பிட்டு மகிழ்வதும் அடியார் வழமை.காட்டில் விழாம்பழமும் பாலைப்பழமும் துவரம்பழமும் நிறைந்து கிடக்கும். புளியமரங்கள் பழுத்திருப்பதைக் காணலாம். தங்கள் தேவைக்குப் பறித்தெடுக்கலாம். சில இடங்களில் காட்டில் முருங்கைக்காய் பலாக்காய்களும் உண்டு. நாவல்மடு என்னும் இடத்தில் அடுத்தபடி தங்கி இரவு கழிய அதிகாலை புறப்பட்டால் கடும் நடை நடந்து கள்ளவியாளையில் ஒருக்கால் தரித்து வியாளையை அடைவர். இங்கே ஒரு இரவு தங்குவர். இது மாணிக்க கங்கையின் தொடர் தீர்த்தமாடி மறுநாள் புறப்பட்டு 11 மணியளவில் மலைகண்டவெளியை அடைவர். இங்கு நின்று பார்த்தால் கதிரமலை உச்சிதெரியும். இந்த இடத்தில் அவல் குழைத்து வைத்துக் கற்பூரங் கொளுத்தித் தேங்காய் உடைப்பது வழக்கம். இங்கே சில அடியார்கள் கதிர்க்கந்தனைக் கண்டதேபோல் உணர்ச்சிவசப்படநேரும் ஆடுவர் பாடுவர் அரோகரா சொல்லுவர் இந்த அளவிலேயே கதிரமலை தரிசனம் கிடைத்த ஆனந்தம் தோன்றும். தோன்றவே விரைந்து நடந்து மத்தியானம் கட்டகாமத்தையடைவர் கட்டகாமத்திலிருந்து கதிர்காமம் எட்டுமைல் கட்டகாமத்தில் குடிகள் இல்லை அழகிய தாமரைத்தடாகம் உண்டு நீராடிப் பூப்பறித்து பூசைசெய்து குளக்கரை மரங்களின் அடியில் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு கதிர்காமம் மணக்குதென்பர். தங்கார் தரியார் ஆவல் மீதூர மாலை நான்கு ஐந்து மணியளவில் கதிர்காம புண்ணியதலத்தையடைவர். வற்றாப்பளையிலிருந்து புறப்பட்டு (43)நாற்பத்துமூன்றாவது நாள் கதிர்காமம் கரையாத்திரை முற்றுப்பெறும்.

முதலில் முடி தாடி இறக்கி மாணிக்ககங்கையில் தீர்த்தமாடுவர். கங்கைக்கரையில் அன்ன தானமியற்றியே கெங்கை தாண்ட வேண்டுமென்பது மரபு அதன்படி செய்தபின் முதலில் முத்துலிங்கசுவாமியும் வள்ளித்தாயும் அடியார் தரிசினைக்கு வாய்த்தபேறாக ஆலயம் அமைந்திருக்கின்றது. மகாதேவாலயத்தில் முருகன் வள்ளி தெய்வானையுடன் வீற்றிருக்கின்றார். கதிர்காமம் கரையாத்திரை செய்யும் அடியார்கள் செல்லக்கதிர்காமஞ் சென்று பிள்ளையாரை வணங்கப் பின்நிற்பதில்லை. அதன்பின் கதிரமலைத் தரிசனஞ் செய்வர். சிறுவரும் வயோதிபருங் கூட மலையேறி இறங்குங் காட்சி மிகவும் அற்புதமானது. கதிர்காமத்தில் பழனியாண்டவர் தெய்வானையம்மன் இருவருக்கும் தனித் தனிக் கோயில்கள் உண்டு இவற்றை அடுத்து அசுரன் மலையும் ஒன்று உண்டு இங்கே மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்று விசேடங்களும் ஒருங்கே அமைந்திருப்பது உண்மையே.

மூர்த்தி தலம் தீர்த்தம்
முறையாக ஆடினற்கு
வார்த்தை சொல்ல சற்குருவும்
வாய்க்கும் பராபரமே

அடியார் கூட்டம் கரையாத்திரை தொடர்ந்து கொண்டிருக்கும் அடியார்கள் இரவு வேளைகளில் ஓரிடத்தில் தங்குவது வழக்கம் பகலில் நடந்து செல்வர் வாகனங்களில் ஏறமாட்டார்கள் சில இடங்களில் பகலில் தங்குவார். குமுளமுனையில், திருகோணமலையில் 5 பொத்துவிலில் 5 உகந்தைமலையில் 2 நாட்கள் தங்க நேரும் தங்குமிடங்களில் அடியார்கள் கூட்டம் கூட்டமாக இருப்பர்.

வேல் கூட்டம் வேலுக்குப் பக்கத்தில் அடப்பங்களை கட்டி வேலுக்குக் காலை மாலை பூசை செய்து பசனையும் பக்திப்பாடல்களும் பாடிக்கொண்டிருப்பார்.
சாதுக்கள் ஒரு கூட்டமாக இருப்பர் சற்சனர் பலர் அவர்கள் கூட்டத்தில் குழுமி இருந்து யாத்திரை மகிமை அம்பாள் முருகன் மகிமை பதி பசு பாசத்தின் உண்மைத் தத்துவங்கள் பற்றிப் பேசிக்கொண்டிருப்பர்.
ஞானிகள் இவர்கள் கரை யாத்திரை தொடர்ந்து தங்கும் இடங்களில் ஒரு பக்கமாக இருப்பார்கள். இவர்களடியில் ஒரு கூட்டம் கைரேகை பார்ப்பதும் நினைத்தகாரியம் சொல்வதும் இஸ்டதெய்வ வழிபாடுகள் நன்மை தீமை பலாபலன்களை அறியும் ஆர்வத்தினர் ஒரு கூட்டமாகக் காணப்படுவர்.
யோகிகள் தனித்துத் தனித்துத் நிட்டைகூடி கண்மூடி மௌனியாக இவர்கள் இருப்பார் இடையறா தவமுயற்சியுள்ள இவர்கள் ஒருபுறம் இருப்பர்.
ஏனைய அடியார்கள் தேனீ பூக்கள் தோறும் சென்று தேன் சேகரிப்பதைப்போல் எங்கெங்கே நல்லன நறியன உண்டோ எனத் தேடி பக்திப்பசியையும் தாகத்தையும் தீர்க்க ஒரு கூட்டம் சுழன்றுகொண்டிருக்கும். இவ்வாறு அடியார்கூட்டத்தினர் பலதிறத்தினராய் பலபடியினராய்க் காணப்பட்டாலும் ஒரே இடத்தில் காணும் போது ஒரு ஆனந்தம். மாணிக்கவாசகருக்குக் குருந்தமரத்தடியில் சிவபிரான் உபதேசம் செய்தார் என்ற ஞாபகம்உடனே வரும் மெய்யடியார் கோலம் காண்டால் இனிதே இனிதே. யாத்திரையின் போது அடியார்கள் பலவிதமான விரதங்களையும் அனுட்டிப்பார். (அ) சிலர் மௌன விரதம் இருப்பார் மௌனவிரதமானது இறைவன்திருநாமத்தை மனதில் நினைப்பதன்றி வாயினால் ஒருவார்த்தையும் பேசாதிருத்தல் (ஆ) ஒருநாளைக்கு ஒருபோது உண்டல்: காலையில் காலைக்கடன் முடித்துப் பூசைமுடித்து மத்தியானஞ்சாப்பிட்டால் மறுநாளும் மத்தியானமே உணவு உட்கொள்ளல் இடையில் காலை இரவு வேளைகளில் உணவைத் தவிர்த்துக் கொள்வர் (இ) வழியில் முக்கிய தலங்களில் சிலர் தீக்குளிப்பதை விரதஅனுஷ்டானமாகச் செய்வதைக் கடைப்பிடிப்பர் (ஈ) சிலர் யாசகம் செய்து ( மடிபபிச்சை எடுத்து ) கொண்டுபோய் அதை அன்னதானம் கொடுப்பார்( உ ) வேறுசிலர் முருகன் பக்திப்பாடல்கள் பாடி புத்தகரூபம் செய்து கொண்டுவந்து வழிநெடுகப்பாடிவிற்று அப்பணத்தை அடியவருக்கே சேரச்செய்வதை நெறியாகக் கொள்வர். ( ஊ ) சிலர் சாப்பிடாமல் பலகாரம் மட்டும் சாப்பிட்டுக் கொள்வர். ( எ) கந்தபுராணம் படித்து பயன் சொல்லிக்கொண்டு போவதையும் சிலர் தம்நெறியாகக் கொள்வதும் உண்டு. வழியில் தங்குமிடங்களில் கந்தபுராணத்தைப் படித்துப் பயன்சொல்லிக் கொண்டு போவார்கள். இப்படி அடியார்கள் நெறிமுறைகள் விரதங்கள் பக்தி இல்லாதவர்களுக்கும் பக்தியை ஊட்டும் திறந்ததாய் அமைந்திருக்கும்
பலப்பல படியானஅடியார்கள் யாத்திரை செய்தாலும் அவர்கள் ஒருவரோடு ஒருவர் முரண்படார். இனிக்கரையாத்திரை செய்ய உத்தரவு வேண்டும் என்று கதைப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா! ஆம் உத்தரவு வேண்டும், வற்றாப்பளை அம்மன்கோவிலில் உத்தரவு கொடுக்கப்படுகிறது. இந்தஉத்தரவுக்காக நாட்டின் பலபாகங்களிலிருந்தும் பிறநாட்டிலிருந்தும் வற்றாப்பளை அம்மன்கோவில் பொங்கலன்று வரும் அடியார் பொங்கல் முடிய செவ்வாய் அதிகாலை ஆலயமுன்வாசலில் காத்திருப்பார். அம்பாள் கிருபையால் உத்தரவு கொடுக்கப்படுகின்றது. அகக்கண் திறக்கப்பட்டு யாத்திரை வழிகாட்டப்படுகின்றது. சிலருக்கு கனவில் உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கும். வேறுசிலருக்கு அம்பாள் அன்பர் ஒருவர் உருவந்து சன்னதத்துடன் ஆடி உத்தரவு கொடுப்பார். யாத்திரை செய்யும் தீர்மானம் இல்லாமலே வழிபாட்டுக்கென வந்தவர்களுக்கும் சில சமயம் உத்தரவு கொடுக்கப்பட்டால்

அவர்கள் பெண்டிர் பிள்ளைகள் தமது சொத்து உத்தியோகம் ஒன்றையும் பொருட்படுத்தாது கரையாத்திரை தொடர்வர். அப்போது அவர் விம்மி அழுவார் சிலவேளை தன்னை மறந்து ஆடுவார்.,பாடுவார் உறவினர் நண்பர் யாரையும் பொருட்படுத்தார் எல்லாமுகங்களிலுந் தெய்வஒளி (எல்லாம் சிவமயம்) கண்டு வணங்கி சுவாமி என்று அழைப்பதன்றி மனைவி என்றோ மக்கள் என்றோ கருதாதவராய்க் காணப்படுவார். நினைவெல்லாம் யாத்திரையின் நினைப்பாகவே இருக்கும். அவரை இடைமறித்து வைப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் தோல்வியாய் முடிய அதனைக்கண்ட உற்றார் உறவினர் அவருக்கு வழிச்செலவு கொடுத்து அனுப்பிவைப்பார், வழிச்செலவு கொடுக்க ஒருவரும்இல்லாதவரும் அம்பாள் கிருபையால் யாத்திரை தொடர்வார் அன்றித் தரியார். இப்படிப்பட்டவர்களில் சில அதிசயசக்திகள் இருப்பதனையும் காணலாம். அவர்வாக்குகள் பலிக்கும் நினைத்தது நடக்கும் சொல்வதெல்லாம் சொல்லியபடி நடக்கும். இவைஅம்பாளின் உத்தரவால் அம்பாளால் கிடைக்கும் வரப்பிரசாதமாகும். இப்பேறு யாத்திரை முற்றுப்பெறும் வரைக்கும் நிலைக்கும் யாத்திரை முடிந்த அவர் வாழ்க்கை செவ்வியதாக இருக்கும். தீர்த்த யாத்திரை கைமேல் பலன்என்றது ஆன்றோர் வாக்காகும்.

## அடியார் பெருமை

யாத்திரையால் அடியார் உறவு வளரும் பக்தி பெருக்கெடுக்கும். முக்திநெறி அறிந்தவராவார். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாக ஆடியவராதலால் பாவம் தீர்ந்துஞானகுரு கிடைக்கப்பெறுவர். சக்தி தான் சிவத்தைக் காண்பிப்பவள். ஆதலால் கண்ணகி அம்பாள் கிருபையால் ஞானபண்டிதன் - தந்தைக்குபதேசஞ் செய்தவன் - ஏழுமலைக்கு நாதன்- சிவசுப்பிரமணியக்கடவுள்பாதந் தரிசித்து உய்ந்தனர் அடியார். அடியார் பெருமையை ஔவையார் கூறிப்போந்தாரே. புவனம் பெரிது புவனமோ அரவினுக்கொருதலைப் பாரம்,அரவமோ உமையவள் சிறுவிரல் மோதிரம், உமையவள் இறைவன் பாதத்து ஒடுக்கம், இறைவனோ தொண்டர் உள்ளத்தொடுக்கம். தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே.

## அற்புதங்கள்

கரை யாத்திரையின் முதல்வி வற்றாப்பளைக் கண்ணகி அம்பாள் என்றும் அடியார்கள் அம்பாளைத் ( தொடர்ந்து ) பின்பற்றி யாத்திரை செய்து வருகிறார்கள் என்றும் பார்த்தோம். அடியார்களுடன் சேர்ந்து கரை யாத்திரை செய்யும் அம்பாள் சில அற்புதங்கள் காட்டிக்கொண்டு செல்வது வழக்கம்.

கரை யாத்திரை செய்து கொண்டிருந்த பெண் வழியில் வயிறு நொந்து பிரசவ வேதனைப்பட்டாள். அப்போது ஒரு கிழவி வடிவில் அம்பாள் அப்பெண்ணை அணுகி ஆறுதல் கூறிக் கூட்டிக் கொண்டு போய் ஒரு பற்றையும் மரமும் ஒதுக்குமாயமைந்த இடத்தில் தங்க வைத்தார். பிரசவம் பார்த்து குழந்தையைப் பெற்று மூன்றுநாள் மட்டும் அங்கே தங்கினர். ஏனை யாத்திரீகர்கள் போய்விட்டார்கள். இது நடந்தது குமுக்கனுக்கும் நாவல் மடுவுக்குமிடையில் . மூன்றாம் நாள் அந்தக்கிழவி குழந்தையைக் கையில் ஏந்திக் கொண்டு போக குழந்தையைப் பெற்ற தாய் மெல்லெனக் கால் எடுத்து வைத்து நடக்க கரை யாத்திரை தொடர்ந்தனர். சிறிது நேரத்தில் பார்த்தால் அடியார் கூட்டம் தெரிந்தது. அந்த அளவில் இனிக் கிட்டத்தான் கதிர்காமம் அடியார்கள் அதோ செல்கிறார்கள். கூட்டிக்கொண்டு போ. இந்தா குழந்தையைப்பிடி என்று கிழவி குழந்தையைத் தாய் கையில் கொடுத்த உடனே மறைந்தாள். இந்த அதிசயத்தைக் கண்ட பெண் வற்றாப்பளைக் கண்ணகை அம்பாள் தான் தனக்குதவியது என்று உணர்ந்தாள். அடியார் கூட்டத்தினருக்கும் இந்த அற்புதத்தைக் கூறி சிறிது தூரம் நடக்க மாணிக்க கங்கையை அடைந்தனர்.

குழந்தை இல்லாத ஒருவர் பிள்ளைப் பாக்கியம் கேட்டு யாத்திரை செய்தார். ஒரு பெண், சிரங்குமேல்முழுவதும் நிறைந்த குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டுபோய் கையுளைகிறது சுவாமி இந்தப் பிள்ளையைக் கொஞ்சம் பிடியுங்கோ என்று கேட்டாள். அதற்கு அவர் இந்தச் சிரங்கோடை தூக்கிறதோவென்று கூறி மறுத்துவிட்டார். அன்றிரவு அவருக்குக் கனவில் நீ நான் தந்த குழந்தையைத் தூக்க மறுத்தாய். உனக்கு குழந்தை இல்லை என்று கூறக் கேட்டு விழித்தெழுந்தால் கனவு. இது

விடயத்தை அடியார்களுக்கு கூறி அவர் துக்கப்பட்டார். உகந்தை மலையில் தங்கியிருக்கையில் நாகர் கோயிலில் இருந்து வந்த அடியார் ஒருவர் காணாமல் போனார். அடியார்கள் தேடிக் கண்டுகொள்ள முடியவில்லை. நித்திரையாய் இருந்த அடியேனுக்கு அம்பாள் கனவிலே, மறைந்து நின்ற இடம் கூற அதன் படி அடியவரைக் கண்டுபிடித்தோம். இது நடந்தது 1973-ம் ஆண்டு.

கள்ளவியாளையைக் கடந்து செல்ல வேண்டிய இடத்தில் படம் (Map) கொண்டு முன்னே சென்றவர்கள் வழிமாறிப்போனார்கள்.இதைக் கண்ட இயக்கச்சிச்சாமியார் கண்ணை மூடிப் பார்க்கையில் செல்லவேண்டிய சரியான பாதை அவருக்குக் காட்டப்பட்டது. அவர் முன்னே செல்ல ஏனைய அடியார்களும் அவ்வழியே போனார்கள். இது 1964 ம் ஆண்டு அடியேன் யாத்திரை செய்த போது நடந்தது.

யாத்திரை செய்து கொண்டிருக்கும் போது சில சந்தர்ப்பங்களில் அசரீரி வாக்குகளும் கேட்பதுண்டு. இதைச் சில அடியவர்கள் கேட்டிருக்கிறார்கள், அறிந்திருக்கிறார்கள் பலர். இன்னும் அனேக அற்புதங்கள். காட்டில் ஐந்து நாட்கள் நடக்க வேண்டும். மனிதசஞ்சாரங் கிடையாத இடம் பாதை ஏதுங் கிடையா. கதிர்காமங் கரை யாத்திரை போகும் அடியார் வருடம் ஒருமுறை போவதன்றி வேறெவரும் அக்காட்டில் பிரவேசித்தறியார். வனவிலங்குகள்: யானை, புலி, கரடி, பன்றி, மான், மரை, காட்டெருமை, புள்ளினங்கள் அடியவரைக் கண்டால் வழிவிட்டுக் கொடுப்பதுமல்லாமல் துன்பஞ் செய்ய மாட்டா. ஆறுகளில் அடியார்கள் குளிக்கும் போதே யானைகளும் ஒருபுறங் குளிப்பதைக் காணலாம். ஏதும் துன்பம் செய்வதில்லை. பாதை இல்லை போவதெப்படி, எல்லாம் திருவருள் வழிகாட்டுகிறது செல்கிறார்கள், அடியார்கள். மனித பலத்தில் பார்க்க தெய்வ பலம், அதன் மகத்துவம் இந்த காட்டுப் பாதை ஐந்து நாளில் தெரிய வரும். கடவுள் இல்லை என்பார்க்கும், நான் எனது என்ற மமதை உடையாருக்கும் இந்த இடம் நல்ல பாடங் கற்பித்து அறிவு வரச்செய்கிறது. மயிலினம் இங்கே ஆடிக் களிப்பதனையும் குயிலினம் பாடிக் களிப்பதையும் இயற்கை அழகையும் காணலாம். மயில் இறகு, புலிப்பல்லு, மான் கொம்பு என்பவை நிறைந்திருப்பதனைக் காணலாம். ஆனால் கொண்டு வரமுடியாது. வியாளையில் கட்டகாமத்தில் வனபரிபாலனப்பகுதியார் காவல். இப்பகுதி யாத்திரீகர்களால் மறக்கமுடியாத இடம். அரோஹரா.... .... அரோஹரா.... ..... அரோஹரா..... .... வற்றாப்பளை அம்மனுக்கு அரோஹரா, வழிக்குத் துணையாய் வரும் வெற்றி வேலாயுதத்துக்குஅரோஹரா, கந்தனுக்கு--- அரோஹரா, வள்ளி, தெய்வானைக்கு--- அரோஹரா, அடியார் கூட்டத்துக்கு--- அரோஹரா, அன்பர்களுக்கு அரோஹரா, மாணிக்கப்பிள்ளையாருக்கு--- அரோஹரா, மாணிக்ககெங்கைக்கு--- அரோஹரா, வழி அனுப்பி வைத்த அடியார்களுக்கு--- அரோஹரா, அமுதளித்த அன்பர்களுக்கு-- அரோஹரா,அம்மைஅப்பனுக்குஅரோஹரா,அரோஹரா......அரோஹரா அரோஹரா......

இலங்காபுரம், முல்லைத்தீவு மாவட்டம், வற்றாப்பளை, அருள்மிகு ஸ்ரீகண்ணகை அம்பாள் ஆலயத்தில் 20.04.2011 புதன்கிழமை அன்று நடைபெற்ற பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிசேக விழாவினை சிறப்பித்து பக்தமகாஜனங்கள் சார்பாக யாழ்ப்பாணம் மயிலிட்டியூர் சிற்பாசாரியார் விஸ்வப்பிரம்மஸ்ரீ செல்லப்பா சண்முகநாதன் அவர்களும் அவர்தம் கலாலயக் குழுவினரும் வாழ்த்தி வழங்கிய

## வாழ்த்துப்பாமாலை...

ஆழி சூழ்ந்திடு அணிதிகழ் தீவு
ஏழிசை போற்றிடும் இலங்கைநாடு
மருதமும் முல்லையும் நெய்தலும் இணைந்து
வடதிசை அமைந்த வளர் முல்லைத்தீவு

உப்பு நீரில் விளக்கெரியும் அற்புதம் நிகழ்த்தினாய்
வெட்டிய படவாளை வேப்பமரம் ஆக்கினாய்
பத்தாவது இடமாய் பத்தினியே இங்குவந்து
வற்றாப்பளைதனிலே வண்ணமாய் நீயமர்ந்தாய்

நந்திக்கடல் அருகே நல்லதோர் ஆலயமும்
அன்னை நீ ஊர்துவர அழகுத்திருமஞ்சம்
இன்றுனது வாசலிலே வானுயர்ந்த கோபுரத்தில்
குடமுழுக்குத் தான் கண்ட கண்ணகியே போற்றி அம்மா

வண்ணமுறு கோபுரத்தை அழகுறவே தான்படைத்த
சிற்பகலா சாகரமே யோகநாதா வாழி !
மை வண்ணம் காட்டிய இந்திரனே வாழி !
நுழைவாயில் கதவு தந்த நுண்கலைஞர் தாம் வாழி !

ஆகமவிதிப்படி அறநெறியைச் செய்த
சிவகாம துரந்தரர் சீர்பெறு அந்தணர்
கந்த தாஸர் என்னும் கண்ணியவாளா
கண்ணகித் தாயின் அருளுடன் வாழ்ந்திடுவீர்

பத்ததியைத் தான்படித்த வத்சாங்கக் குருவாழி !
குடமுழுக்கில் பங்கெடுத்த அந்தணர்கள் வாழி !
அருளுடைய அம்பிகையின் அறங்காவலர் வாழி !
இப்பெரிய திருப்பணிக்கு உழைத்தோர் நீடு வாழி !
அருள் கூர்ந்து பொருள் சொரிந்த அன்பர்கள் வாழி !
அன்னையின் அடியவர்கள் அவனியில் என்றும் வாழி !
கண்ணகியாள் அருள் கொடுக்க காண்டாமணி ஒலிக்க !
வற்றாப்பளைப்பதி வனப்புடன் வாழி ! வாழி !

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் எதிர்கொண்ட சவால்களும் அவற்றின் பின்னான வளர்ச்சியும்

திரு.சு.கிருஸ்ணமூர்த்தி

அடியார்கள் கண்ணீர் துடைக்கும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தைக் கூட போரின் தீ நாக்குக்கள் தீண்டத் தவறவில்லை கடந்த காலங்களில் அவ்வப்போது போர் காரணமாக இவ் ஆலயமும் சவால்களைச் சந்தித்தது இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் எல்லாம் வல்ல அம்மனின் அருட்கடாட்சத்தால் பரிபாலன சபையினர் செயற்பட்டனர். ஆலயத்தின் சேதங்களை ஓரளவிற்கு திருத்தம் செய்ய ஆவன செய்து அடியார்களின் வழிபாட்டிற்கு ஏற்றவாறு தயார்ப்படுத்தப்பட்டது. பங்குனி கடைசித் திங்கள் உற்சவத்தின்போது அம்மன் வீதி உலாவரும் திருமஞ்சம் முற்றாக அழிந்துவிட்டதனால் புதிய அழகிய திருமஞ்சம் ஒன்று அமைக்கவேண்டும் என திடசங்கற்பம் கொண்டு கடுமையான பொருளாதாரத் தடைகள் அமுலில் இருந்தபோதும் விடாமுயற்சியினால் அழகிய திருமஞ்சம் செய்யப்பட்டு 06-04-2001 பங்குனி கடைசித்திங்கள் தினத்தன்று அம்மன் திருமஞ்சத்தில் வீதி உலா வருதலும் இடம்பெற்று அம்மன் அடியார்கள் அம்மனை மஞ்சத்தில் வைத்து வணங்கி அருள்பெற்றனர்.

தொடர்ந்து மஞ்சம் தரிப்பதற்கான மஞ்சமுட்டி அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகி மிகவும் கடுமையான பொருளாதாரத் தடையின் மத்தியில் ஒரு பைக்கற் சீமெந்து 4000 ரூபாவிற்கு கொள்வனவு செய்து மஞ்சமுட்டி திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டது. திருமஞ்ச திருப்பணி வேலைகள் முற்றுப் பெற்ற போது மஞ்சம் வீதி உலா வரவேண்டிய வீதி ஆலயத்தின் முன்னால் நந்திக்கடலிற்குள் அமைக்கவேண்டி ஏற்பட்டது. பலஇலட்சம் ரூபா செலவில் ஆயிரக்கணக்கான லோட் மண் போட்டு நிரப்பி கடலாக இருந்த பகுதி திடலாக மாற்றப்பட்டது.

மீண்டும் இதனைத் தொடர்ந்து 1990 ம் ஆண்டிற்குப் பின்னர் சேதமடைந்திருந்த மடங்கள் மண்டபங்கள் கலையரங்குகள் என்பன திருத்தியமைக்கப்பட்டன மூலஸ்தானம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் என்பன புனருத்தானம் செய்யப்பட்டது. தரிசன மண்டபம் அகற்றப்பட்டு வில் வடிவான கூரையுடன் கூடிய புதிய மண்டபம் அமைக்கப்பட்டது. சுற்றுப்பிரகாரத்தில் விநாயகர் ஆலயம் உரிய இடத்தில் புதிய பஞ்சாங்க வேலைகளுடன் அமைக்கப்பட்டது.

இராஜகோபுரத்திற்கு ஏற்பட்ட சேதங்கள் திருத்தியமைக்கப்பட்டு விக்கிரகங்கள் அமைக்கும் வேலைகள் ஏற்பாடாகின ஆலயம் ஓரளவு மெருகூட்டப்பட்டு 21-03-2003 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு கண்ணகாதேவி மகா கும்பாவிசேகம் நடைபெற்றது. ஆலயக்குருக்கள் விடுதி முற்றாக அழிந்து விட்டமை ஆலயத்தில் பூசைக்கடமைகள் செய்யும் பூசகர்களுக்கு பல அசௌகரியங்கள் ஏற்பட்டன இதனால் புதிதாக பூசகர் விடுதி அமைக்கப்பட்டு குருக்கள் தங்கியிருந்து பூசை செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலயத்தில் இடம் பெறும் நிகழ்வுகளுக்காக பொது மண்டபம் ஒன்று அமைக்கவேண்டும் என எண்ணங் கொண்டு 26-12-2004 ஏற்பட்ட ஆழிப் பேரலை (சுனாமி)நினைவாக மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. இப்பணியில் கொழும்ப சைவமங்கையர் கழகம் உதவ முன்வந்து ஒரு தொகுதி நிதியை வழங்கி உதவியது. மிகுதியை ஆலய பரிபாலன சபை ஏற்றுக் கொண்டு மண்டபத்தைக் கட்டி முடித்தது. இம்மண்டபத்தில் அறநெறிப்பாடசாலை ,மற்றும் வகுப்புக்கள் நடைபெறுவதோடு ஒரு பகுதியில் நூல் நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. 2008 ம் ஆண்டு போர்க் காலத்தில் தளபாடங்கள் புத்தகங்கள் சஞ்சிகைகள் அனைத்தையும் இழந்தோம்.

## இராஜகோபுரம்

வன்னிப் பெரு நிலப்பரப்பின் பெரும் பகுதியைக் கொண்ட இப்பிரதேசத்தில் அமைந்துள்ள ஆலயங்களில் இராஜகோபுரம் அமையப்பெறாமையால் இப்பகுதி அடியார்களுக்கு இராஜகோபுர தரிசனம் கிடைக்க வாய்ப்பின்றி போனது "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" எம் அடியார்களும் கோடி புண்ணியம் பெறவேண்டி 1982 ம் ஆண்டு ஆலய பரிபாலன சபையினர் இராஜகோபுரம் அமைக்க

அத்திவாரம் இட்டு கட்டுமானப் பணியை செய்தனர் தொடர்ந்து கட்டுமானப்பணி நடைபெறவும் நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக அத்திருப்பணியில் பல தடங்கல்கள் ஏற்பட்டன அழகான இராஜகோபுரம் அமைவதனால் கட்டுமான வேலைகளுடன் அழகான விக்கிரகங்கள் அமைவதும் அத்தியாவசியமென உணர்ந்தபரிபாலன சபையினர் 1986 ம் ஆண்டு இந்தியாவிலிருந்து சிற்பவல்லுனர்களை அழைத்து வந்து விக்கிரகங்கள் அமைக்கும் பணி ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த போது 1987 ம் ஆண்டு இந்திய இராணுவ வருகையும் தொடர்ந்து நாட்டில் குழப்பநிலை பதட்டநிலை மோசமடையவும் இராஜகோபுரத்தில் ஒரு பகுதி சிற்பங்கள் அமைக்கப்பட்ட நிலையில் சிற்ப வல்லுனர்கள் பயத்தின் காரணமாக இந்தியா திரும்பினர். போர்க் காலங்களில் இவ் ஆலயத்திற்கு செல்லமுடியாத காலங்களில் ஆலயம் பூட்டி வைக்கப்பட்டும் இருந்தது பின்னர் திருப்பணி வேலைகள் செய்து முடியாத சூழ்நிலையும் காணப்பட்டது.

பின்னர் ஏற்பட்ட சமாதான சூழ்நிலையில் இராஜகோபுரத்தின் திருப்பணி வேலைகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது இருந்தும் ஆலய திருப்பணி வேலை செய்யக்கூடியவர்களை அழைத்து வருவதோ அவர்கள் தங்கியிருந்து வேலைகள் செய்வதோ சிரமமான விடயமாக இருந்தது. இருந்தபோதும் ஒரு தலைசிறந்த சிற்பவல்லுனரை அழைத்து வந்து இவ் இராஜகோபுரத்தின் சேதங்களைத் திருத்தியமைத்து அழகான சிற்பங்கள் அமைக்க வேண்டுமென பரிபாலன சபையினர் மிகுந்த சிரமத்தோடு செயற்பட்டு மிகவும் திறமைவாய்ந்த சிற்ப வல்லுனர் திரு.சி.யோகநாதன் அவர்களை அணுகியபோதும் சீரற்ற நாட்டு நிலமை காரணமாக இப்பிரதேசத்திற்கு வருவதற்கு தயங்கியபோதும் பின்னர் மனமுவந்து இராஜகோபுரத்தை திருத்தியமைத்து சிற்பங்கள் அமைக்க மகத்தான பணியை செய்வதற்கு ஆலயத்தில் தங்கியிருந்து செயற்பட தனது மனப்பூர்வமான சம்மதத்தைத் தெரிவித்து பொறுப்பேற்றார்.தொடர்ந்து இப்பிரதேசத்திற்கு வந்து செல்வதில் ஏற்பட்ட இன்னல்களுக்கு முகம் கொடுத்து இவ் இராஜகோபுரத்தின் சிற்பம் அமைக்கும் பணியை தான் செய்யவேண்டும் என திடசங்கற்பம் பூண்டு பணியை செய்து வந்த போது, நாட்டில் பிரச்சினைகள் ஏற்படும் போது விட்டுச் செல்வதும் பின்னர் சில மாதங்களில் திரும்பி வந்து பணியைச் செய்வதுமாக செயற்பட்டு, எறிகணைச்சத்தங்கள் போரினால் ஏற்படும் பிரச்சினைகள் மத்தியிலும் ஆலயத்தில் தங்கியிருந்து செயற்பட்டார். இறுதியாக இராஜகோபுரத்தில் கீழ்தளத்தில் அமைக்கவேண்டிய சிற்பங்கள் அமைத்து வேலைகள் முற்றுப்பெற்றுக்கொண்டிருந்தபோது 2008 காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் கடும் போர்மூண்டது. ஒருவாறு திரு.சி. யோகநாதன் அவர்கள் இப்பிரதேசத்தை விட்டு வெளியேறினார்.

இராஜகோபுர வேலைகள் முற்றுப்பெறாமல் இருந்தவேளையில் இப்பகுதி மக்கள் அனைவரும் பாதுகாப்புத் தேடி இடம்பெயர்ந்தனர். மக்கள் கொண்டு செல்லக்கூடிய பொருட்களுடன் வெளியேறியபோது ஆலயத்திற்கு சொந்தமான பொருட்களைவிட்டுச் செல்வதற்கு மனம் விரும்பாமையால் முக்கியமான பொருட்களை ஏற்றிப்பாதுகாப்பான இடத்தில் வைத்து மீளக் கொண்டுவர எண்ணினோம். 5மின்பிறப்பாக்கி 500 க்குமேற்பட்ட குழாய் மின்குமிழ்கள் ஏனைய மின்பொருட்கள் மின்வயர்கள் நீர்இறைக்கும் இயந்திரங்கள் ஆலயப் பொருட்கள் அடங்கிய அலுமாரிகள் தளபாடங்கள் பலகைகள் தகரப்பந்தல்கள் மற்றும் பொருட்களுடன் ஆலயத்திற்குச் சொந்தமான உழவியந்திரப் பெட்டியுடன் இவைகள் அனைத்தும் போர்காரணமாக கொண்டு செல்லப்பட்டு தேவிபுரத்தில் கொட்டகை அமைத்து பாதுகாப்பாக வைக்கப்பட்டது. பின்னர் அங்கு இருக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டபோது. உழவு இயந்திரத்தைமட்டும் அம்பலவன்பொக்கணைக்கு கொண்டு சென்று விடப்பட்டது. போரின் கொடுமையால் அம்பலவன் பொக்கணை மாத்தளன் பகுதியிலுள்ள ஆலயங்களில் இடம்பெயர்ந்து தங்கியிருந்த ஆலயங்களின் பூசகர்கள் மிகவும் கஸ்ரப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானித்து நூற்றுக்கு மேற்பட்ட பூசகர் குடும்பங்கட்கு உணவுப் பொருட்களுடன் ஏனையஅன்றாட பாவனைப்பொருட்களும் ஆலயபரிபாலனசபையால் வழங்கப்பட்டதுடன் மாத்தளன் வைத்திய சாலையில் போரில் காயப்பட்டு தங்கியிருந்தவர்கள் படுப்பதற்கு பாய் இன்றித் துன்பப்பட்டவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களிலும் ஏனைய இடங்களிலும் பெறக்கூடிய பாய்களை கொள்வனவு செய்து ஆலய பரிபாலன சபையால் வழங்கப்பட்டது. ஆனால் போதுமான பாய்களையோ தலையணைகளையோ பெற்று வழங்கமுடியாமல் போய்விட்டது. பின்னர் 2009ல் இந்நிலையில் இராணுவத்தால் மக்கள் மீட்கப்பட்ட போது சகல பொருட்களும் கைவிடப்பட்டது. ஆனால் ஆலயத்தின் முக்கிய்

பொக்கிசமாகவிருக்கும் "சிலம்புகூறல்" ஏட்டை இடப்பெயர்வின்போது ஆலய பூசாரியார் திரு கு.கிருஸ்ணபவன் அவர்கள் தம்முடன் பாதுகாப்பாக எடுத்துச் சென்று பாதுகாத்து மீண்டும் ஆலயத்திற்கு கொண்டுவந்த சாதனையை பாராட்டாமல் இருக்கமுடியாது.

2008ம் ஆண்டு போர்மேகங்கள் இப்பகுதியில் சூழ்ந்தபோது ஆலயத்திற்கும் ஆலய சொத்துக்களுக்கும் மீண்டும் சேதம் ஏற்படும் என்ற அச்சம் ஆலயபரிபாலன சபைக்கு இருந்ததனால அம்மனுக்கு சொந்தமான தங்க நகைகள்

, பொருட்கள் அனைத்தும் இடம்பெயர்வுக்கு முன்னர் பாதுகாப்பாக அகற்றப்பட்டு பாதுகாப்பு பெட்டகங்களில் வைக்கப்பட்டது தீர்க்கதரிசனமான செயற்பாடாகும். இதற்கு உதவியவர் முல்லை அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திருமதி .எமில்டா சுகுமார் அவர்கள். அவரின் துணிச்சலான செயற்பாடு பாராட்ட வேண்டியதாகும் ஆலயநிதிச் செயற்பாடுகளும் உரிய முறையில் காப்பாற்றப்பட்டது. நிதிஇழப்புக்கள் ஏற்படவில்லை என்பது மகிழச்சியைத் தருகின்றது.

இடம்பெயர்ந்து முகாங்களிலும் வெளியிடங்களிலும் தங்கியிருந்த போது ஆலயத்திற்கு ஏற்பட்ட சேதம் பற்றி அறியவும் முக்கியமாக இராஜகோபுரத்தின் திருப்பணி வேலைகளுக்காக மரத்தினால் அமைக்கப்பட்ட சாரமானது இறந்த நிலையில் சேதமடைந்து முறிந்து விழுமேயானால் சிரமத்தின் மத்தியில் அமைக்கப்பட்ட சிற்பங்களுக்கு சேதங்கள் ஏற்படும் என்ற பயத்தின் காரணமாக ஆலயத்தைச் சென்று பார்வையிட பாதுகாப்புப் பிரிவினருக்கு அரசாங்க அதிபர் ஊடாக விண்ணப்பித்து முதல் முறையாக பரிபாலன சபையினரை வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு கரைத்துறைப்பற்று உதவிஅரசாங்கஅதிபர் திருமதி.ஆரணி தவபாலன் அவர்கள் 24-02-2010 அன்று அழைத்துச் சென்று பார்வையிட வைத்தார்.

ஆலயமுன்றலை சென்றடைந்த போது மட்டில்லாத மகிழ்ட்சி ஏற்பட்டது நல்லமுறையில் இராணுவத்தினர் பராமரித்து வருவதை காணக்கூடியதாக இருந்தது. ஆனால் இராஜகோபுரத்தின் சாரத்தடிகள் இறந்து சேதமுற்றுக் காணப்பட்டது விட்டுச் சென்ற பொருட்கள் அனேகம் காணாமல் போயிருந்தன அனுமதியைப் பெற்று மீண்டும் ஆலயத்திற்குச் சென்று ஆலயத்தில் நான்கு நாட்கள் தங்கியிருந்து இராஜகோபுரத்திற்கோ சிற்பங்களுக்கோ சேதம் ஏற்படாவண்ணம் சாரத்தடிகள் அகற்றப்பட்டு இராஜகோபுரத்தின் சிற்பங்கள் சேதமின்றி காப்பாற்றப்பட்டன.

முல்லைத்தீவுப் பகுதியில் முதல் முதலாக வற்றாப்பளையிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தியமை அம்மன் அருளேயன்றி வேறில்லை வற்றாப்பளை மக்கள் மீளக்குடியமர்வார்களோ? என அஞ்சிய நிலையில் அம்மன் அருளால் முதலாவதாக மீளக்குடியமர்த்தப்பட்டனர். இதனால் ஆலயத்திற்குச் செல்லவும் வழிபாடு ஆற்றவும் முடிந்தது குருக்கள் பூசகர் தங்கும் இல்லம், பொது மண்டபம், மற்றும் ஆலய மண்டபங்களின் சிறு திருத்த வேலைகள் செய்யப்பட்டன. ஆலயத்தின் சகல பொருட்களையும் போர்க்காலத்தில் இழந்தமையால் ஆலயத்தின் அடிப்படைத்தேவையான பொருட்கள் அனைத்தும் கொள்வனவு செய்யவேண்டி ஏற்பட்டது மின்பிறப்பாக்கி, நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்னிணைப்புப் பொருட்கள், தளபாடங்கள், பூசைத்தளபாடங்கள், ஒலிபெருக்கிகள் என சகல பொருட்களும் கொள்வனவு செய்து அம்மன் அடியார்களுக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. அம்மனின் நாளாந்த பூசைவழிபாடுகளுக்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அபிசேகம் இடம் பெற்று ஆலய வழிபாடுகள் பூசைகள் வழமைக்குத் திரும்பின.

லக்சபானா மின்னிணைப்பு 21-01-2011 அன்று ஆலயத்திற்கு விசேடமாக வழங்கப்பட்டு ஆலயம் ஒளிமயமானதாக விளங்கியது. இந்நிலையில் மீண்டும் முற்றுப்பெறாமல் இருந்த இராஜகோபுர திருப்பணி வேலைகளில் சிற்பங்கள் அமைக்கும் பணியை ஆரம்பிக்கவேண்டி திரு.சி. யோகநாதன் அவர்களை அழைத்து இராஜகோபுரத்தின் ஐந்தாம் தளத்தில் முற்றுப்பெறாமல் இருந்த பகுதியில் அமைக்கவேண்டிய சிற்பங்கள் அமைக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டு 20-04-2011 புதன்கிழமை இராஜகோபுர மணிக்கோபுர மகாகும்பாபிசேகம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. கோபுர தரிசனம் செய்து கோடி புண்ணியம் பெறுவோமாக.

கடந்த பல்லாண்டுகாலத்தில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக சொல்லொணாத் துன்பத்தின் மத்தியில் ஆலயத்தின் செயற்பாடுகளை ஓரளவு செய்யக்கூடியதாக இருந்தது எதிர்காலத்தில் இவ்வாலயத்திற்குச் செய்யவேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன ஆலயத்தின் சுற்று மண்டபங்கள் புதிதாக அமைத்த அன்னதானமண்டபத்தோடு இணைந்த கல்யாண மண்டபம் அமைத்தல் ஆலயத்தின் ஏனைய புனருத்தாரன பணிகள் போன்ற முக்கியமாக செய்யவேண்டிய செயற்திட்டங்களை செயற்படுத்தும் எண்ணங்கள் பரிபாலன சபைக்கு உண்டு எதிர்காலத்தில் இவைகளை நிறைவு செய்ய எல்லாம் வல்ல அம்மன் அருள் கிடைக்க வேண்டி பிரார்த்திப்போமாக.

# என் தாயின் நினைவில்
# கண்ணகி அம்மன் பிரார்த்தனை

திரு.ப.வரதன்

சீர்வளரும் பூவிலுறை செல்வியே தெள்ளமுதே
ஏர்வளரும் பூலோகத் தீஸ்வரியே என்னமுதே
கார்வளரும் காவிலுறை கன்னியே காரிகையே
பார்வளரும் பைந்தமிழ்சேர் பைங்கிளியே பார்வதியே
தத்துபரி மீனவனை வெல்லவென்று மேதினியில்
மாதுமையாள் தானே வரவிடுத்த தையலே
தேன்பொதிந்த மாவின் கனியாகி மாறன்
விழிமறைத்து மேவுங்குழவியதாய் மெய்ப்பேழைக்குள்ளிருந்து
காவேரி யாறுதனிற் கண்டெடுத்த மாநாகர்
ஆவலுடன் வளர்த்த ஆரணங்கே ஆயிழையே
மாசாத்தார் தன்மகவை வதுவை முடிப்பதற்குத்
தேசாந் தரமாகச் சென்றுமீ காமனும்போய்
நாகமணி கொணர்ந்து நற்சிலம்பி னுள்ளீடாய்
ஆகமுடன் பாதத்தி லன்றணிந்து கோவலர்க்கு
நன்மணஞ் செய்து நயந்துசில நாள்சென்று
மாதவியார் ஆடல்கண்டு மன்னு புகழ்க் கோவலரும்
ஆவலுட னேமயங்கி ஆயிழைக்குப் பொன்தோற்றுக்
கையிற் சிலம்பெடுத்து கனமாறன் மதுரையிலே வந்திடவே
மீறுபுகழத் தட்டானும் மீனவன்தன் மாளிகையில்
விலைபேசி நானும் விற்றுத் தருவனென்று
ஆசைபல சொல்லிஅழைத்துப்போய் மாறனிடம்
சிலம்புத் திருடினவன் செங்கை பிடித்துவந்தேன்
வலிய கொலைபுரிந்து வாங்குஞ் சிலம்பையெனத்
தார்வணிகன்றன்னைத் தகாதகள்வ னென்றெண்ணி
வெட்டிவிட வேயறிந்த மெல்லியலே திட்டமுடன்
ஒருகை குழைபிடித்து ஒருகை சிலம்பேந்தி
மதுரை நகர்தேடி வந்தமகா பத்தினியே
வேங்கை மரத்தடியில் வெட்டிவைத்த கோவலரைப்
பொன்னூசியாலே புரைத்து உயிர்மீட்டு
மார்போ டணைத்து மகிழ்ந்துபல வும்பேசித்
தாங்கரிய பொன்னின் சரடுருவிப் போட்டுவந்து
பழிகார மாறனிடம் பழிகேட்ட பைங்கொடியே
மாறன் படியதனில் மணிச்சிலம்பு தானடித்து
மீறுமணி தெறித்து வெண்தணலாய்ச் சிந்தி
தட்டா னுடன்மதுரை தானெரித்த தையலரே
முட்டநின்ற கற்கத வேழுடைத்துக் கனபாண் டியன்மடிய
வட்டமுலை தானெறிந்த மங்கையே யஞ்சுகமே
அன்றிடையர் சேரிவந்த ஐயை தனைக்காண
வெந்தணல்மேல் வெண்ணெயள்ளி யப்ப மனதாறிக்
கண்டு மகிழ்ந்து காரிகையார் சேரிதனில்
மேவுமெரி வாராமல் மிக்கவரங் கொடுத்து
மாவுலகில் வந்தமரு மங்கையே யஞ்சுகமே

பூவுலகிற் கொம்பெடுத்துப் பூமலரெல் லாஞ்சொரி
ஆவலுட னேமுறித்து ஆர்ப்பரித்து அரிவையர்கள்
அம்மானை யாடி அரும்பூசைகள்புரியக்
கோபந் தணிந்த கோமள பத்தினியே
மேவரிய பூசைதன்னை மேதினியோர் தான்கொடுக்க
மானிடர்கள் நோய்தீர்த்த வஞ்சியே யஞ்சுகமே
உன்கோப மாற்ற உலகளித்த பூசைதனை
மேவு கன்னி யர்க்களித்த மெல்லியலே
பாலமிர்த நற்பூசை பலர்பார்க்க வேகளித்துக்
காதலுட னேமகிழ்ந்த காரி கையே
செப்புநெருப் புக்கன்னி சேயினைக் கன்னியர்க்கும்
ஆகாச பத்தினிமார் ஐம்பத் தொருவருக்கும்
மோகக் குழலியர்கள் மூவாயிரம் பேர்க்கும்
உந்தன் கிருபைதங்கு உத்தமியே மங்கலையே
நாற்பத்து முக்கோண நாயகியே நாகமணி
தீர்க்க முடனணிந்த சேயிழையே மானாகர்
பாக்கியமென் றேவளர்த்த பைங்கொடியே
கோவலர்க்கு ஆக்கமுட னேமணஞ்சேர் அம்பிகையே
அண்டர் தொழுஞ்சோதியே மண்டலஞ்சேர் ஆதியே
மாரிபதுமாதங்கி வாலை திரிபுரையே
காளிகெவுமாரிசிங்காரிகையே
வேல்முருகன் தாயே விநாயகனையீன்றவளே
மகிடாசூரன்சிரசில் வாதுநடங் கொண்டவளே
கயிலைகிரி மேவிவளர் காரணியே பூரணியே
அயிலோக நாயகியே ஆதிசிவன் நாரணியே
கண்ணீரிற் பிறந்த கனகபத்தினியே
சென்னியிற் பிறந்த செல்வபத்தினியே
திருவுடன் சேர்ந்த சிவபத்தினியே
மருமண முடைய மகாபத்தினியே
பராசர மாமுனி பயின்றபத்தினியே
மாவின் கனியாய் வளர்ந்த பத்தினியே
மானாகர் தன்னிடம் வளர்ந்தபத்தினியே
இடையர் சேரியிலிருந்தபத்தினியே
வணிகர் மனைவியாய் வாழ்ந்தபத்தினியே
கோவலர் கையிற் குலமணிச் சிலம்பை
வீதியில் வில்லென்று விடுத்தபத்தினியே
மதுரையில் மீனவன் வணிகரை வதைக்கப்
பழியது கேட்ட பாவைகண்ணகையே
பாண்டியன் படியில் மணிச்சிலம்புடைத்து
அன்றவன் மதுரை அழித்தகண்ணகையே
மந்திர பதிக்கு வரமுடன் பூசை
தோதாக பத்தினிமார் தொள்ளாயிரம்பேர்க்கும்
அட்டசத்தியானவர்கள் எட்டுப்பேர் தங்களுக்கும்
செந்தா மரைக்கன்னி செப்பிலுறை கன்னியர்க்கும்
விந்தை செறியும் விறுமபத்தினிக்கும்
நாக கன்னியோடு லோககன்னி நாயகிக்கும்
அம்மானைக் கன்னியுடன் ஆனவுயர் கன்னியர்க்கும்

கன்னிமா ரெல்லோர்க்குங் காணரிய மங்கலர்க்கும்
விறுமன் வயிரவர்க்கும் மெய்ப்பூத மொன்பதுக்கும்
கிங்கிலியர் மார்த்தாண்டர் கின்னரரி யக்கருக்கும்
காளியுடன் மாரி காமாட்சி பேச்சியர்க்கும்
வராகியா ஙந்தி லகிரி சவுந்தரிக்கும்
ஏவல்முன் னோடி பின்னோடி யானவர்க்கும்
மேவரிய பூசைதன்னை மேதினியிலே கொடுத்து
மானிடர்கள் நோய்தீர்த்த வஞ்சியே அஞ்சுகமே
மதுரைப் பதியிருந்த மந்திரபதி யம்மனுக்குப்
பரிவான நற்பூசை பாலமிர்தம் நற்பொங்கல்
தானே யுனக்கென்று சாற்றிடவே தையலரும்
மந்திர பதிதானும் மலரடியைத் தான்பணிந்து
விந்தை செறியும் கயிலை மேவியே நீர்போகில்
வந்திடுவோம் நாங்களுந்தன் மலரடியை விட்டகலோம்
என்றவர்கள் சொல்ல இரங்கியே கண்ணகையார்
வருஷமொருக்கால் வைகாசித் திங்களிலே
வருவோமெனவே வரங்கொடுத்த கண்ணகையே
அன்னையெனவேயுலகை ஆதரித்த அம்பிகையே
முன்னமே பாற்கடலில்பள்ளி கொள்ளும்
பச்சை வர்ணன் தங்கையே தீர்க்கமுடன்
சேடன் மணிச்சிலம்பு சென்றுகந்த நங்கையே
பதினாறு கோணத்துப் பத்தினியே பார்வதியே
தந்தோ மென்ற சக்திகண்ணகையே
அடியேன் கவலை அனைத்தையு மாற்றி
வடிவாயிரங்கும் மாதுகண்ணகையே
மாவிலுறை மாதே காவிலுறை தேனே
தாவுபுகழ்த்தாயே நாலுமறை நீயே
அன்னையே தந்தையே அம்மையே செம்மையே
ஆதியே சோதியே அண்டமே பிண்டமே
அந்தமே சித்தமே முத்தியே வித்தையே
அங்கையே செங்கையே மங்கையே நங்கையே
அன்பினுடன் என்கவலை என்பிணிக ளென்துயர்கள்
அனைத்தையும் மகற்றி யடியேற்கருள் புரிவாய்
சகலகலை யம்மையே சற்கோண நாயகியே

# வற்றாப்பளைக் கண்ணகியின் அற்புதம்

## திரு.கி.உதயகுமார் (உதவிக்கல்விப்பணிப்பாளர்)

கண்ணகி மதரையை எரித்து விட்டு தென்திசையாக ஈழம் வந்து தனது சீற்றத்தை தணித்துக் கொண்டதாகவும் அவ்வாறு இறுதியாக அதாவது பத்தாவது இடமான பத்தாப்பளையில் (வற்றாப்பளையில்) தங்கிய போதே அவளது சீற்றம் முழுமையாக தணிந்து அவள் தெய்வ அம்சம் பெற்றதாக கர்ணபரம்பரை கூறுகின்றது.

வன்னிவளநாடு வளர் சோலை நாடு
வரியம் மூன்று விளைவுள்ள நாடு
கன்னி நாடு கதிர் சோலை நாடு
காராளர் வாழும் கன்னியர் நாடு
(நாட்டார் பாடல்)

வன்னிப் பிரதேசத்தின் முல்லை மாநகரில் பிரபல்யம் அடைந்தது வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் ஆகும். நந்திக் கடற்கரையில் வயல் பிரதேசத்தில் பனிச்சைமரங்களும், வேப்பமரங்களும், பாலை மரங்களும் சோலைகளால் சூழப்பெற்று அமைந்துள்ள வனப்புறு சூழலில் எழில் மிகு தோற்றத்துடன் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றாள் வற்றாப்பளை கண்ணகி அம்மன்.

வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் வற்றாப்பளை ஆச்சி, கண்ணகித் தாய், ஆயிரம் கண்ணுடைய தாய் என பக்தர்களால் பல பெயரால் அழைக்கப்படுகிறாள். இவளுக்கு வருடம் தோறும் வைகாசி மாத பௌர்ணமியை அண்டி வருகின்ற திங்கட்கிழமையில் சிறப்பாக பொங்கல் நடாத்தப்பட்டு வருகின்றது.

இங்கு சிறப்பம்சமாக உப்பு நீரில் விளக்கு எரிவதும் பொங்கல் செய்யும் போது பானையில் சுற்றிய நூல் எரியாதிருப்பதும் பானையின் வாயில் சுற்றிய வெற்றிலை வாட்டமுறாதிருப்பதும் அற்புதங்களாகும்.

வன்னி மக்களின் நம்பிக்கைக்கு உரியவளான இவள் நினைப்பவற்றை நிறைவு செய்து தருபவளாகவும் அன்புத் தாயாகவும் அடியாரின் துயர் துடைப்பவளாகவும் உள்ளாள். மக்களின் இடப்பெயர்வு காலத்தில் எழுந்தருளி அம்மன் விழுந்தும் மக்கள் தன்னை விட்டு பிரிவதை உணர்த்தியும் மக்கள் முகாம்களில் வாழும் காலத்தில் தனக்குப் பூசைகள் நடைபெறவேண்டி சலங்கை ஒலி ஊரெல்லாம் ஒலிக்க வைத்தும் தனது அடையாளமாக நாகதம்பிரான் காட்சி தரவைத்தும் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் குடியேற்றத்துக்கான வழியமைத்து குடியேற வைத்தாள்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற வாக்கியத்துக்கமைய பஞ்சதளக் கோபுர மணிக் கோபுர குட முழுக்கன்று கருமுகில் கொண்டு வந்து மழை பொழியவைத்தும் இரண்டாவது நாளன்று கோபுர உச்சியில் வெள்ளை நாகத்தை வரவழைத்து தனது படத்தைக் காண்பித்தும் தனது இருப்பை மெய்ப்பித்து வருகிறாள் இவளது அற்புதங்களை வார்த்தையால் கொட்டிவிட முடியாது.

வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் தோன்றியதற்கு முல்லைத்தீவு பிரதேச மக்கள் மத்தியில் கர்ண பரம்பரையாக வரும் கதையொன்றுள்ளது. வற்றாப்பளை நந்திக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள வயல் வெளியில் மாடுகள் மேய்ப்பதற்காக இடையர்கள் செல்வது வழக்கம் வழக்கம்போல் மாடுகளை வயல் கரைகளில் மேயவிட்டு நந்திக் கடற்கரையில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் போது வெள்ளைச் சேலையுடன் தளர் நடையுடனும் கையில் உள்ள தடியை ஆதாரமாக ஊன்றிக் கொண்டு தங்களை நோக்கி பாட்டி வருவதைக் கண்ட சிறுவர்கள் அன்புடன் பாட்டியை அழைத்து வந்து சிறுவர்கள் பக்கத்திலிருந்த வேப்பம்படவாளில் மேலிருத்தினர்

களைப்புடனும் சோர்வுடனும் இருந்த பாட்டியிடம் குசலம் விசாரித்த போது பாட்டி சிறுவர்களை நோக்கி தனக்கு பசிக்கிறது எனக் கூறவே பாலைக் கறந்து பொங்கல் செய்து வாழை இலை இல்லாததால் விடத்தலிலையில் தட்டுச் செய்து பொங்கல் படைத்தனர்.ஆச்சி உப்பு நீர்விளக்கெரிக்கச் சொல்ல விளக்கும் எரித்தனர் ஆச்சியும் சிறுவர்களும் சாப்பிட்டனர். பின்னர் தன் தலையில் பேன் எடுத்து விடுமாறு கூறவே சிறுவர் தலையை விரித்த போது தலையெல்லாம் கண்கள் இருப்பதனைக் கண்டு பதட்டமடைந்த சிறுவர்கள் ஊர்மக்களுக்கு ஓடிச் சென்று கூறினர்.

ஆச்சியை வந்து பார்த்த போது காணவில்லை. ஆச்சி அமர்ந்து இருந்த வேப்பம் பட்டதடி துளிர் விட்டு தளைத்திருந்ததைக் கண்டனர் அன்றிலிருந்து வைகாசிப் பொங்கலும் செய்து வந்தனர்.

அடங்காப்பற்று வன்னியை பறங்கியர் ஆண்டகாலத்தில் நெவில் என்ற வெள்ளையன் கோயிலை

அழிக்கச் சென்ற போது அங்கிருந்த பூசாரிக்கும் அவனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது இன்னுமோர் தினத்தில் வருவேன் பனிச்சை மரத்தை ஆடச்செய் என்று கூறிச் சென்றான். பூசாரியின் கனவில் அம்மன் தோன்றி பனிச்சை மரத்தை கோயிலுக்குள் இருக்கும் வெள்ளைப் பிரம்பால் வெள்ளையன் வந்ததும் தட்டி விடக் கூறினா. கண்ணகித் தாய், பனிச்சை மரம் நிறைய காயுடன் நின்றது. வெள்ளையன் வந்ததும் பனிச்சை மரத்தை வலம் வந்து பூசாரியார் தட்டினார் நிறைகாயுடன் நின்ற பனிச்சை மரம் ஆடத் தொடங்கியது.

வெள்ளையனதும் அவன் ஏறி வந்த குதிரைமீதும் துப்பாக்கிக் குண்டென காய்கள் வீசத் தொடங்க வெள்ளையன் நந்திக் கடற்கரை நீரோடை வழியாக ஓடியது. இன்றுவரை இப்பிரதேச மக்களால் குதிரை பாய்ந்த இறக்கமென அழைக்கப்பட்டு வருவதை நாம் கேட்கின்றோம். எனது காலமதினும் இப்பனிச்சை பின் காயாது பட்டழிந்த நிலையில் நின்று வந்ததும் எனக்குத் தெரியும். அதனைப் பாதுகாத்திருத்தல் நன்று அதனுள் வெள்ளை நாகமும் குடியிருந்து வந்தது. அது இன்றுவரை கரந்துறைந்து காட்சி தருவதை யாவரும் அறிவர்.இவ்வாறாக குடியிருந்த தாயிற்கு கோயில் அமைத்து இன்று ஆகம முறைப்படி சிவாலய முறைப்படி சிவாச்சாரியாரது நாளாந்த பூசைகளும் வைகாசிப் பொங்கலன்று மரபு வழி பூசாரியாரது பொங்கலும் நடைபெறுகின்றது.

கோபுரம் மணிக்கோபுரம் பஞ்சதளங்களில் அமைக்கப்பெற்று அழகொழுக வானுயர நின்று அருளாட்சி நல்குகின்றாள். இவளது தெய்வீகத்தை எழுதும் போது ஒவ்வொரு உடலது அணுக்களும் புல்லரித்த வண்ணமே காணப்பட இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

சிந்து வெளிக்காலம் சமய வரலாற்றைப் பறை சாற்றினாலும் பல்லவர் காலத்தில் கூட விமான அமைப்பிருந்து பின்பே கோபுர அமைப்பாக வளர்ச்சி பெற்று இன்று உலகின் உயரமான இராசகோபுரம் திருவரங்கத்திலும் அதனை அடுத்து திருவண்ணாமலையிலும் காணப்படுகின்றது. கோபுரம் என்பதன் பொருளாக வளர்ச்சிக்கும் கம்பீரத்துக்கும் அத்திவாரமாக உள்ள மன வொடுக்கத்தை கோபுரம் விளக்கி நிற்கிறது.

எமது கண்ணகி அம்மனது இராஜ கோபுரம் பஞ்சதளங்களுடன் 60 அடி உயரமாக ஓங்கி உயர்ந்து அழகொழிக்க வடிக்கப்பட்டு முல்லை மாநகரிலும் சிலாவத்தை கிராமத்தினின்றும் பார்க்கும்படி அமைந்துள்ளது. இவளது பார்வை உலகளாவிய மக்களின் இதயங்களில் எல்லாம் ஊறி வழிந்து நந்திக்கடல் ஊற்றுப்போல் நிறைந்து வழிகின்றது. இவளது அருட்கடாட்சத்தால் பணம், பொன் நிறை தலமாக திகழ்கிறது.

வேண்டுவார் வேண்டிய வரங்களை பொழிபவள் எமது ஊரின் பொலிவுக்கு நிறைவானவள் தனது பார்வையால் கொடிய வியாதிகளை களைந்து மக்களை மகிழ்வுடன் ஒளிர வைப்பவள் மக்கள் தினம் தோறும் வழிபடும் பரிச்சயத்தால் துன்பத்தைத் துடைப்பவள்

கோபுரத்தின் அழகுக் கோலத்தை வார்த்தையால் வடிக்க முடியாது. அழகு ஒளிரும் வர்ணக் கோலங்கள், தெய்வீக ஒளி வீசும் விக்கிரகங்கள் உயிர்த்துடிப்புடன் விளங்கும் முகபாவனைகள் நினைப்பவர் உள்ளத்தில் கருணையை நிறைவிப்பவளாக கண்ணகி அம்மை விளங்குகின்றாள்.

கண்ணகி அம்மனின் முப்பது வருட கால முயற்சியின் பயனாக கருக்கொண்டு நிறைவு பெற்ற கும்பாவிசேக குடமுழுக்கு கைகூடிய இவ் வேளையில் அம்பாளின் ஆத்மீக பக்தன் என்ற வகையில் என்னையும் ஒர் கட்டுரை படைத்துத் தருமாறு கூறியமைக்கமைய அம்பாளின் திருப்பாதங்களுக்கு சமர்ப்பணம் செய்கின்றேன். இவ்வூரில் பிறந்து அம்பாளின் சன்னிதானம் எங்கும் நடமாடி அவளால் உயர்வு பெற்று மனிதனாக சமுதாயத்தில் முகிழ்ப்புக் கொண்ட எனக்கு அவளது அருளாசியால் சிறியோனாகிய நான் அறிவுக்கு எட்டிய வகையில் உண்மைகளை உறங்கவிடாது பகிர்ந்துள்ளேன் அம்பாளது அருள் பல கூறிவிடாது சிலவற்றைத் தொட்டுள்ளோன்.)

# ராஜகோபுரம்

- 'சிவத்தமிழ்ச் சொல்லழகர்'
ச.லலீசன்,
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

இயற்கை முழுவதிலும் அழகு உண்டு. சில இடங்களில் அமைந்துள்ள அழகு நமது எண்ணங்களைக் கொள்ளை கொண்டுவிடுகின்றது. மனத்தகத்து மேலான சிந்தனைகளைத் தூண்டுவதற்கு இவ்வழகு வழி கோலுகின்றது. இயற்கையின் சக்தி குறித்துப் புரிந்து கொண்ட நம்முன்னோர், வேதகாலந்தொட்டு இயற்கைக்கு முதன்மை கொடுத்து வழிபாடாற்றத் தலைப்பட்டனர். நதிக்கரைகளிலும் மர நிழல்களிலும் ஆரம்பித்த வழிபாட்டிடங்கள் ஆகமங்களை அனுசரித்து ஆலயங்களாகப் புதுக்கப்பெற்றன.

ஆலயம் ஒன்று உடல் என்னும் ஆலயத்தின் புறச் சின்னமாகும். புறச்சின்னத்தை நம் மனம் போன போக்கில் அமைத்துவிட முடியாது. மூல அமைப்பு ஆகிய சரீரத்திற்கும் அதன் குறியீடாக விளங்குகின்ற ஆலயத்திற்கும் இயைபு இருத்தல் வேண்டும். இதனாலேயே ஆலயங்களைக் கட்டுவதற்கு ஆகமகாரர் விதி முறைகளை வகுத்தனர். தேசப் படத்தின் துணைக் கொண்டு தேசத்தை நன்கு அறிந்து கொள்வது போல கட்டப்பெற்றுள்ள ஆலயம் ஒன்றின் துணைக் கொண்டு சரீரம் என்னும் ஆலயத்தின் தத்துவங்களை புரிந்து கொள்ள முடியும்.

ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்ற கோலத்தில் ஆலயம் அமைந்துள்ளது. மூலஸ்தானம் அல்லது கருவறை மனிதனின் சிரசையும் அர்த்த மண்டபம் கழுத்தினையும் மகா மண்டபம் மார்பினையும் தரிசன மண்டபம் வயிற்றினையும் அடுத்துள்ள மண்டபங்கள் கால்களையும் ராஜகோபுரம் பாதங்களையும் கோபுர ஸ்தூபி பாதத்தின் விரல்களையும் குறிப்பதாகக் கொள்வர். வழிபடநாடிவரும் அடியவர் கோவிலின் வனப்பையும் கம்பீரத்தையும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் இராசகோபுரமே வெளிப்பட்டுத் தெரிகின்றது. நெடுந்தூரத்திற்கு அப்பால் உள்ளவர்களுக்கும் தெய்வசொரூபத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திக் காட்சி தருவதால் தூல லிங்கம் எனக் கோபுரத்தை அழைப்பர்.

இயற்கை எழில் கொஞ்சும் மருத நிலச்சூழலும் அழகான நந்திக் கடற் சூழலும் ஆலயத்திற்கு மெருகூட்ட, நந்திக் கடலை நோக்கிய வண்ணம் வற்றாப்பளை அம்பாளின் இராஜகோபுரம் வானளந்து எழுந்து நிற்கின்றது.

திருக்கோவிற் கோபுரத்தைச் சூழவந்து வணங்காத கால்களால் பயனென்ன? எனக் கேட்கிறார் நாவுக்கரசர்

"கால்களாற் பயனென் - கறைக் கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற் பயனென்?"

என்பது திருஅங்கமாலையில் இடம்பெறும் பாடல்.

கோபுரமானது கீழ்ப் பகுதியில் அகன்றும் மேல்நோக்கிச் செல்லச் செல்லக் குவிவாக ஒடுங்கியும் காணப்படும். இந்த அமைப்பானது இடரில் சிக்கிய ஆன்மா இறைவன்பால் சிந்தையை ஒரு

நிலைப்படுத்தினால் ஈடேற முடியும் என்பதன் குறியீடு எனக் கொள்ளலாம். மனித எண்ணங்களை ஒரு நிலைப்படுத்துவதன் அவசியத்தையும் கோபுரம் நினைவூட்டுகின்றது.

கோபுரம் - தோற்றமும் வளர்ச்சியும்

கோபுரம் என்ற சொல் வடமொழியில் இருந்து தமிழுக்கு வந்த ஒரு சொல் என அறிஞர்கள் கருதுகின்றனர். சங்க இலக்கியங்களிலோ அல்லது அதற்குச் சற்றுப் பிற்பட்ட சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலோ கோபுரம் பற்றிய செய்திகள் காணப்படவில்லை. ஆயினும் வடமொழியில் எழுந்த மகாபாரதம் முதலிய நூல்களில் கோபுரம் என்ற சொற்கையாட்சி இடம்பெற்றிருக்கிறது.

வேதகாலத்தில் பசுக்களே மேலான செல்வம். இவற்றை மூங்கிலால் வேலியிட்டு அடைத்து வைத்தனர். மூங்கிலால் ஒரு வாயிலும் அமைத்தனர். இதனையே கோபுரம் எனக் குறித்தனர் எனச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கோ என்பது பசுவையும் புரம் என்பது காத்தலையும் குறிப்பதால் இக்கருத்து ஏற்பட்டிருக்க வேண்டும்.

எல்லையிடப்பட்ட அமைப்பு ஒன்றின் வாயிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வழக்கம் மிக நீண்ட காலமாகக் காணப்படுகின்றது. கி.மு. 1500 ஆம் ஆண்டிற்கு முன்னரேயே பண்டைய எகிப்தில் வாயிற் கட்டிட அமைப்புக்களுடன் கூடிய கோவில்கள் இருந்துள்ளன. இந்துக் கோவில் கோபுர வரலாற்றில் கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பின்னரே கோபுரம் அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது எனக் கருதுவர். ஆயினும் வேதகால ஊர்களில் கோபுரங்களின் கருத்துருவுக்கான ஆதாரம் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆந்திராவில் அமராவதி, நாகார்ச்சுனகொண்டா முதலிய இடங்களில் கிடைத்த சிற்பத் தொகுதிகளில் கோபுர அமைப்புக் காணப்படுவதாக வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகின்றது. எனவே கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளுக்குள்ளேயே தென்னிந்தியர்கள் கோபுரம் பற்றிய அறிவைப் பெற்றிருந்தனர் என உணர முடியும்.

இயற்கைப் பொருள்களினால் நிறுவப்பட்ட வாயிற் கட்டட அமைப்புக்கள் காலப்போக்கில் நின்று நீடித்து உழைக்கும் கட்டடப் பொருள்களால் ஆக்கப்பட்டிருக்கலாம். இப்படி அமைக்கப்பட்ட விசேட வாயில் தோரண வாயில் என அழைக்கப்பட்டது. பௌத்த ஆலயங்களில் தோரண வாயில் அமைக்கும் வழக்கம் நீண்ட காலமாகக் காணப்படுகின்றது.

தமிழகத்தின் கோபுரங்களில் மிகவும் தொன்மையானது காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலில் உள்ள கோபுரம் ஆகும். இது பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட கோபுரம் ஆகும். அக்காலத்தில் கோபுரம் ஒரு முதன்மைக் கூறாக அமையாமையால் ஒப்பீட்டளவில் சிறிய பருமனுடையதாகவே இக்கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. பல்லவர், சோழர் காலங்களில் கோபுரங்களின் மீது அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

கோவில்களில் கருவறைக்கு மேல் அமைக்கப்படும் கட்டடப் பகுதியை விமானம் என அழைப்பர். பல்லவர், சோழர் காலங்களில் கோபுரத்தை விட விமானத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். கோவிற் கட்டிடக் கலை மிகச் சிறப்பான வளர்ச்சியைப் பெற்ற சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட மிகப் பிரதான ஆலயங்களான தஞ்சை, திரிபுவனம், கங்கை கொண்ட சோழபுரம் முதலிய இடங்களில



காஞ்சி புரம் கைலாசநாதர் கோவில் கோபுரம்
(மிகத் தொன்மையான கோபுரம்)

கர்ப்பக்கிருகத்தின் மீதுள்ள விமானம் அவ்வவ் கோவில்களின் கோபுரங்களைக் காட்டிலும் உயரமாக அமைந்திருக்கிறது. இறைவன் வீற்றிருக்கும் கருவறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முகமாக விமானத்தைப் பெரிதாக அமைக்கும் வழக்கம் அக்காலத்தில் காணப்பட்டது.

கோவில்களில் கோபுரம் அமைக்கப்பட்ட வரலாற்றைக் குறிப்பிடும் பேர்சி பிறவுன் கோவில்களின் புனிதத்தன்மை காரணமாக அதன் கருவறையை இடித்துப் பெரிதாக்க விரும்பாத இந்துக்கள், கால மாற்றத்திற்கு ஏற்ப கோவிலை விஸ்தரிக்கும் நிலையில் கருவறையில் மாற்றத்தைச் செய்யாது அதனை அண்டி வேறு அமைப்புக்களை உருவாக்கினர் என்கிறார். கோவிலின் முக்கியத்துவம் காரணமாகக் கோவிலைச் சூழப் பெரிய மதிற் சுவர்களை எழுப்பிய இந்துக்கள் அதன் வாயில்களில் விமானத்தை விட மிக உயரமாகக் கோபுரத்தை அமைத்தனர் என மேலும் குறிப்பிடுகின்றார். கோபுரங்களின் உயரம் வளர்வது கோயிலின் பெருமையை உயர்த்தியது மட்டுமன்றி அதனைக் கட்டுவித்தவரது அதிகார பலத்திற்கும் சாட்சியாக அமைந்தது.

சோழர் காலத்தில் ஆலயங்களில் பல கோபுரங்கள் அமைக்கப்படும் மரபும் தோற்றம் பெற்றது. தஞ்சைப் பெரிய கோவிலில் இரண்டு கோபுரங்கள் உள்ளன. இவை விமானத்தை விடச் சிறியவையாக இருப்பதால் அதிக கவனத்தைப் பெறுவதில்லை.

விஜயநகர நாயக்கர் காலமே கோபுரகாலம் எனப் போற்றப்படத்தக்க காலம் ஆகும். இவர்களது காலத்தில் ஒப்பீட்டளவில் விமானம் சிறிதாகவும் கோபுரம் பெரிதாகவும் அமைக்கப்பட்டன. திருவண்ணாமலை, திருவில்லிபுத்தூர், மதுரை, திருவரங்கம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட உயர்ந்த கோபுரங்கள் இன்றும் அழகாகக் காட்சி தருகின்றன. கிருஷ்ணதேவராயர் காலத்தில் 180 அடி உயரத்திற்கு மேல் கோபுரங்கள் அமைக்கப்பட்டன.

இந்துக் கோவில்களில் மிக உயரமான கோபுரம் என்ற பெருமைக்குரியது திருவரங்கக் கோபுரம் (ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரெங்கநாதசுவாமி கோவில்) ஆகும். இது 17 ஆம் நூற்றாண்டுக்குரியதாயினும் 1687 ஆம் ஆண்டிலேயே இக்கோபுரத்தை முழுமையாகக் கட்டி முடித்தனர். 13 தளங்களையுடைய இக்கோபுரத்தின் உயரம் 236 அடியாகும். திருவண்ணாமலைக் கோபுரம் 217 அடி உயரத்தையும் திருவில்லிப் புத்தூர்க் கோபுரம் 192 அடி உயரத்தையும் உடையவை. திருவில்லிபுத்தூர்க் கோபுரம் தமிழக அரசின் சின்னமாகவும் அமைந்திருக்கிறது.



மிக உயரமான இந்துக் கோவில் கோபுரம் - திருவரங்கம்


இலங்கையின் உயரமான இந்துக் கோவிற் கோபுரங்கள்

இலங்கையில் உடப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீருக்மணி சத்யபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதி (திரௌபதை அம்மன்) ஆலயக் கோபுரம் அண்மையில் (2011 தை) அமைக்கப்பட்டதாகும். இது 108 அடி உயரமானது. 9 தளங்களை உடையது. எட்டுக் கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இக்கோபுரத்தை அமைப்பதற்கு ஐந்து ஆண்டுகள் எடுத்தது. இதே போல மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயக்கோபுரமும் 108 அடி உயரமானதாகும். இங்கும் ஒன்பது தளங்கள் உள்ளன. இவ்விரு கோபுரங்களுமே இலங்கையில் உள்ள உயரமான இந்துக் கோவில் கோபுரங்களாகும். இந்த வரிசையில் வற்றாப்பளை அம்மன் ஆலயக் கோபுரம் ஐந்து தளங்களைக் கொண்டு அறுபது அடி உயரம் உடையதாக விளங்குகின்றது.

கோபுர அமைப்பும் வற்றாப்பளைக் கண்ணகியின் கோபுரமும்

திருக்கோவிற் கோபுரங்கள் பற்றி காசியப சிற்ப சாஸ்திரம், மயமதம், மானசாரம் என்னும் சிற்ப சாத்திர நூல்களும் காமிகம், காரணம், சுப்பிரபேதம் ஆகிய ஆகமங்களும் எடுத்து விளக்குகின்றன.

மானசாரம் என்ற சிற்ப நூல் ஐவகைப் பிரகாரங்களில் (வீதி) கோவிலிற்கு முற்பகுதியில் கோபுரம் அமைத்தல் வேண்டும் எனக் கூறி இவற்றைப் பற்றித் தனித்தனியே குறிப்பிடுகின்றது. அந்தர் மணடபத்திற்கு அணித்தான கோபுரம் துவார சோபை என்று பெயர் பெறும். இதையடுத்து இருக்கும் கோபுரம் துவாரசாலை எனப்படும். மூன்றாவது கோபுரம் துவாரப் பிரசாதம் எனவும், நான்காம் ஐந்தாம் கோபுரங்கள் முறையே துவாரஹர்மயம், மஹாமர்யாதை எனவும் பெயர்பெறும். இவ்வைந்தாவது கோபுரத்திற்கு மஹா கோபுரம், இராஜகோபுரம் என்ற பெயர்களும் உண்டு. எமது பிரதேச ஆலயங்களில் பெரும்பாலும் இரண்டு பிரகாரங்களே காணப்படுகின்றன. இதனால் இங்கு அமைக்கப்படுகின்ற ஒரு கோபுரத்தை இராஜ கோபுரம் என அழைக்கும் வழக்கத்தை நாம் கொண்டிருக்கிறோம்.




வற்றாப்பளைக் கண்ணகி அம்பாள் கோவில் கோபுரம்

கோபுர அமைப்பில் நில மட்டத்தில் இருந்து அமையும் முதலாவது அமைப்பை வியாழ மட்டம் என்பர். இவ்வியாழ மட்டத்திற்கு மேல் ஒன்றன் மேல் ஒன்றாக பிரமாண அடிப்படையில் அமைவது தளங்கள் ஆகும். ராஜகோபுரத்தின் தளங்கள் ஒற்றைப்படை எண்ணிக்கையில் அமைந்திருக்கும். அவ்வெண்ணிக்கையில் உச்சியில் கலசங்களும் அமைந்திருக்கும். வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோவிலில் உள்ள ராஜகோபுரம் ஐந்து தளங்களைக் கொண்டுள்ளது.

கோபுரம் ஒன்றின் ஒவ்வொரு வாயிலின் இரு மருங்கிலும் காவல் தெய்வங்கள் அமைக்கப்படவேண்டும் என்பது விதியாகும். அதாவது ஆண் தெய்வத்துக்குரிய கோபுரமாக இருந்தால் துவார பாலகர்களும் பெண் தெய்வத்துக்குரிய கோபுரமாக இருந்தால் துவார சக்திகளும் அமைக்கப்படுவர். தூரத்தே நின்று கோபுரத்தை வழிபட்டுப் பின் துவார சக்திகளை வணங்கி அனுமதி பெற்று கோவிலினுள் செல்ல வேண்டும் என்பது ஆலய வழிபாட்டுக்குரிய ஒழுங்கு ஆகும்.

கோபுரமானது உபபீடம், அதிட்டானம், சுவர், மஞ்சம் என்றும் அதன் மேல் கர்ணகூடு, மஞ்சம், கண்டம், சிகரம், தூபி என்றும் பல அங்கங்களைக் கொண்டதாகும். மேலே அமையப் பெறும் சிகர அமைப்பு நீண்ட சதுர வடிவுடையதாக அமைக்கப்படும். கோபுரங்களின் கீழ்ப்பகுதி கருங்கற்களாலோ அல்லது வேறு உறுதியான கற்களாலோ அமைக்கப்படும். வியாழ வரியின் மேல் செங்கற்களால் அமைக்கப்படும் வழக்கம் காணப்படுகின்றது. தற்போது துளையுள்ள கொங்கிறீட் கற்களையும் பயன்படுத்துகின்றனர். அதாவது பாரம் குறைந்த கற்களே வியாழ மட்டத்தின் மேல் வைக்கப்படுகின்றன.

கோபுரம் ஒன்றில் எண்ணற்ற வடிவங்கள் உள்ளன. பிரபஞ்ச அமைப்பில் காணப்படக் கூடியவைகளைக் குறித்துக் காட்டும் விதமாக மக்கள் கூட்டம், தேவர் கூட்டம், சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்குகள் என்பனவற்றைக் கோபுரத்தில் அமைத்துக் காட்டுவர். இந்துப் பண்பாட்டு மரபுகளைத் தழுவியதாக இசை, ஓவியம், சிற்பம், நடனம் போன்ற கலை அம்சங்களும் கோபுரத்தில் அமைந்திருக்கும். புராணக் கதைகளை அடியொற்றி இறைவன் திருவிளையாடல்களை அமைத்துக் காட்டுவதும் உண்டு. காலதிகாலமாக இக்கதைகள் வாழ்வதற்கு கோபுரங்களில் உள்ள சிற்பங்கள் வழிசமைக்கின்றன. சமூகத்தின் உயர்வுக்காக வாழ்ந்த மனிதர்களைக்கூட கோபுரத்தில் அமைக்கும் வழக்கமும் உள்ளது.



மாத்தளை முத்துமாரி அம்மன் கோவிற் கோபுரம்


கோவிலில் நுழைவதற்கு வசதியில்லாதவர்கள் கோபுரத்தில் இறை அம்சத்தைக் கண்டு வழிபாடாற்றும் வசதி உள்ளது. கோபுரத்தைத் தூல லிங்கம் என அழைக்கும் வழக்கம் இதனாலும் ஏற்பட்டிருக்கலாம். மக்களுள் இருந்த சமூக வேறுபாடுகள் காரணமாகக் கோபுர தரிசனத்துடன் வழிபாட்டை முடித்துக் கொள்ளும் தன்மையும் சில சமூகத்தவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

கோபுர தரிசனம் பாப விமோசனம் போன்ற பொன்மொழிகள் இச்சூழமையிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும்.

இராஜகோபுரத்தின் மேல்நிலை (தளங்கள்) ஒற்றைப்படை எண்ணிலேயே அமைந்திருக்கும். இதன் தத்துவார்த்த விளக்கத்தைக் குறிப்பிடும் சுகந்தினி சிறீமுரளிதரன், "மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று இவ்வாறு அமைந்துள்ள நிலைகள் (மாடங்கள்) ஒன்றன்பின் ஒன்றாக ஒற்றை எண்ணிலேயே காணப்படும். இதில் மூன்று நிலைகள் ஜாக்கிரத, ஸ்வப்ன, சுழுத்தி என மூன்று அவத்தைகளைக் குறிக்கும். ஐந்து தளங்கள் ஐம்பொறிகளைக் குறிக்கும். ஏழு தளங்கள் ஐம்பொறிகளோடு மனம், சித்தத்தையும் குறிக்கும். ஒன்பது தளங்கள் ஏழு தளங்களுக்குரிய அம்சங்களுடன் சித்தம், அகங்காரம் ஆகிய இரண்டையும் சேர்த்துக் குறிக்கும்." என்கிறார்.

வற்றாப்பளைக் கண்ணகை அம்பாளின் கோபுரத்தில் முதலாவது தளத்தில் பிரதான பிரதிமையாகக் கண்ணகி அம்பாளின் உருவம் உள்ளது. இதைவிட அம்பாளின் வெவ்வேறு திருவருட் சக்திகளின் பிரதிமைகளும் கோபுரத்தில் அமைந்துள்ளன. வள்ளி தெய்வானையுடன் முருகப் பெருமான், விநாயகர் போன்ற திருவுருங்களும் சிகரத்தில் காணப்படுகின்றன. ஒவ்வொருதளத்திலும் உள்ள மாடங்களின் (நிலைகள் அல்லது வாயில்களின்) அருகிலும் துவார சக்திகள் காவற்காரராக உள்ளனர். முதலாவது தளத்தில் கண்ணகி அம்பாளின் வரலாற்றைப் பிரதி பலிக்கும் காட்சிகளும் உள்ளன. சிலப்பதிகாரக் கதையை உள்வாங்கி இவை அமைக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் கோவிலின் தனித்துவத்துக்குரிய செய்திகளையும் கோபுரம் தன்னுள் அடக்கியிருக்கிறது.



உடப்பு திரௌபதை அம்மன் கோவிற் கோபுரம்

தமிழ்நாடு அரசின் சின்னமாகக் கோபுரம்

கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை என்பன சிறந்தோங்கி நிற்பதன் அடையாளமாகக் கோபுரத்தைக் கொள்ளமுடியும். இந்தியா சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் தமிழக அரசின் சின்னமாக ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில் கோபுரத்தை அமைத்தனர். மதச்சின்னத்தை அரசுச் சின்னமாக அமைக்கலாமா? என அப்போதைய பிரதமர் நேரு இச்சின்ன வடிவமைப்புக்குப் பொறுப்பேற்ற சென்னை மாகாண முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரிடம் விளக்கம் கோரினாராம். கோபுரம் மதச் சின்னமல்ல. தமிழர்களின் பெருமையின் சின்னம். தமிழகக் கட்டடக் கலைக்குள்ள சிறப்பு கோபுரம்தான் என மாகாண ஆளுநர் பதிலளித்தாராம். பதிலில் திருப்திப்பட்ட நேரு தமிழக அரச இலச்சினையாகக் கோபுரச் சின்னத்தை ஏற்றுக் கொண்டார்.

இந்த வகையில் வற்றாப்பளை கண்ணகியாளின் கோபுரமும் தாயின் பெருமைகளின் சின்னம் என்பதற்கு அப்பால் தமிழர் உயர்வின் சின்னமெனக் கொள்வோமாக.

உதவியன:


01. கைலாசநாதக் குருக்கள்.கா., சைவத் திருக்கோவிற் கிரியை நெறி, கொழும்பு. (1963)

02. சுகந்தினி சிறீமுரளிதரன், யாழ்ப்பாணத்து இந்துக் கோயிற் கட்டடக்கலை, முதுதத்துவமாணிப் பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு. (2002)

03. வாழ்வியற் களஞ்சியம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்

04. ஸ்ரீநிவாசன், பி.ஆர்., கோயிற்கலையும் சிற்பங்களும், கலைஞன் பதிப்பகம், சென்னை. (1965)

05. விக்கிப்பீடியா, இணையவழிக் கலைக்களஞ்சியம்

# ஈழத்து சக்தி வழிபாட்டு மரபில் வன்னிப் பிராந்தியம்

திரு.நடேசபிள்ளை ஞானவேல்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்

"தன்னிலமை மன்னுயிர்கள் சராத் தரும் சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்

என திருவருட்பயன் கூறுவது போன்று அண்டசராசரங்கள் எல்லாம் அமைத்து இயக்கும் எமது பரம்பொருளான சிவனது தொழிற்பாட்டுக்கு மூலசக்தியாக விளங்குபவள் அன்னை பராசக்தி. அத்தகைய அன்னையை முதன்மைப் படுத்தும் சக்தி வழிபாடு அல்லது தாய்த்தெய்வ வழிபாடானது பாரத தேசத்தைப் போன்று ஈழத்திலும் தொன்று தொட்டு ஆற்றப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

அந்த வகையிலே நீர் கொழும்பு மீனாட்சி ஓடையில் இருந்த மீனாட்சி அம்மன் கோயில் புத்தளம் கற்பிட்டியில் இருந்த நாச்சியம்மன் கோயில், பெந்தோட்டையில் இருந்த காளிகோயில், நயினை நாக பூசணி அம்மன் கோயில், வண்ணை வீரமாகாளியம்மன் கோயில், உடப்பு திரளபதை அம்மன் கோயில், பாண்டிருப்பு திரளபதை கோயில் திருமலை நகர பத்திரகாளியம்மன் கோயில் முதலான சிறியவையும் பெரியவையுமான அம்மன் ஆலயங்கள் ஈழத்தில் நாலாதிசையிலும் தொன்று தொட்டு இருந்து வந்ததை அறிய முடிகின்றது.

அந்த வகையில் பனங்காமம் முள்ளியவளை கருநாவல்பற்று தென்னமரவாடி திருகோணமலை செட்டிக்குளம், குதிரைமலை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய வன்னி பெருநிலப்பரப்பில் தொன்று தொட்டு சக்தி வழிபாடு பேணப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அவ்வாறு வன்னியில் நிலவிய நிலவும் தாய்த் தெய்வ வழிபாட்டின் தன்மைகளை முழுமையாக கூறமுடியாவிட்டாலும் ஆங்காங்கு கிடைக்கப் பெற்ற தொல்லியல் சான்றுகள், கர்ண பரம்பரைக் கதைகள், ஆலயங்களில் பேணப்பட்டு வரும் வரலாற்றுச் சுவடிகள் வையாபாடல் முதலான வரலாற்று நூல்கள், ஆர்.டபிள்யூ ஐவேரஸ் அவர்களின் அறிக்கைகள், சி.எஸ்.நவரத்தினம் அவர்களது ஆய்வுக்குறிப்புகள் முதலான வரலாற்று கருவிகளின் மூலம் ஓரளவு உணரக் கூடியதாகவுள்ளது.

மகிடாசுர மர்த்தனி அம்மன் சிலை

வன்னியில் முக்கிய நிலப் பரப்புகளில் ஒன்றாகிய செட்டிகுளத்திலும் நீண்டதொரு சக்தி வழிபாட்டு மரபு காணப்பட்டதை அவதானிக்க முடிகின்றது. வன்னி மக்களின் வலாறு பற்றி கூறும் வையாபாடல் என்ற வரலாற்று நூலின் கூற்றுப்படி "மதுரையில் இருந்து பலபரவர்களுடன் வந்த வீரவராஜன் செட்டி என்ற பெயருடைய வணிகன் ஒருவன் மரக்கலம் உடைந்து மன்னாரின் மேற்கு கரையை வந்தடைந்தான் என்றம் பின் அவன் தன்னைச் சேர்ந்தாருடன் வந்து குதிரைமலையிலும் அதற்கு அண்மையில் உள்ள செட்டிக் குளத்திலும் குடியேறி அங்கே "வவ்வலை என்ற கேணியையும் வெட்டுவித்து தான் கொண்டு வந்த திரவியங்களை யானைமூலம் சுமந்து குதிரைமலைக்கு அண்மையில் புதைத்தான் என்றும் அப்புதையலை காக்க காளியையும், ஐயனாரையும் சடாச முனியையும் நியமித்ததாகவும் அறிய முடிகின்றது. அதாவது

அம்மலையை குதிரைமலை யென்னவோதி
அதனிடைத்தாயக் குட்டிமர மைத்துப் பின்னர்
பொம்மலுறு பொற்றலைக்கச் சாச்சஞ் சீவி
பொன்னிரும்பு வெள்ளியெனப் புனையவல்ல
வெம்ம:ருந்து மம்மலையிலியற்றி யானை
எழுபதினா யிரம் சுமந்த பொன்னுங்கூட்டி
அம்மலையி னிடைவைத்தே காளி என்னுந்
தையல்தனை யிறைஞ்சியவன் சரா வைத்தான்.

இவ்வாறு கூறுகின்றது. காவல் தெய்வமாக அறிமுகப்படுத்தப்பட்ட காளி வழிபாட்டின் தன்மைகளை செட்டிக்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளின் மூலம் நன்கு அவதானித்துக் கொள்ள முடிகின்றது. இன்று வவுனியா தொல்பொருள் காட்சிச் சாலையில் இருக்கும் மகிடாசுர மத்தனியின் சிலை செட்டிக்குளம் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

இச்சிலையின் கலைத்தன்மையினை நோக்கும் போது இதுவரை ஈழத்தில் கண்டெடுக்கப்பட்ட அம்மன் சிலைகளில் இதுவே மிகப் பெரியதாகக் கருதப்படுகிறது. 3¼ அடி உயரம் கொண்டதாக இச்சிலை காணப்படுகின்றது. கல்லின் முன்பக்கத்தில் மாத்திரம் புடைச் சிற்பமாக அம்மனின் திருவுரு அமைக்கப்பட்டுள்ளது. தாமரை மலராசனத்தில் எழுந்து நிற்கும் இச்சிலையின் காலடியில் எருமைத்தலையும் இடது பக்கத்தில் பாயும் சிங்கமும் வலது பக்கதில் ஆட்டுக்கடா ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் நான்கு கரங்களைக் கொண்ட இவ்வுருவின் இடதுபுற மேற்கரம் சக்கரத்தினையும் வலதுபுற மேற்கரம் சங்கினையும் வலதுபுற கீழ்க்கரம் உடுக்கினையும் கொண்டு இடதுபுற கீழ்க்கரம் இடுப்பில் வைக்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன. இதன் இருகாதுச்சோணைகளும் நீண்டனவாகவும் அதில் அணியப்பட்ட ஆபரணங்கள் தோள்பட்டையில் தொடுமளவுக்கு நீண்டனவாக காணப்படுகின்றன. இடுப்பில் இருந்து முழங்கால் வரையிலான பகுதி ஆடைகளால் மறைக்கப்பட்டும் மேல் அவயங்கள் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டும் காணப்படுகின்றன. மேலும் இச்சிலையில் காணப்படும் விசேட தன்மை யாதெனில் சிவ உருவங்கள் போன்று இடுப்புப் பகுதியில் இருகரைகளிலிருந்தும் இரு நாகங்கள் சீறிப்பாய்வதைப் போன்று பொறிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று தோள்பட்டைகளில் இருந்தும் இரு சிறிய நாகங்கள் சீறிப்பாய்வதைப் போல இவ்வுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று மற்றுமொரு மகிடாமர்த்தனி அம்மன் சிலை அனுராதபுரம் ஜேதவனராமய விகாரைக்கு அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டு இன்று கொழும்பு தேசிய நூதனசாலையில் காணப்படுகின்றது. பேராசிரியர் பத்மநாதன் இதுபற்றிக் கூறுகையில் சோழருக்கும் முற்பட்ட காலப்பகுதியில் ஈழத்தில் வாணிபம் செய்த நாணோதேடுளர், முக்குவர் ஆகியோரது குலத்தெய்வமாக வழிபட்ட நகர்கால பரமேஸ்வரியாக இருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றனர்.

எனவே மேற்கூறிய சிலையினை முழுமையாக நோக்குகின்ற போது கி.பி. 10ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றதாக அறிய முடிகின்றது. அதாவது ஈழத்தில் சோழர்களது ஆட்சிநிலவிய காலப்பகுதியல் எழுச்சி பெற்றதாக இருக்கவேண்டுமென கருதப்படுகின்றது. இன்றும் முகத்தான் குளம் விநாயகர் கோயிலுக்கு முன்புறமாக உள்ள பற்றைகள் மண்டிக்கிடந்த நிலப் பகுதி அண்மையில் இராணுவத்தினரால் பாதுகாப்பின் நிமித்தம் துப்பரவு செய்யப்பட்ட போதும் அங்கு புராதனமான ஆலயம் ஒன்றின் வழிபாட்டுச் சிதைவுகளைக் காணக்கூடியதாகவுள்ளது. அதாவது ஆலயத்தூண்களும் அத்தூண்களை நிறுத்துவதற்கு உபயோகிக்கப்பட்ட தூண்தாங்கிகளும் மற்றும் ஆயிரக்கணக்கான செங்கட்டிச் சிதைவுகளையும் நன்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனவே அப்பிரதேசத்தை முழுமையாக புதைபொருள் ஆய்வுக்கு உட்படுத்தும்போது இச்சக்தி வழிபாட்டின் தன்மையினை நன்கு அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

## வற்றாப்பளை ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்

வன்னியில் பிரபல்யம் பெற்ற சக்தி ஆலயங்களில் ஒன்றாகத் திகழும் முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் வன்னியின் நீண்ட வரலாற்றோடு பின்னிப்பிணைந்த ஆலயமாகத் திகழ்கின்றது.

கண்ணகி மதுரையை எரித்துவிட்டுத் தென்திசையாகிய ஈழத்துக்கு வந்தாள் என்றும் அவளது களைப்புநீங்க பல இடங்களில் தங்கிச் சென்றதாகவும் அதில் இறுதியாகவும் பத்தாவது தடவையாகவும் தங்கிய இடமே பத்தாப்பளை என பெயர்பெற்று பின் வற்றாப்பளை என விளங்கியதாக இவ்வாலய செவிவழி செய்திகள் மூலம் நன்கு அறிய முடிகின்றது.

மேலும் இவ்வாலயத்தை வரலாற்று ஏடுகளின் அடிப்படையில் நோக்குகையில் இவ்வாலயம் ஒல்லாந்தரது காலத்துக்கு முன்பே பிரபல்யம் பெற்ற ஆலயமாக விளங்கியதை இவ்வாலயத்தில் வழங்கப்பட்டு வரும் "பனிச்சையாடிய் பாடற் சிந்து" என்ற சிந்துப் பாடல் மூலம் அறிய முடிகின்றது. அதாவது ஒல்லாந்தப் படையினர் ஆலயத்தை அழிக்க வரும்போது ஆலயத்தலவிருட்சமாக நின்ற பனிச்சைமரம் தனது காய்களை வீசி ஆலயத்தை அழிக்கவிடாது தடுத்ததாகக் கூறப்படுகின்றது. மேலும் இன்றும் இவ்வாலயத்தில் காணப்படும் வெள்ளிப்பிரம்பு, சிலம்பு கூறல் என்னும் ஏட்டுப் பிரதி பனிச்சைமரம் முதலானவை இவ்வாலயத்தின் ஆண்டு தோறும் வைகாசி பூரணத்தினத்தன்று இடம்பெறும் பொங்கல் சிறப்பான பாரம்பரிய மரபுகளையும் தனித்துவங்களையும் பிரதிப்பலிப்பனவாக அமைகின்றன. ஈழத்தின் எந்தவொரு ஆலயத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பு இவ்வாலயத்துக்கு உண்டு. கடல்நீரைக் கலசங்களில் முகந்து வந்து அன்னையின் சந்நிதியில் திரியிட்டு கடல்நீரில் தீபம் ஏற்றும் சிறப்பு இதுவாகும்.

## முல்லைத்தீவு வட்டுவாகல் சப்த நாச்சிமார் ஆலயம்

இன்று முல்லைத்தீவு வட்டுவாகலில் காணப்படும் சப்த நாச்சிமார் ஆலயமும் வன்னியில் புகழ் பூத்த ஆலயங்களில் ஒன்றாக காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாலயத்தின் தோற்றம் பற்றி வையா பாடல் என்ற யாழ்நாட்டு வளப்பநூலின் மூலம் அவதானிக்க முடிகின்றது. அதாவது வன்னிப் பிரதேசக் காடுகளில் துன்பம் விளைவித்த இராட்சத அரக்கனை ஒழிக்க மதுரையில் இருந்து வருகை தந்த வன்னியர் அவனுடன் போரிட்டு இறையடி எய்தினர் இதையறியாது தமது கணவர்களைத் தேடி ஈழம் வந்த வன்னி நாச்சிமார்கள் அவர்களது கணவர்களுக்கு நேர்ந்த முடிவினை அறிந்த மாத்திரத்திலேயே செல்லிச்சி வாய்க்காலிலே தீயில் விழுந்து மரணித்துப் போயினர்கள். என்று கூறப்படுகிறது. இதே கருத்தை இவ்வாலயக் கதைப்பாடலும் கீழ் வருமாறு குறிப்பிடுவதை அவதானிக்க முடிகின்றது.

"சீர் றெிநல் வாவி நன்னீர் சேரும் வட்டு வாகல்லிலே
பார் நிறைந்த பாறைகளும் படரும் வட்டுவாகல்லிலே
ஊர் விளக்கவே யுறைந்த உத்தமிகள் மீது தமிழ்
சார்புடனே ஆதியுறை சப்தகன்னி மீது தமிழ்
நாடுசுவை தேடறியா நாடியேன் பாடுதற்கு"

என்ற கூறுகின்றது. இதே போன்று மற்றுமோர் நாச்சிமாரது கோவில் ஒன்று புதுக்குடியிருப்புக்கும் ஒட்டுசுட்டானுக்கும் இடையில் உள்ள "மன்னாங்கண்டல்"என்ற இடத்தில் சிதைந்து கிடப்பதாக C.S நவரத்தினம் அவர்கள் தனது ஆய்வுக்குறிப்பில் குறிப்பிடுவதும் இங்கு அவதானிக்கத் தக்கது.

## உவர்மலை ஸ்ரீ கண்ணகி அம்மன் கோவில்

திருகோணமலை நகரின்கண் பிரபல்யம் பெற்ற கண்ணகி அம்மன் ஆலயமாக விளங்கும் உவர்மலை கண்ணகி அம்மன் கோயிலும் நீண்ட வரலாற்றுப் பெருமை கொண்ட ஆலயமாக விளங்குவதை அவதானித்துக் கொள்ள முடிகின்றது. இவ்வாலய வரலாற்றுச் செய்திகள் மூலம் நோக்குகின்ற போது கஜபாகு மன்னன் பத்தினித் தெய்வ வழிபாட்டினை ஆரம்பித்த காலப்பகுதியில் இவ்வாலயமும் அமைக்கப்பட்டதாக அறியமுடிகின்றது. போர்த்துக்கேயரால் அழிக்கப்படலாம் எனக்கருதி அஞ்சிய மக்கள் இவ்வாலயத்தில் இருந்த பழமை மிகச்ச கண்ணகி அம்மன் சிலையை திருகோணமலையில் இருந்து பத்துமைல்களுக்கு அப்பால் உள்ள பாலம்பட்டாறு என்னு காட்டுப் பிரதேசத்தில் மறைத்து வைத்து வழிபட்டதாகவும் இவ்வாலய வரலாறு மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இதனோடு அழிவுற்ற ஏனைய ஆலயங்கள் இன்று மீண்டும் புணருத்தாரணம் செய்யப்பட்டு அமையப்பெற இவ்வாலயம் மட்டும் எதுவித புணருத்தாரணமின்றிக் காணப்பட்டு 1946ம் ஆண்டின் பின்னர் சிறிய கொட்டகையுடன் கண்ணகிபுரம் என்ற தலைப்பெயருடன் ஆலய நிர்மாணம் பெற்று 2000ம் ஆண்டு எழில் மிகு ஆலயமாக புணருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது என்பது பெருமைக்குரியதாகும்.

## நாம்பன்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்

வன்னியின் புகழ் பூத்த முத்துமாரி அம்மன் கோவில்களுள் ஒன்றாக நாம்பன்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயம் போர்த்துக்கேயர் வன்னியில் கால் ஊன்றுவதற்கு முன்னர் தலை சிறந்த சக்தி ஆலயமாகக் காணப்பட்டு அழிக்கப்படலாயிற்று. இன்றும் இவ்வாலயத்தின் சிதைவுகளான கற்தூண்கள் வாசல்படிகள் செங்கற்கள் மற்றும் பூசை உபகரணங்களையும் நாம்பன் குளத்தில்காணக்கூடியதாக உள்ளது. இன்று பரிவார மூர்த்திகளைக் கொண்ட சிறிய ஆலயமாக இது அமைக்கப்பட்டுள்ளது.

## வண்ணாங்குளம் ஸ்ரீ கண்ணகி அம்மன் கோவில்

இன்று ஓமந்தை கொந்தக்காரன் குளத்துக்கு அண்மையிலுள்ள வண்ணாங்குளம் ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவிலும் வன்னியில் போர்த்துக்கேயர் கால் ஊன்றுவதற்கு முன்னர் பிரபலிக்கம் பெற்ற கண்ணகி அம்மன் ஆலயங்களில் ஒன்றாக இருந்திருக்கவேண்டும். இன்று ஆலயத்தில் காணப்படும் ஏட்டுச்சுவடி இதனை நன்கு பிரதிபலிப்பதாக அமைகின்றது. இவ்வாறு சிதைவுற்ற ஆலயப்பகுதி காலப்போக்கில் காட்டர்ந்த பகுதியாக மாற்றம் பெற்றது. இக்காட்டுக்குச் சென்ற மக்கள் ஆலய அழிபாடுகள் மத்தியில் காணப்பட்ட கண்ணகி அம்மன் சிலையினைக் கண்டெடுத்து தற்போது ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் வைத்து வழிபட்டு வரலாயினர்.

## தம்பலகாமம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

பழமையும் பெருமையும் கொண்ட திருக்கோணமலையின் சிறப்பான மற்றுமொரு இடமான தம்பலகாமத்திலும் நீண்ட புராதனமான சக்தி வழிபாட்டு மரபுகள் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அந்த வகையில் தம்பலகாமத்தில் சிறப்புடன் விளங்கும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயமும் குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பெருமை கொண்ட ஆலயமாக விளங்குவதை அவதானித்துக்கொள்ள முடிகின்றது. அந்நிய ஆட்சியின் விளைவால் எழிலார்ந்த விக்கிரகங்களும் ஆலயங்களும் திருகோணமலையில் சிதைக்கப்பட்டன. சிலர் விக்கிரகங்களை தம்பலகாமத்துக்கு கொண்டு சென்று மறைத்து வைத்தனர். அவ்வாறு மறைத்து வைத்த வழிபாடு ஆற்றப்பட்ட மாரியம்மன் சிலையினைக் கொண்ட ஆலயமாக இன்றைய தம்பலகாமம் முத்துமாரியம்மன் ஆலயம் விளங்குகின்றது.

மேலும் கதிடப்பஞ்சோலை என்ற இடத்தில் பத்திரகாளியம்மன் சிலையும் மாகமம் என்ற இடத்தில் துர்க்கையம்மன் சிலையும் கண்டுெடுக்கப்பட்டுள்ளன. மாகமம் என்ற இடத்தில் பெறப்பட்ட துர்க்கையின் சிலையானது இஸ்லாமிய அன்பர் ஒருவரது வீட்டில் அறியாமையால் சிலையின் பின்புறம் அம்மிக்கல்லாக பயன்பட்டதாகவும் அயலில் இருந்த அடியவர் ஒருவரின் கனவில் தோன்றிய அம்பிகை "எனது முதுகு எரிகிறது" எனக்கூறியதும் அவ்வன்பர் சொர்ப்பனத்தில் சொன்ன குறிப்பின்படி சென்று அவ்வம்மியை புரட்டி பார்க்கும் போது அழகிய துர்க்கையின் சிலையொன்று புடைப்புச் சிற்பமாக காணப்பட்டதை அவதானித்தார். அச்சிலையையும் இஸ்லாமிய அன்பரின் அனுமதியோடு இத் தம்பலகாமம் மாரியம்மன் கோவிலில் வைத்து வழிபட்டு வருகின்றனர்.

# இரணைமடுக்குளம் கனகாம்பிகை அம்மன் கோவில்

வட இலங்கையின் பாரிய குளங்களில் ஒன்றாகிய இரணைமடுக்குளத்துக்கு அண்மையில் அருளாட்சிபுரியும் ஆலயமாக கனகாம்பிகை அம்மன் கோவில் காணப்படுகின்றது. 1950ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விவசாய விருத்தியின் நிமித்தம் வருகை தந்த மக்கள் வழிபட்ட தெய்வமாகக் காணப்படுகின்றது.

இவ்வாலயத்தில் யோகர் சுவாமிகளால் மதுரையில் இருந்து கொண்டு வரப்பட்ட கனகாம்பிகை அம்மனின் சிலை இங்கு மூலவராக அமைகின்றது. இவரால் நாட்டப்பட்ட மாமரமும் இங்கு தலவிருட்சமாக அமைகின்றது. 1984ஆம் ஆண்டு முதல் "பிரமோற்சவம்" சிறப்பாக இடம்பெறுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் சிறப்பாகத் தேரோடும் சக்தி ஆலயமாக இது திகழ்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

## பறையனூர் மகாகாளி அம்மன் சிலை

திருகோணமலையின் எல்லையாக அமைந்து இருக்கும் பன்குளத்தில் காணப்படும் அடர்ந்த காட்டுக்கு மத்தியில் இருந்து அழகியகாளி அம்மன் கருங்கல் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டது. இன்று அச்சிலையைமையமாகக் கொண்டு பன்குளம்எல்லைக்காளி அம்மன் கோவில் என அழைத்து வழிபடுகின்றனர்.



B

இது இடதுகாலை மடக்கி வலது காலைத் தொங்க விட்டபடி சதுர்புயங்கள் கொண்டனவாகவும் கடைவாயின் அருகே கோரைப்பற்கள் நீண்டும் பார்ப்பதற்கு பயங்கரமானதாகவும் காணப்படுகின்றது. இது சோழர் கால காளி அம்மன் விக்கிரகங்களை சாந்தமாக இதனை ஆராய்ந்த ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் இவ் அம்மன் சிலை எடுக்கப்பட்ட இடத்தில் சிதைந்த ஆலயம் ஒன்று இருந்தமைக்கான சான்றாதாரங்களும் தென்படுகின்றன. அதாவது சிதைந்த தூண்கள், வாசல்படிகள், செங்கற் குவியல்கள் என்பன காணப்படுகின்றன. இடும்பன் மலை, வெள்ளாட்டிமலை, நாச்சியார் மலை என்பன அமைந்து காணப்படுவதனால் சோழ மன்னர்களது காலத்திலேயே எல்லைக்காவல் தெய்வமாக இவ்வாலயம் அமைத்து வழிபடப்பட்டு இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதே போன்று கந்தளாய் சம்பூர் போன்ற இடங்களிலும் இத்தகைய எல்லைக் கோவில்கள் சோழர் காலத்தில் நிறுவப்பெற்றதாக ஆய்வாளர்கள் தமது ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தி உள்ளனர்.

# இராசேந்திரன் குளம் முத்துமாரி அம்மன் கோவில்

இலங்கையின் பாரிய குளங்களில் ஒன்றாகிய பாவற்குளத்துக்கு அண்மையில் காணப்படும் கிராமமாக இராசேந்திரன் குளம் காணப்படுகின்றது. இது இராசேந்திரன் குளம் என்ற சிறிய குளத்தையும் உடையதாகக் காணப்படுகின்றது.

இக்குளத்துக்கு அண்மையில் காணப்படும் முத்துமாரி அம்மன் ஆலயம் வன்னியில் உள்ள புராதன சக்தி ஆலயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இந்த ஆலயத்துக்கு அண்மையில் அழிந்த கட்டடச்சிதைவுகள் காணப்படுகின்றன. அதாவது சிறிதும் பெரியதுமாக கருங்கற்களில் செய்யப்பட்ட தூண்கள் அலங்கார வேலைப்பாடுகளுடனான தூண் நிறுத்திகள் என்பன காணப்படுகின்றன. மேலும் இச் சிதைவுகளுக்கு மத்தியில் இருந்து செப்புத்துண்டு, விநாயகர் சிலை என்பன கண்டெடுக்கப்பட்டதாக இவ்வாலயம் மரபு வழிச் செய்திகள் வாயிலாக அறிய முடிகின்றது. அத்தோடு இச்சிதைவுகளுக்கு மத்தியில் பள்ளமானபகுதி காணப்படுகின்றது. அதனைச்சூழ நாற்புறமும் படிக்கற்கள் காணப்படுகின்றன

எனவே அது ஓர் சிறிய கேணியாகவோ அமைந்திருக்கலாம் என கருதமுடிகின்றது.

## திருகோணமலை பத்திர காளி அம்மன் கோவில்

வன்னியின் கிழக்குப் பகுதியான திருகோணமலையில் பிரபலிக்கம் பெற்ற சக்தி ஆலயங்களில் ஒன்றாக திருகோணமலை நகர ஸ்ரீ பத்திர காளி அம்மன் கோவில் திகழ்கின்றது. இவ்வாலயம் சோழ மன்னர்களது போஷிப்பை திருகோணமலை பெற்று இருந்த காலத்தில் தோற்றம் பெற்றதாக அறிய முடிகின்றது. அதாவது இங்கு காணப்படும் முதலாம் இராஜேந்திர சோழன்காய கல்வெட்டு மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. போர்த்துக்கேயர் காலத்துக்கு முன்னர் சிறப்போடு இருந்த இவ் ஆலயம் கோணேசர் ஆலயத்தைப் போன்று அந்நியர்களால் அழிக்கப்பட்டு இருக்கலாம். இன்று ஆலயம் இருக்கும் பகுதியில் இற்றைக்கு நூற்றி இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் மண்ணுக்கடியில் தகளி ஒன்று இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. இத்தகளியில் இருந்து 12ம் நூற்றாண்டைச் சார்ந்த காளி அம்மன் விக்கிரகம் ஒன்றும் காணப்பட்டது.



C



D

இவ்வம்மனின் நிலைப்பற்றி தொல்பொருள் ஆய்வாளர் கலாநிதி செ.குணசிங்கம் கூறும் கருத்துக்கள் நன்கு கவனத்தில் நோக்கத்தக்கது.

"செப்புக்கிடாரத்தின் வடிவமைப்பினையும் உலோகவார்ப்பு முறையினையும் அவதானிக்கையில் மிகப்பழமை வாய்ந்த தொன்றாகவே இவ்விக்கிரகம் காணப்படுகின்றது. காளி அம்மன் விக்கிரகத்தினுடைய வடிவமைப்பு ஏறத்தாழப் பதினொராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழகக் கோயில்களில் பேணப்பட்ட காளியம்மன் உருவங்களை ஒத்ததாகக் காணப்படுகின்றது. இவ்விக்கிரகத்தின் கால எல்லையைத் திட்டவட்டமாகக் கூறமுடியாவிட்டாலும் அது மிகப்பழமை வாய்ந்ததொன்றெனக் கூறிக்கொள்ள முடியும். செப்புக்கிடாரமும் அதனுள் வைத்துப் பேணப்பட்ட காளி அம்மன் விக்கிரகமும் ஒரு காலத்தில் நிலத்துக்கடியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டன என இக்கோயில் பற்றிய கதை மரபில் வரும் செய்தி இலங்கையில் காலத்துக்கு காலம் நடைபெற்ற படையெடுப்புக்களை நினைவூட்டுவனவாயுள்ளன" என்பது அவரது கருத்தாகும்.

இவ்வாலயத்தில் இன்று நடைபெறும் சிறப்பு மிகு வழிபாட்டு அம்சங்கள் ஈழத்தின் நான்கு திக்குகளிலும் உள்ள இந்து பெருமக்களை தன்பால் ஈர்க்கும் தன்மை கொண்டனவாகக் காணப்படுகின்றன. ஈழத்தின் எந்த ஆலயத்திலும் சிறப்பாக இடம் பெறாத இரு விழாக்கள் இங்கு இடம் பெறுகின்றன. நவராத்திரியின் இறுதி நாளாகிய விஜயதசமி அன்று இடம் பெறும் "கும்பவிழா" வும் கேதார கௌரி விரதமும் இங்கு சிறப்பாக இடம் பெறும் அத்தகைய விழாக்களாகும்.

## ஏனைய சக்தி ஆலயங்கள்

மேற்கூறிய ஆலயங்களை விட போர்த்துக்கேயரது காலத்துக்கு முன்னர் தொட்டு பிரபல்யம் பெற்று இருந்த மேலும் சில ஆலயங்களை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

1885ம் ஆண்டு முல்லைத்தீவில் தென்னந்தோட்டத் தொழிலாளி ஒருவரால் கணற்றிலிருந்த வெள்ளிப்புராண ஏடுகளும் நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டன. அவ்வாறு கண்டெடுக்கப்பட்ட நாணயம்

ஒன்றில் தலைவிரிகோலமாக திரிசூலத்தினை ஏந்திநிற்கும் துர்க்கையின் வடிவம் குறிப்பிடத்தக்கது.

இதே போன்று கிளிநொச்சியில் 1950ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட சுடுமண் பெண்பாவைகள் பெண் தெய்வ அமைப்பை பிரதிபலித்து நிற்பது இப்பகுதியில் இருந்த தாய்த் தெய்வ வழிபாட்டின் தொன்மை நிலையினைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன.

செட்டிக்குளத்திலும் புகழ் பூத்த கண்ணகி அம்மன் ஆலயம் இருந்ததாக கண்ணகி பள்ளுப்பாடல் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

"அங்கணம்மைக் கடவை செட்டிலமச்சூழ்

ஆன தொரு வற்றாப்பளை மீதுறைந்தாய்..........

என்ற கண்ணகி பள்ளுப்பாடல் அடியினை நோக்குகையில், அங்கணம்மைக் கடவையை அடுத்து செட்டிக்குளத்திலும் புகழ்பூத்த கண்ணகி அம்மன் கோவில் இருந்ததை அறிய முடிகின்றது. ஆனால் அவ்வாலயம் இருந்ததிற்கான சான்றுகள் எதுவும் இன்று கிடைக்கப்பெறவில்லை.

இன்று மடுத்திருப்பதியில் விளங்கும் புனித செபமாலை மாதாவும் முன்னர் கண்ணகியாக வழிப்பட்டதாக அறிய முடிகின்றது. இதனை C.S. நவரத்தினம் அவர்கள் யு வோர்ஸ் என்பவரது வடமத்திய மாகாணக் கைநூல் ஆதாரமாகக் கொண்டு அது முன்னர் கண்ணகி அம்மன் கோவிலாகடப்பட்டதாகக் குறிபடபாடுகின்றார்

மேலும் கோயில்புதுக்குளம், கொக்கிளாய், குஞ்சுப்பரந்தன், பூநகரி, பொறிக்கடவை, கொம்படி, நிலாவெளி, கிடாச்சூரி முதலான வன்னிப் பிரதேசங்களிலும் புராதன சக்தி ஆலயங்கள் விளங்கியதை சான்றாதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

சென்ற நூற்றாண்டு முதல் வன்னிப் பிரதேசத்தில் வழிபாடாற்றப்படும் அம்மன் ஆலயங்களில் பண்டாரிக்குளம், திருகோணமலை, முரசுமோட்டை, சிலாவத்துறை, மகா இறம்பைக்குளம், பசல்லி, கிளிவெட்டி, வன்னிவிளாங்குளம், செட்டிக்குளம், நானாட்டான்குளம், தலைமன்னார், திரியாய், சமயபுரம், நிலாவெளி, மாங்கினாய், விடத்தல்தீவு போன்ற இடங்களில் அமைந்துள்ள மாரிஅம்மன் கோவில்கள், மன்னார் உப்புக்குளம் இராஜேஸ்வரி அம்மன் கோவில், சம்பூர் பத்திரகாளி, குருமன்காடு பத்திரகாளி, உவர்மலை துர்க்கை, இலங்கைத்துறை செம்பக நாச்சியம்மன், பாலம் போட்டாறு பத்தினி, குறும்பிட்டி கண்ணகி, பாலம்பிட்டி கண்ணகி முதலான அம்மன் ஆலயங்கள் குறிப்பிடத்தக்கனவாகும்.

எனவே முடிவாக அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் அழகேஸ்வரி பீடம், (முன்னேஸ்வரம்) புவனேஸ்வரிபீடம் (நயினை நாகபூசணி) ஆகிய சக்தி பீடங்களைத் தன்னகத்தே கொண்ட ஈழத்து சக்தி வழிபாட்டு மரபில் வன்னி மண்ணும் தனித்துவமான ஓர் புராதன சக்தி வழிபாட்டு மரபுகளை பேணி வருவதை நம்மால் அவதானிக்க முடிகின்றது. அத்தகைய சக்தி வழிபாட்டு மரபுகள் சிதைவுறாது நிலைத்து நிற்க வழிவகுப்பது வன்னி மண்ணின் ஒவ்வொரு மைந்தனதும் தலையாய கடமைபாடாகும்.

உசாத்துணைகள்

01. நடராச க.செ.வையாபாடல் கொழும்பு தமிழ்ச்சங்கம் வெளியீடு 1980

02. Navaratnam C.S "Vanniyas" 1963

03. சைவப்புலவர் வடிவேல் சி.திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள் பிரதேச அபிவிருத்தி இந்து சமய கலாசாரத் திணைக்களம் 1984

04. பேராசிரியர். ப.பத்மநாதன் இலங்கையில் இந்துக் கலாச்சாரம் இந்து சமய கலாசார திணைக்களம் - 200

05. கலாநிதி செ.குணசிங்கம் "திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலில் முதலாம் இராஜேந்திர சோழன் காலக் கல் வெட்டு"

06. பாலகிருஸ்ணன் சி.வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பொங்கல் கிரியா கரும விளக்கம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கருணை மலர் - 1978

07. இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள், பிரதேச அபிவிருத்தி இந்துகலாசார அமைச்சு வெளியீடு - 1984

# சக்தி வழிபாடு.

பேராசிரியர் ஆ.வேதநான்
தலைவர் இந்து நாகரிகத்துறை

அறிமுகம்

உலகில் தோன்றி வளர்ந்த தொன்மையான வழிபாடுகளில் சக்தி வழிபாடு மிகவும் பழைமை வாய்ந்தது. சக்தி வழிபாட்டை சாக்தம் எனவும் வழங்குவர்.

சக்தி வழிபாட்டின் தொன்மை

இச்சமயத்திலுள்ள அறுவகை வழிபாட்டு முறைகளுள் சக்தியை முழுமுதற் தெய்வமாகக் கொண்ட சமயம் சாக்தம் எனப்படும். இச்சமய நெறியினைப் பின்பற்றுவோரைச் சாக்தர்கள் என அழைப்பர். தொன்மைக் காலத்தில் தோன்றிவிட்டதாகக் கருதப்படும் இச்சாக்த நெறியானது இன்றுவரை வளர்ந்து வருவது அதன் சிறப்பம்சமாகும்.

சக்தி வழிபாட்டின் அம்சங்களையும் அதன் பிரதான அம்சங்களையும் அறிந்து கொள்வதற்கு தொல்லியற் சின்னங்கள், கல்வெட்டுக்கள், சிற்பங்கள், நாணயங்கள் மட்டுமன்றி அவ்வழிபாட்டினை வளம்படுத்திய பயன்பாட்டு மூலங்களான வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், தந்திரங்கள், சிற்பங்கள், தமிழ் இலக்கியங்கள் போன்றனவும் பெரிதும் துணைபுரிகின்றன.

சக்தி வழிபாடானது பொது மக்களிடையே அன்னை வழிபாடு. அம்மை வழிபாடு. அம்மன் வழிபாடு, ஈஸ்வரி வழிபாடு எனப் பல பெயர்களில் வழங்கப்படுகின்றது. அம்பிகையை அகிலாண்டேஸ்வரி (Universal Mother) என அழைக்கப்படுவதற்கேற்ற முறையில் அகிலமெங்கும் இவ்வழிபாடு பரந்து விளங்குகின்றது. இந்நெறியைக் குறிக்கும் ஆங்கில மொழித் தொடரை நேரடியாக மொழி பெயர்ப்போர் "தாய்த் தெய்வ வழிபாடு" (Mother Goddess Worship) என்ற தொடரை இன்று பயன்படுத்தி வருகின்றனர். சக்தி வழிபாடும், நாக வழிபாடும் ஒன்றி நிற்கும் நிலையினை "மனஸா" என்ற தேவியின் அம்சம் புலப்படுத்துகின்றது. மனஸா தேவியை "நாகமாதா" "நாகேஸ்வரி" என்ற பெயர்களால் தேவி பாகவதம் குறிப்பிடுவது சக்தி வழிபாட்டினதும் நாக வழிபாட்டினதும் ஒருங்கிணைவைப் புலப்படுத்துவதாகவுள்ளது. பண்டைக் காலத்தில் பூமி, பசு, என்பவற்றைக் கூட தாய்த் தெய்வங்களாகக் கருதி அவற்றை வழிபட்டதாக அறிய முடிகின்றது.

"சக்தி" என்ற பதமானது பல பொருளில் வழங்கப்படுகின்றது. சக்தி என்னும் சொல்லுக்கு "வல்லமை" என்பது பொருள். உமையாற்றல், சிவனது அருள், குலம் என்பவை சக்தியைக் குறிக்கும் பெயர்களென தமிழ்ச் சொல்லகராதி குறிப்பிடுகின்றது. தனக்கு அதிஸ்டமான பரப்பிரமத்தின் வெளித் தோற்றமே சக்தி என அறிஞர்கள் கருதுகின்றனர். நிர்க்குணமான பிரமத்தின் சகுண நிலையே "சக்தி" எனக் கைலாசநாதக்குருக்கள் கூறியுள்ளார். இவ்வாறே வழிபாடு என்ற பதமும் வழியிற் செல்லுகை (Proceeding on the way) பின்பற்றுகை (Following) வணக்கம் (Reverence, adoration) பூசனை (Riotyal Worship) வழக்கம் (Use, Custom, habit) சமயக் கோட்பாடு (Religious system) எனப் பல பொருளினைக் குறித்து நிற்கின்றது. இவ்வகையில் சக்தி வழிபாடு என்பது ஆற்றல் வாய்ந்த அம்மையின் வணக்கத்தை அநுசரித்தலையும், அவளின் பூசனை முறைகள், சமயக் கோட்பாடுகள் முதலியவற்றைப் பின்பற்றுதலையும் குறித்து நிற்கின்றதெனக் கொள்ள முடிகின்றது.

ஆதியில் உயிர் உள்ளனவும், உயிர் இல்லாதனவுமான பல பொருட்கள் புனிதப் பொருட்களாகக் கருதப்பட்டு சமயத்தோடு தொடர்புபடுத்தப்பட்டு வழிபடப்பட்டு வந்ததாக அறிஞர்கள் கருதுகின்றனர். உயிர் உள்ளனவும், உயிர் இல்லாதனவுமான எல்லாவற்றிலும் தேவி உறைகின்றாள் என்பதை தேவி மாஹாத்மியத்தில் வரும் கீழ் வரும்

'யாதேவி ஸர்வபூதேஷ /சக்திரூபனே ஸம்ஸ்திதா
"யாதேவி ஸர்வபூதேஷ /சேதவேத்யபித்யதே
"யாதேவி ஸர்வபூதேஷ /ச்சாயா குபேன ஸம்ஸ்திதா
"யாதேவி ஸர்வபூதேஷ /மாத்தரு ரூபனே ஸம்ஸ்திதா

போன்ற சுலோக வரிகள் புலப்படுத்துகின்றன. இவை முறையே சக்தி வடிவில், சைதன்ய வடிவில் பிரதிபிம்ப வடிவில், தாய் வடிவில் தேவி உறைந்து விளங்குவதனைப் புலப்படுத்துகின்றன. "சர்வம் சக்திமயம்" என்ற சாக்த கொள்கையினை "மகாசக்தி இல்லாத வஸ்து இல்லை" என்ற பாரதியாரின்

பாடல் வரியும் புலப்படுத்துகின்றது.

சக்தி வழிபாடு அல்லது சாக்த நம்பிக்கை என்பது மிகவும் பழையதும், மிகப் பரந்து விளங்கியதுமான சமய நம்பிக்கைகளுள் ஒன்றென சேர்.ஜோன் வூட்றொல் குறிப்பிடுகின்றார். இத்தகைய சிறப்புப் பொருந்திய சக்தி வழிபாடானது உலகில் தோன்றிய பின்னணியைச் சுருக்கமாக நோக்குவது இன்றியமையாததாகும்.

சமய உலகில் வழிபாடானது மனிதனுடைய அச்ச உணர்ச்சியிலிருந்தும், குற்ற உணர்ச்சியிலிருந்தும் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. புராதன மக்கட் கூட்டத்தினர் கரு வளத்தையும், பயிர் வளத்தையும் (Fertility) ஒருங்கே பெறுவதற்கு மந்திரங்களைக் கையாண்டனரென்றும், அதன் தருக்க ரீதியான முடிவாகவே பேரன்னை வழிபாடு தோன்றியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. சமயமும் மந்திரமும் நெருங்கிய தொடர்புடையனவாகத் தோன்றினாலும் முன்னதில் உள்ள வழிபாட்டு நோக்கம் பின்னதில் கிடையாதென்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

சக்தி வழிபாடு தோன்றுவதற்கு அது தோன்றிய சமுதாயத்திலேயே தாய் வழிச்சமூக அமைப்பு நிலவியமையே அடிப்படையான காரணமென்பது அறிஞர்களின் கருத்தாகும். வரலாற்று ரீதியாக நோக்கும் போது இவ்வுண்மை புலனாகின்றது. மரபுவழி, உறவுமுறை, சொத்துரிமை, ஆட்சியுரிமை, அதிகாரம், மணமுறை ஆகியன கொண்டு ஒரு சமூகம் தாய்வழிச் சமூகமா அன்றேல் தந்தைவழிச் சமூகமா என்று துணிந்து கூறமுடியாது. விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்டு விளங்கிய நதிக்கரை நாகரிகங்கள் நிலவிய பிரதேசங்களில் ஆதியில் பெண்களே தாய்வழிச் சமூக அமைப்பு ஏற்பட்டு அதனடிப்படையில் தாய்த் தெய்வ வழிபாடு (சக்தி வழிபாடு) தோன்றியதென்பர். ஆரம்பகால விவசாய சமுதாயங்களில் பெண்ணாதிக்கம் இருந்ததால் அச்சமுதாயங்களில் பெண்களே ஏற்றம் பெற்று விளங்கினர் என வானமாமலை குறிப்பிடுகின்றார்.

உலகில் தாய்வழிச் சமூக அமைப்பைத் தொடர்ந்தே தந்தை வழிச் சமூக அமைப்பு வந்ததென்பது அறிஞர்களின் பொதுவான கருத்தாக இருப்பதனால் மிகப்புராதன சமுதாயத்தில் தாய்வழி உரிமைக்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருந்ததென்பது தெளிவாகின்றது. சிரியா, சின்னாசியா, எகிப்து முதலிய இடங்களில் சக்தி வணக்கம் தோன்றுவதற்கும் தாய்வழிச் சமூக அமைப்புமுறை நிலவியதே காரணம் எனப்படுகின்றது.

தாய்த்தெய்வ வழிபாடு வேட்டைச் சமுதாயத்திலிருந்து புராதன உழவுத்தொழில் தோன்றிய காலத்தில் தோன்றியதென்று மானிடவியலாளர் கருதுகின்றனர். பேய் வழிபாட்டு வளர்ச்சியின் விளைவாகவே இவ்வழிபாடு தோன்றிற்றென்றும் சிலர் எண்ணுகின்றனர்.

புராதன மக்கள் தமக்கு வேண்டிய எல்லா உணவுப் பொருட்களையும் உதவி வந்த தரையைப் பெண் தெய்வமாக வழிபட்டு வந்த தரைப்பெண் வணக்கமே நாளடைவில் சக்தி வணக்கமாக மாறியதென்பர். ஆதி மக்களிடையே நிலவிய சூரியபூமி வணக்கமே காலப்போக்கில் ஆண், பெண் தெய்வ வணக்கமாக சிவன், சக்தி வணக்கமாக மலர்ந்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. இந்தியாவில் பூதேவி என்றும், ஸ்ரீதேவி என்றும் பூமியும் கலப்பையால் வரையப்பட்ட கோடும் பெண் தெய்வங்களாக வணங்கப்பட்டன. உலகமெங்கும் தாய்த்தெய்வம் முதற்கட்டத்தில் பருத்த மார்புகளை உடையதாகவும், இரண்டாவது கட்டத்தில் பருத்த அடிவயிற்றை உடையதாகவும் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளது. புராதன மக்கள் மக்கட்பேற்றிற்கும், மார்பகங்களுக்கும் ஏதோ தொடர்புண்டென்று ஆரம்பத்தில் நினைத்ததனாலேயே தாய்த்தெய்வங்களைப் பருத்த மார்பகங்களோடு படைத்தனர் எனக் கருதப்படுகின்றது.

பரம்பொருளைத் தாயாக, தோழனாக, குழந்தையாக, அடிமையாக, கணவனாக எனப் பல்வேறு நிலைகளில் பாவனை செய்யும் பக்திபாவங்களுள் மிகவும் நெருக்கமாக உளங்கனிந்து உரிமையுடன் உறவு கொண்டாட உதவுவது அவளைத் தாயாகக் கருதி வழிபாடு செய்யும் மார்க்கமேயாகும். பெண்மைக்குப் பெருமை தருவது தாய்மை இயல்பாகும். அத்தாய்மை இயல்பானது இந்து நாகரிகத்தில் மேன்மையான ஓர் இடத்தைப் பெற்றுத் தெய்வீக நிலைக்கு உயர்ந்திருக்கின்றதெனலாம். தாய்மையில் பூரண அன்பு, பூரண தியாகம், பூரண பொறுமை, பூரண மன்னிக்கும் சுபாவம், பூரணத்தூய்மை, பூரணத்தன்னல மறுப்பு ஆகிய நற்பண்புகளைக் காணமுடிகின்றது. இத்தகைய அருங்குணங்களை அன்னையிடம் கண்டமையால் அவளைத் தெய்வீக நிலைக்கு உயர்த்தி தெய்வமாக வணங்கத் தலைப்பட்டனரெனலாம். தாய்த்தெய்வமாகப் போற்றப்பட்டதை "மாதாவைத் தெய்வமாக போற்றுக" என்ற பொருள்கொண்ட உபநிடத வாக்கியம் புலப்படுத்துகின்றது. எல்லா உயிர்களிடத்திலும் தேவீ தாய்

வடிவில் இருக்கின்றாள் என்பது தேவீமாஹாத்மியத்தில் வரும் குறிப்பாகும். உபாத்தியாயன், ஆசார்யன், பிதா ஆகியோரைக் காட்டிலும் மாதாவுக்கே மதிப்பு அதிகமென்ற மனுதர்மசாஸ்திரக் குறிப்பும் குறிப்பிடற்பாலதாகும். இவ்வாறு தாயை தாய்மையைப் போற்றும் பண்பு நாளடைவில் தெய்வத்தையே தாயாகப் பார்க்கும் ஓர் எண்ணத்தை ஏற்படுத்தி அதன் அடிப்படையிலும் அன்னை வழிபாடென்ற சக்தி வழிபாடு ஆரம்பித்திருக்கக்கூடும்.

இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் குருவுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தாய் மிக உயர்ந்த குருவென்பதையும், அவருக்கு இணையாக குரு எவருமில்லை என்பதையும் மகாபாரதம் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. தந்திர சாஸ்திரங்கள் பெண் குருவாக இருக்கத் தகுதியுடையவள் என்பதையும் அவள் வழிபடத்தக்கவள் என்பதையும் குறிப்பிடுகின்றன. தேவியே சாத்திரங்கள் எல்லாவற்றிற்கும் குருவென்பதும், பெண்கள் அனைவரும் அவருடைய பூவுலகப் பிரதிநிதிகளென்பதும் தந்திர நூல்களின் அடிப்படைக் கருத்தாகும். எனவே தாய், குரு, பெண் ஆகியோரைத் தெய்வமாகப் போற்றும் பண்பும் சக்தி வழிபாட்டின் தோற்றத்திற்கோர் காரணம் எனலாம். தாயும், குருவும் தெய்வமாகப் போற்றப்படுவதனை முறையே "மாத்ருதே வோபவ ஆச்சார்ய தேவோபவ" என்ற உபநிடத வாக்கியங்களும் புலப்படுத்துகின்றன. அம்பிகைக்கு "குருமூர்த்தி" என்றோர் நாமம் இருப்பது நோக்கற்பாலதாகும்.

பண்டைக் காலத்தில் பாரசீகத்தில் இருந்து கிரீஸ் வரையிலும் பரவியிருந்த அம்பாள்தேவியின் வழிபாட்டிலிருந்தே சக்தியின் ஒரு கூறாகிய காளி வழிபாடு தோன்றியிருக்க வேண்டுமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இத்தகைய சிறப்புப் பொருந்திய சக்தி வழிபாடானது எங்கே, எப்போது தோற்றம் பெற்றதென்பதில் அறிஞர்களிடையே அபிப்பிராய பேதங்கள் நிலவுகின்றன. சக்தி வழிபாட்டின் ஆரம்ப இடத்தை உறுதியாகக் கூறுவது மிகவும் கடினமானதாகும். சேர்.ஜோன்.மார்ஷல் என்பவர் இவ்வழிபாடு அனரோலியாவில் (Anatolia) பெரும்பாலும் பிறிஜியாவில் (phrygia) தோற்றம் பெற்ற பின்பு மேற்காசியா முழுவதும் பரவியதாகக் குறிப்பிடுகின்றார். தாய்வழிச் சமூக அமைப்பு நிலவிய மேற்காசியாவில் முற்காலத்தில் அம்மன் வழிபாடு சிறப்புற்றிருந்ததாகக் கூறப்படுகின்றது. இதை உறுதிப்படுத்தும் விதத்தில் கிரீத்து, எகிப்து, மெசபெத்தோமியா, சின்னாசியா (ஆசியாமைனர்) முதலிய நாடுகளில் சிங்கவாகினியாய் ஆயுதம் தாங்கிய தாய்க்கடவுளின் உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆசியாமைனரில் இடபத்தில் இருக்கும் தந்தைக் கடவுளும், தந்தைக் கடவுளுக்குப் பக்கத்தில் சிங்கவாகனத்தில் மீதிருக்கும் தாய்க்கடவுளும் பொறிக்கப்பட்ட நாணயமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாரசீகத்தில் அனஹித என்றும், சுமேரியாவில் இனீனனிமி-இஸ்தர் என்றும் எகிப்தில் இஸ்தர் அஸ்ரட் என்றும் பெண் தெய்வங்கள் வணங்கப்பட்டனர். கப்டோசியாவில் "மா" என்னும் பெண் தெய்வம் வணங்கப்பட்டது. இந்த "மா"என்ற பதம் அம்மனைக் குறிக்கும் "உமா"என்ற பதத்தினைப் போன்றிருக்கின்றது. புராதன காலத்தின் ரோமர்கள் "வீனஸ்" என்ற தெய்வத்தையும், கிரேக்கர்கள் "ஸைடீஸ்" என்ற தெய்வத்தையும் செழிப்புத் தெய்வங்களாகக் கருதி வழிபட்டனர். வீனஸ் என்ற தெய்வம் தாய்த் தெய்வத்தின் வளர்ச்சியெனக் கூறப்படுகின்றது. இத்தகைய குறிப்புக்கள் அகிலமெங்கும் அன்னை வழிபாடு பரவி விளங்கியதைப் புலப்படுத்துகின்றன. சக்தி வழிபாட்டின் புராதன சுவடுகளை இந்தியா, இலங்கை போன்ற தென்னாசிய நாடுகளில் சிறப்பாகக் காண முடிகின்றது. இவ் வழிபாடானது இந்தியாவில் முக்கியத்துவம் பெற்று விளங்கியதனை அறிய அங்கு கிடைத்துள்ள தொல்பொருட்கள் இலக்கியங்கள் , கல்வெட்டுக்கள், நாணயங்கள் போன்ற வரலாற்று மூலகங்கள் உதவி செய்கின்றன. இன்றும் வங்காளத்தில் சாக்த நெறி மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

இந்தியாவில் சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்ட கிராமிய நாகரிகங்களில் சக்தி வழிபாடு நிலவியதற்கான சான்றாதாரங்கள் காணப்படுகின்றன. சொப் (Zahob) குள்ளி (Kulli) ஆகிய இடங்களில் கிடைத்த சுடுமண் பாவை உருவங்கள் இந்தியாவில் மிகத் தொன்மைக் காலத்தில் நிலவிய சக்தி வழிபாட்டிற்குரிய சின்னங்களென இராஜேஸ்வரி கருதுகின்றார். சிந்துவெளி மக்கள் வழிபட்ட தெய்வங்களை வரிசைப்படுத்திக் கூறும் சேர்.ஜோன் மார்ஷல் முதலில் அன்னைத் தெய்வத்தையே கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். அங்கு கிடைத்த சுடுமண் பாவை உருவங்களும் அங்கு நிலவிய சக்தி வழிபாட்டைச் சுட்டி நிற்கின்றன. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட பெண் உருவங்களைத் தாங்கியுள்ள முத்திரைகள் அக்காலத்தில் நிலவிய தரைப்பெண் வணக்கத்தைக் காட்டி நிற்பதாகவும் கருதப்படுகின்றது. சிந்துவெளி மக்கள் பெண் தெய்வங்களுக்கு பலியிட்டு

வந்தார்கள் என்பதற்கு அங்கு கிடைத்துள்ள முத்திரைகள் சான்று பகர்கின்றன. ஒரு முத்திரையில் இறைவிமுன் ஒருவன் வெள்ளாடு ஒன்றைப்பிடித்துக்கொண்டு நிற்க அதனைப் பலர் வரிசையாக வழிபட நிற்பது போன்ற உருவம் காணப்படுகின்றது. இது அக்கால மக்கள் விலங்குகளை பெண் தெய்வத்திற்கு பலியிடும் பழக்கம் உடையவர்களாக விளங்கினர் என்பதைப் புலப்படுத்துகின்றது. இன்றும் காளி கோயில்களில் ஆடு பலியிடும் பழக்கம் காணப்படுவது குறிப்பிடற்பாலதாகும். சிந்துவெளியில் கிடைத்த பிறிதொரு முத்திரையில் ஒருவன் வாளேந்தி நிற்பது போலவும், அவனுக்கு அடியில் ஒரு பெண் முழங்கால் படியிட்டு இருப்பது போலவும் காணப்படுவது அக்காலத்தில் தரைப்பெண்ணுக்கு நரபலி கொடுக்கும் வழக்கம் இருந்திருக்கலாமெனக் கருத இடமளிக்கின்றது.

சிந்துவெளி நகரங்களுள் ஒன்றான மொஹஞ்சதாரோவில் ஆண்கடவுளைக் குறிக்க ஆண்குறியும், பெண் கடவுளைக் குறிக்க பெண்குறியும் விளங்கியதற்கான சான்றுண்டு. இவ்வாறே ஹரப்பா சிந்துவெளி நகரத்திலும் பானை ஒன்றிற்குள் ஒரு லிங்கமும் அதன் உடல் தொடர்பாக யோனியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை நோக்கற்பாலதாகும். இந்தப் பெண்குறியாகிய யோனி உருவங்கள் இனவிருத்தியின் சின்னமாக விளங்கிய சக்தி வழிபாட்டினையே சுட்டிநிற்கின்றன எனலாம். சிந்துவெளியில் கிடைத்த யோனிக்கற்களும் (Ring Stones) மௌரியர், சுங்கர் காலங்களில் கிடைத்த யோனிக்கற்கள், வட்டத்தகடுகள் (Discs) போன்றனவும் தற்கால சாக்தகிரியை வழிபாட்டில் இடம்பெறும் சக்கர யந்திர வழிபாட்டின் தொன்மைக்குச் சான்று பகர்வதாக பனோர்ஜி கருதுகின்றார்.

இத்தகைய சான்றாதாரங்கள் சிந்துவெளி நாகரிக காலத்தில் சக்தி வழிபாடு மிகவும் சிறப்புற்றிருந்ததை புலப்படுத்துகின்றனவெனலாம். சக்தி வழிபாடானது குஷான குப்த மன்னர்களது ஆட்சி காலங்களிலும் வட இந்தியாவில் விளங்கியதனைச் சான்றாதாரங்கள் தெளிவுபடுத்துகின்றன. மகாயான பௌத்த மதத்தை வளர்த்த குஷான மன்னர்களாகிய இரண்டாம் காட்டினஸ், கனிஷ்கர் ஆகியோரின் நாணயங்களிற் கூட பார்வதியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளமை அக்காலத்தில் நிலவிய சக்தி வழிபாட்டின் சிறப்பை அறிய உதவுகின்றது. வட இந்தியாவில் இந்துமத மறுமலர்ச்சிக் காலமெனப்படும் குப்தர் காலத்தில் பார்வதியின் ஏழு அவதாரங்கள் (சப்தமாதாக்கள்) வழிபாடு சிறப்பாக போற்றப்பட்டன. இக்காலத்து நாணயங்களில் இலக்குமி, ஸ்ரீதேவி ஆகியோரின் திருவுருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பார்வதியுடன் கணபதியும் கார்த்திகேயனும் அமர்ந்திருக்கும் முத்திரை ஒன்றும் குப்தர் காலத்தில் கிடைத்துள்ளது. குப்த மன்னர்கள் நச்சனக்குதாரா என்ற இடத்தில் பார்வதிக்கு ஓர் ஆலயம் அமைத்துள்ளனர். மேலும் குப்த மன்னர்கள் தமது பிற்காலத்தில் சீதையம்மனுக்குரிய கோயில் ஒன்றில் நாலந்தாவிலும், முண்டேஸ்வரிக்கான கோயிலை கி.பி. 636ல் பீகாரிலும் கட்டியுள்ளனர். இத்தகைய சான்றாதாரங்கள் குப்த மன்னர்கள் சக்திக்கு ஆலயம் அமைத்து வழிபட்ட தொன்மையை சிறப்பைப் புலப்படுத்துகின்றன. மேலும் வட இந்தியாவில் குவிஷ்க (Kubishka) அரசர் காலத்தில் சிவனோடும், சிவன் இல்லாமலும் உமையின் வடிவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் காணப்படுகின்றன. அத்துடன் வட இந்தியாவில் விநாயகர், பார்வதி, சூரியன், விஷ்ணு, விசன் என்ற ஐந்து தெய்வங்களுக்கும் அமைக்கப்பட்ட பஞ்சாயதனக் கோயில்கள் பற்றிய குறிப்பும் முக்கியமானதாகும்.

இந்து சமய இலக்கியங்களான வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், ஆகமங்கள், தந்திரங்கள் சிற்பநூல்கள் என்பவை சக்தி வழிபாட்டினை வளம்படுத்திய வடமொழியிலான பண்பாட்டு மூலங்களாக விளங்குகின்றன. சக்தி வழிபாட்டின் சிறப்பம்சங்களை அறிந்து கொள்வதற்கு இவ்விலக்கியங்கள் பெரிதும் துணை புரிவதனால் சக்தி வழிபாடு பற்றிய இவ்வறிமுகத்தில் இவ்விலக்கியங்களில்வரும் சக்தி வழிபாடு பற்றிக் குறிப்பிடுவது மிகவும் அவசியமாகின்றது.

இந்து மதத்தின் ஆதி இலக்கியமாக ஆரியரின் ஆதி ஏடாகிய இருக்கு வேதம் கருதப்படுகின்றது. இவ்விருக்கு வேதத்தில் சக்தி வழிபாடு பற்றிய குறிப்புக்கள் ஒன்றும் காணப்படவில்லை என சீனிவாசன் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பினை ஏற்றுக் கொள்ள முடியாது. வேதகால சமய நம்பிக்கையிலும், வழிபாட்டிலும் பெண் தெய்வங்கள் மிகவும் முக்கியத்துவம் குறைந்த நிலையில் விளங்கினர் என்று மக்டொனல் கருதுவதனையே ஏற்பது பொருத்தமாகத் தெரிகின்றது. இருக்கு வேதப் பாடல்களை நுணுகி நோக்குகின்ற போது இவ்வுண்மை புலனாகின்றது இருக்கு வேதத்தில் காணப்படும் முப்பது வரையான பெண் தெய்வங்களின் பெயர்களை ஸ்ரீவஸ்த்தவ இனம் கண்டுள்ளார். அவையாவன உஷை, ராத்திரி, ராகா, சிலீவாலீ, குங்கு, அதிதி, பிருதுவி, திதி, ஸ்வஸ்த்தி, பிரிஸ்னி, புரம்தி, அனுமதி, ஆப்தேவிஸ், சரஸ்வதி, வாக், ஆரண்யாலீ, இந்திராணி, வருணானீ, சசீ, ரேதசீ, சீதா, உர்வரு, அரனி, சிரத்தா, திசனா, இலா, நிருதி, குன்றிதா, ஸ்ரீ, சூரியா

தெய்வங்களைக் குறிக்கும் சக்தி வடிவங்களோ பெயர்களோ இன்றய சக்தி வழிபாட்டில் மிகவும் அரிதாகக் காணப்படுகின்ற போதும் வேதகாலப் பெண் தெய்வங்களின் குணவியல்புகளைக் கூர்ந்து நோக்கும் போது பிற்காலச் சக்தி வழிபாட்டிற்குரிய அம்சங்கள் பலவற்றை அப் பெண்தெய்வங்களில் காணமுடிகின்றது. உதாரணமாக விடியற்காலத் தெய்வமாகிய உஷை என்ற இருக்கு வேதப் பெண் தெய்வத்தை எடுத்து நோக்கும் போது மனிதனைப் பாதுகாப்பவளாகவும் மனிதர்களுக்கு அருள்புரிபவளாகவும் உலகைப் பாதுகாப்பவளாகவும் உணவை உற்பத்தியாக்கும் சிறந்த பெண் தெய்வமாகவும் எதிரிகளை அழிப்பவளாகவும் மனிதர்களின் வழிகாட்டியாகவும் நோய்களை நீக்குபவளாகவும் கூறப்பட்டுள்ளாள். மேலும் அவள் தான் எல்லாவற்றிற்கும் மூச்சாகவும், உயிராகவும் விளங்குகின்றாள். இத்தகைய உயரிய பண்புகளையே பிற்காலத் தாய்த் தெய்வங்களிலும் காணமுடிவதனால் வேதகாலத்தில் வெவ்வேறு நாமங்களில் சக்தி வழிபாடு நிலவியிருக்க வேண்டுமென எண்ண இடமுண்டு. மேலும் தாய்த் தெய்வமாகக் கூறப்பட்ட உஷையானவள் தாய்மை, கன்னிமை ஆகிய இரண்டு இயல்புகளையும் ஒரே நோக்கிற் பெற்றவளாகவும் விளங்கினாள்.

இருக்கு வேதங்களில் வரும் பிருதுவியைப் பற்றிய பாடக் குறிப்புகளும் அவள் தாய்த் தெய்வமாகவும் அழியாத கன்னியாகவும் விளங்கியதனைப் புலப்படுத்துகின்றது. தாய்மை, கன்னிமை, என்ற இரண்டும் இணைந்த நிலையினை பிற்கால சக்தி வழிபாட்டிலும் காண்கிறோம். எனவே கன்னித்தாய்க் கோட்பாடு மிகவும் புராதனமானது என்பது தெளிவாகின்றது. பிருதுவி என்ற தரைப்பெண் தெய்வம் தலை உடம்பு, நெஞ்சு, முதுகு, கை, புயம், பால் நிறைந்த கொங்கை என்பவற்றுடன் விளங்குவதை வைதிக இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. இக்குறிப்புக்கள் உருவ நிலையில் பிருதுவியை வணங்கியுள்ளார்களோ என எண்ணத் தோன்றுகின்றது.

இருக்கு வேதத்தில் தெளிவற்ற பகுதி ஒன்றில் "கௌரீ" என்ற நாமம் இடம்பெற்றுள்ளது. இருக்குவேதத்தில் ராத்திரி என்றோர் பெண்தெய்வமும் கூறப்பட்டுள்ளது. அவள் நிச்சயமாக ஒரு தாய்த் தெய்வமென்பது தெளிவு. ஏனெனில் அதர்வவேதம் "இரவுத்தாய்" என்று தெளிவாகச் சுட்டியுள்ளது. "ராத்திரியை" பிற்கால "காளி"யுடன் சில அறிஞர்கள் தொடர்புபடுத்தியுள்ளனர். இரவு எப்பொழுதும் அச்சத்தைத் தருகின்ற ஒன்றாக விளங்குகின்றது. கருமை நிறங்கொண்ட காளியை அச்சகத்தின் அடிப்படையிலேயே இன்னும் வணங்கி வருகின்றனர். எனவே இரவுத் தெய்வமான ராத்திரியை காளியுடன் இனங்கண்டு கொள்வது ஓரளவு பொருத்தமானதாகலாம்.

இருக்கு வேதத்தில் "சக்தி" என்ற சொல்லானது பன்னிரண்டு இடங்களில் பெரும்பாலும் இந்திரனுடைய மனைவியாகிய "சசி" என்பவருடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது. இந்திரனுடைய ஆற்றல் எனக் கருதப்பட்ட சசி தான் பிற்காலத்தில் வழங்கும் சக்தி வழிபாட்டுக்கான மூலம் என்று அறிஞர் கருதுகின்றனர்.

இருக்குவேதத்தில் வருகின்ற தேவி சூத்தம், ராத்திரி சூத்தம் என்பனவும் இருக்குவேத கீலத்திலுள்ள (அநுபந்தம்) ஸ்ரீசூத்தம், ராத்திரி கீலம் என்பனவும் அன்றும் சாக்த கிரியைகளில் முக்கியமான பாராயணத்திற்கு உரியனவாக விளங்குவது நோக்கற்பாலதாகும்.

இருக்கு வேதத்தில் வருகின்ற காயத்ரீ மந்திரம் சூரிய காயத்திரி மந்திரமாக விளங்கினும் சக்தியுபாசகர்களின் பிரதான சந்தியா வந்தன மந்திரமாக இன்று இது விளங்குவது குறிப்பிடற்பாலதாகும்.

யசுர் வேதத்தில் "அம்பிகை" பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. சுக்கில யசுர் வேத்திலுள்ள வாஜசனேயி சம்கிதை, தைத்திரிய பிராமணம் என்பவற்றில் அம்பிகை என்ற பெயர் இடம்பெற்றிருப்பதுடன் அவள் உருத்திரன் மனைவியாக விளங்குவதனை தைத்திரிய ஆரணியம் குறிப்பிடுகின்றது. சக்தி சிவனின் தாயாகவும், மகளாகவும், மனைவியாகவும் விளங்குவதனை திருமூலர் குறிப்பிட்டுள்ளமையையும் நோக்கத்தக்கதாகும்.

சிவனின் பிறிதொரு மனைவியான வரதா என்பவள் பற்றி தைத்திரிய ஆரணியத்தில் கூறப்பட்டுள்ளது. சதபத பிராமணத்தில் சரஸ்வதி பிரமனின் மகளாகவும், மனைவியாகவும் விளங்குவது குறிப்பிடற்பாலதாகும்.

அதர்வவேதத்தில் "பூமி நமது தாய் நாம் அதன் பிள்ளைகள்" என்ற குறிப்பு இடம்பெற்றுள்ளது. தரையைத் தாயாக வணங்கிய வழிபாட்டின் தொன்மையை இக்குறிப்பும் விளக்கி நிற்கின்றது. தரைப்பெண் வழிபாடு சக்தி வழிபாடாக மாறியதென்ற அறிஞர்களின் கருத்து இங்கு நினைவுகூரற்பாலதாகும்.

சக்தி சம்பந்தமான உபநிடதங்களில் பாவனோபநிஷத், கௌலோபநிஷத், குஹ்யோபநிஷத், மஹோபநிஷத், த்ரிபுராமஹோபநிஷத், அருணோபநிஷத் பஹ்வ்ருசோபநிஷத், காளிகோபநிஷத், தாரோபநிஷத் என்பவை முக்கியமானவையாகும். இவைகளில் அதர்வ வேதத்தைச் சேர்ந்த பாவனோபநிஷத் தலைசிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது. மலைமகளாக விளங்கும் உமா தேவி பற்றிய குறிப்பு கேன உபநிடதத்தில் காணப்படுகின்றது. இங்கே உமாதேவி பரப்பிரம்மம் என்ற நிலையில் சுட்டப்படுகின்றாள். முண்டக உபநிடதத்தில் கூறப்பட்டுள்ள காளி, சுராளி, மனோக்வா, சுலோகிதா, ஸுதூம்ரவரனா, ஸ்புலிங்கினி, விஸ்வருசி, ஏழுநாக்குகளின் பெயர்களும் சக்தியின் பெயர்களாகவே விளங்குகின்றன. இவை சாக்த வழிபாட்டு நெறியில் இடம்பெறும் சப்தமாதாக்கள் வழிபாட்டிற்கு அடிப்படையாகலாம். புராணங்களில் தேவிபாகவதம் தேவிபுராணம், மார்க்கண்டேய புராணம், காளிகா புராணம், திரிபுராரஹஸ்யம் முதலியவை சக்தி வழிபாடு பற்றி விபரிக்கின்றன. மார்க்கண்டேய புராணத்தில் வரும் தேவிமகாத்மியம் என்ற பகுதி சண்டியின் சிறப்பைக் கூறுகிறது. இவை தவிர பிரம்ம காண்ட புராணத்தில் உத்தரபாகத்தில் அடங்கிய ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமம் ஸ்ரீ லலிதாதரிசத் லலிதோபாக்கியானம் முதலியவற்றிலும் சக்தி வழிபாடு பற்றிய விபரங்கள் காணப்படுகின்றன.

வால்மீகி ராமாயணத்தில் உமையை உருத்திரனுக்கு கன்னிகாதானம் செய்தமை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இது சைவமும் சாக்தமும் அக்காலத்திலேயே இணைந்து விளங்கியமையை புலப்படுத்துகின்றது. இராவணனை வதம்செய்து வெற்றிபெறும் பொருட்டு ராமன் துர்க்கையை வழிபட்ட செய்தி தேவிபாகவதத்தில் உள்ளது.

மகாபாரதத்தில் துர்க்காதேவியின் துதிகள் விராடபர்வம் பீஸ்மபர்வம் என்ற இரண்டு இடங்களில் கூறப்பட்டுள்ளன. பன்னீராண்டு வனவசாம் முடிந்து ஓராண்டு அஞ்ஞாதவாசத்தை மேற்கொண்டு விராட நாட்டினுள்ளே புகும் வேளையில் யுதிஸ்டிரர் யுத்த களத்தில் தனக்கு வெற்றியருள வேண்டும் என்று துதிசெய்தது விராடபர்வத்தில் வரும் செய்தியாகும். பகவத்கீதை உபதேசிக்கப்படுமுன் யுத்தகளத்தில் தங்களுக்கு வெற்றியளிக்குமாறு அர்ச்சுனன் துர்க்கையை ஸ்தோத்திரம் செய்தது பீஸ்மபர்வத்தில் வரும் குறிப்பாகும். இவ் வேண்டுதல்களிலே காளி, நந்தா, சிவா, கிருஸ்ணா, குமாரி, தைத்திரி, நித்யா, தயா, கபாலி, கபிலா கிருஸ்ணபிங்களா, பத்திரகாளி, மகாகாளி, சண்டி, தாரிணி, பிரம்மசாரினி ஆகிய நாமங்களால் துர்க்காதேவி துதி செய்யப்படுகின்றாள். இவ்வதிகாரச் செய்திகள் மூலம் போரில் வெற்றியை அருளும் தெய்வமாக துர்க்கை வடிவில் சக்தி வழிபாடு நடைபெற்றதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

இலங்கையில் சைவசமயத்தினை தோற்றமானது தமிழ் நாட்டின் பின்னணியில் அமைந்ததென்பதில் சந்தேகத்திற்கு இடமில்லைஎன நீலகண்ட சாஸ்திரி குறிப்பிட்டுள்ளார். இத்தகைய தமிழக பின்னணியில் தான் சைவத்துடன் ஒன்றிக் கலந்து வளர்ந்த சக்தி வழிபாடும் இலங்கையில் தோன்றிவளர்ந்திருக்க வேண்டும். எனக் கருத இடமுண்டு. எனவே இலங்கையின் சக்திவழிபாடு தொடர்பான ஆய்வில் இலங்கைக்கு மிகவும் அண்மையில் உள்ளதமிழ் நாட்டில் நிலவிய சக்தி வழிபாட்டின்வரலாற்றுப் பின்னணி பற்றிச் சுருக்கமாக நோக்குவது அவசியமாகின்றது.

சங்ககால தமிழகத்தில் கொற்றவை என்ற பெயரில் சக்தி வழிபாடு நிகழ்ந்ததை தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவள் ஒருதிராவிடத் தெய்வம் என்பர். சங்ககால தமிழகத்திலே விளங்கிய நலவாரித் தெய்வங்களைக் குறிப்பிடும் தொல்காப்பியம் சக்தியினை ஒரு நிலத்துக்குரிய தெய்வமாக குறிப்பிடாமை நோக்கற்பாலதாகும். சங்க காலத்தில் நிலவிய ஐவகை நிலங்களுக்குரிய கடவுளர்களில் கொற்றவை மட்டும் பெண் தெய்வம் என்பது குறிப்பிடத்தக்கது. இவளை பாலை நிலத்திற்குரிய தெய்வமாக அக்கால மக்கள் வழிபட்டனர். குறிஞ்சி, முல்லை முதலிய நிலங்களில் வாழ்ந்த மக்களும் கொற்றவையை வழிபட்டு வந்துள்ளமையை பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவள் போரில் வெற்றியைக் கொடுப்பவளாகவும், வேப்பமரத்தடியில் உறைபவளாகவும் பெரும் காட்டில் விளங்குபவளாகவும் காணப்பட்டாள். போருக்குச் சென்ற தலைவன் வெற்றியுடன் திரும்பிவரும் பொருட்டு தலைவியானவள் கொற்றவையை வழிபட்டதாக நெடுநல்வாடை கூறுகின்றது. கோட்டைவாயில் கதவுகளின் வெற்றிக் கடவுளாக கொற்றவையின் உருவம் பொறிக்கப்பட்டதை மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது. இவள் முருகனுடைய தாய் என்று கூறப்படுகின்றாள். இவளின் வழிபாடானது வெறியாட்டுடன் நிகழ்த்தப்பட்டது. வெற்றி பொருந்திய கொற்றவைக்குப் பலிக்கடன் கொடுத்து வாழ்த்துதலை கொற்றவை நிலை என தொல்காப்பியம்

குறித்து நிற்கின்றது. பகைவர்களின் ஆனிரைகளைக் கவர்ந்து வெற்றியீட்டியதற்கு நன்றிக்கடனாக படைவீரர்கள் கொற்றவைக்கு ஒரு பசுவைப் பலியிட்டு வணங்கியதை அகநானூற்றிலே காணலாம். சேர மன்னர்களும் கொற்றவைக்கு பலியிட்டு வழிபாடாற்றி உள்ளதை அறிய முடிகின்றது. இவருக்கான கோயில் ஒன்று பாண்டிநாட்டிலுள்ள சுடுகாட்டில் இருந்தமை பற்றி புறநானூற்றில் அறியலாம். கொற்றவையின் எழில் மலையை புகழ்ந்து பாடிய புலவர் ஒருவருக்கு வெள்ளைக்கால்களையுடைய குதிரைகளை கொற்றவை பரிசாகக் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது.

சங்ககால வழிபாட்டு முறைகளுள் நடுகல் வழிபாடும் ஒன்றாகும். பாலை நிலத்தில் நிலவிய நடுகல் வழிபாடே படிப்படியாக வளர்ச்சியுற்று வெற்றிதரும் கொற்றவை வழிபாடாக மாற்றம் பெற்றிருக்க வேண்டும். என்பது அறிஞர்கள் கருத்தாகும். கொற்றவை பார்வதியாக மாற்றம் பெறுவதை சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. திருமுருகாற்றுப்படையில் முருகனை மலைமகள் மகன் என்றும் கொற்றவை சிறுவ என்றும் வர்ணிக்கப்பட்டிருப்பது இம்மாற்றத்தின் உண்மை நிலையினை எடுத்துக் காட்டுகின்றது. இங்கே பார்வதி அல்லது மலைமகள் கொற்றவையோடு இனங்கண்டு கொள்ளப்படுகின்றாள். திராவிடத் தெய்வமான கொற்றவை ஆரியக் கலப்பால் கௌரி, சமரி எனப்பெயர் பெற்று நாளடைவில் சக்தியாக உருமாறினாள் என இராசமாணிக்கனார் கருதுகின்றார். பிற்காலத்தில் கொற்றவையை துர்க்கையோடு மாறுபட வணங்கினர் என்கிறார் வித்தியானந்தர். இத்தகைய குறிப்புக்கள் கொற்றவை வழிபாடானது சங்ககாலத்தில் வீரத்தையும் வெற்றியையும் வேண்டி நிகழ்த்தப்பட்டதென்பதையும் அவளே பிற்கால சக்தியாக மாற்றம் பெற்றாள் என்பதையும் தெளிவுபடுத்துகின்றன.

தாய்வழி நிலவிய சங்ககால வேட்டைச் சமுதாயத்தில் கொற்றவை காடுகிழாள் போன்றவை சமுதாய தெய்வங்களாக விளங்கின எனலாம். சங்ககால மக்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு சக்தி காரணம் என நம்பினர். அச்சக்தியை அவர்கள் அணங்கு, சூர் என்ற சொற்கள் குறித்து நிற்கின்றன. சங்க நூல்களில் வரும் மழை அணங்கு “மலை நின்று பலிபெறும் அணங்கு” அணங்குடை முந்நீர், அணங்குடை பகளிர், அணங்குடை நோன்சிலை, அணங்குடை கட்டில், சூர்மகள் போன்ற குறிப்புகள் அக்காலத்தில் அணங்கு சூர் என்ற நாமங்களில் நிகழந்த சக்தி வழிபாட்டினைச் சுட்டி நிற்கின்றது எனலாம். மழையைக் கூடி பெண்தெய்வங்களாக கருதினர் என்பதை மலையுறை சக்திக்குப் பலியிட்டு வணங்கினர் என்பதையும் இக்குறிப்புக்கள் தெளிவுபடுத்துகின்றன. சங்ககாலம் தொட்டு சைவமும் சாக்தமும் இணைந்து வளர்ந்த சிறப்பை சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. சாக்தமும் சைவமும் ஒன்றிக் கலந்து நிற்கும் நிலையினை அர்த்தநாரீஸ்வரர் என்ற திருக்கோலம் சுட்டி நிற்கின்றது. உமையொரு பாகனாய் சாக்தமும் சைவமும் இணைந்து விளங்கும் நிலையினைப் புறநானூறு கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை போன்ற சங்க நூல்கள் புலப்படுத்துகின்றன. சங்க இலங்கியங்களில் சிவனைக்குறிக்கும் அடைகளேயன்றி சிவன் என்ற சொல் இடம் பெறாத நிலையில் சிவனின் தேவியாகிகய உமை என்ற சொல் அந்த நூல்களில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகவும் அக்காலத்தில் சாக்தம் பெற்றிருந்த முதன்மைச் சிறப்பை புலப்படுத்துவதாகவும் உள்ளது. முருகனை விபரிக்கும் திருமுருகாற்றுப்படை அவரை மலைமகள் மகனே, கொற்றவை சிறுவ பழையோள் குழவி எனக் குறிப்பிடுவது அக்காலத்தில் சாக்தம் முருக வழிபாடான கௌமார நெறியோடு தாய் சேய் என்ற உறவில் இணைந்து விளங்கிய சிறப்பினை பிரதிபலிக்கின்றது எனலாம்.

இத்தகைய இலக்கியக் குறிப்புக்கள் அக்காலத்தில் சக்தி வழிபாடு சிறந்து விளங்கியதனை புலப்படுத்துவதுடன் சக்தி வழிபாட்டின் முன்னோடி நிலையாக கொற்றவை வழிபாடு அக்காலத்தில் விளங்கியதனையும் வெளிப்படுத்துகின்றனவெனலாம்.

சங்கமருவிய காலத்திலும் சக்தி வழிபாடு சிறந்து விளங்கியதனை சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்கள் புலப்படுத்துகின்றன. சிலப்பதிகாரத்தில் கொற்றவை வழிபாடு மிகவும் சிறப்புற்று விளங்கியதை அதிலுள்ள வேட்டுவ வரிப்பகுதி விளக்கி நிற்கின்றது. இப்பகுதியில் இவள் நஞ்சுண்டு கறுத்த கண்டத்தினையும் கையில் சூலத்தினையும் ஏந்தியவளாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளாள். அத்துடன் இவள் யானையின் தோலினை ஆடையாகவும் சிங்கத்தின் தோலினை மேகலையாகவும் சிலம்பு கழல் என்பவற்றை காலணியாகவும் அணிந்து மகிடாசுரன் தலைமீது நிற்பவளாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலதாகும். மகிடாசுரமர்த்தினியாக விளங்கிய சக்தியின் அம்சத்தையே இப்பகுதி புலப்படுத்துகின்றதெனலாம். சிவபெருமான் ஆனைத்

தோல் போர்த்தியமை பற்றியும் புலித்தோலை உடுத்தமை பற்றியும் நஞ்சுண்டமையால் கறுத்த கண்டத்தை உடையவராக விளங்குகின்றாரென்பது பற்றியும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. இவற்றைச் சக்தியும் செய்ததாகப் பின்வரும் சிலப்பதிகார வரிகள் புலப்படுத்துகின்றன.

"நஞ்சுண்ட கறுத்த கண்டி"
"கரியின் உரிவை போர்த்தணங்காகிய"
"ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்து"
"நஞ்சுண்டிருந்தருள் செய்குவாய்"

தேவிபாகவதத்தில் கன்னியானவள் யானைத்தோலைப் போர்த்து புலித்தோலை அணிந்து விளங்குவது பற்றிக் கூறப்பட்டுள்ளமை இங்கு ஒப்பு நோக்குவதற்குரியதாகவுள்ளது.

சிலப்பதிகாரத்தில் கொற்றவையானவள் அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, மாலவற்கிளங்கினை, ஐயை, செய்யவள், வெய்யவள்,' பாய்கலைப்பாவை, பைந்தொடிப்பாவை, ஆய்கலைப்பாவை, அருங்கலப்பாவை என்ற பல பெயர்களினால் அழைக்கப்படுகின்றாள். கொற்றவை திருமாலுக்குத் தங்கையாகக் கருதப்பட்டாளென்பதை மாலவற்கிளங்கினை என்ற சிலப்பதிகார நாமம் புலப்படுத்துகின்றது. பத்மநாபஸ ஹோதர் என்ற தேவியின் நாமம் இங்கு ஒப்பு நோக்கற்பாலதாகும். கவுரி எனக் கூறப்படும் சிலப்பதிகார நாமத்தை கௌரி என்ற தேவியின் நாமத்துடன் ஒப்பு நோக்க முடிகின்றது. மதுரை நகர்ப்புறத்தில் ஐயை என்பவளுக்கு ஒரு கோயில் இருந்ததை சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. சிலப்பதிகாரத்தில் வரும் இத்தகைய குறிப்புக்கள் அக்காலத்தில் சக்தி வழிபாடு சிறப்புற்றிருந்த நிலையினைப் பிரதிபலிக்கின்றது. பௌத்த இலக்கியமெனக் கருதப்படும் மணிமேகலை காடமர் செல்விக்கு ஒரு கோயில் இருந்ததெனவும் அக்கோயிலானது அகன்ற முத்தத்தினையும் பலி கொடுத்ததனால் தொங்கவிடப்பட்ட தலைகளையுடைய நெடுமரத்தினையும் உடையதாக இருந்ததெனவும் கூறுகின்றது. இக்குறிப்பானது அக்காலத்தில் சக்திக்கு பலியிட்டு வணங்கிய நிலையினைப் புலப்படுத்துகின்றது.

பக்தி நெறிக்காலம் எனப்படுகின்ற பல்லவர் காலத்திலெழுந்த நாயன்மார்களது பாடல்களும் ஆழ்வார்களது பாசுரங்களும் முறையே சிவனையும் திருமாலையும் சிறப்பித்துக் கூறுகின்றது. பல்லவர் காலத்தில் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் முதன்மை வழங்கப்பட்டமைக்கு அக்காலத்தில் ஆணாதிக்கம் நிலை கொண்டிருந்ததும் ஒரு காரணமெனலாம். அக்காலத்தில் சக்திக்கு மட்டுமே உரித்தான தனியான தமிழ் இலக்கியங்கள் தோன்றாமையினால் சக்தி வழிபாடு பல்லவர் காலத்தில் நிலவவில்லை எனக் கூறமுடியாது. அக்காலத்தில் சைவமும் சாக்தமும் ஒன்றிக் கலந்து விளங்கியதனை நாயன்மார்களது பாடல் புலப்படுத்துகின்றன. திருஞானசம்பந்தரின்

"உண்ணா முலையுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்"

"செம்பிள முலைநன் மங்கையொருபாகமாக
கனவிடையேறு செல்வனடைவார்"

போன்ற தேவார அடிகள் புலப்படுத்துகின்றன. மேலும் சிவன் உமையுடன் கூடிய வடிவத்தோடு நடனமாடுவது பற்றிச் சம்பந்தர் குறிப்பிடுகின்றார். திருநாவுக்கரசரின்

"புதுவிரிபொன் செயோலை யொருகா தொர்காது
சுரிசங்க நின்று புரள
விதி விதி வேதகீத மொருபாடு மோத
மொருபாடு மெல்ல நகுமால்
மது விரி கொன்றை துன்னு சடையாக மாதர்
சூழல் பாகமாக வருவார்
இது விபர் வண்ணமிவள் வண்ண வண்ண
மெழில் வண்ண வண்ண மியல்பே"

எனத் தேவராம் மாதொருபாகனாக ஒருடம்பில் ஆண், பெண் என்ற இருபாலில் அழகும் அமைந்து விளங்கும் தன்மையைப் புலப்படுத்துகின்றது. சுந்தரமூர்த்திநாயனாரும் தனது தேவார அடிகளில் அர்த்தநாரீஸ்வர வடிவத்தைப் பலவிடங்களில் குறித்துள்ளமை குறிப்பிடப்பாலதாகும்.

அர்த்தநாரீஸ்வர வடிவம் பற்றிய இத்தகைய தேவாரக் குறிப்புக்கள் ஆணாதிக்கம் நிலை

கொண்டிருந்த பல்லவர்கால சமுதாயத்தில் பெண்ணுக்கும் சமத்துவம் கொடுக்கப்பட்டிருந்த சிறப்பை தெளிவாக புலப்படுத்துகின்றன. மணிவாசகரும் தமது திருவாசகத்தில் அர்த்தநாரீஸ்வரர் தோற்றத்தினைக் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“தோலும் துகிலும் களையும் சுருள் தோடும்
பால்வெள்ளை நீறும் சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மை
கோலமே நோய்க்கு குவிந்து ஊதாய் கோத்தும்பி

திருவாசகத்தில் மாதொரு பாகனாகவரும் நிலை மேலும் பல இடங்களில் விபரிக்கப்பட்டுள்ளன. திருவாசகத்தில் வரும் திருவெம்பாவைப் பதிகப் பாடல்களுக்கு “சக்தியை வியந்து” என்ற தலைப்பு கொடுக்கப்பட்டிருப்பது அங்கே சக்திக்கு கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவத்தினைத் தெளிவுபடுத்துகின்றது. திருவாசகத்தில் உள்ள திருப்பொற் சுண்ணப் பாடலில் சக்தி சோழி, நிலமகள், நாமகள், சித்தி, கௌரி, பார்வதி, கங்கை முதலான சக்தியின் நாமங்கள் கூறப்பட்டுள்ளன.

இத்தகைய தேவார திருவாசக குறிப்புகளை நோக்குகின்ற போது தமிழக சமய வரலாற்றில் பல்லவர் காலத்தில் சைவத்துடன் சாக்தம் மிகவும் பின்னிப்பிணைந்து வளர்ந்துள்ளமை தெளிவாகின்றது.

இக்காலத்தில் சக்திக்கேயுரிய தனித் தமிழ் இலக்கியங்கள் தோற்றம் பெறாத போதும் கி.பி 8ம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் ஆதிசங்கரர் வடமொழியில் “சௌந்தர்யலஹரீ” என்ற நூலை இயற்றியுள்ளமை அக்காலத்தமிழகத்தில் சக்தி வழிபாடு சிறந்து விளங்கிய நிலையினைப் புலப்படுத்துகின்றது. இந்நூல் சக்தி வழிபாட்டுக்குரிய சிறந்த பாராயண நூல்களுள் ஒன்றாக இன்றும் விளங்குவது குறிப்பிடற்பாலதாகும். இவ்வாறான பக்தி இலக்கியங்களில் இருந்து மட்டுமன்றி அக்காலத்தில் சக்திக்கென அமைக்கப்பட்ட கோயில்கள், சிற்பங்கள் போன்ற சான்றாதாரங்கள் மூலமும் அக்காலத்தில் நிலவிய சக்தி வழிபாடு பற்றி அறிய முடிகின்றது. இக்காலத்தில் அமைக்கப்பட்ட “திரௌபதைத்தேர்” என்ற ஒற்றைக் கற்கோயிலை கொற்றவைக்குரிய தனிக் கோயிலாகக் கருதுகின்றனர். வீரர்கள் தம் தலையினையும், உறுப்புக்களையும் அறுத்து கொற்றவைக்குக் காவு கொடுக்கும் வீர வழிபாட்டினை பல்லவர் கால சிற்பங்கள் சித்தரிக்கின்றன. தலையை வெட்டிக் கொன்றவனுக்கு காவு கொடுக்கும் வழக்கமே பிற்காலத்தில் தலைமயிரை மொட்டையடிக்கும் வழக்கமாக மாறியதாகக் கருதுகின்றனர். இலங்கையில் உள்ள சக்திக்கேயுரிய ஆலயங்களிலேயே இன்றும் பிள்ளைகளுக்குத் தலைமயிரை மொட்டை அடிக்கும் வழக்கம் அதிகமாகக் காணப்படுவது குறிப்பிடப்பாலதாகும். கொற்றவைக்கு பூசை செய்பவர் “பாரசிவன்” என அழைக்கப்பட்டார். அக்காலத்தில் நவகண்டம் படைத்து கொற்றவையை வணங்கும் வழக்கம் இருந்ததனை ஒரு வீரன் தன் தொடையை அறுத்து கொற்றவைக்கு நவகண்ட காணிக்கையாக படைக்கும் நிலையில் இருந்து அறிய முடிகின்றது. பல்லவர் காலத் தமிழகத்தில் உலாவிய காபாலிகர், காளாமுகர், பாசுபதர் என்போர் சக்தி வழிபாடு நிகழ்த்தியதுடன் சக்திக்கு நரபலி கொடுத்து அவருடைய திருவடிகளில் தம் உயிரைப் போக்குவதற்கும் சித்தமாக விளங்கினார்கள் எனக் கூறுகின்றனர். வீரர்கள் தம் தலையினை அரிந்து கொற்றவைக்குத் தங்களையே காவு கொடுத்ததைச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. கலிங்கத்துப் பரணியில் சக்திக்கு உறுப்பரிந்து படைக்கும் வீரவழிபாடு கூறப்பட்டுள்ளது. சக்தி வழிபாடு மேலோங்கி விளங்கிய நிலையையே கலிங்கத்துப்பரணியும், தக்கயாகப்பரணியும், சுட்டி நிற்கின்றனர். பல்லவர் காலத்தில் திருமகள் வழிபடப்பட்டதனை மாமல்லபுரத்து வராக மண்டபத்தில் காணப்படும் திருமகளின் (கஜலட்சுமி) சிற்பவணி சுட்டி நிற்கின்றனர். பல்லவர் காலத்தில் சிவ பார்வதி திருமணம், பிரமன் நாமகள் திருமணம் என்பவை நிகழ்ந்ததை காஞ்சி கைலாசநாதர் கோயில் மண்டப சுவர்சிற்பவனிகள் புலப்படுத்துகின்றன.

சோழர் காலத்தில் இவ்வழிபாடு மேலும் சிறந்து விளங்கியது. சோழர் காலத்தில் சக்தி வழிபாட்டு முறையானது இரண்டு வகைகளில் நிகழ்ந்ததை அவதானிக்க முடிகின்றது. ஒன்று இக்காலத்தில் தேவிக்கென்றே தனிக் கோயில்கள் அமைக்கப்பட்டன. கி.பி. 11ம் நூற்றாண்டில் “காமக்கோட்டம்” என்ற பெயரில் சக்திக்கு தனிக் கோயில் எடுக்கும் மரபு தோன்றுகின்றது. இத்தனிக் கோயில்களில் பிடாரி, சப்தமாதர் முதலிய திருவுருவங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டு வழிபாட்டு முறைகளும் ஏற்படுத்தப்பட்டன. இரண்டாவது ஏற்கனவே இருந்த சிவாலயங்களில் சக்திக்கு தனிக் கோயில் ஏற்படுத்தப்பட்டு சப்தமாதர்,துர்க்கை,சேட்டாதேவி (மூதேவி) போன்ற தேவிமார்களின் திருவுருவங்களும்

பிரதிஸ்டை செய்யப்பட்டமையாகும். பல்லவர் காலத்தும் முற்காலச் சோழர் காலத்தும் அம்மனுக்குச் சிவன் கோயிலில் தனிக் கோயில்கள் ஏற்படுத்தப்படவில்லை என இராசமாணிக்கனார் குறிப்பிடுகின்றார். இறைவன் சன்னிதியிலேயே "போக சக்தியம்மன் என தனியிடம் பெற்றிருந்த அம்மனை உமா பரமேஸ்வரி என இராசராஜன் குறிப்பிட்டுள்ளான். கி.பி. 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த முதல் இராஜேந்திரனது எண்ணாயிரம் கல் வெட்டில் முதன்முதலாக அம்மன் கோயிலைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. இதன்பின்னரே அம்மனுக்குத் தனிக் கோயில்கள் எடுக்கப்பட்டன எனக் கருதுகின்றனர். ஆனால் சக்திக்குத் தனிக்கோயில் அமைக்கும் மரபு அதன் முன்னரே ஆரம்பித்துவிட்டதென எண்ண இடமுண்டு. மாமல்ல புரத்தில் அமைக்கப்பட்ட திரௌபதையின் தேர் கொற்றவைக்குரிய கோயிலாகக் கருதப்படுகின்றது. மேலும் சிலப்பதிகாரத்தில் வரும் "ஐயை தன்கோட்டம்" மணிமேகலையில் வரும் "காடமர் செல்வி களிபெரும் கோட்டம்" ஆகிய இலக்கிய குறிப்புக்களில் இருந்து சக்திக்கு தனிக் கோயில் அமைக்கும் மரபு சோழர் காலத்திற்கு முற்பட்டதென எண்ண இடமளிக்கின்றது. இருந்தும் சோழர் காலத்திலேயே அம்மரபு தனித்துவமுடையதாக விளங்கிற்றெனலாம்.

முதலாம் இராசன் காலத்தில் சிவன் கோயில்களில் சூரியன், சந்திரன், சப்தமாதர், கணபதி, முருகன், சேட்டாதேவி (மூதேவி) சண்டேசுவரர், வைரவர் என்ற அட்டபரிவாரத்தெய்வங்களை எழுந்தருள வைக்கும் வழக்கம் இருந்தது. சேட்டாதேவி வழிபாடு சோழர் காலத்தில் பிரபல்யமாக இருந்தது எனினும் பிற்காலத்தில் அவளுக்குரிய இடத்தை "சீதேவி" எனப்படும் திருமகள் எடுத்துக் கொண்டாள். சேட்டாதேவி வழிபாடானது பல்லவர் காலத்திலும் வழக்கத்தில் இருந்தது. விசயாலய சோழன் தஞ்சாவூரில் உக்கிரமாகாளிக்கு ஒரு கோயில் கட்டினான். இக்கோயிலை நிசம்பகுதனிகோயில் என முதலாம் இராசேந்திர சோழனுடைய திருவாலங்காட்டு செப்பேடு குறிப்பிட்டுள்ளது. மேலும் சோழர்கால சிற்பங்களில் மாதொருபாகன் சிற்பமும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இத்தகைய குறிப்புக்கள் சோழ மன்னர்கள் சாக்தம் எனப்படும் சக்தி வழிபாட்டினை வளர்க்கப்பெரிதும் முற்பட்டுள்ளார்களெனக் கருத இடமளிக்கின்றது. சக்திக்குத் தனியாகக் கோயில் அமைக்கும் மரபு சோழர் காலத்தில் நடைமுறைக்கு வந்துள்ள போதிலும் இவ்வழக்கம் விஜயநகர, நாயக்க மன்னர்களின் காலத்தில் தொடர்ந்து சிறப்பெய்தியது. நாயக்கர் காலத்திலே தான் சக்தி வழிபாட்டைச் சிறப்பிக்கும் நவராத்திரி விழா தமிழகத்திலும், ஈழத்திலும் புகுந்ததாகக் கருதுகின்றனர்.

தமிழகத்தில் சக்தி வழிபாடு தொன்றுதொட்டு வளர்ந்து வந்துள்ள போதிலும் தமிழில் தோன்றிய சக்திக்குரிய பாராயண நூல்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. கம்பர் இயற்றியதாகக் கருதப்படும் சரஸ்வதி அந்தாதி, குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சகலகலாவல்லிமாலை, அபிராமிபட்டர் இயற்றிய அபிராமியந்தாதி, வண்ணைச்சரபம், தண்டபாணி சுவாமிகள் அருளிய திருமகள் அந்தாதி என்பவை தமிழில் தோன்றிய குறிப்பிடத்தக்க சக்தி வழிபாட்டிற்குரிய பாராயண நூல்களாக விளங்குகின்றன. மேலும் வராகிதேவியை முப்பத்திரெண்டு செய்யுட்களால் வராகிமாலை எனும் பாராயண நூல் ஒன்றும் தமிழில் உண்டு. பராசக்தியின் பல்வேறு அம்சங்களை தமிழில் பாடியவர்களுள் பாரதியார் குறிப்பிடத்தக்கவராக விளங்குகின்றார். சக்தி வழிபாட்டுக்குரிய இலக்கியங்கள் தமிழில் குறைவாகக் காணப்படினும் சக்தி வழிபாடு தமிழகத்தில் வளர்ந்து சிறப்புற்றமையை இவை புலப்படுத்துகின்றன. இவற்றுள் அபிராமிப்பட்டர் இயற்றிய அபிராமியந்தாதி சக்திக்குரிய பராயண நூல்களுள் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது.

தமிழகத்தில் இன்றும் சக்தி வழிபாடு செல்வாக்குடன் திகழ்வதை மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, தில்லை சிவகாமி, திருக்கடவூர் அபிராமி, கன்னியகுமாரி, சமயபுரம் மகமாயி ஆகிய திருத்தலங்களில் சக்திக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முதன்மைச் சிறப்பைக்கொண்டு அறிய முடிகின்றது.

# தந்திரங்களும் சக்தி வழிபாடு

சக்தி வழிபாடு பற்றிய அறிமுகத்தில் சக்தி வழிபாட்டினையும் சாக்த கிரியை முறைகளையும் சக்தி பேதங்களையும் சிறப்பாக விபரிக்கின்ற பிரதான சமய நூல்களாக விளங்குகின்ற சாக்த தந்திரங்சகள் பற்றிக் குறிப்பிடுவது மிகவும் அவசியமாகின்றது. சக்திய யுகத்தில் சுருதியும், திரேத யுகத்தில் ஸ்மிருதியும், துவாபர யுகத்தில் புராணங்களும், கலியுகத்தில் ஆகமங்கள் அல்லது தந்திரங்களும் விசேட சமய நூல்களாக விளங்குகின்றன. மனிதனை அவனுடைய புலன்களைச் சரிவரப் பயன்படுத்தி புலனுணர்வுத் தன்மையில் நின்று இறைத் தன்மைக்கு உயரச் செய்வதே இறைவழிபாட்டின் நோக்கம் என்றும் இதனைச் செய்யும் நுட்பமான முறையினையே இந்தியாவில் தந்திரமென்றும் வழங்குகின்றனர். தந்திரங்களுக்கு ஆகமங்கள் என்ற பெயரும் உண்டு. உயர்ந்த மந்திர தத்துவங்களை உள்ளடக்கியிருப்பதாலும் உயர்ந்த உட்பொருளை உணர்த்துவதாலும் தந்திரம் என்ற பெயர் ஆகமங்களுக்கு வழங்கப்படுவதாக குறிப்பிடுகின்றது.

தந்திரம் என்ற சொல் "தன்" என்ற வினையடியில் இருந்து பிறந்ததாகும். தன் என்ற வினையடிக்கும் "நீட்டுவது" என்பது பொருளாகும். இவ்வகையில் கிரிகைகளை விரிவாக நீட்டி அதிகளவில் செய்வதே தந்திரம் என்ற சொல்லின் பொருளாகும். தந்திரம் என்ற பதத்திற்கு அறிவு பரவுவதற்கு ஏதுவாகவுள்ளது என்றும் பொருள் கூறுவர். தந்திரம் என்ற சொல்லுக்கு சாஸ்திரம் என்பதே உண்மையான பொருள் என்று கூறுவோரும் உளர். இவ்வகையில் தந்திரம் என்ற பதம் ஞானத்தை விஸ்தரிக்கும் சாஸ்திரம் என்ற பொருளைத் தருகின்றது. எனவே கிரியைகள் ஒழுங்காகவும், செம்மையாகவும் அதிகளவில் ஆற்றுவதன் மூலம் ஞானத்தைப் பெறலாம். என்பதே தந்திரங்களின் அடிப்படைக் கருத்தாகும்.

உமாபதிசிவாச்சாரியார்.

கிரியை என மருவுமவை யாவும்
ஞானம் கிடைத்தற்கு நிமிரத்தம்

என்று குறிப்பிடுவது இங்கு நோக்கற்பாலதாகும்.

தந்திரம் என்ற சொல் ஒரு சித்தாந்தம் ஒரு சூத்ராவயம், பரிச்சதம் என்ற பொருளில் விளங்குவதை அமரகோசம் என்ற நிகண்டு நூல் குறிப்பிடுகின்றது.

தந்திரம் என்ற சொல்லானது மல்வாவில் (**MALVA**) உள்ள கன்டார் (gangdhar) சாசனத்தில் முதன்முதல் காணப்படுகின்றது. இச்சாசனகாலம் கி.பி. 423 - 24 (மாலவ வருடம் 480) ஆகும். சாக்த வழிபாட்டு மரபுகளை தமிழில் சிறப்பாக விபரிக்கும் திருமூலரது திருமந்திரப் பாடல்களில் தந்திரம் என்ற சொல் இடம் பெற்றிருப்பதுடன் அதன் அமைப்பும் கூட ஒவ்வொரு தந்திரங்களாகவே பிரிக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பாலதாகும். அறுபத்து நான்கு சாக்த தந்திரங்கள் பற்றி சங்கரரின் சௌந்தர்யலகரி என்ற நூல் குறிப்பிடுவதனால் அவர் காலத்தில் அறுபத்தி நான்கு சாக்த தந்திரங்கள் சக்தி வழிபாட்டில் இருந்ததென்பது தெளிவாகின்றது. தந்திரங்கள் கி.பி.10ம் நூற்றாண்டின் பின்னரே தோன்றியது என்றும் சிலர் கருதுகின்றனர். இவ்வாறு தந்திரங்களின் தோற்றகாலம் பற்றிய கருத்துக்கள் பல தரப்பட்டனவாக விளங்குவதனை அவதானிக்க முடிகின்றது. தந்திரங்கள் நூல் வடிவம் பெற்ற காலம் பிற்பட்டவையாக இருப்பினும் அவை கூறும் சிந்தனைகள் மிகவும் முற்பட்டவை என்பதில் சந்தேகம் இல்லை. தந்திர சாஸ்திரங்கள் இந்தியாவிலுள்ள சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், சௌரம் போன்ற இந்து சமயநெறிகளுடன் மட்டுமல்லாது மற்றும் சாதாரண சமய நெறிகளுடனும் தொடர்புடையதாக விளங்குகின்றது. பௌத்த மதத்திலும் தந்திரங்கள் உள்ளன. தந்திரங்கள் இந்தியாவுக்கு வெளியேயும் பரவியுள்ளன. இந்தியாவை விட நிலப்பரப்பில் பெரிதான பாரதவர்ஷம் ஆதியில் விஷ்ணு, கிராந்தம், ரத கிராந்தம், அஸ்வ கிராந்தம் என மூன்று கிராந்தங்களாக பிரிக்கப்பட்டிருந்ததென்றும் ஒவ்வொரு கிராந்தத்திற்கும் அறுபத்தி நான்கு தந்திரங்கள் உள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இந்து மதப்பிரிவுகள் ஒவ்வொன்றிற்குமென தந்திரங்கள் உள்ளன. சாக்த தந்திரங்கள் அறுபத்து நான்கு எனவும், சைவ தந்திரங்கள் முப்பத்திரெண்டெனவும், வைணவ தந்திரங்கள் எழுபத்திரெண்டு எனவும், காணாபத்தி தந்திரங்கள் முப்பது எனவும் கூறப்பட்டுள்ளன. தந்திங்களை ஐந்தாம் வேதம் என்று சாக்தர் கூறுவர். சக்தி வழிபாடே சிறந்ததெனக் கூறும் சாக்த ஆகமங்கள் (தந்திரங்கள்) எழுபத்தேழு என்றும் இவற்றுள் வசிட்ட, சனக, சுக, சனாதன, சனற்குமார என்ற ஐந்தும் சுபாகமங்கள் (சுபாகம தந்திர பஞ்சகம்) எனவும் மற்றும் அறுபத்தி நான்கு ஆகமங்கள் கௌல ஆகமங்கள் எனவும்

ஏனைய எட்டும் மிசிர ஆகமங்கள் எனவும் கூறப்படுகின்றன. சுபாகமம், கௌலாகமம், மிசிராகமம் என்ற மூவகை சாக்த ஆகமப் பிரிவுகளும் முறையே வலது கை மார்க்கம், (சமயசாரம்) இடதுகை மார்க்கம், கலப்பு மார்க்கம் என்ற மூன்று வகையான சக்தி வழிபாட்டு மரபுகளை விபரிக்கின்றன. மிசிராகமங்களாக சந்திரகலை, சோதீஸ்வரி, புவனேஸ்வரி, துர்ாசமாதா, பர்சஸ் பதியா என்பவை கூறப்படுகின்றன. மேலும் சூத்திரயாமனம், ஞாசூர்ணவம், திரிபுராகசியம், போகிஞுஹிருதயம், வாமகேச்வரதந்திரம், சதுமசதி, குலசூடாமணி, குவார்ணவம், மகாநிர்வாணதந்திரம், தந்திரவோகம், நேத்திர தந்திரம், ஸ்ரீவித்யார்ணவம், காமகவாவிவாசம் போன்றவை குறிப்பிடத்தக்க சாக்த தந்திரங்களுள் சிலவாகும்.

சக்தி தன்னுடைய சொந்த திருவுளப்பாங்கிற்கு ஏற்ற படியாக பல்வேறு திருவிளையாடல்களுக்கான உருவங்களைத் தாங்கிக் கொள்வாள் என காயத்திரீ தந்திரம் குறிப்பிடுகின்றது. தந்திர சாஸ்திரங்களில் சக்தியின் ஒரு கூறாகிய காளி வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது மகாநிர்வாணதந்திரம், குலார்ணவ தந்திரம், யோகினி நத்திரம், காமதேனு தந்திரம், முதலிய தந்திரங்களில் காளியின் பேதங்களும் வழிபாட்டு முறைகளும் கூறப்பட்டுள்ளன.

தந்திர நூல்களில் வித்திகாளி, மகாகாளி, பத்திரகாளி, சமகான காளி, தக்ஷனகாளி, ருஹ்யகாளி, சாமுண்டாகாளி, தனகாளி, காமகூடகாளி என்ற ஒன்பது வகையான நவகாளிமாதர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆதி சக்தியானவள் உலகம் உய்யும் பொருட்டு தன்னுடைய லீலா வினோதமாக தொடக்கத்தில் எடுத்து பத்து ரூபங்களைத் தசமமகாவித்தைகள் என அழைப்பர்.

சம்மோகன தந்திரத்தில் காளி, தாரா, சின்னமஸ்தா, சுந்தரி, வகலா, ரமா, மாதங்கி, புவனா, சித்தி வித்தியா, தூமாலதி என்பவர்கள் தசமாவித்தியாக்களாக கூறப்பட்டுள்ளனர். துந்திர சாஸ்திரங்களில் காளி தாரா, ஷேடசீ, புவனேஸ்வரி, பைரவீ, சின்னமஸ்தா, சுந்தரி (கமலா அல்லது மகாலட்சுமி) பகளாமுகி, தூமாலதி, மாதங்கி என்பவை பத்து மகாவித்தைகள் எனத் தேவியே கூறியுள்ளாள். தசமகாவித்தைகள் கைவல்யத்தைத் தரக்கூடியவள் காளிதேவியே என சிவபெருமான் கூறியதாக காமதேனு தந்திரம் குறிப்பிடுகின்றது. யோகினி தந்திரம் உலகமாதா காளியே எனக்கூறுகின்றது. சக்தி வழிபாட்டுக்குரிய தந்திரங்கள் வேதத்தை அனுசரித்தவைகளாக விளங்குகின்றன. வைதீக இந்துமரபுப்படி தந்திரங்கள் அல்லது ஆகமங்கள் என்பவை வேதத்தை அடிப்படையாகக் கொண்டவையாதலால் கோட்பாட்டளவில் அவை இரண்டிற்கும் அதிகளவில் வேறுபாடில்லை என்பர். சாக்தம் சிலருக்குத் தான் உரிமையுள்ளதென்று இந்தியாவில் கருதப்படவில்லை. சைவர், வைணவர், பௌத்தர், சமணர், சீக்கியர் முதலிய எல்லா மதத்தினருக்கும் சக்தி வழிபாட்டில் இடமுண்டு. தாந்திரீக வழிபாட்டு முறைக்கு எல்லோரும் தகுதியுடையோர் என்பதே சாக்த தந்திங்களின் அடிப்படையான கருத்தாகும். இவை (சாக்த தந்திரங்கள்) உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற சாதிபாகுபாட்டிற்கு இடமளிக்காமல் இருப்பதுடன் ஒரு சண்டாளன்கூட தாந்திரீக நெறி நின்று வழிபாடாற்ற முடியும் என்பதை தெளிவாகச் சுட்டி நிற்பதோடு ஆண், பெண் என்ற வேற்றுமைகள் எதுவுமின்றி பெண்கள் கூட இம்மார்க்கத்தைத் தழுவி ஒழுகி பெறுதற்கரிய பெரும்பேற்றைப் பெறலாம் என்று குறிப்பிடுகின்றன. இலங்கையில் சக்தி வழிபாட்டை எல்லோருக்கும் உரித்தாக்கிய பெருமை சாக்த தந்திரங்களையே சாரும் எனலாம். தமிழ்நாட்டில் பல்லவர் காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்கள் சாதிப் பாகுபாட்டைத் தகர்த்து ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்பதை உணர்த்தி அன்பினால் ஆண்டவனை அடைய முடியும் எனக் கூறியதுபோல சாக்த தந்திரங்களும் எதுவித வேற்றுமைகளையும் பாராட்டாமல் கிரியைகளைப் பக்தியுடன் நிகழ்த்துவதால் மோட்சம் பெறலாமெனக் கூறி நிற்பது ஒப்புநோக்கற்பாலதாகும்.

## ஆகமங்களில் சக்தி வழிபாடு

சக்தி வழிபாடு பற்றிய பல குறிப்புக்கள் ஆகம நூல்களில் இடம்பெற்றுள்ளன. உத்தரகாரணகாகமம், சக்திலஷணவிதி, சக்தி உற்சவிதி, தேவீபிரதிஸ்டை என்பவற்றையும், மாற்றும் பத்திகாளி, மஹாமாரி, அர்த்தநாரீ ஆகியோரின் பிரதிஷ்டா விதிமுறைகள் போன்றவற்றையும் குறிப்பிடுகின்றது. சக்தி உற்சவமானது ஒன்பது, ஏழு, ஐந்து, மூன்று, ஒன்று என்ற நாட்களில் செய்யப்பட வேண்டியதெனக் கூறப்பட்டுள்ளது.

ஆலயங்களில் வழிபாட்டுக்குரியவையாக விளங்கும் யோக சக்தி, போகசக்தி, வீரசக்தி என்ற முச் சக்திகளைப்பற்றி காரணாகமம் குறிப்பிடுகின்றது. கருவறைக்குள் இலிங்கத்துடன் சேர்ந்து ஞான

ஸ்வரூபமாய் வடிவமில்லாமல் விளங்கும் சக்தி யோக சக்தி எனப்படும். அர்த்த மண்டபத்தில் வீற்றிருக்கும் சக்தியே யோக சக்தி என்று சுப்பிரபேதாகமம் குறிப்பிடுகின்றது. ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, பராசக்தி என்ற பஞ்ச சக்திகள் பற்றியும் உத்தரகாரணாகமத்தில் கூறப்பட்டுள்ளது. பூர்வகாரணாகமத்தில் அர்த்தநாரீஸ்தாபனவிதி, கௌரீஸ்தாபனவிதி, கௌரீயர்ச்சனவிதி, கௌரீஸ்நபனவிதி, தேவீநித்யார்ச்சனைவிதி, உமாபூஜாவிதி, தேவீநித்யோத்சவவிதி, தேவீமகோற்சவவிதி, துர்க்காஸ்தாபனவிதி, லஷ்மிஸ்தாபனவிதி என்பன விபரிக்கப்பட்டுள்ளன. மேலும் நவராத்திரி விரத விதிமுறைகளையும் இவ்வாகமம் விபரிக்கின்றது. காரணாகமத்தில் ருத்திரா, சண்டா, சசீ, சைவா, சண்டீ, க்ரூரா, அநுசண்டிகா, நவமீ, உக்கிரசண்டா என்ற நவதுர்க்கைகள் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு சக்தி வழிபாட்டுக்குரிய பல விபரங்களை சிவாகமங்களில் கண்டுகொள்ள முடிகின்றதெனலாம். சக்தி வழிபாட்டினை வளம்படுத்திய நூல்களுள் சிவாகமங்கள் சிறப்பிடம் பெறுகின்றதெனக் கூறுவது சாலப்பொருந்தும்.

## சிற்ப நூல்களில் சக்தி வழிபாடு

சிற்ப நூல்களில் சக்தியின் பல்வேறு வடிவங்களின் விபரங்களும், சாக்த கிரியைகளின்போது பிரயோகிக்கப்படும் சக்தியின் பல்வேறு தியான சுலோகங்களும் இடம்பெற்றுள்ளன. மானஸாரம் என்ற சிற்ப நூலின் ஐம்பத்திநான்காவது அத்தியாயத்திலே சக்தியின் லஷ்ணம் கூறப்பட்டுள்ளது. அதில் சரஸ்வதி, சாவித்திரி, லஷ்மி, பூமிதேவி, மனோன்மணி, துர்க்கை, சப்த மாதர்கள் ஆகிய சக்திகளின் திருவுருவ அமைப்பு, நிறம் முதலியன கூறப்பட்டுள்ளன. இச்சக்தி இலக்கணங்கள் இந்து விக்கிரவியற் கலையை வளம்படுத்தியுள்ள அதே நேரத்தில் சக்தியை உள்ளத்தில் நிறுத்தி வழிபடுவதற்குப் பெரிதும் உதவுகின்றன.

ஸ்ரீ தத்துவநிதி என்ற சிற்பநூல் சைலபுத்திரீ துர்க்கா, பிரம்ஹசாரின் துர்க்கா, சண்டகண்டதுர்க்கா, ஸ்கந்த துர்க்கா, கூஸ்மாண்ட துர்க்கா, காத்யாயனீ துர்க்கா, காலராத்திரி துர்க்கா, மகாளெரீ துர்க்கா, ஸித்திதாயினி துர்க்கா ஆகிய நவதுர்க்கைகளின் தியான சுலோகங்களைக் குறிப்பிடுகின்றது. ஒருவர் தத்தம் விருப்பங்களுக்கேறகேற்ற சக்தியின் வடிவத்தை வழிபாடு செய்வதற்கேற்ற விதத்தில் அந்நூலில் இருநூற்றிப்பத்தொன்பது சாக்த தேவதைகளின் தியான சுலோகங்கள் இடம் பெற்றுள்ளன. அத்தியான சுலோகங்கள் சக்தியின் பல்வேறு திருவுருவங்களை அமைப்பதற்குப் பெரிதும் துணை புரிவதுடன் சக்தியின் உருவத்தை உள்ளத்தில் நிலைநிறுத்தி வழிபடுவதற்கும் அருந்துணை புரிகின்றன.

சிற்பநூல் சித்திரிக்கும் பிரதானமான சக்தியின் திருவுருவ அமைப்பு விபரங்கள் அட்டவணை 1இல் இடம் பெற்றுள்ளன. அதன் பிரகாரம் அம்பிகையின் ஓர் அம்சமான காளிமாதாவில் பல பேதங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடற்பாலதாகும். இலங்கையில் நான்கு கைகளையுடைய காளியின் சிற்பங்களே பெரும்பாலான காளி ஆலயங்களில் காணப்படுகின்றன.

அட்டவணை

சிற்பநூல்கள் சித்தரிக்கும் சக்தியின் திருவுருவ அமைப்பு விபரங்கள்

(அ) காளிமாதாக்கள்

| பெயர் | கைகளின் எண்ணிக்கை | கைகளில் தாங்கியுள்ளவை | |
|---|---|---|---|
| | | வலதுகை | இடதுகை |
| காளி | இரண்டு | கபாலகம் | சூலம் |
| காளி | இரண்டு | கலப்பை | உலக்கை |
| காளி | இரண்டு | திரிசூலம் | திரிசூலம் |
| காளி | நான்கு | சூலம் டமருகம் | கபாலம், பாசம் |
| காளி | நான்கு | சூலம் டமருகம் | நாகம், கபாலம் |
| காளி | நான்கு | அபயம் சூலம் | பாசம், கபாலம் |
| காளி | ஆறு | டமருகம் ஈட்டி கேடயம் | சூலம்,கபாலம்,பாசம் |
| காளிகா | எட்டு | சூலம்,டமருகம்,வாள்,கரவலம் | கபாலம்,கேடயம்,மணி,விஸ்மயா |
| காளிகா | எட்டு | சூலம்,வஜ்ரம்,வாள்,நாராசம் | வில்,கடம்,பாசம்,கபாலம் |
| பத்ரகாளி | நான்கு | சூலம், வாள் | கபாலம்,கேடயம் |
| பத்ரகாளி | எட்டு | சூலம்,வேதாளம்,வாள்,டமருகம் | கபாலம்,அக்கினி,எலும்பு,கேடயம் |
| பத்ரகாளி | எட்டு | சூலம்,வேதாளம்,வாள்,அபயம் | வரதம்,கபாலம்,முனி,கேடயம் |
| பத்ரகாளி | பத்து | சூலம்,வஜ்ரம்,வாள்,கடம்,கோடரி | கத்தி,தாமரைமலர்,பாசம்,எலும்பு,கபாலம் |
| பத்ரகாளி | பதினான்கு | சூலம்,குந்தம்,சக்கரம்,முசலம், குமரம்மணி,பாசம் | சக்தி,சங்கு,கொடி,கலப்பை, நெருப்பு,வஜ்ரம்,கேடயம் |
| பத்ரகாளி | பதினெட்டு | அஷ்மாலை,திரிசூலம்,வாள்,கேடயம், அம்பு,சங்கு,சக்கரம்,ஸ்ருக் | ஸ்ருவம்,தண்டம்,சக்தி,மான்தோல்,அக்கினி, அபயம்,வரதம்,ரத்னபாத்திரம் |
| மகாகாளி | எட்டு | சங்கு, சக்கரம், சுதை,அங்குசம். | உலக்கை,கும்பம்,பாசம்,வஜ்ரம் |
| மகாகாளி | பத்து | வாள்,சக்கரம்,சுதை,வில்லு,அம்பு | கேடயம்,சூலம்,புகண்டி,தலை,சங்கு |
| மகாகாளி | இரண்டு | சூலம்,வஜ்ரம்,சக்கரம்,சுதை,அம்பு,கோடரி | அலபல்லவம்,சக்தி,நெருப்பு,பாசம், தாமரை,கபாலம் |

ஆதாரங்கள்: 1) Nageswary, R, Tantric Cult of South India, (Delhi: 1982), pp 132 - 141

2) நஜன். (எஸ்.நடராஜன்). ஸ்ரீ காளிமாதா ஹ்ருதயம், (சென்னை:1981) பக்.20 - 45

(ஆ) அஷ்டகாளி மாதாக்கள்

| பெயர் | கைகளின் எண்ணிக்கை | கைகளில் தாங்கியுள்ளவை | |
|---|---|---|---|
| | | வலதுகை | இடதுகை |
| பத்ரகாளி | பத்து | கண்டகோடாரி,சுதை,வஜ்ரம்,கத்தி,சூலம் | பாசம்,தாமரைப்பூ,கத்தி,கேடயம், கபாலம் |
| மகாகாளி | இரண்டு | சக்கரம்,வஜ்ரம்,கோடாலி,சுதை, பாணம்,சூலம் | தாமரைப்பூ,கத்தி,பாசம்,மணி, வில்லு,கபாலம் |
| சற்சண்டிகை | இரண்டு | வஜ்ரம்,ஈட்டி,சக்கரம்,உடுக்கை, பாணம்,கண்டகோலி | கத்தி,வாங்கு,மணி,நாகபாஷம் வில்லு, பாசம் |
| சாமுண்டி | எட்டு | சூலம் கத்தி,அங்குசம்,வஜ்ரம் | கபாலம்,கேடயம்,பாசம்,மணி |
| பையிரவி | பதினெட்டு | சக்கரம்,அங்குசம்,வளரி,கத்தி,சுத்தி, வஜ்ரம்,உலக்கை,சுதை,சூலம் | வேதாளம்,பாசம்,கண்டகோடாலி, மணி,கத்தி,கபாலம்,கேடயம்,வில்லு |
| சர்வமயமண்டி | எட்டு | சூலம்,சக்கரம்,வஜ்ரம்,பாணம் | கபாலம்,சங்கு,சக்தி,வில்லு |
| காலாந்திரி | எட்டு | தெண்டு,கட்வாங்,சக்தி,சூலம் | வளரி,பாசம்,கேடயம்,கபாலம் |
| காளி | எட்டு | சூலம்,டமருகம்,கத்தி,சக்கரம் | கபாலம்,பாசம்,கேடயம்,மணி |

ஆதாரம்:- கணேசமூர்த்தி. TP ஆலயவிக்கிரக நிர்மாண ஆயாதி சிற்ப இரகசியம் (சென்னை: 1959) பக்:206-207 சிரக

(இ) சப்த மாதாக்கள்

| பெயர் | கைகளின் எண்ணிக்கை | கைகளில் தாங்கியுள்ளவை | | வாகனம் | நிறம் |
|---|---|---|---|---|---|
| | | வலதுகை | இடதுகை | | |
| பிராமணி பிராம்மாணீ | நான்கு | அஷ்மாலை,அபயம் | கெண்டி,வரதம் | ஹம்சம் | சாம்பல் |
| மகேஸ்வரி (மா்ஹேசுவரி) | நான்கு | மான்,அபயம் | வரதம்,டமருதம் | ரிஷபம் | மேகம் |
| கௌமாரி | நான்கு | வஜ்ரம்,அபயம் | வேல்,வரதம் | மயில் | நீலம் |
| வைஷ்ணவி | நான்கு | சக்கரம்,அபயம் | சங்கு,வரதம் | கருடன் | பச்சை |
| வராகி (வாராஹீ) | நான்கு | உலக்கை,அபயம் | கலப்பை,வரதம் | சிம்மம் | குங்குமம் |
| மகேந்திரி | நான்கு | வஜ்ரம்,அபயம் | வேல், வரதம் | யானை | நீலம் |
| சாமுண்டி | நான்கு | வஜ்ரம்,அபயம் | தந்தம் வரதம் | பூதம் | மேகம் |

ஆதாரம்:- கணேசமூர்த்தி T.P, ஆலயவிக்கிரக நிர்மாண ஆயாதி சிற்ப இரகசியம் (சென்னை :1959), பக்:208 - 209

(ஈ) பிற பிரதான சக்தி வடிவங்கள்

| பெயர் | கைகளின் எண்ணிக்கை | கைகளில் தாங்கியுள்ளவை | |
|---|---|---|---|
| | | வலதுகை | இடதுகை |
| ஐந்தரீ | ஆறு | வரதம், கயிறு,வஜ்ரபுரம் | தாமரைமலர், பாத்திரம்,அபயம் |
| சண்டிகா | ஆறு | வரதம்,சூலம்,கத்தரிக்கோல் | பாசம்,பாத்திரம்,அபயம் |
| சிவதூதீ | எட்டு | தாமரைமலர்,கோடரி,பட்டாக்கத்தி, அங்குசம் | ரத்தபாத்திரம், சுதை, கேடயம், பாசம் |
| பாலா | நான்கு | அபயம், ஜபமாலை | வரதம்,புஸ்தகம் |
| புவனேஸ்வரி | நான்கு | அபயம் அங்குசம் | வரதம், பாசம் |
| பூதேவி | இரண்டு | அபயம் | மாதுளம்பழம் |
| மனோன்மணி | நான்கு | அபயம், அஷ்மாலை | ரதம்,நீலோற்பலம் |
| லஷ்மி | நான்கு | அபயம் தாமரைமலர் | வரதம், தாமரை மலர் |
| வாராஹீ | ஆறு | வரதம்,தண்டம்,கத்தி | கேடயம்,பாத்திரம்,அபயம் |
| வைஷ்ணவீ | ஆறு | வரதம்,கதை,தாமரைமலர் | சங்கம்,சக்கரம்,அபயம் |
| ஸர்வமங்களா | நான்கு | மாதுளம்பழம், அபயம் | தநம், வரதம் |

ஆதாரம்: ஸ்ரீ தத்துவநிதி (முதலாம் பாகம்) ஸுப்ரஹ்மண்யசாஸ்திரி ஷேசம் (மொழிபெயர்ப்பு) (தஞ்சை:1963) பக் -172

## சக்தி பீடங்கள்

சக்தியை வழிபடுவதற்குச் சக்தி பீடங்கள் முக்கிய வழிபாட்டு நிலையங்களாக விளங்குகின்றன. இவை சாக்த சமயத்தின் புண்ணிய திருத்தலங்களாகக் கருதப்படுவதால் அவ்விடங்களுக்கு யாத்திரை செய்து வழிபடுவதனை சமய முக்கியத்துவங்களுள் ஒன்றாகக் கருதுகின்றனர்.

சக்தியின் ஆதிக்கம் உள்ள ஆலயம் சக்தி பீடம் எனக் குறிப்பிடப்படுகின்றது. சக்தி தனது முழுமுதற் கருணையையும் பலத்தையும் வீரத்தையும் செலுத்தி நிற்கும் தலங்களைச் சக்திபீடங்கள் எனத் தேவிபராக்கிரமம் குறிப்பிடுகின்றது. பீடம் என்ற சொல் ஆசனம், இருக்கை, கால் வைத்துக்கொள்ளும் சிறு ஆசனம், மதபீடஸ்தானம் போன்ற பல பொருள்களைத் தருகின்றது. அமரகோசம் என்ற நிகண்டில் பீடம் என்ற சொல்லுக்கு தேவதைகளின் இருக்கையாகிய ஆசனம் என்ற பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றை நோக்குகின்ற போது சக்தியினுடைய இருக்கையாகிய ஆசனங்களை சக்தி பீடங்கள் எனக் குறிப்பிட முடியும் எனவும் அவ்விடங்களில் சக்தியின் சாந்நித்தியம் மிகுந்து விளங்கும் எனவும் அறிய முடிகின்றது. பீடம் பற்றிய கருத்தானது சாக்த சமயத்தில் மட்டுமன்றி பௌத்த மதத்திலும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கதொன்று எனலாம்.

சக்தி பீடங்களின் தோற்றம் பற்றி தேவீபாகவதத்தில் வரும் குறிப்பு நோக்கற்பாலதாகும். சதிதேவி தன்தந்தையாகிய தக்சனால் அவமதிக்கப்பட்டு யோகாக்கினியில் பிரவேசித்து மாண்ட போது சித்கலைவடிவினளான அவளது திருமேனியை சிவன் தனது தோளில் வைத்துக் கொண்டு தேசமெல்லாம் திரிந்ததாகவும், அதைத்தடுத்து நிறுத்த மகாவிஷ்ணு தன் ஆயுதத்தினால் சக்தியின் உடலை சேதித்ததாகவும் அவ்வாறு சேதிக்கப்பட்ட அவ்வுடற் கூறுகள் தேசத்தின் பல்வேறு இடங்களில்

விழுந்து அவை சக்தி பீடங்கள் எனப் பெயர் பெறலாயின என்பதும் அவ்விடங்களில் சிவனும் பல மூர்த்தி வடிவங்களில் நிலைபெறலாயினர் என்பதும் அந்நூல் தரும் விளக்கமாகும்.

சக்தி பீடங்கள் பற்றி காளிகாபுராணம், மத்ஸ்யபுராணம் தேவிபாகவதம் போன்ற புராணங்களும் குலார்ணவம் குலசூடாமணி போன்ற சாக்த தந்திரங்களும் குறிப்பிடுகின்றன. காளிகாபுராணத்தில் ஏழு சக்தி பீடங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதே ஏழு பெயர்களை குலசூடாமணி தந்திரமும் குறிப்பிடுகின்றது. ருத்திரயாமள தந்திரம் பத்து சக்தி பீடங்களையும் குலார்ணவம் பதினெட்டு சக்தி பீடங்களையும் குறிப்பிடுகின்றது. தேவிபராக்கிரமத்தில் அறுபத்துநான்கு சக்தி பீடங்களின் பெயர்களும் காணப்படுகின்றன. மத்ஸ்யபுராணம், தேவிபாகவதம் ஆகியனவற்றில் நூற்றெட்டு சக்தி பீடங்களின் பெயர் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

> "இந்தப் பீடநாமங்களையும்,இந்தத் தேவி
> நாமங்களையும் எவன் கேட்பானோ எவன்
> நினைப்பானோ அவன் சர்வ பாபத்தனின்று நீங்கி
> மறுமையில் தேவியினது உலகத்தையடைவான்"

என்பது தேவீபாகவதக் குறிப்பாகும். இது சக்திபீட வழிபாட்டின் முக்கியத்துவத்தினைப் புலப்படுத்தி நிற்கின்றது.

## அடிக்குறிப்புகள்

1.) Mahadevan, T.M.P., Out lines of Hinduism, (Bomby: 1956). pp. 204 - 211
2.) கலைக்களஞ்சியம், தொகுதி நான்கு, (சென்னை: 1956) ப.539.
3.) கிருஷ்ணஐயர், டி.எஸ்.,(தொகுப்பு) ஸ்ரீதேவிபாகவதம், (திருவனந்தபுரம்:1953), ப.1014
4.) மேலது ப.675
5.) Srivastava, N.C.P., Mother Goddess in Indian Art Archaeology & Literature, (Delhi: 1979), pp.51 -62
6.) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சைவவினாவிடை,(முதற் புத்தகம், (யாழ்ப்பாணம்: 1969), பக்.2
7.) Tamil Lexicon, Vol.IV, University of Madras, (Madras:1982),p.1249
8.) கலைக்களஞ்சியம், தொகுதி நான்கு, (சென்னை:1956)ப.539.
9.) கைலாசநாதக்குருக்கள்,கா.,சைவத் திருக்கோயில் கிரியை நெறி, (கொழும்பு:1963) ப.263
10.) Tamil Lexicon, Vol.IV, University of Madras, (Madras:1982), p.3545
11.) கலைக்களஞ்சியம், தொகுதி நான்கு, (சென்னை:1956) ப.453.
12.) தே.மா.,அத்.5.32
13.) தே.மா.,அத்.5.17
14.) தே.மா.,அத்.5.29
15.) தே.மா.,அத்.5.71
16.) பாரதி அறுபத்தாறு, 15
17.) Woodroffe, Sir, J., Sakti and Sakta, (Madras:1987), p.87
18.) கைலாசபதி.க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். (சென்னை:1978) பக். 75-89
19.) மேலது, ப.89
20.) கலைக்களஞ்சியம், தொகுதி நான்கு, (சென்னை:1956) ப.452
21.) Encyclopadeia of Religion and Ethics, Vol. II, (New York:1909),p.115
22.) Bhattaharya, N.K., History of the Sakta Religion, (Delhi:1974), p.2.
23.) வானமாமலை,நா., தமிழர் பண்பாடும் தத்துவமும், (சென்னை:1973), ப.13
24.) Janes, E.O., The Cult of the Mother Goddess, (London:1959), p.229
25.) கைலாசபதி,க.,மு.கு., (சென்னை:1978) ப.13
26.) வானமாமலை, க.,மு.கு. (1973) ப.13.
27.) இராசமாணிக்கம்பிள்ளை,மா.,மொகஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரீகம் (சென்னை:1972) ப.169


28.) சிவசாமி.வி.திராவிடர் ஆதி வரலாறும் பண்பாடும், (வட்டுக் கோட்டை:1973) பக்.10
29.) வானமாமலை.க.,மு.கு.(1973) ப.81
30.) மேலது, ப.82
31.) மேலது, ப.81
32.) செந்தில்துறவி, சாக்தம், (சென்னை:1924) பக்.9 - 10
33.) மேலது, ப.9
34.) தை.உ..,சிஷாவல்லி, இறதிப்பந்தி
35.) தே.மா., அத்.5.71
36.) மனுதர்மசாஸ்திரம் அத்.11,145
37.) ம.பா. XII. 266-331
38.) Woodroffe,Sir,J.,Introduction to Tantra Shastra, (Madras:1952) pp.75-76
39.) Ibid, p.76
40.) தை.உ..சிஷாவல்லி, இறுதிப்பந்தி
41.) மேலது, சிஷாவல்லி இறுதிபந்தி
42.) வ.ஸ., 603
43.) சீனிவாசன்.இரா.சக்தி வழிபாடு, (நாகர்கோயில்:1975) ப.26
44.) Marshall, J.Mohenjo-dato and Indus Civilization, Vol,I (London:1951) p.50
45.) கந்தையாபிள்ளை.ந.சி., சைவசமய வரலாறு (சென்னை:1958) பக.14-15ஸ
46.) மேலது.ப.8
47.) சிவசாமி.வி.,மு.கு.(1973) ப.9
48.) மேலது ப.10
49.) Majundar, R.C., (ed), The Vedic age (Bombay:1965) p.165
50.) சிவசாமி.வி.,மு.கு.(1973) ப.9
51.) மேலது,ப.9.
52.) வானமாமலை,க., மு,கு. (1973) ப.81.
53.) மேலது. ப.82
54.) Banerji, S.C., Tantra in Bangal, (Calcutta:1977) pp.123-210
55.) சிவசாமி. வி. சக்தி வழிபாடு சில குறிப்புகள் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயிற் திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர் (யாழ்ப்பாணம்:1983) பக்க இலக்கம் இல்லை
56.) Rajeswary, D.R., Sakti Iconography, (New Delhi:1989), pp.23
57.) Marshall,J., Mohenjo-dato and Indus Civilization, Vol.I, (London:1951) p.47
58.) தங்கவேலு.கோ.இந்தியக் கலைவரலாறு (முதற் புத்தகம்) (சென்னை:1976) ப.22
59.) இராமாணிக்கம்பிள்ளை, மா.,மு.கு., (1972), பக் 229-230.
60.) மேலது.ப.229.
61.) மேலது.ப.230.
62.) தங்கவேலு.கோ.இந்தியக் கலைவரலாறு (இரண்டாம் புத்தகம்) (சென்னை:1976) ப.236
63.) Fairservis, W., The Roots of Ancient India, (London:1971), p.292.
64.) Banerjaea,J.N., The Development of Hindu Oconography, (Delhi: 1974) g.125
65.) தங்கவேலு.கோ.இந்தியக் கலைவரலாறு (முதற் புத்தகம்) (சென்னை:1976) ப.125
66.) தங்கவேலு. இந்தியக் கலைவரலாறு (இரண்டாம் புத்தகம்) (சென்னை:1976) ப.413
67.) மேலது, ப.410
68.) மேலது, ப.412
69.) மேலது. ப.411
70.) தங்கவேலு, கோ.,இந்தியக் கலைவரலாறு (முதற் புத்தகம்) (சென்னை:1976)
71.) கந்தையாபிள்ளை, ந.சி.,மு.கு. (சென்னை:1958) பக்.14 - 15
72.) தங்கவேலு.கோ., இந்தியக் கலைவரலாறு (முதற் புத்தகம்) சென்னை:1976 பக்.317-318
73.) சீனிவாசன்,இரா.,மு.கு. (1975) ப.28

74.) Maedonell, A.A., Vedic Mythology, (Varanasi:1950) p.124
75.) Srivastava, M.C.P., Op.cit., (1979), p.33
76.) இ.வே.I.12.3
77.) இ.வே.I.113.7
78.) இ.வே.VII.75.2
79.) இ.வே.VII.75.4
80.) இ.வே.VII.79-3
81.) இ.வே.VII.81-6
82.) இ.வே.VII.81-1
83.) இ.வே.I.12.1
84.) Srivastava, M.C.P., Op.cit., (1979), pp.34-36
85.) Ibid, p.36
86.) Ibid, p.52
87.) இ.வே.X,88- 6
88.) இ.வேX, 30.1 (அ.வேXII. 1-2)
89.) அ.வே. XII. 1.6,26
90.) அ.வே.V. 20-6
91.) அ.வே.XIV , 1-48
92.) அ.வே. XIII, 3.25-28
93.) அ.வே. XII, 1.59
94.) இ.வே. I. 164 - 41
95.) இ.வே.X, 127
96.) அ.வே. XIX, 48-2
97.) Srivastava, M.C.P. Op.cit., (1979), pp.56-57
98.) Ibid, pp.58-59
99.) Vijayalakshmi,C., The Development of mother Goddess Worship, (santiniketan: 1987) p.22.
100.) இ.வே.X.125
101.) இ.வே.X.127
102.) இ.வே. (கீலம்), 2.6
103.) இராத்திரி கீலம் 4.2
104.) இ.வே.III. 62.10
105.) சுக்கிலயசுர் வேதம் III 57
106.) தைத்திரிய பிராமணம் II, 4.10
107.) தைத்திரிய ஆரண்யகம், X - 18
108.) திருமந்திரம் 1176
109.) தைத்திரிய ஆரண்யகம், X-26,30
110.) Srivastava, M.C.P., Op.cit., (1979), pp.54-56
111.) அதர்வவேதம், 2.12.2
112.) கே.உ.ப.III. 25
113.) முண்டக உபநிடதம் 1.2.4
114.) இராமா.,35.15
115.) மகாபாரதம்., IV - 6
116.) மகாபாரதம்., IV - 23
117.) Nilakandasastri, K.A., Saivism in Ancient Ceylon (Colombo: 1929), p.326.
118.) வித்தியானந்தன்,சு.,தமிழர் சால்பு, (கண்டி:1954) ப.125
119.) திருமுருகாற்றுப்படை, வரி 258: நெடுநல்வாடை., அடி 168
120.) அகநானூறு, 309:4

121.) புறநானூறு, 245:3
122.) நெடுநல்வாடை, வரி.168
123.) மதுரைக்காஞ்சி, வரி.350.
124.) திருமுருகாற்றுப்படை, வரி 258, கொற்றவை சிறுவ
125.) வித்தியானந்தன்,சு.மு.கு., ப.125.
126.) தொல்காப்பியம், பொருள் அதிகாரம் 59
127.) அகநானூறு, 309. 1-6
128.) புறநானூறு 247:4
129.) அகநானூறு 345:3-7
130.) Taninayagam Xavier, s., Nature in Ancient Tamil Poetry, (Tutieerin: 1953) pp.75-76
131.) திருமுருகாற்றுப்படை வரி 257
132.) திருமுருகாற்றுப்படை வரி 258.
133.) இராசமாணிக்கனார்.மா., கல்வெட்டுக்களில் அரசியல் சமயம் சமுதாயம், (சென்னை:1977) ப.27
134.) வித்தியானந்தன் சு., மு.கு., ப125
135.) சுப்பிரமணியன் கா., சங்ககாலச் சமுதாயம் (சென்னை:1982) ப.41
136.) மேலது
137.) புறநானூறு, 151
138.) குறிஞ்சிக்கலி, 16
139.) ஐங்குறுநூறு, 249
140.) அகநானூறு, 167
141.) அகநானூறு, 159
142.) பதிற்றுப்பத்து, 79
143.) நற்றிணை, 14
144.) கைலாசநாதக்குருக்கள், கா., சை.தி.கோ.கி.நெ., (1963) ப.263
145.) புறநானூறு. கடவுள் வாழ்த்து 1:7-8
"பெண்ணுரு ஒரு திறனாகிறவ்வுருத்
தன்னுளடக்கிக் கரக்கினுங் கரக்கும்"
146.) கலித்தொகை, 38, 1-2
"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடையந்தணன்
உமையரந்துயர்மலை இருந்தனனாக"
147.) பரிபாடல், 5, 27-28
"..........பைங்கன் பார்ப்பான்
உமையொடு புணர்ந்த காமவதுவையுள்"
148.) திருமுருகாற்றுப்படை, 151-153
"............வெவ்வேறு
வலவய்இறுயரிய பலர் புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்குமிமையாமுக்கண்"
149.) வித்தியானந்தன், சு., மு.கு., ப.126.
150.) திருமுருகாற்றுப்படை, வரி 150
151.) திருமுருகாற்றுப்படை, வரி 258
152.) திருமுருகாற்றுப்படை வரி259.
153.) சிலப்பதிகாரம், 12, 59-67
154.) கைலாசநாதக்குருக்கள், கா.,சை.தி,கோ.கி.நெ., (1963) பக்.38-46
155.) சிலப்பதிகாரம் வேட்டுவ வரி, வரி.57
156.) மேலது, வரி.61
157.) மேலது, வரி.100
158.) மேலது, வரி.100.
159.) தே.பா., V.26.29.

160.) சிலப்பதிகாரம் வேட்டுவ வரி, வரிகள்.67-73
161.) வ.ஸ., 280
162.) வ.ஸ., 635
163.) சிலப்பதிகாரம் காடுகாண் காதை, வரி 216
164.) மணிமேகலை, 6:48:53
165.) ச.தே., 1:10:1
166.) கோளறுபதிகம், 7
167.) ச.தே., 1:70:5
168.) அ.தே., 4:8:10
169.) திருவாசகம், திருக்கோத்தும்பி, 10:18
170.) திருவாசகம், திருப்பொற்சுண்ணம், 1
171.) Nageswamy, R., TCSI, (Delhi:1982), pp.204-207
172.) விசாகப்பெருமாள்,செ.,சக்தி வழிபாடு, (யாழ்ப்பாணம்:1973) ப.14
173.) திருக்கோயில், (சென்னை:ஆகஸ்ட்,1979), பக்.36-40
174.) இராசமாணிக்கனார், மா., சைவசமய வளர்ச்சி, (சென்னை:1958), ப.182
175.) மேலது, ப.183
176.) மேலது, ப.182-183
177.) தங்கவேலு,கோ., இந்தியக்கலை வரலாறு (முதற்புத்தகம்), (1976) ப.431
178.) மேலது. பக்.479-502
179.) இராசமாணிக்கம், தி., இந்து சமயக் கடவுள்களின் திருவுருவங்கள்.(சென்னை:1996) பக்.80-84
180.) மேலது, ப.82.
181.) தங்கவேலு,கோ., இந்தியக்கலை வரலாறு (முதற்புத்தகம்) (1976), ப.242
182.) மேலது.பக்.242-243
183.) மேலது. ப.250
184.) Arthur Avalon, (trans) Mahanirvana Tantra, (Madras:1953) p.10
185.) Mahadevan,T.M.P., Op.cit., (1956) p.204
186.) மகாதேவன்,ரீ.எம்.பி., இந்துசமயத் தத்துவம், (தமிழ்நாடு:1964), ப.164.
187.) Banerjaea,J.N.,Pauranic and Tantric Religion, (Calcutta:1966)P.127
188.) Ibid, p.127
189.) ஸௌ.ல.,31
190.) Bose.D.N.,(ed)Tantras, Calcutta oriental publishing co., (calcutta:1956)
191.) Woodroffe,Sir John, Sakti and Sakta, (Madras:1987) p.97
192.) கந்தையாபிள்ளை,ந.சி.,மு.கு., (1958), ப.92
193.) கலைக்களஞ்சியம், தொகுதி நான்கு (1956) ப.540
194.) Woodroffe, Sir John, Principles of Tantra, Part I (Madras:1986) p.239
195.) நடராஜன், எஸ்., (நஜன்) ஸ்ரீ காளி மாதா ஹ்ருதயம், (சென்னை:1981) ப.27
196.) Woodroffe, Sir John, Principles of Tantra Part I, (Madras:1986) pp.262-263
197.) நடராஜன்,எஸ்., (நஜன்) ஸ்ரீ காளி மாதா ஹ்ருதயம் (சென்னை:1981) ப.306.
198.) மேலது. ப.37
199.) கலைக்களஞ்சியம் (தொகுதி ஒன்று) (சென்னை:1956) ப.306
200.) Woodroffe, Sir John, Op.cit., (1952) p.75
201.) சுவாமிநாதசிவாச்சாரியார், உ.ஸ்., ஆகமங்களில் நவராத்திரி மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் நவராத்திரி மலர், (1967) ப.2
202.) மேலது.ப.3
203.) ஸ்ரீ தத்துவநிதி I1.51-59
204.) இரத்தினவேலு முதலியார், தேவீ பராக்கிரமம், (சென்னை:1980) பக்.274-277
205.) அமரகோசம், 3.3.185
206.) Bose, D.N.,(ed)Tantras, Calcutta oriental publishing co., (calcutta 1956)pp.25-37

207.) தே.பா. VII 30.37-90
208.) Vijayalakshmi, C., Op.cit (1987) pp.142-143
209.) Vijayalakshmi, C., Op.cit (1987) p.143
210.) Sirear, D.C. The Sakta Pithas, (Delhi:1973) pp.17-18
211.) இரத்தினவேலு முதலியார், மு.கு. (1980) பக்.274-277
212.) கிருஷ்ணஐயர்,டி.உ_ஸ்.ஸ்ரீ தேவீபாகவதம், (தொகு) (திருவனந்தபுரம்:1953) ப.785





# வெற்றிவேற் புலவர் பாடியருளிய
# சிலம்பு கூறல் காவியம்

(வசனச் சுருக்கம்)

தொகுப்பு - அரியான் பொய்கை

## முன்னுரை

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பல அவற்றுள் ஐம்பெரும் காப்பியங்களாய் அன்னையாந் தமிழ் மாதின் அணிகலன்களாய்த் திகழ்வனவற்றுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம் செந்தமிழ் நாட்டிற் பிறந்த செல்வி கற்புக்கணலாங் கண்ணகையாரின் சரித்திரத்தை விரித்து உரைத்திருப்பதை இலக்கியங் கண்ட வித்தகர் யாவருமறிவர் அன்றியும்,

"புலவர்க்கு வெண்பா புலி" என்பார்கள். அத்தகைய வெண்பாவிற் புகழ் பெற்ற புகழேந்திப் புலவரும், யாவரும் எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய இனிய செந்தமிழ் நடையில் கதாரூபமாகக் கண்ணகியாரின் கதையைக் கூறியிருப்பதும் காணற்குரிய ஒன்றாகும். இத்தகைய புகழேந்தியாரும், சிலப்பதிகாரத்தைப் பாடிய இராசகுமாரனாம் இளந்துறவி இளங்கோவடிகளும் தமிழ் நாடாகிய தாய்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆனால்.

ஈழத்துப் பெரும் புலவர்களாய் இனிய செந்தமிழிலே யாவரும் மிக இலகுவாகக் கற்றுணரக் கூடிய கதை வடிவிலே வெண்பா , விருத்தப்பா – கலிப்பா, ஆசிரியப்பா ஆகிய பாடல்களினால் அந்தாதியாகப் பாடிய பாடல்கள் ஏட்டுச் சுவடிகளாய் போற்றுவாரற்றுப் புகழற்று மறைந்தழிந்து போகும் நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்பாடல்களைத் தேர்ந்தெடுப்பது அச்சுவாகனமேற்றி இவற்றுக்குப் புத்துயிர் கொடுத்துப் போற்றிப் பாதுகாத்தளிக்கும் தமிழ்த்தொண்டர்கள், தமிழைக் காப்பவர்கள், தமிழ்த்தியாகிகள் என்று தான் முன்வந்து இப்பணியைப் புரிவார்களோ அறியேன்.

இலங்கை தீவின் கீழ்மாகாணத்தைச் சேர்ந்த நைனாப்பணிக்கன் என்பவரும், வடமாகாணத்தைச் சேர்ந்த வெற்றிவேலன் என்பவரும், காங்கேயப்புலவரும் பாடியுதவிய சிலப்பதிகாரக் கதைகள்– கற்புக்கரசி கண்ணகி தேவியாரைக் கற்புடைத் தெய்வம் என்ற மட்டில் மாத்திரமன்றி அக்கண்ணகித் தேவி ஆதிபராசக்தியின் அவதார தோற்றமென்றும் அவன் அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டி சகல சீவராசிகளையும் துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனம் செய்து பரிபக்குவப்படுத்திப் பரமபதியாகிய இறைவன் திருவடிகளிற் சேர்த்து வீட்டின் மருளும் அருட்சக்தி யாவாளென்றும் விரித்துக் கூறுகின்றன. மேலும்,

வெற்றிவேற் புலவர் (வெற்றிவேலன்) பாடியபாடல் "சிலப்பதிகாரக் கதை" இதைச் சிலம்புகூறல் என்றுஞ் சொல்லுவதுண்டு. இப்பாடலை இலங்கையின் வடபகுதிகளிலுள்ள கண்ணகையம்மன் கோவில்களில் பொங்கல் காலமாகிய விசேட தினங்களில் விரதமாகவிருந்து விளக்கேற்றிய திங்கட்கிழமை தொடக்கம் பொங்கற் பூசைத்தினமாகிய திங்கட்கிழமையீறாகவுள்ள எட்டுத் தினங்களிலும் பக்திசிரத்தையோடு படிப்பவர்கள் படிக்கக் கேட்பவர்களும் சூழவிருந்து செவிப்புலன் வழிப்படுத்தி அதன் கண்ணுள்ள சொற்சுவை, பொருட்சுவை, வருணனைகள், காதல், வீரம், சோகம், சிருங்காரம், பக்திப்பரவசம் ஆகிய நவரசங்களையும் உணர்ந்து வசமழிந்து அற்புதமெய்தியவர்களாகவும், அதிசயமடைபவர்களாகவும், ஆனந்த பரவசமுற்று மனங்கசிந்துருகிக் கண்ணீர் வடிப்பவர்களாகவும் இருந்து கண்ணகி தேவியாரின் கருணைக் காளாகித் திகழ்வதை நாம் இன்றும் நேரிற் காணலாம்.


இத்தகைய பொற்புகு பாடலாங் கற்பரசியின் கதைகளில் சிலப்பதிகாரக் காப்பியத்திற் காணமுடியாத தெய்வீகத் தன்மைகள் விளங்கும் திவ்யவிச் செய்திகள் பல திகழ்வதைக் கண்ட மலர் வெளியீட்டுக் கழகத்தார் தமியேனை அதன் கண்ணுள்ள சில முக்கியமான பகுதிகளைச் சுருக்கி அவற்றினைத் தொகுத்தளிக்குமாறு கேட்டுக் கொண்ட அவர்கள் கட்டளைக் கமைந்து இதனை எழுத முன்வந்துள்ளேன்.

அறிவாற்றல் மிக்க அருந்தமிழ் வாணர்கள் அடியேனில் தொகுப்புரையில் குற்றங் குறைகளிருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது குணத்தை மேற்கோள்வரென்ற நம்பிக்கையினாலும் அம்பாளின் அருட்பெருஞ் சரித்திரத்தைச் சொல்வதால் அப்பேறு அடியேனை அப்பராசக்தியின் அருளிற்றிளைக்க வைக்குமென்ற குறிக்கோளினால் இதனை எழுதுகிறேன்.

"அம்பாளின் அருள் நோக்கு அருகிருந்துதவுவதாக"


**வணக்கம்**

※ ※ ※





# சிலம்பு கூறல் காவியம்



இக்கதையைக் கோவலனார் கதை என்றும் கூறுவதுண்டு. இச்சரித்திர வரலாற்றுக் காப்பியம் கடவுள் வணக்கம், பாயிரம் , பாண்டியன் அரசிருக்கை, கண்ணகை திருவவதாரம், கோவலரவதாரம், திருக்கரத்தமாதல், தூரியோட்டம், கடலோட்டம், வெடியரசன் போர், வீரநாரணன் போர், திருக்கல்யாணக்கதை, அரங்கேற்று காதை, கோவலரைப் பெண்ணுக்கு மறித்தகதை, சிலம்புகூறல், உயிர்மீட்சி, வழக்குரை, மதுரைத் தகனம், குளிர்ச்சி ஆகிய பெரும் பிரிவுகளைக் கொண்டது. அவற்றுள்,

*கடவுள் வணக்கம், வெண்பா*

*குணமான கண்ணகையைக் கோவலனார் தான்*
*மணஞ்செய் ... மணமாலை தன்னை வகுத்துரைக்கக்*
*கணபதிதன் ... பாதார விந்தம் பல நாளும்*
*மனமதிலுன்னிக்... காதாரக் கைதொழு வோங்காண்.*

என்று அடியெடுத்துத் தொடங்கித் தமது இட்டதெய்வங்களாகிய விநாயகர், சிவன், உமை, கண்ணகி, வைரவக் கடவுள், முருகக் கடவுள், மாரி, காத்தவராயன், நாச்சிமார் முதலிய தெய்வங்களை வேண்டுதல் செய்துதான் எடுத்து கொண்ட முயற்சி இனிது நிறைவேறும் பொருட்டு துதிக்கின்றார்.

*பாயிரம்*

வெற்றிவேற்புலவர் பாடியருளிய இக்காப்பியத்திற்கு பருத்தித்துறையைச் சேர்ந்த தும்பளை வாசகராகிய கதிர்காமர் அவர்களின் குமாரனாகிய சங்கரனென்பவர், பாயிரம் பாடி வழங்கியுள்ளாரென்பது பாடலிற் காணக்கிடக்கின்றது.

அன்னார் இந்நூலாசிரியர், வரலாற்றுச் சிறப்புக்களையும், நூல்வரலாற்றுச் சுருக்கத்தையும், அதன் சிறப்பையும் எடுத்துக் காட்டும் போதே இந்நூலின் பெருமையை யாவரும் உணரக்கூடியதாக விளங்குகின்றது.

## நூல்
## பாண்டியன் அரசிருக்கை

கடலிலே படிந்த முகில்கள் நீர்முகந்து சூற்கொண்டு கார்மேகமாகி மேலெழுந்து பொழிகின்ற மழைநீர் கால்வாய்களாகிப் பாய்ந்து ஒன்று கூடிச் சிற்றாறாகிச் சிற்றாறுகள் பல சேர்ந்து பெருநதியாகி கலையறியும் புகழ் வைகையாகிப் பிரவாகித்து மலைபடுதிரவியங்கள் காடுபடு திரவியங்களோடு மலைவாசிகளாகிய குறும்பர்களின் குடிசைகளையும் வில்லம்பு முதலியவற்றையும் வாரிக் கொண்டு வந்து நீர்வளம் பரப்பும் நாடு வைகைநாடாகிய பாண்டிய நாடாகும். சொக்கநாத சுவாமியின் திரு விளையாடல்களால் திருவருள் பெற்று வாழும் அப்பாண்டி மண்டலத்தில் தலைநகராகவும் , இராசதானியாகவும் திகழ்ந்தது மதுரை மாநகரம். அம்மதுரை மாநகரத்தில் முடியுடை மூவேந்தர்களுள் ஒரு சாரராகிய பாண்டிய மன்னர் பன்னெடுங்காலமாகப் படிபுரந்திருந்தனர்.

பதினாறாயிரம் பாண்டியர்கள் என்று பாருலகம் போற்றும் அப்பாண்டியரின் புகழ் பகருந்தரமன்று. இந்திரன் முடிமேல் வளை எறிந்தும், குலமுகிற் கூட்டங்களை விலங்கிட்டுச் சிறைப்படுத்தியும், கடல் சுவற அடல் வேலெறிந்தும், இமயத்திற் சென்றுதம் கயற்கொடி பொறித்தும், முத்தமிழ்ச் சங்கங்களை நிறுவித் தமிழை வளர்த்தும், பெரும்புகழீட்டிய பெருமையை விரிக்கிற் பெருகும். அத்தகைய புகழும், வீரமும், கல்வியும், செல்வமும், படைபலமும் ஆகிய அனைத்தும் ஒருங்கேயமைந்த பாண்டியமன்னர் பரம்பரையிற் தோன்றிய தோன்றலே பாண்டியன் நெடுஞ்செழியன். சக்கரவாளக் கிரிபோலச் சுற்றி விளங்கா நின்ற மதிலாற் சூழப்பெற்று உயர்ந்த மாடகூடங்களாற் பொலிவுற்று மகரதோரணங்கள் அழகுசெய்கின்ற மதுரைப்பதியிலே இருந்து சொக்கநாதப் பெருமானின் திருவருள் நலத்தால் குறையொன்றுமின்றிக் கோல் கோடாது செங்கோல் செலுத்திப் பரிபாலித்து வந்தான்.

பாண்டியன் நெடுஞ்செழியன் தன் இல்லற மனைவியாகிய கோப்பெருந்தேவியோடு கூடி இன்புற்றுப் பன்நெடு நாட்களாகியும், தன்குலம் விளங்கக் குலக்கொழுந்தாகிய குழந்தையொன்றுங் கிடையாததாற் கவலைகூர்ந்து தன் மனைவியாகிய இராசமாதேவியைப் பார்த்துப் பெண்ணே! நாம் படிபுரந்தென்ன? பண்பிற் சிறந்தென்ன? பகருதற்குரிய தான தருமங்களைப் புரிந்தென்ன? செல்வமிருந்தென்ன? சீர் இருந்தென்ன? எமது கோல் விளங்கக் குலம் விளங்க, எங்கள் பேர் விளங்க எங்களுக்குரிய ஈமக்கடன்களைக் கழிக்கத் தானும் புத்திரப்பேறில்லையே, எங்கள் முற்றத்தில் குழந்தைகளின் சிற்றடியைக் காணும் சீரிய சிறப்பில்லாது போய்விட்டதேயென்று தன் கவலையை எடுத்துக் கூறினான். அதைக் கேட்ட கோப்பெருந்தேவி நாங்கள் செய்ய வேண்டியதாகிய முப்பத்திரண்டறங் களையும் முட்டின்றிச் செய்தும், செல்வங்களுள் முதன்மை பெற்றிலங்கும் மக்கட் செல்வம் கிடையாதிருப்பதன் காரணம் யாதோ? யாம் மட்டுமல்ல; இன்னும் எத்தனைபேர் இவ்வுலகிற் புத்திரப்பாக்கியம் இல்லாது புலம்பித் திரிகின்றார்கள். இதற்குரிய பரிகாரம் இன்னதென இயம்புதல் வேண்டும் என்று கேட்டாள்.

அதனைக் கேட்ட மன்னன், "மானே! இளம் வயதினையுடைய காளையர்களும், கன்னியர்களும் ஒருவர் மீதொருவர் காதல் கொண்டு கலந்து உண்டாகிய கற்பத்தை வசை வந்து விடுமேயென்று சிதைப்பவர்கள், வேறு எக்காரணத்தினாலேனும் சிசுக்கொலை செய்பவர்கள், பசுக்கொலை புரிபவர்கள், கோவில் களிலுள்ள திருவுருவங்களைத் திருடுபவர்கள், சிதைப்பவர்கள் போன்ற பாவிகட்குப் புத்திரபாக்கியம் கிடைக்கா தென்று நீதி சாத்திரங்கள் கூறுகின்றன" என்று கூறி, அதற்குரிய காரணங்களையும், காரணங்கள் ஒவ்வொன்றுக்குமுரிய பிராயச்சித்தங்களையும் விரிவாக எடுத்துக்கூறியதுமன்றி, வேறுமோர் சரித்திர வரலாற்றையும் விரித்துக் கூறுகின்றான்.

முன்னொரு காலத்திற் கார் முகில் வண்ணனாகிய கண்ணபிரான் புத்திரப்பேற்றின் பொருட்டு, முழுமுதற் பொருளாகிய சிவபெருமானை நினைத்து நெடுங் காலம் தவஞ் செய்து கொண்டிருந்தார். அப்போது ஆரமுதற் பொருளாகிய சிவபெருமான் உமாதேவி சமேதராக இடபவாகனத்திற் தோன்றி ஒரு புத்திரனைத் தந்தருளினோமெனத்

திருவாய் மலர்ந்தருளினார். கண்ணபிரான் அந்நேரத்தில் சக்தியாகிய உமையம்மையாரைப் பணிந்து வணங்காத காரணத்தினால் கோபங்கொண்ட பராசக்தி பரந்தாமனைப் பார்த்து 'பரமபதியாகிய எமதிறைவரது வாக்கின் பிரகாரம் வந்தவதரிக்கின்ற உனது குமாரன் அவரது நெற்றிக் கண்ணினால் எரிந்தழிந்து போகக் கடவது' என்று சாபமிட்டு மறைந்தார். இவ்வாறு தேவியிட்ட சாபத்தால் திகைப்படைந்த திருமால் அச்சாப விமோசனத்தின் பொருட்டு சிவன், உமை, முருகன் ஆகிய சோமஸ்கந்த முகூர்த்த மூர்த்தியைப் பிரதிட்டை செய்து பூசை வழிபாடாற்றி வருங்காலத்தில் உமாமகேஸ்வரன் அவர் முன் தோன்றி நாம் கூறிய படி புத்திரன் பிறந்தழிந்து மீண்டும் உயிர்பெற்று வாழ்வான் என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர். அவ்வாறே திருமாலின் குமாரனாகிய மன்மதன் பிறந்து வளர்ந்து, தேவர்களின் தூண்டுதலினால் சென்று யோகத்திலிருந்த சிவபிரான் மீது தன் மலர்ப்பாதங்களை ஏவி அவரின் அக்கினிக் கண்களால் வெந்து சாம்பலாயினான். பின்னர் மன்மதன் மனைவியாகிய 'ரதி' சிவபெருமான் மலையரசன் மகளாய் அவதரித்த பார்வதியாரைத் திருமணம் செய்து திரும்பிய போது, அவர்கள் முன்னிலையில் சென்று தன் கணவரின் பரிதாப மரணத்தைக் கூறிப் புலம்பி நின்று மாங்கல்யப் பிச்சை கேட்டு மன்மதனை மீட்டுப் பெற்றாள் என்றும், சக்தியை வழிபடாது சிவத்தையே வணங்கிய பிருங்கு முனிவர், சக்தியின் சாபத்தால் துன்பமுற்றென் புருகுவானாரென்றும், அருட்சக்தியாகிய அம்மையப்பனின் அருட்பிர. வாகங்களை எல்லாமெடுத்துக் கூறி, அவர்களால் ஆகாத தொன்றில்லை ஆதலின் அவர்களை நோக்கித் தவம் செய்து நாமும் நமக்கோர் நன்மகப்பேற்றை அடைவோமெனத் திட்டமிட்டு முயல்வானாயினன்.

## கண்ணகை அம்மன் திருவவதாரம்

மகப்பேற்றைப் பெற வேண்டுமென்று மாபெருந் தவஞ் செய்யத் துணிந்தமாறன் மங்களகரம் பொருந்திய சுபதினத்திலே மாமலர்க் கொன்றை, தும்பை, மதிசூடி வேணியராகிய சொக்கலிங்கப் பெருமான் வீற்றிருந் தருளுகின்ற மகிமை விளங்கும் திருவாலவாயின் கண் சென்று தரிசித்து, மதுரை மீனாட்சியம்மையாரையும் பணிந்து திருவாலவாயின் ஒரு புறத்தில் தவச்சாலையொன்றை அமைப்பித்தான். இவ்வாறு ஏவலாளர்களினால் அமைக்கப்பட்ட தவச்சாலையில் எழில் மிகுந்திலங்குந் திருநீறு அணிந்து உருத்திராக்க மணிவடம் பூண்டு தவக்கோலம் கொண்ட பாண்டியன், பரம்பொருளாகிய சிவ பெருமானையும், உலகமாதாவாகிய உமையம்மை யாரையும் ஆவாகனம் செய்து உரிய முறைப்படி பூசித்து வணங்கி அவர்களிருவரையும் அகத்திற் கொண்டு பரமவஞ்செழுத்தாகிய பஞ்சாட் சரத்தைத் தியானித்து சித்திரப் பாவை போற் பத்மாசனத்திலிருந்து ஐம்புலன்களையுமடக்கி அருந்தவம் செய்தான். ஆண்டுகள் பல கடந்தன.

கருணையங் கடலாகிய கண்ணுதற் பெருமான் கைதவன் செய்தருளிய மெய்த்தவங் கண்டு மகிழ்ந்து அன்னவனுக்கருள் செய்யத் திருவுளங் கொண்டு அருட்சக்தியாகிய அம்மையார் இடப்பாக மேவ இடபாரூடராகத் தோன்றியருளினார். இவ்வாறு தனது முன்னிலையிற் காட்சி கொடுத்தருளிய கறைமிடற்றெம் அண்ணலைத் தன் கண்முன் கண்டபாண்டியன் தன்னுள்ளம் குளிரக் கண்குளிர, ஆனந்தப் பரவ சத்தினால் அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கியெழுந்து நின்று,

*"கற்புருவச் செப்புமுலைச் – கன்னியொரு பங்கினளே*
*பொற்புருவ மதனனைப் – பொன்ற விழித்திட்டவனே*
*திட்டமுறு சங்கரனே – தில்லைவன மீது நின்று*
*எட்ட இயலாத உன்னை – இப்பிறப்பிற் கண்டேனே"*

என்று போற்றிப் புகழ்ந்து வாழ்த்தினன், வாழ்த்தி வணங்கிய மாறன் முகத்தைப் பார்த்தருளிய மாதுபங்கர் 'மன்னவனே நீ இயற்றிய மாபெருந்தவத்தால் மனமகிழ்ந்திங்கெழுந்தருளினோம். வேண்டுவது உரைப்பாயாக' என வினவியருளினார். அப்போது "ஐயனே! எனக்கோர் புத்திரப்பேறீந்தருள்க" என இரந்து நின்றான் பாண்டியன். "அதற்கு உனக்கோர் பெண்மகவைத் தந்தேன்" என்று திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கைக் கேட்டு அகமும் முகமும் மலர்ந்து, அரன்றன் பொற்பாதமிறைஞ்சி அம்மையைத் தொழுது துதிக்கும் சமயத்தில் நித்திய கன்னிகையாகிய உத்தமியாமுலக மாதாவின் முத்தணி மார்பகத்திட்ட கச்சு காற்றினாற் சிறிது விலகியது.

*விட்ட வீடத் தன்னியத்தை மீனவனுங்கண்டனனே*
*வட்டச் செப்போ நல்லமிர்தம் வைத்த வன்னப்*
*பொற்குடமோ*
*இட்டமதன் பூமுடியோ.. யானைக்கோடோ இளநீரோ*
*பட்டமிதற் கென்னவென்று.. பட்சமுற்றுச் சிரித்தனனே.*

இவ்வாறு தன்வினை தன்னையே விடாது, சூழுங் காரணத்தால், தற்பரியின் இடது தன்னியத்தைக் கண்டு சிற்றாசை கொண்டு சிரித்தான். சிறிய சிரிப்பினால் சிறியராம் அவுணர்தம் முப்புரமெரித்த சிவன்தேவி கண்களில் தீச்சுவாலை தோன்றியது. அற்பனாகிய பாண்டியன் செய்த தவறின் காரணமாக ஆரணிமாமன்னை கண்ணிற் தோன்றிய அனல் இவ்வகிலமெலாம் எரித்து விடுமென்றுணர்ந்த எம் இறைவன் "இக்கோபந் தணிந்தருள்க" எனக் கூறித் தணித்தருளினார். அந்நேரத்தில் அங்கெழுந்த அக்கினிப் பிழம்பானது அடங்கி இரண்டு தீப் பொறிகளாகி அருகே நின்ற மாமரத்தின் கண் சென்று தங்கி மலர்களாயின.

இவை இவ்வாறாக, மாதுமையாள் மாறனைப் பார்த்து "அறிதிரண்ட முலைமிசை நீ ஆசை கொண்டு சிரித்ததினால் குறி திரண்ட கூடலுடன் கொன்றிடுவேன் உன்னை நான்" என்று வஞ்சினங் கூறி, "என் கணவன் உனக்களித்த பிள்ளையினால் நீயாசை கொண்டதாகிய எனது முலையை உனது முன் நிலையிற் திருகியெறிந்து பொன்னடித்துக் கனல் பரப்பி புரமெரிப்பேன்" என்று திருவாய் மலர்ந்து ஐயனுடன் அவ்விடம் விட்டு மறைந்து கைலயங்கிரி சென்றருளினார். இவ்வாறு சென்ற அம்மை அபிராமி, அரனடி தொழுது "அண்ணலே! அடியாள் மொழிந்த அருஞ்சபதம் நிறைவேற்றுவதற்கு, அடியேன் ஒரு பிள்ளையாகச் சென்று மேவ வரவந்தரவேண்டுமெனக் கேட்டு விடை பெற்றுக் கொண்டு வந்து முன்னரே மாமரத்தின் கண் சென்று தங்கிய கோபாக்கினியாம் மலரின் கண் வடுவாகி (பிஞ்சாகி) வீற்றிருந்தருளினார்.

இது நிற்க;

பார்வதியார் கொண்ட கோபத்தினாலும் கண்ணிற் கான்ற கனலாலும் கழறியவஞ் சினத்தாலும் கதியழித்து, அறிவழிந்து மயங்கிய நிலையில் மண்மீது வீழ்ந்த மாறன் நெடுஞ்செழியன், சிறிது நேரத்தில் மயக்கந் தெளிந்து நெடுமூச்செறிந்து நித்திரை யினின்றும் விழித்தெழுபவன் போன்றெழுந்தான். நடந்தவை அனைத்தும் கனவு போலவன் மனத்திற் தோன்றி மறைந்தன. தனக்கு நேர்ந்த தீவினையைத் தீர்க்கும் முகமாக துணிந்தமாறன் மாதுமைபங்கராகிய சிவபெருமானை வேதாகமப்படி பூசை செய்து வழிபட்டு வருவானாயினன். அந்நாளில் அக்கோவிலினருகில் நின்ற அந்த மாமரத்தினில் நாளொன்றினுக்கு ஒரு மாங்கனியாகப் பாண்டியன் செய்கின்ற பூசைக்கு வீழ்ந்த வண்ணம் இருந்தன. ஒருநாள் இரண்டு மாங்கனிகள் ஒரு சேர வீழ்ந்தனவாதலின் நன்கு கனிந்ததைப் பூசைக்குபயோகித்து மற்றதை மறுநாட்பூசைக்குதவும் பொருட்டுக் கொண்டு போய் ஒரு பொற் குடத்தின் வைத்து மூடினான்.

உலகமாதாவாகிய உமையம்மையார் வந்து உற்பவமான அந்த மாங்கனியை மறு நாட் பூசைக்குரிய நிவேதனத்தின் பொருட்டுப் பூழியர் கோன் சென்று பார்த்த போது மாங்கனியிருந்த பொற் குடத்தில் மாங்கனிக்குப் பதிலாக,

*"... வன்னச்சட்டை பொன்வளையல்*
*சின்னத்தோடு பின்னல் மணி – சென்னிறந்த கன்னசரம்*
*வண்ணப்பட்டம் பொன்னின் சிட்டி– வட்டமூக்குத்தியுடன்*
*பொனின்னமாலை நல்லரைஞாண்பூண்டு சிற்றாடையுடன்*
*உடுத்திரள் போல் வன்னமணி – யுட்டரிசு நாகமணி*
*நடுத்துயங்கச் செய்தசிலம் – பொன்றுவலக் காலில் நண்ண*
*அடுத்ததொரு சூரியன் – அக்குடத்தின் மீதொளியே*
*கொடுத்தனளே தொண்டர் செய்யுங் – குறை தவிர்க்கு*
*மிறையவளே"*

இவ்வண்ணம் பார்வதியார் பச்சிளம் பாலகியாகத் தோன்றியது கண்ட பாண்டியன் தான் தேடித் தவம் புரிந்த தனிப்பெருஞ் செல்வந்தனக்கு வந்துற்றதென மனமகிழ்ந்து அகங்குளிர்த்தானந்தம் கொண்டெய்திய இன்ப நிலையின் எல்லையை இவ்வளவு தானென்றுரைக்கவும் போமோ, தவத்தின் பெருமையால் தனக்குக் கிடைத்த பொன்னாரமுதை, வரிசை வாத்தியங்கள் முழங்க மங்கையர் வாழ்த்து ஒலி எழுப்பச் சகல மங்கள சோபனத்தோடு மாளிகையிற் கொண்டு சென்று மனைவி கையிற் கொடுத்தான்.

கோப்பெருந் தேவியுங் குழந்தையை வாங்கிய மாத்திரத்தே உவகை கூர்ந்து முத்தமிட்டு மார் போடணைத்தாள். அவ்வாறணைத்த அப்பொழுதே அவள் தன்னியங்களிற் பால் தாரை கொண்டொழுகியது. ஒழுகிய பாலை ஒண்டொடிக் கூட்டிய சமயத்தில் கேடுவருமென்று கெவுளி சொன்னது. காக்கைகள் கூட்டமிட்டுக் கரைந்தன. பூரண கும்பமொன்று தானாகவே வெடித்தது. வான்முகில் மின்னலுடன் இடி கான்றது. கோப்பெருந்தேவியரின் உடல் பதறியது. கோட்டையிற் கட்டியிருந்த கயிற்கொடியும் சரிந்தது. இத்தகைய துன்னிமித்தங்களைக் கண்டு கலக்க மடைந்த பாண்டியன் தான் தவஞ் செய்யச் சென்றது முதல் நிகழ்ந்த விருத்தாந்தங்களை விபரமாகத் தன் தேவிக்கெடுத்துரைத்தான். அனைத்துந் தேவியின் திருவிளையாடலெனத் துணிந்து தான தருமங்கள் செய்து புத்திரியைப் பொற் தொட்டிலிட்டுத் தாலாட்டி மன்னனுந் தேவியின் மலரணை மேற்கண் துயின்றனர்.

நித்திரையினின்று நெடுமூச்செறிந்து துணுக் குற்றெழுந்த நெடுஞ்செழியன் கோப்பெருந் தேவியைப் பார்த்து தான் கண்ட கனவொன்றைக் கூறுகின்றனான். “தேனினுமினிய என்மானே! என் தேகமதிற் குட்டம் போன்ற ஓர் பிணி தோன்றி என்னை வருத்தியது. அப்போது ஒரு வயித்தியன் வந்து காட்டின் கண் ஒரு மூலி இருக்கின்ற தென்றும், அதை எடுத்து வரும்படியும் என்னிடம் கூறினான். நான் அவன் சொன்ன காட்டிற் சென்று தேடிய போது அம்மூலியைக் காணவில்லை. ஆனால் அங்கே என் தாயாரைக் கண்டேன். கண்ட மாத்திரத்தில் என் பிணிகளெல்லாம் என்னை விட்ட கன்றன. நான் மன்மதன் போற் தெய்வீக உருப்பெற்றுத் திகழ்ந்தேன். அப்போ தென்மனத்தில் மோகம் பிறந்தது. அன்னையைப் பார்த்தேன். அவள் முகத்தில் கோபக் கனல் கொழுந்து விட்டெரியத்தன் கழுத்தின் முத்துமாலை ஒன்றை என்முன் வீசிவிட்டு மறைந் தருளினாள். அன்னையைக் காணாத நான் அம்முத்து மாலையை எடுத்து வந்து உன் கழுத்திற் பூட்டினேன். நான் பூட்டிய முத்துமாலை நாகபாம்பின் வடிவாகி அக்கினியைக் கக்கி மறைந்தது. அவ்வக்கினி எவ்விடங்களிலேயும் பரந்தது. என் நெஞ்சு பதறியது. கண்விழித்தேன் கனவென்றுணர்ந்தேன் என்றனன்.”

இதனைக் கேட்ட இராசமாதேவி என் தலைவ, நீர்மட்டுமல்ல நானுமொரு சொற்பனங் கண்டேன். எவ்வாறு சொல்வது எமது புத்திரியாகிய இக்குழந்தை இறைவரது இடப்பாகத்தில் அமரும் இறைவியைப் போல் கையில் ஏந்திய ஒற்றைச் சிலம்போடும், வேப்பம் பத்திரியோடும், விரித்த கூந்தலுமாய் உமது முன்னிலையில் வந்து நின்று எனது வழக்கை விளங்குக எனக் கூறினாள். உனக்குரிய வழக்கு யாதென நீர்கேட்டபோது நமது நாயகனார் கொண்டு வந்த நாகமணிச் சிலம்பை நீ அபகரித்துச் சென்றது மன்றி அவரை அநியாயமாகக் கொன்ற பாதகத்தை விளங்கும் பொருட்டே வந்திருக்கின்றேன். என்று வசைமாரி பொழிந்து தனது காற்சிலம்பைக் கற்படியின் மீதடித்துக் கனல் பரப்பி இரண்டு தெருவொழிந்த ஏனைய இடமாகிய மதுரைமாநகர் எங்குந் தீமூட்டி எரிக்கக் கண்டு கண்விழித்தேனென்று திகைப் போடுரைத்தாள்.

இடிமேலிடியிடித்தாற் போன்ற இருவர் கனவையும் எண்ணிச் சஞ்சலங் கொண்ட வேந்தன், சோதிடர்களை வரவழைத்துப் புத்திரியின் பலாபலன் களைப் பார்ப்பித்தான். அப்போது சோதிடர்கள் பாண்டியனைப் பார்த்துப் பண் வேந்தே! இக்குழந்தை உங்கள் புத்திரி என்று மாத்திரம் நினையாதீர்கள். இது தெய்வீகம் நிறைந்த எங்கள் குலதெய்வமென்றே கூற வேண்டும். இவள் உங்கள் சத்துருவாக மாறி மதுரைமாநகரை நீறாக்கி அழிவு செய்யும் பொருட்டுப் பிறந்த அவதார கன்னிகையாவாள் என்று அங்கு நடந்த அபசகுனங்கள் அனைத்தையும் அவர்கள் கண்ட கனவையும் விரித்துரைக்கக் கேட்ட வேந்தன் இக்குழந்தையை இப்பொழுதே கொன்று விடுகிறேன், என்று கூறினான். அதைக்கேட்ட கணிதர்கள் அப்படியாயின் இப்பொழுதே இம்மதுரை அழிந்து விடும் ஆதலினால் பேழை செய்து பெய்வளையைப் பேழையில் வைத்துக் கடலிற் தள்ளிவிடுமென்றனர்.

அவ்வாறிசைந்த பாண்டியன் அழகியதோர் பேழை செய்து அதன் கண் அம்மையாரை வளர்த்தி மிதவையாம் பேழையைப் பூட்டி திறப்பையும் அதன் மேல் வைத்து அரிவையர் அனை வருமழுதிரங்க அலை கடலிற் தள்ளிவிட்டான். அடியவருள்ளத்துறையும்

அரனாரையும், அனந்தன் மீதறிதுயில் புரியும் பரந்தாமனையும் போன்று பொற் பேழையிற் துயில் புரிந்தருளும் பொற் கொடியாளாரணங்கு தான் வீற்றிருக்கும் பேழையை சோழநகர்த் துறையாகிய காவிரிப் பூம்பட்டினத்திற் கொண்டு போய்ச்சேர்க்குமாறு வாயுதேவனுக்கும், வருணராசனுக்கும் கட்டளை செய்து பேழையிற் துயில் புரிந்தருளினார்.

*காவலரவதாரம்*

காவிரி நதியால் வளம் பெருகிக் கலைமகளும், அலைமகளுங் கலந்து வாழ மலைமகள் தன் மணவாளன் மதியணிந்த பெருமான் மன்றினடம் புரிந்தருளும் மலர்பாதன் திருவருளால் மனுநீதி கோடாது மாநிலம் புரிந்தருளும் சோழேசன் கண்பரப்புக் காத்தருளும் நாடு சோழவள நாடு. அந்நாடு சைவமுந் தமிழுந் தழைக்கச் சிவநாமமோங்கச் சிவனடியார்களும், தபோதனர்களும், கற்பால் மேற்பட்ட கன்னியர், கட்டிளங் காளையர் காண்டற்கு அரிய நல்லறமாயில்லறம் புரியுமில்லறத் தோர் யாவருமினிது வாழும் வனப்பால் மிக்கது. ஆங்கே அந்தணர், அரசர், வணிகர் வேளாளர் ஆகிய நாற்குலத்தவரும் நன்கமைந்து ஒழுக்க நெறி பிறழாது நாநிலம் போற்ற வாழ்ந்தனர்.

அவர்களுள் திரைகடலோடித் திரவியந் தேடுபவர்களாய் புகழை நாற்றிசையுஞ் சென்று பரப்புவர்களாய் பிறநாட்டு நானாவிதமான நாகரிகங்களையும் தமது நாட்டில் நிலைநாட்டு பவர்களாய் நிகரிலாச் செல்வந்தர்களாய்த் திகழ்ந்தனர் வணிகர். வணிகர் குல முதல்வனாகச் சீருஞ்சிறப்பும் பெற்ற செல்வனாய் வரையாது வழங்கும் வள்ளலாய் மாநிலம் போற்றும் "மாசாத்தார்" என்பவர் சோழ நாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டணத்தில் வாழ்ந்து வருவாராயினர். அவர் தம் அன்புக்குரிய மனைவியாகிய வன்னமாலை என்பவளுடன் இல்லறம் புரிந்து வரும்நாளில் புத்திரப் பேறின்மையால் வருந்தித் தம்மாலான தான தருமங்கள் செய்தும் கிரகதோஷ நிவர்த்திகள் செய்வித்தும் பிரயோசனமின்றிப் பெரிய துன்பத்துக்குள்ளானார். அவரினும் பார்க்க அருமக வொன்றில்லையேயென அருந்துயருழந்த அவரின் மனைவியாளாகிய வன்னமாலை அவரைப் பார்த்து ஆருயிரன்ப! அறங்கள் பல புரிந்து மருமக வொன்றெய்தப் பெற்றிலம். ஊழ்வினையின் பழியெல்லாம் ஒன்றுபட்டுத் திரண்டு நின்று பாழ்மனையிற் பைசாசமிருந்து பாடியாட முயல்வதினால் நாயகற்கும் பூசை செய்து நற்றவமே நான் புரிந்து புத்திரப் பேறு பெற்று வருவேன். உத்தரவு தந்தருள்க எனப் பணித்தாள்.

அதற்கிணங்கி மாசாத்தார் விடை கொடுக்க வன்னமாலை சென்று தவச்சாலை ஒன்றமைத்துக் கன்னியர்கள் சூழ்ந்து நின்று காவல் செய்ய புண்ணிய நன்னீரிற் படிந்து நீறணிந்து மணிவடம் பூண்டு மகிமை தரு மஞ்செழுத்தை மனத்தழுத்தி கன்னி சிவகாமியையுங் கடவுளையுங் கருத்திலிருத்தி ஐம்புலனடக்கி அருந்தவ மாற்றினாள். அவன் தவங்கண்ட அருந்தவ உமையவள் ஆதிமுதற் பொருளாகிய பராபரனைப் பணிந்து சுவாமி! இவள் இத்தகைய கடுந்தவமியற்றக் காரணம் யாதோ என்று கேட்டருளினார். அதைக்கேட்ட பரமசிவன் பார்வதியைப் பார்த்து "எங்கும் நிறைந்து விளங்கு பவளாகிய உனக்குமா நான் கூற வேண்டும். வா அவள் முன்தோன்றியவள் குறையைப் போக்கியருள்வோ" மென்று இடபாரூடராகத் தோன்றிக் காட்சியளித்தனர்.

தத்துவத்தின் முதலான தனிப்பொருளாய் அம்மையப்பன் தனது முன்னிலையிற் தோன்றிய மாத்திரத்தே, முத்து நகை துலங்க முகமலர்ந்து அகமகிழ்ந்த அம்மையாம் வன்னமாலை ஓடோடிச் சென்று கால்களில் வீழ்ந்து விண்ணவர்க்குமெட்டாத சோதி மதியாஞ் சுடரொளியே! கங்கைத் தும்பை அணிந்தவளே. 'காத்தருள்க' எனத் துதித்து அம்மையைப் பணிந்து.

*தளிர் பொருந்தும் பதத்தாளே... சங்கரியே*
*திகம்பரியே*
*ஒளிபொருந்தும் யானைமுக.. உத்தமனைப்*
*பெற்றவளே*
*மிளிர் பொருந்த வேற்றடக்கை.. வேலவர்*
*தன்றாயாரே*
*எழில் பொருந்த வெனையாழ ... இருகண் மலர் பரப்பு*
*மென்றாள்.*

இவ்வாறு பணிந்த வன்னமாலையைப் பார்த்து இங்குமக்கு வேண்டும் பரிசு எதுவோ என வினவிய பார்வதி பரமேசுவரரை வணங்கி நிற்கின்ற வன்ன மாலை தேவரீர்! மன்மதனிலும் மிக்க எழிலும் மாநிலத்திலென்றுமழியாத புகழும், மகாதேவராகிய தங்களிடத்து நீங்கா பேரன்பும் உடைய ஒரு புத்திரனைத் தந்தருள வேண்டும் என்றாள். "அவ்வண்ணமே அழகு மாண்மையுஞ் சக்தியமுந் தவறாத உத்தம புத்திரனொருவனைத் தந்தருளினோம். அவன் தன் பருவ காலத்தில் அழகென்றும் விரகந் தழுந்திக் குன்றனைய கனதனத்துக் கொடியிடையின் மயதாகிச் சென்றிடுவான்." என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

வரம் பெற்று மகிழ்ந்த வன்னமாலை வாழ்மனையின் மீண்டு வந்து கணவனை வணங்கித் தான் சென்று கடுந்தவம் செய்ததும், காலகாலன் வந்து காட்சிகொடுத்து வரமீய்ந்து சென்ற வரலாறனைத்தும், கூறி மகிழ்ந்தினிதிருந்தனள். சிலநாட்களில் சிவபெருமான் திருவருளால் வன்னமாலை கர்ப்பமுற்றுப் பத்தும் நிறைந்த பாலகனைப் பெற்றெடுத்தாள். பன்நெடுநாள் தவம் இருந்து பாலகனைப் பெற்றெடுத்த தாய் தந்தையர்கள் பகரரிய தான தருமங்கள் செய்து தேவ பூசை ஆராதனைகளாற்றி வழிபட்டு மைந்தனைப் போற்றி வளர்த்து வருவாராயினர். குற்ற மற்ற குழந்தையாங் கோவலன் குதலை மொழிபேசிக் குழவி மதியெனக் குலவி வளர்ந்து, சகல சரித்திரங்களையும் பயின்று, மன்மதனோ இவனென்று மங்கையர் கண்டுமருளும் காளைப்பருவமெய்தினன்.

அந்நாளில் மாசாத்தற் கிணையாகச் சகல செல்வங்களும் நிறைந்தவராய் அழகு, குணம், கொடை ஆகியவற்றிற் சிறந்தவராய் அக்காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்தவரும், மாசாத்தாரின் மைத்துனருமாகிய "மாநாகர்" தமக்குமோர் புத்திரப் பேறில்லையே என்று கவலைகூர்ந்து அன்னதானம், சொர்ணதானம் ஆகியன செய்து சிவசேத்திரங்களுக்குச் சென்று சிவனடி வணங்கிச் சிவனடியார் சேவை செய்து வழிபாடியற்றி வருவாராயினர்.

### *திருக்கரத்த மாதல்*

(இஃது மாநாகருடைய திருக்கரத்தின் கண் கண்ணகையார் வந்து மகவாகிய செல்வமாகச் சேர்ந்த சரித்திரத்தை விரித்துரைத்தலின் இப்பெயர் பெற்றது.)

பாண்டிய மன்னராற் பொற்பேழை செய்து தற்பாதுகாப்பாகக் கடலிற் கடத்தி விடப்பட்ட கண்ணகையார் மக்கட் பேறுன்னி மாபெருந் தான தருமங்கள் செய்து மாட்சிமையுற்றுத் திகழும் மாநாகரிடத்திற் சென்று, அழகுங், குணமுங், கற்புங் கருணையுங், கடவுள் பக்தியும் நிறைந்த இந்திர வல்லி பாலிருந்து வாழ்வேனென்று திருவுளங் கொண்டு சோழநாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்திற் பேழையைக் கொண்டு போய்ச் சேர்க்குமாறு கட்டளையிட்ட பிரகாரம் கடலரசனாகிய வருணபகவானும், வாயுதேவனும் பேழையைக் காவிரித் துறையை நோக்கிக் கொண்டு வரும் சமயம் அது,

அச்சமயத்தில் மாபெரும் வணிகராகிய மாநாகர், மாசாத்தார், ஆகிய இருவரும் தங்கள் கப்பல்களைப் பார்வையிடும் பொருட்டு காவிரித்துறையை அணுகி நிற்கின்றனர். கடற்கரையில் நின்ற மாசாத்தார் மாநாகரைப் பார்த்து "மைத்துனரே அதோ ஒரு பேழை அலை கடல் மேல் மிதந்து வருகின்றது பார்த்தீர்களா" என்று பேழையைச் சுட்டிக்காட்டினார். "ஆமாம் அழகான பேழை அதனுள் என்ன இருக்கின்றதோ தெரியவில்லை. யாதாயினுமாகுக. முதலில் பேழையைக் கண்டவராகிய உமக்கே பேழை உரியது. உள்ளிருக்கும் பொருள் எனக்குரியது என இருவருமிசைந்தனர். பேழையும் கரையில் வந்தணுகியது. மாநாகர் சென்று பேழையை எடுத்து வந்து கரையில் வைத்துப் பார்த்த போது அதன் மீது திறப்பிருப்பதைக் கண்டு திறப்பை எடுத்துத் திறந்து பார்த்தார்.

நிலவுலகெங்கும் நீலவொளி வீசியது. சகல சராசரங்களுஞ் சந்திர சூரியரீறாக அவ்வொளி மயமாகவே திகழ்ந்தனர். பார்த்தவர்களாகிய மாநாகர், மாசாத்தர் இருவரது கண்களும் ஒளிமழுங்கின. ஆனந்தமயமாகிய மெய்யறிவு தோன்றியது. அனைத்தும் அம்மை அபிராமியின் திருவிளையாட லென்றுணர்ந்து தலைவணங்கித் தாயே!

*சிவசங்கரன் மனைவி தேசாட் சொரூபி*
*செகமுதல்வி மீனாட்சி தேவாதிதேவி*
*மிகுபுதல்வி மலையா சனுக்குமொரு புதல்வி*
*வித்துக்கு வித்தான வேதாந்தரூபி*
*அகர ஆங்கார ஓங்கார ரீங்காரி*
*ஆமோமெனும் பொருளடங்கு சிங்காரி*
*உகர மகரான உத்துங்கவீரி*
*ஒழிமகுடன் முடிதெளிய நடனமிடு சூரி*
*நமநம சிவாயமாய் நாடிப் புரக்கும்*
*நாலெட் டறத்தி யிருநாலட்சரத்தி*
*சிவயநம தான திரு வருளிலொரு மாதே*
*தேவியெம் நயனவொளி தெரியவருள் செய்யே*

என்று தங்கள் மங்கிமறைந்த கண்ணின் ஒளியைத் தந்தருளுமாறு தாழ்மையுடன் வேண்டினர். இவர்களிருவரும் இவ்வாறிரந்து பணிதலும் எம்மையாளுடைய அம்மன் தன்னிடத் துண்டாகித் தேசோன் மயமாய்த் திகழ்ந்த ஒளியை அடக்கியவர்கள் கண்ணொளி பெற வேண்டுமென்று திருவாய் மலர்ந்தருளுவது போல் வாய்திறந்தழுதார். வாளொளி மழுங்கிய வணிகர் கண்கள் ஒளி பெற்றன. வரப்பிரசாதம் போல் வாழ்வளிக்க வந்துற்ற குழந்தையை எடுத்து அணைத்து மடிமீது இருத்தினார். இப்பொழுது எங்கள் கண்ணொளியைத் தந்துதவிய காரணத்தால் ஏகபரநாயகியாகிய இவள் நாமம் கண்ணகை என்று பெயரிட்டு எக்காலமானாலும் எனது மகள் கண்ணகைக்கு உமது மகன் கோவலனையே மணம் புரிவதென இருவருமிசைந்து நிச்சயம் செய்தனர்.

திருமணம் நிச்சயஞ் செய்ததன் பின்னர் குழந்தையாகிய கண்ணகையாரை மாநாகர் தனது மாளிகையின் கொண்டு வந்து மனைவியாராகிய இந்திரவல்லியிடம் கொடுக்க, புதையல் கிடைக்கப் பெற்றவள் போன்று பொங்கு மகிழ்வெய்திய இந்திரவல்லியும் பிள்ளையை வாங்கி மார்போடணைத்து முத்தமிட்டுத் தாயினும் மிக்கத் தயவுடன் வளர்த்து வருநாளில் கண்ணகையாருங் கலைமகளோ திருமகளோ எனக் கவின் பெற்று வளர்வாராயினர்.

## *தூரியோட்டம்*

மாதவப் பேறமைந்த மாநாகர் மாளிகையில் கண்ணகையார் வளர்ந்து வரும் நாளில் மாசாத்தார் மகன் கோவலனுக்கு மணஞ்செய்து கொடுக்கத் துணிந்த மாநாகர் தமது மகள் கண்ணகையாரின் வலது பாதத்திலுள்ள சிலம்புக்கிணைச் சிலம்பு செய்ய வேண்டுமெனக் கருதினர். கண்ணகையாரின் பாதத்திலுள்ள சிலம்புக்கிணைச் சிலம்பு செய்ய வேண்டுமாயின் நாகமணித் தரிசு அமைத்துச் செய்தாலன்றி இணையாகாதென்பதை உணர்ந்தார். அவ்வாறாயின் நாகதீவிற்குச் சென்று நாகராசனிடம் மணிவாங்கி வருவதற்கு வல்லவர்கள் யாரென்றும்; அவனே அதற்குத் தகுதியுடையவனென்றும்; தூதுபோக்கி மீகாமனை அழைத்து "நீ! நாகதீவிற் சென்று நாகராசனிடம் மணி வாங்கி வந்து தர வேண்டும். நாகமணி வாங்கி வந்து சிலம்பு செய்து அணிந்ததன் பின்னரே, நமது மகள் கண்ணகையாரைக் கோவலனுக்கு மணம் செய்து கொடுக்க முடியும்" வேண்டுவது யாதென வினவினார்.

அதைக் கேட்ட மீகாமன், "அரவிருக்குமிடம் போனால் யார் தான் உயிர் மீள்வர்? அன்றியும் அரவரசன் எங்ஙனம் எமக்கு மணிதருவான் என்று" கேட்க மாநாகர் கூறுகிறார். "முன்னொரு நாள் நான் வியாபார நோக்கமாகக் கப்பலில் வேற்றிடம் சென்று திரும்பிய போது கடலிலே காற்று வேகமாக வீசியது. ஆதலினாற் கரைக் கணித்தாய்க் கப்பலைக் கல்லுவைத்து, கரையில் இறங்கி வந்தேன். வரும்போது நாகராசனைக் கருடராசன் கொல்வதற்கு கங்கணம் பூண்டதனாலிருவருக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. அந்நேரத்தில் எனது ஒருகப்பல் திரவியத்தையும் கொடுத்து நாகராசனின் உயிரைக் காப்பாற்றினேன். அதனால் மனமகிழ்ந்து நாகராசன் உமக்கு வேண்டும் வரம் யாது? கேண்மினென்றனன். எனக்கு இச்சமயத்தில் வேண்டியதொன்றுமில்லை. தேவைப்படும்போது பெற்றுக் கொள்ளுகின்றேன் என்றே" அதைக்கேட்ட நாகத்தலைவன் என்னிடத்தில் எப்போது நீர் எதைப்பெற விரும்புகிறீரோ அப்போது ஆள்விடு வீராயின் அதை நான் அவரிடம் கொடுத்து அனுப்புவேனென்று உறுதியுரைத்தார். ஆதலின் நீர் அச்சமில்லாது சென்று அரவின் மணி பெற்று வருக" எனக் கூறினார்.

அதைக்கேட்ட மீகாமன் மாநாகரைப் பார்த்து "வணிகரேறே நாம் மணி வாங்கச் சென்று திரும்பி வருவதற்கிடையில் கடலாதிக்கம் புரியும் வெடியரசனோ மிகவும் கொடியவன். அவனையும் அவன் படை வீரரையும் பொருது வெற்றி பெற்று மீள வேண்டும். ஆதலால் அவனோடு போர் செய்வதற்குப் போதிய கப்பல்கள் வேண்டும். விலை கொடுத்து வாங்குங் கப்பல்கள் வெடியரசன் போருக்கு உகந்தவையல்ல. கொல்லம் அல்லது இலங்காபுரியிற் சென்று கப்பலுக்காகிய மரங்களைக் கொணர்ந்து உறுதிப் பாடமைந்த கப்பல்கள் அமைக்க வேண்டு" மென்றான். அப்படியாயின் மரம்கொணர வல்லவர்கள் யாரென ஆராய்ந்தறிந்து ஆரிய வீரராம் பட்டணவர்களை அழைத்து, அவர்களுக்கு வேண்டியதாகிய பொன், பொருள், புடவை வகைகள் ஈய்ந்து, மகிழ்வித்து, அழகு, செட்டிப்பிள்ளை, செட்டித்தேவன், சங்கீதலோலன்; ஊர்நம்பியாதியாம் உயர்ந்த பட்டங்களையும் வழங்கியப்பட்டணவர்களை இலங்காபுரிக்குச் சென்று மரங்கொணருமாறு அனுப்பிவைத்தார். அவர்கள் வரும் போது தமக்குத் தேவையான. பண்டபதார்த்தங்களோடு இலங்கை வேந்தனுக்குத் தேவையாகிய பாற்குடங்கள், பட்டுவர்க்கங்கள், சாந்து, சவ்வாது, கஸ்தூரி போன்ற வாசனத்திரவியங்கள் ஆகியவற்றை நாவாய்களி லேற்றிச் சோழ நாட்டிலிருந்து புறப்பட்டுக் கடல் கடந்து இலங்காபுரியின் பல பாகங்களையும் சுற்றி "உலுக்காவற்றுறை"யை வந்தடைந்தனர்.

இவர்கள் இவ்வாறு துறைமுகத்தை வந்தடைந்ததும் துறைமுகவதிகாரி நீவிர் யாவர்? இவ்விடம் வந்த காரணம் யாதென? வினவ, "நாங்கள் சோழ நாட்டிலிருந்து வருகின்றோம். உங்கள் அரசனுக்கு வேண்டிய பாற்குடங்கள் மற்றும் பொருட்கள் பலவும் மாநாகர் அனுப்பியுள்ளாரெ"ன்றனர். இச்செய்தியை அவ் அதிகாரி அரசனுக்குணர்த்த அரசன் கட்டளைப்படி அனைவருஞ் சென்று அங்கிருந்தரசு செய்த சோழ வேந்தனை வணங்கிப் பாற்குடங்களாகியன வைத்துத் தாம் வந்த காரணத்தை விண்ணப்பம் செய்தனர். அது கேட்ட வேந்தன் மகிழ்ந்து தமது மந்திரிமாரிடம் கட்டளை பிறப்பித்து, மூன்று நாட்களுக்குள் கப்பலுக்கு வேண்டிய நல்ல மரங்களைத் தறிப்பித்து நாவாய்களில் நன்கு நிரப்பி அனுப்பி வைத்தனன். மரங்கள் யாவும் மாநாகரிருக்கும் காவிரிப்பூம் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தன.

மரங்கள் வந்து விட்டன என்பதையறிந்த மாநாகர் மகிழ்ச்சி பொங்க பட்டணவர்களைப் புகழ்ந்து பல பரிசில்கள் வழங்கி அவர்கள் வாழ்வதற்குரிய நாடு சில கொடுத்துச் சிறப்பித்தார்.

## *கடலோட்டம்*

இலங்காபுரியிலிருந்து கொண்டு வரப்பட்ட மரங்களினாலே எழிலும், வலுவும் பொருந்திய கப்பல்கள் செய்விக்க விரும்பிய மாநாகர் ஆங்காங்கு தமது ஏவலாளர்களை விடுவித்துத் திறமை வாய்ந்த தபதியர் பல்லாயிரவரை வரவழைத்து உமக்கு வேண்டும் பொருட்கள் பொன், வெள்ளி, செம்பாதியாக எவை எவை வேண்டுமோ அவையனைத்துமப்படியே தருவேன். இன்றிலிருந்து ஒருமாத காலத்துக்குள் மிகவும் வலிமை பொருந்திய போர்க்கப்பல்கள் பதினாயிரம் செய்து தர வேண்டுமெனத் தெரிவித்தார்.

அவர் கட்டளையை மேற்கொண்ட தபதியார் அவரை வணங்கி விடை பெற்றுச் சென்று நல்ல சுபதினத்திலே விநாயகரைப் பூசை செய்து வணங்கி வாச்சியுளி, வாளாதி ஆயுதங்களில் கப்பல் செய்யத் தொடங்கிக் குறித்த கால எல்லைக்குள் சகல கப்பல்களையும் எவ்வித குறையுமின்றி மேல்வீடு, கீழ்வீடு, நிலாமுற்றமாதி எல்லா வசதிகளோடும் செய்து முடித்து மாநாகரிடம் விண்ணப்பித்து நின்றனர். மாநாகரவர்களுக்கு வேண்டும் நிதியுதவியனுப்பியதன் பின்னர் மீகாமனை அழைத்துக் கப்பல்கள் யாவும் பூரணமாக வேலைகள் முடிந்தன. போருக்கு வேண்டும் போர் வீரர்களோ தயாராக இருக்கின்றனர். பேராயுதங்கள் யாவும் வேண்டியமட்டுமுள்ளன. நீர் மணிவாங்கப் புறப்படலாமென உரைத்தார்.

மாநாகருரை கேட்ட மீகாமன் சரி, அவ்வாறே செய்யவோமெனச் சென்று கோயிலையடைந்து காளகண்டரை வணங்கி விடை பெற்றுக் கௌரியம்பாளை வணங்குஞ் சமயத்திற் கண்ணகை யானவள் முன்தோன்றி "வீரனாம் மீகாமா நீ அஞ்சாது சென்று (நயினாதீவு) நாகதீவிற் கண்மணி வாங்கி வருக.

உன்னை எதிர்ப்பவர்களாகிய வெடியரசன் முதலாயினோரை வென்று வெற்றி மாலை சூடுக" என ஆசீர்வதித்து "வேண்டும்போது என்னை நீ நினைப்பாயாயின் நான் உன் மனத்திற் தோன்றி உன்னைக் காப்பாற்றியருள்வேன்" எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். அம்பாளின் அருள் வாக்கைப் பெற்ற மீகாமன் அகம் மிகமகிழ்ந்து அக்கணமே சென்று தனது மஞ்சனச் சாலையில் நீராடி ஆடை அணியலங்கார பூசனாகி அறுசுவை உணவருந்தித் தாம்பூலந்தரித்துத் தேவியைத் துதித்து வீரவாளைக் கையிலெடுத்துப் போர்க் கோலந்திகழ மாநகர் மனைக்கு வந்தனன்.

வந்த மீகாமன் கட்டளைப்படி சுபநேரத்திலே வேல், வாள், பலகை, குந்தம், வில், அம்பு வகை முதலாகப் போருக்கு வேண்டிய பொருட்களும், நாகராசனுக்கு வேண்டிய உணவு வகைகள், உடுப்பு வகைகள் எண்ணெய், தண்ணீராதி பலவும் குறைவின்றி ஏற்றப்பட்டன. படைவீரரும் கப்பல் மீதேறினர். கண்ணகையாரை நினைத்து வணங்கி விடை பெற்ற மீகாமனும் "கண்ணகைப் புரவி" என்று பெயரிட்ட தனது கப்பலில் ஏறினான். மாலுமிகளின் கணிப்பின் படி விண்மீன்களின் குறிப்பின் வண்ணம் கப்பல்கள் கடல் மீது சென்றன.

## *வெடியரசன் போர்*

மீகாமன் கப்பல்கள் மணிவாங்கும் பொருட்டுக் காவிரித் துறையிலிருந்து புறப்பட்டு நாகதீவை நோக்கி வருகின்றன. அக்காலம் கடலரசனெனப் புகழ் பெற்ற முக்கிய கோன் வெடியரசன் தூறுமலைச் சாரலில் வாழ்ந்து கடல் மீது வருங் கப்பல்களை மறித்துச் சூறையாடி ஆதிக்கம் புரிந்து வருங்காலம், ஒருநாள் வெடியரசன் மனைவி 'நீலகேசரி' கொடியதோர் கனவு கண்டஞ்சிக் கண்விழித்துக் கணவனாகிய வெடியரசனைப் பார்த்துப் பகருகின்றாள். வெகுவினையம் புரியும் வேந்தே; என் கணவ! நான் ஒரு பொல்லாத கனவு கண்டேன் . அதனைக் கேட்டருள்க.

"ஆகாயத்தில் தூறல் மின்னல்கள் தோன்றின. ஆழ்கடலிற் கொடிய, ஆலகாலம் பிறந்து என்னைத் துரந்தது. நான் அஞ்சிய போது எனது பல்லொன்று முறிந்து பாரில் வீழ்ந்தது. அட்டதிக்க மலைகளதிர்ந்து வீழ்ந்தன. பிடியானையொன்று மதம் பொழிந்து நின்றது. கொம்பனின் கோடுகளொடிந்தன. பெண்ணொருத்தி சஞ்சலங் கொண்டு தலைவிரி கோலமாக எமது மனையை விட்டு வெளியேறினாள். முற்றத்தில் நின்ற அரசமரமொன்று அடிசாய்ந்து வீழ்ந்தது. அது மட்டுமோ, உமது போர்வாளொடிந்திடவும், மாற்றானும்மைச் சிறைபிடித்துச் செல்லவுங் கண்டு துணுக்குற் றெழுந்தேன். பிராணபதி கனவோ மிகவுங் கொடியது. கரைக்குலத்தான் மீகாமனோ மிகவும் பொல்லாதவன். அவன் உங்களோடு நீங்காப் பெரும்பழி உடையவன். நினைக்கவே நெஞ்சம் பதறுகின்றது" என்றனள்.

அதைக் கேட்ட வெடியரசன் அன்பே அஞ்சற்க. வீராதி வீரர்கள் எல்லோரையும் விண்ணேற்றிய என் வீரத்தை அறிந்தவளாகிய நீயுமா இப்படிச் சஞ்சலங் கொள்ள வேண்டும். கரைக் குலத்தார் மட்டுமல்ல, உரைக்கும் எக்குலத்தாராயினும் என் முன் திரண்டு வருவாராயின் கல்லின் முன் கரைந்து விரைந்தோடும் காக்கைகள் போல் பின்வாங்கி விடுவர். ஆதலால் எமக்கு எக்குறையும் வாராது. அன்றியும் கனவுகண்டவர்களுக்கு அல்ல என்பதை நீயறியாயா? என்று தேற்றச் சிறிதளவு மனந்தேறிய நீலகேசரி தடாகத்திற் சென்று நீராடிக் கரையில் வந்து சந்தியா வந்தனஞ் செய்து கடவுளைப் பூசித்துக் கொடிய கனவின் பொருட்டுத் தான தருமங்கள் செய்தனள்.

அந்நேரத்தில் வெடியரசன் ஒற்ற னொருவனை அழைத்துக் கடலின் மீது மரக் கலங்கள் வருகின்றனவா? என்று பார்த்து வருமாறு கட்டளையிட்டான். அவ்வொற்றனும் சென்று வானளாவியுயர்ந்த மரமொன்றிலேறிக் கடலை நோக்கினான். கடலெங்கும் பரந்து வந்த மீகாமனின் கப்பல்களின் பாய்மரங்கள் ஆங்காங்கு தென்பட்டன. அதனைக் கண்ட ஒற்றன் விரைவாக மரத்தினின்று மிறங்கி ஒடிச் சென்று வெடியரசனுக்குக் கூற அவன் வெகுண்டெழுந்து மீகாமனே இத்தகைய மிக்க கப்பல்கள் கட்டித் தன்னுடன் போருக்கு வருகின்றானென்று எண்ணித் தனது போர் வீரர்களைத் திரட்டிப் போர்க்கப்பல்களை யெல்லாம் போருக்குப் புறப்படுவதற்கு தயாராக இருக்கும்படி கட்டளை பிறப்பித்துத் தானும் மாளிகையிற் சென்று

நீராடி ஆடையாபரண அலங்கிர்தனாய் அறுசுவை அன்னமுண்டு போர்க்கோலம் பூண்டான். போர்க்கோலம் பூண்ட வெடியரசன் மனைவியாகிய நீலகேசரியைப் பாாத்துத் தனது வீரவாளை எடுத்துவருமாறுரைக்க அன்னவளும் சென்று மாயனை வணங்கி வாளை எடுத்து வந்து வெற்றியாகுக என வாழ்த்தியவன் கையிற் கொடுக்க வாங்கினான். நீலகேசரிக்கு விடை கொடுத்துப் புறப்பட்டுச் சென்று கடற்றுறையை அணுகினான். அங்கே அவனது வீரர்கள் அவனைக் கண்டதும் கடல் போலெழுந்து ஆர்ப்பரித்து வஞ்சினம் பல கூறி மாற்றானை மறிகடலிற் பொருதுளக்கி வெற்றி பெறுவோமென்று விருது கூறிப் புறப்பட்டனர். போர் முரசோடு , கொம்பு வாத்தியங்கள், தாரை முதலான சின்னங்கள் முழங்கின கப்பல்கள் யாவும் புறப்பட்டன.

அப்போது மீகாமேவலாற் பாய் மரத்திலேறிப் பார்த்த வீரனொருவன், வெடியரசன் கப்பல்கள் கடலிற் பரந்து வருவதைக் கண்டு மீகாமனுக்கு விண்ணப்பஞ் செய்ய மீகாமன் கட்டளைப்படி வீரர்களெல்லோரும் போருக்குரிய ஆயத்தங்கள் பலவற்றையும் அணிவகுத்துத் தயாராயினர். வெடியரசன் கப்பல்களும் மீகாமன் கப்பல்களை சுற்றி வளைத்துச் செல்ல வொட்டாமற் தடுத்தன. வெடியரசன் மீகாமனைப் பார்த்து 'நீங்கள் யார் எங்கே போகிறீர்கள் எனக் கேட்டான். அப்பொழுது மீகாமன் 'என்னை நீயறியாயா? நான் சோழ நாட்டவன். என் பெயர் மீகாமன். மாநாகர் கட்டளைப்படி கண்ணகையாரின் காற்சிலம்பு செய்வதற்கு மணிவாங்கி மீள்வதற்காக வந்தேனென்று கூறினான். அதைக் கேட்ட வெடியரசன் உனது காவலில் வந்த ஆயிரம் கப்பல்களையும் தீமூட்டி உன்னையும் நான் வென்றிலனேல் என் பெயர் வெடியரசன் அல்ல வென்று விருது கூறினான். அது கேட்ட மீகாமன் ஆத்திரங் கொண்டு சீறியெழுந்து "என் அன்னை கண்ணகையாரின் அருளினால் வலிதின் வந்து வழிமறித்தவனாகிய உன்னையும் உன் போர் வீரர்களையும் வென்றிலனாயின் என் பெயரும் மீகாமன் அல்ல" என்று சபதம் செய்தனன். இரு திறத்தாருக்கும் போர் மூண்டது. வாள் கொண்டு வீசினர். விற்களினின்றும் சரமாரி பொழிந்தனர். வேல் , ஈட்டி, குந்தம், கவுண், கல்லாமாதி எறிபடைகளை எறிந்தனர். இவ்வாறு போர் செய்து தலையிழந்தும், காலிழந்தும் , கரமிழந்தும், புயமொடிந்தும் பல்லாயிரம் வீரர்கள் மாண்டு மடிந்தனர். கடலினிடை பிணமலைகள் குவிந்தன. சமுத்திரமே குருதிக்கடலாக மாறியது. வெடியரசனது வீரர்கள் பட்டழிந்தனர். தனது சேனைகள் எல்லாவற்றையு மிழந்து தனித்தவனாகிய வெடியரசன் தனது கப்பலோடு ஒழித்தோடிச் செல்ல முயன்றான். அந்நேரத்தில் மீகாமன் அவனது கப்பலையுடைத்துக் கடலில் மூழ்கச் செய்தான். நீரில் மூழ்கிய வெடியரசன், நீந்திக் கரைசேர முயன்ற சமயத்தில் மீகாமன் அவனைத் துரத்தி பிடித்து வந்து தனது கப்பலின் கண் ஏற்றிப் பாய் மரத்துடன் கட்டி வைத்துக் காவல் புரிந்தனன்.

அந்நேரத்தில் வெடியரசனது போர் வீரர்களில் உயிர் தப்பிய ஒருவன் ஒருவருமறியாத வண்ணம் ஒழித்தப் போர் முன்னிலையில் வெட்டுண்டு வீழ்ந்த பிணத்தைக் தனக்குத் தெப்பமாகக் கொண்டு கரையேறிச் சென்று வெடியரசனின் மனைவிக்கு நடந்த விருத்தாந் தங்களை யெல்லாம் விரித்துக் கூற, அதனை நீல கேசரி கேட்டு மண் மேல் விழுந்து புலம்பி என்செய்வேனென்றழுதாள். அங்கு நின்றவர்கள் அவளைப் பார்த்து அம்மணீ! அழுது வருந்துவதிற் பயனில்லை. உனது கணவன் தம்பியாகிய வீரநாரணனுக்கு இச்செய்தியை விரைவாக அறிவியுங்கள். அவர் புறப்பட்டு வந்து மீகாமனுடன் பொருதி வெடியரசரை மீட்டுதவுவாரென்றனர். அந்தவுரை கேட்ட மாத்திரத்திலே நீலகேசரி அருகில் நின்ற அவ்வீரனைப் பார்த்து இவ்விடத்தில் எனக்குறுதுணை புரிபவர்கள் ஒருவருமில்லாத தினால் நீயே வீரநாரணனிடம் சென்று இச் செய்தியை எடுத்துரைத்து வருகவெனக் கட்டளையிட்டாள். அக்கட்டளையைச் சிரமேற் கொண்டவனாகிய அத்தூதுவன் வீரநாரணனைத் தேடி விரைந் தோடுகின்றான்.

### *வீரநாரணன் போர்*

வேட்டை மீது நாட்டங் கொண்ட வீரநாரணன் வேட்டைக் கோலம் பூண்டு வேட்டை வீரர்கள் பலர் சூழ, வேட்டை நாய்கள் சில முன் தொடர எலுமிச்சை மலைச்சாரலில் வந்து கொண்டிருக்கின்றான். அவன் தன்னை நோக்கி வருகின்ற தூதுவனைக் கண்டு,

தமையனாகிய வெடியரசன் அனுப்பிய தூதனென் றெண்ணித் "தூதுவனே! நீ பதட்டத்தோடு ஓடோடி வருகின்றனையே எதற்காக வந்தாய்" என்று கேட்டான். அப்போது தூதுவன் எவ்வண்ணம் எடுத்துரைப்பேன். மணிவாங்கும் பொருட்டு மாநாகர் அனுப்பிய மீகாமனைக் கடல் மீது சென்றெதிர்த்த உங்களண்ணர், தனது போர் வீரர்களை இழந்ததுமல்லாமல் தானும் கட்டுண்டு கைதாயினர். கப்பல்கள் யாவும் கரைக்குலத்து மீகாமன் கைப்பற்றி விட்டானென்றனன்.

என்ற மாத்திரத்திலே வீரநாரணன் கண்கள் சிவக்கக் கடுங்கோபம் கொண்டு "பலசரக்குக் கொண்டு விற்கும் பட்டணத்தான் செட்டியனுப்பிய சேவகனா எனது தமையனாரைச் சிறைப்பிடித்தான். அவனை ஆழ்கடலில் வெட்டியமர் செய்து வென்றிலனேல் நான் வெடியரசன் தம்பியல்லேன்" என விருது கூறி, ஆங்காங்காளனுப்பித் தனது படை வீரர்களை வரவழைத்துத் தானும் யுத்தசன்னத் தனாயினான்.

போர்க்கோலங் கொண்ட வீரநாரணன், தமது கப்பல்களெல்லாவற்றையும் தயார் செய்து வாள், தண்டு, வளைதடி, சக்கரம் முசலம் ஏழு தோமரமாதியாம் படைவகைகளையும், பலவகையான தீன்பண்டங்கள் யாவுமேற்றி கொம்பு, குழல், தாரை, முரசு, மத்தளம், துடியாதி, வாத்தியங்கள் முழங்கப் புறப்பட்டு மீகாமனைத் தேடிக் கடல்மீது வருகின்றான். இதற்கிடையில் மீகாமனது கப்பல்கள் நாகராசன் வீற்றிருக்கும் நாகமலைச் சாரலையடைந்து கல்லு வைத்துக் கட்டப்பட்டன. ஆதலால் அங்கு போனால் நாகராசனது பகைக்காளாக வேண்டி வருமெனத் துணிந்து மீகாமனது வரவு பார்த்து நின்று வழிமறித்துப் போர் புரியக் கருதி அவ்விடம் போகாது . வீரநாரணனும் இடையிலே கல்லு வைத்துக் கப்பல்களைக் கட்டிக் காத்து நிற்கின்றான்.

முன்னராகவே நாகமலைச் சாரலில் சென்று கப்பல் கட்டியிறங்கிய மீகாமன், நாகராசனுக்கு வேண்டும் பாற் குடங்களையும் எடுத்துக் கொண்டு சென்று அங்குள்ளதாகிய நாகவனம், பூகவனம், முதலாய சோலைகளையும், தடாகங்கள், நீரோடைகள், குன்றுகளாய காட்சிகள் பலவற்றையும் பார்த்துப் பரவத்தனாய் அற்புதச் செய்திச் சென்று நாகராசனது கோபுர வாயிலையடைந்து , தடாகத்தில் மூழ்கிச் சந்தியாவந்தனம் செய்து கண்ணகையாரையும் நினைத்து வணங்கிப் பாற்குடத்தோடு மாளிகையினுட் புகுந்து பல வாயில்களையுங் கடந்து அத்தாணி மண்டபத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றான். ஏழு கோட்டைவாயிலையுங் கடந்து அரவரசன் அத்தாணி மண்டப வாயிலையடைந்த மீகாமன் அப்பாற் செல்ல முடியாது அவ்விடத்தே நின்றான்.

நின்ற மீகாமன் அவ்விடத்தே வெள்ளை வஸ்திரமொன்றை விரித்து அதன்மீது வெற்றிலை பாக்கு பழவகைகள், பலவகை மலர்வர்க்கங்கள், வாசனைத்திரவியங்களாதியனைத்தையும் பரப்பிக் கற்பூர வாலாத்தியேந்தி அரவரசைத் துதித்து மனதிற் தியானித்து தவத்தில் நிற்கின்றான். இதனையறிந்த நாகராசன் இவனது உண்மை நிலையை அறிந்தருளத் திருவுளங் கொண்டான். கொடிய விஷம் மிகுந்த பாம்பு வர்க்கங்கள் பலவற்றையுமேவினான். அவைகள் வந்து மீகாமனைச் சூழ்ந்து அவன் மீது ஏறி அவனது உருவம் தெரியாதவாறு எங்குமூர்ந்து சுற்றிக் கொண்டன. அந்நேரத்தில் அவன் கண்ணகையாரை நினைக்கவே, கண்ணகையாரவள் முன்தோன்றி ஒரு மந்திரத்தை உபதேசித்து மறைந்தருளினார். மீகாமன் அம் மந்திரத்தைச் செபஞ் செய்து நாகராசனைத் துதிக்கின்றான். இவன் தவநிலையைக் கண்ட நாகராசன் மனமகிழ்ந்து ஒரு வயோதிபப் பிராமணராக அவன் முன் எழுந்தருளினான். அவர் அவ்விடம் வந்த மாத்திரத்தே அவன் மீது நகர்ந்து மூடிக் கொண்டிருந்த நாகங்களெல்லாம் மறைந்தகன்றன. அப்போது அவ்வையர் மீகாமனைப் பார்த்து "நீயார்? இங்கு வந்த காரணம் யாது?" எனக் கேட்டார்.

அதைக் கேட்ட மீகாமன் அந்தணோத்தமரே நான் காவிரிப்பூம் பட்டணத்திலிருந்து வந்திருக் கின்றேன். வருணகுலத்தவன் மீகாமன் என் பெயர். மாநாகர் கட்டளைப்படி கண்ணகையாரின் காற் சிலம்பு செய்வதற்கு மாநாக மணி வாங்க வந்தேனென்று ரைத்தனன். அதைக் கேட்ட வேதியர் அப்படியாயின் நான் சென்று நாகராசனிடம் இச் செய்தியைத்

தெரிவிக்கின்றேனென்று சென்று தன்னரியணை மீதமர்ந்து கந்தொருவனைப் பார்த்து மீகாமனை அழைத்து வருமாறாணையிட்டு வீற்றிருந்தருளினார். கந்தருவனால் அழைக்கப்பட்டுச் சென்ற மீகாமன் கொலு மண்டபத்தில் வீற்றிருக்கும் நாகராசனைக் கண்டு வணங்கியவர் முன்னிலையில் நின்று, ஆயிரஞ் சிரசுகளிலவனிதனில் போற்றும் ஆதிமூர்த்தியே! அழகிய பாற்கடலில் அரிதனக்கோ ஆசனமானவனே! அரிபிரமேந்திராதி தேவர்கள் தாம் அமிர்தம் பெறப் பாற்கடலைக் கடையுமன்னாளிற் தாம் பாம்பாக நின்றதற் பரனே! முப்புரமெரித்த அந்நாள் முக்கண்ணுடைய வண்ணல் தன் கைவில்லின் நாணாகத் திகழ்ந்த நாகராசனே போற்றி! என்று துதித்தனன். அந்நேரத்தில் நாகதேவன் உளம் மிக மகிழ்ந்து அங்குள்ள சித்தர்கள் முனிவர்களைப் பார்த்துப் பலவகை நவரத்தினங்களை வேண்டிய மட்டும் கொடுக்குமாறு கட்டளையிட்டுத் தானும் ஒன்பது பெரிய நீண்ட நாகங்களாக வடிவு கொண்டு வடதிசை நோக்கிப்படுத்திருந்து நாகரத்தினங்களையீன்று. பின்னர் அந்தணராக வடிவங்கொண்டு அவைகள் எல்லாவற்றையும் மீகாமனிடம் கொடுக்க, மீகாமனும் நாகராசனை வணங்கி அம் மணிகளைப் பெற்று செம்பட்டு வஸ்திரத்திலே மூடி அரண் செய்தான். அதன் பின்பு நாகராசன், மீகாமனுக்குப் பல வரங்களையுங் கொடுத்து விடையீந்தனுப்பினான். விடை பெற்ற மீகாமன் நாகராசனை வணங்கி அங்கிருந்து புறப்பட்டுக் கப்பலில் வந்தேறிப் பலவகை வாத்தியங்கள் முழங்க எல்லோருமானந்த வயத்வர்களாகி ஆடிப்பாடி ஆற்பரிக்கக் கப்பல்களிற் காவிரிப்பூம் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டுக் காததூரம் சென்றனர்.

சிறிது தூரத்தில் மரங்கலங்கள் பரந்து வருவதைக் கண்ட மீகாமன், பகைவர்களே படை திரட்டி வருகின்றார்களென்பதையறிந்து தனது படை வீரர்களைப் பார்த்துப் போருக்கு ஆயத்தமாகும்படி தயார் செய்து வெடியரசனைப் பார்த்து, வருபவர்கள் யாரெனக் கேட்டான். வெடியரசன் தனது தம்பியாகிய வீரநாரணன் என்றோத அப்படியாயின் அவனைத் திரும்பிச் செல்லு மாறுத்தரவிடுக. நான் உன்னைக் கொண்டுபோய் மாநாகருக்குக் காண்பித்தனுப்பு கின்றேன் என்றான். அதற்கிசைந்த வெடியரசன் 'தம்பி! நீ வீணே போர் புரிய வேண்டாம் திரும்பி விடு. நான் உன்னிடம் வந்து சேர்வேன்' எனத் திருமுகமொன் றெழுதி அம்பில் வைத்தேவினான். தனது முன் நிலையில் வீழ்ந்த ஓலையை எடுத்து வாசித்த வீரநாரணன் மிகவும் கோபங் கொண்டு 'உன்னைச் சிறை பிடித்த மீகாமனை உவரியின் மேற் கொன்றுளக்கி உன்னையும் விடுவித்து அவனுடைய கப்பல்களுங் கவர்ந்திலனேல் நான் கடலரசன் தம்பியல்ல' என்றெழுதிய ஓலையை வெடியரசனுக்கு அம்புமூலமாக அனுப்பி மீகாமன் கப்பல்களைச் சென்று வளைத்துப் போர் தொடங்கினான்.

இரு திறத்தாருக்கும் இரண்டு நாட்களாக பெரும் போர் நடந்தது. ஈற்றில் வீரநாரணன் மீகாமனையணுகி வாள்ப்போர் செய்வோம் வருகவென அழைத்தான். அவ்வாறிசைந்த இருவருந் நெடுநேரம் போர் செய்து களைப்புற்ற மீகாமன் தனது கப்பலில் இருந்த வண்ணங் கண்ணகையாரை நினைக்கக் கண்ணகையார் தோன்றி வீரநாரணன் தலையில் மூலியொன்றுள்ளது. அதனால் அவன் உனது படைகளில் மாண்டொழிய மாட்டான். ஆதலால் இந்த வேலினாலெறிந்து வெற்றி பெறுகவென ஒரு வேற்படைக் கலத்தைக் கொடுத்து மறைந்து சென்றருள, அவ்வாறே மீகாமன் எறிந்த வேலினால் வீரநாரணன் மடிந்தான். தம்பியாகிய வீரநாரணன் தன் பொருட்டாக வந்த பொழுது தனது முன்னிலையில் மாண்டு மடிந்தமையைக் கண்ட வெடியரசன் புலம்ப, அவனை மீகாமன் தேற்றினான். வீரநாரணன் சேனைகளும் பின்னிட்டோடின மீகாமன் கப்பல்கள் விரி கடல் மேல் விரைந்தன.

## *விளங்கு தேவன் போர்*

கீரிமலைக் கண்மையிலுள்ள கடற் கோட்டை வாசலில் வீரநாரணன் தம்பி 'மெய் விளங்கு தேவர்' தனது வீரர்களின் மல்யுத்தப் பயிற்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது வீரநாரணன் போரில் தப்பியோடிய வீரனொருவன் வந்து விளங்கு தேவனைப் பணிந்து நின்று எம் தலைவ! அலைகடலில் வந்த மீகாமனுடன் பொருது உங்களண்ணர் வெடியரசன் தளைப்புண்டான் வீரநாரணன் போர்க்களத்தில் மடிந்தொழிந்தான். சேனா வீரர்களுள் இறந்தவர் போக எஞ்சியோர் பின்வாங்கி விட்டனர். என்று விண்ணப்பஞ் செய்தனன்.

இதனைக் கேட்ட விளங்கு தேவன் அண்ணாவைக் கொன்ற அம்மாற்றானைக் கொன்று என் அண்ணராம் வெடியரனை மீட்காது வீடு திரும்பேனென்று சபதஞ் செய்து படைதிரட்டிச் சகல ஆயத்தங்களோடும் வந்து மீகாமனைச் சூழ்ந்து இருதினங்களாகப் பெரும்போர் புரிந்தான். அவ்வேளையில் மீகாமனும், விளங்கு தேவனும் ஒருவரோடொருவர்ஒத்த வீரர்களாய் வாள்ப்போர் செய்திளைத்து இறுதியில் மல்யுத்தம் செய்ய முனைந்தனர். அதனைக் கண்ட வெடியரசன் இருவரையும் விலக்கி உங்கள் அன்னராகிய என்மீது ஆணை இட்டுச் சொல்கிறேன். இருவரும் உங்கள் கோபந்தணிந்து சமாதானமாகுங்கள். எங்களுக்குள் இனிப்பகை வேண்டியதில்லை. நாங்களும் சோழநாடு சென்று திரும்புவோமென்றனன். இருவரும் வெடியரசனின் வேண்டுகோட்கிசைந்து சமாதான மாயினர். வெடியரசனது கட்டும் அவிழ்க்கப்படது. அவனுமாடையலங்காரம் செய்து யாவரும் கப்பலில் காவிரித்துறையை அடைந்தனர்

இதையறிந்த மாநகர் வீதிகளை அலங்கரித்துச் சகல மங்களவாத்தியங்கள் முழங்க மீகாமனை எதிர் கொண்டழைத்துச் சென்று மாளிகையிற் புகுந்தார். மீகாமனாற் கொண்டு வரப்பட்ட மணிகளை யாவருஞ் சென்று பார்த்து உவகை கூர்ந்தனர். மீகாமனுக்கும் பதினெட்டு வரிசைகளும் பற்பல பரிசில்களும், பட்டங்களும் கொடுத்து மாநகர் மகிழ்வித்தார். வெடியரசனுக்கும், விளங்கு தேவனுக்கும் வேண்டிய பொருட்களோடு அவர்களது கப்பல்களையுங் கொடுத்தனுப்பினார். அவர்களும் அங்கிருந்து மீண்டுவந்து இனிமேல் கடலாதிக்கம் எமக்கு வேண்டியதில்லையெனத் திட்டமிட்டு மட்டக் கொழும்பு என்னுமிடத்தில் குடியேறி கமஞ் செய்த வாழ்வாராயினர்.

## *கண்ணகை அம்மன் திருக்கல்யாணம்*

நாகமணி வந்தது கண்டு நன்மகிழ் வடைந்த மாநகர் நன்நாளிலே மாசாத்தருடன் தொடர்பு கொண்டு தாம் நிச்சயஞ் செய்தபடி கண்ணகையாரின் திருமணத்தை நிறைவேற்ற வேண்டுமென மனம் பொருந்தித் திருமண நாளுங் குறித்தனர். திருமணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களனைத்தும் செய்யத் தொடங்கிய மாநாகர், தமது மகளாங் கண்ணகையாருக்குரிய கவின்மிகு ஆபரணங்களைச் செய்விக்கும் போது சிலம்புக்குரிய பொன்னை உருக்கும் சமயத்தில் அப்பெண் மேற்குத்திசைப்பக்கமாக சூரியனுதயஞ் செய்வது போல் வேகமாக உருகிக் துற்சகுனங் காட்டிய போதும் வீதிமறைப்பின் பராமுகத்தால் சிலம்பும் நாகமணி உள்ளீடாக நவரத்தினங்கள் பதிந்து நன்கமைக்கப்பட்டது.

மேலும் மாந்தை நகரிலிருந்து வரவழைக்கப் பட்ட தபதியர்களினாலே மனமண்டபங்கள், மஞ்சனச் சாலைகள் , மணமேடைகள் முதலியனவும் அங்கு பணியாற்றும் சூத்திரப்பாவைகள் முதலாக வேண்டி யனைத்தும் வேண்டிய வாறே அமைக்கப்பட்டன. திருமணத்திற்கு வருமாறு சகல தேயத்தவர்களுக்கும் திருமணவோலைகள் மூலமாகவும், தூதர்கள் மூலமாகவும் அறிவிக்கப்பட்டது. யாவரும் வந்தனர். முகூர்த்தமும் நெருங்கியது.

மணமகனாம் கோவலனுக்கும், மணமகளாகிய கண்ணகைக்கும் மஞ்சள் நீராட்டி ஈரம் புலர்த்தி ஆடையாபரணங்களினாலே அலங்கரித்து இருவரையும் மணச்சாலையின் கண் அழைத்து வந்தமர்த்தினர். விவாகச் சடங்குகள் வெகு விமரிசையாக நடந்தன. மணமாலை சூடி மாங்கல்யம் தரித்து அறுகரிசி சொரிந்தாசீர்வதித்துச் சுடர்த்தட் டேந்தியாலர்த்திக் கண்ணூறு தீரக் கவின் மிகு திலகமிட்டு அரசாணி சுற்றி வலம் வந்து அம்மி மிதித்து அருந்ததி காட்டி மாளிகையிற் புகுந்து மணச் சோறருந்தி மஞ்சத்தமர்ந்தனர்.

மஞ்சத்தமர்ந்த மணமகனாங்கோவலன் மாதுநல்லாள் கண்ணகையின் மாண்புமிகு தோற்றங் கண்டு கண்ணும், நெஞ்சும் களிகூர காதல் கூர்ந்து காதல் மது உண்டான் போல் மயலாகித் தன் காமவேட்கையைத் தனிக்கக் கருதிக் கண்ணகி பால் நண்ணினன். அவ்வாறு கோவலன் கண்ணகையை அணுகத் தொடங்குஞ் சமயத்தில்

*தொடங்கு கின்றவளவு தனிச்.. துய்யபுகட் கோவலர்க்கும்*
*மடம் பொருந்துங் கண்ணகைக்கும்.. மாறு கொண்டங்*
*கிடையாக*
*இடம் பொருந்து மக்கினியொன்.. றெழுந்தெரிந்து கொழுந்து*
*விட்டு*
*தடம் பொருந்து முகட்டளவும் .. சாரநின்று தளிர்த்ததுவே*

இவ்வாறிருவருக்குமிடையில் உண்டாகிய அக்கினிக் கொழுந்ததைக் கண்ட கோவலன் அஞ்சி அம்மையாங் கண்ணகையைப் பார்த்து, நான் உன்னருகில் அணுகும் போது இவ்வக்கினிச் சுவாலை உண்டான அற்புதம் யாதென வினவினார். அதைக்கேட்ட கண்ணகையாள் கோவலனைப் பார்த்து நான் உங்களுக்கோர் பரம இரகசியத்தை இன்று ரைக்கிறேன். இதை நீர் எவருக்கும் சொல்லாதிருத்தல் வேண்டும். சொன்னால் இதனால் நடக்க வேண்டிய காரியங்கள் கெட்டழிந்துவிடும். நான் ஓர் தெய்வீகம் நிறைந்த அவதாரப் பெண்ணாக வந்தவதரித்தவள். என்னை நீரணுகுவீராயின் இங்குண்டாகி மறைந்த அக்கினியால் எரிந்து நீறாகி விடுவீர். நான் உலகாசாரப்படி உங்களால் மணநாண் பூட்டப் பெற்றதற்கமைய உமக்குரிய தொண்டுகளைப் புரிந்து பார்ப்பவர்கள் கொண்டாடும் பத்தினி போல் வாழ்ந்து வருவேனெனக் கூறி அருளினார். இவ்வற்புதத்தைக் கண்ணகையார் வாயாற் கேட்டறிந்த கோவலன், ஆரணங்கே உன் பெருமைகளை இன்ன தென்றறியாத நான், இன்றுன் வாயிலாக அவ்வற்புதங்களை அனுபவங்கள் மூலமாக அறிந்தும் உன்னையென் பத்தினியாகப் பெற்றது மென்தவப்பேறன்று உணர்ந்தேன். இனியுன் சொற்படியே நடந்து கொள்கின்றேனென்று உறுதியளித்துத் தனித்தனி மஞ்சத்துறங்கினார்.

## *அரங்கேற்று அல்லது மாதேவி கூத்து*

புண்ணிய புருடர்களென்று பூதலம் போற்றும் புகழால் மேம்பட்டவர்களும் புகலரிய புதுமைகளைச் செய்ய வல்லவர்களுமாகிய முப்பத்து முக்கோடியென்று மூதறிஞர்களால் கணிக்கப்படுகின்ற தேவர்கள் வாசஞ் செய்கின்ற பொன்னுலகத்தில் இராசதானியாக விளங்கும் இந்திர புரியென்றழைக்கப்படுகின்ற அமராபதியிலே அமரரனைவருக்கும் இறைவனாகிய தெய்வேந்திரன் தன் கொலுமண்டபத்தில் வீற்றிருக் கின்றான். கொற்றக் குடை நிழற்றக் குளிர்சாமரமிட்ட கோதை நல்லார் பலர் நின்று குற்றேவேல் புரியத் தேவர்கள் வந்து திருவடிகள் தொழுதேத்த அருந்தவ முனிவர்கள் ஆசிகூறி வாழ்த்தெடுப்ப அநேக மங்கள வாத்தியங்கள் அலை கடல் போல் முழங்க அத்தானி மண்டபத்தில் அமர்ந்திருக்கும் அமரேந்திரன் முன்னிலையில் அன்று ஊர்வசியின் நடனம் நடைபெறுகிறது.

மார்பகத்தின் கண்ணேயலங்கரிக்கின்ற மணிமுத்து மாலைகள் அசைய மணிமேகலா பரணமானது மருங்கிற்றிவள நவரத்தின சகிதமாகிய நற்பணிகள் நங்கை நல்லாள் மேனியெங்கும் பொங்குமெழில் பரப்ப அசைந்தாடுமழகார்ந்த பொற் கொடி போல் அணங்கின் நல்லாளான அவ்வுருப்பசி ஆட, அருகிருந்து கானப்பிரியராகிய நாரதமகா முனிவர் கந்தருவர்களுங்கண்ட அதிசயிக்கும் வண்ணமாகத் தனது யாழை வாசித்த இன்னிசை யோடெழா நின்று பண்ணோடமைந்த பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கின்றார். தெய்வேந்திரனாதி தேவர்கள் பலரும் அன்றைய நடனத்தைக் கண்டு ஒன்றுமில்லாத வண்ணம் இன்று இவ்வூர்வசியின் நடனம் இவ்வளவு பிரமாதமாக இருக்கின்றதே என்று பெருமகிழ்வெய்தி அற்புதமடைந்தவர்களாய் ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அச்சமயத்தில் அவ்விடத்தெய்திய அமரேந்திரன் குமாரனாய சயந்தன் ஆடலழகியாம் ஊர்வசியை ஆவல்மிக உற்று நோக்கினன். அவளது கண்களும் அவன் மேற் பாய்ந்தன. கண்ணோடு கண்ணினை நோக்கொத்த மாத்திரத்தில் கரைபுரண்டெழுந்த காதற் பிரவாகம் இரு வருள்ளங்களிலும் பிரவாகித்தது. அந்நேரத்தில் அலைகடல் மீதெழுந்த பூரணசந்திரன் போற் பொலிவுபெற்று விளங்கிய சயந்தனது காதலால் தன்வயமிழந்த ஊர்வசி மெய் மறந்து வியர்வை கொள்ள மேனி பசலை பூர்ப்ப வலியிழந்து சயந்தனைப் பார்த்துக் கைகூப்பி வணங்கி கதி அழிந்து மயங்கி வீழ்ந்தாள். இவ்வாறு மோகங் கொண்ட ஊர்வசி ஆகங்குழைந்து அறிவற்ற வனியில் வீழ்ந்ததைக் கண்ட நாரதருக்குத்

திகைப்பாகவிருந்தது. இவனிவ்வாறு விழுந்த தற்குரிய காரணம் யாதெனச் சிந்தித்தார். சிறிதில் உணர்ந்தனர். உண்மையை உணர்ந்த நாரதருக்கு உண்டான கோபத்துக்கு அளவேயில்லை. ''ஊர்வசியாகிய உனது நடனத்தின் பொருட்டு நாரதன் ஆகிய நானேயிருந்து யாழ் வாசித்தினிமையாகப் பாடியும் நீ உதாசீனம் செய்து ஒழுங்கு வழியாடாது உன் மனத்தை அற்ப ஆசையின் மாட்டலைய விட்ட காரணத்தினால் நீ பூவுலகு சென்று கணிகையாகப் பிறப்பாயாக'' என்று சபித்துச் சயந்தனைப் பார்த்து 'நீயும் இவள் மீது கொண்ட போகத்தைத் தீர்க்கும் பொருட்டுக் கன்ம பூமியாகிய காசினியிற் பிறந்து கணிகையாமிவள் மீது மோகங் கொண்டு முடிவில் இறந்துபடுவாயாக' என்று சாபமிட்டருளினார். அவ்வாறே இந்திரன் குமாரனாகிய சயந்தன் சோறுடைத்தென்று யாவராலும் புகழப்படுகின்ற சோழவள நாட்டிலே காவிரிப் பூம் பட்டணத்திலே வாழ்ந்த மாசாத்தராம் மாவணிகரின் மைந்தன் கோவலனாகப் பிறந்து கண்ணகையை கடிமணஞ் செய்திருந்தான்.

அவ்வாறே நாரதரிட்ட சாபத்துக்காளான நங்கை நல்லாள் ஊர்வசியும் சோழநாட்டிலே சிறப்புற்றுத் திகழ்ந்த திருக்கடையூரிலே கணிகையாகிய ''சித்திராபதி'' வயிற்றிற் சித்திரப்பாவை தானோ என்று கூறும்படியாகச் சிறந்த பெண்மகவாகத் தோன்றினாள். தமது தவப்பயனென வந்தவதரித்த தையல் நல்லாளுக்குத் தாயுந் தந்தையும் 'மாதேவி' என்று பெயரிட்டுப் பொற்றொட்டில் ஏற்றித் தாலாட்டி சீராஞ் சிறப்போட வளர்த்து வருவாராயினர். மாதேவியும் மதிக்கலை வளர்வது போல் மாநிலம் போற்ற வளர்ந்து ஐந்தாவது வயதிலே ஆசானிடம் சென்று சுபமுகூர்த்தத்தில் கல்வி கற்கத் தொடங்கிச் சகல கலைகளையுங் கற்று வரும் காலத்தில் மாதேவியார் தனது குலத்தொழிலாகிய நாட்டியத் தொழிலையுங்கற்க வேண்டுமென விரும்பிய பெற்றோர் சோழராசனால் பல விருதுகளவித்துப் பாராட்டுப் பெற்ற சிறந்த வித்தகனாகிய நட்டுவனாங் காளிங்கன் என்பவனிடம் நல்ல சுபமுகூர்த்தத்திற் சென்று நாட்டியக் கலையையும் கற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினர். மாதேவியும் ஆரம்பக் கல்வி முதலாக நாட்டியக் கலையீறாகத் தாம் கற்க வேண்டியதாகிய எண்எழுத்து, இசை இறாக தாளங்கள் பண், பாடல்கள், நாட்டியங்கள், நடனங்கள், கூத்து வகைகள் ஆகியனைத்தையும் எவரும் அதிசயிக்கும் வண்ணம் பயின்று வல்லுனராயினன்.

*எண்ணுமெழுத்து மிசை மூன்றும் பண்ணேழும்*
*பண்ணமைத்த சடத்துப் பதினொன்றுங் – நண்ணிய*
*சீர்*
*உற்றபதினென் கலையுமுணர்ந் துவமையறங்*
*கற்றனளே மாதேவியாள் காண்*

இவ்வாறு கற்று வருநாளில் மாதேவிக்குக் கன்னிப்பருவமும் வந்தெய்தியது. பருவத்தில் கன்னி பன்னரிய கலைகளிற் கலைக்கன்னி, கன்னியழ கொழுகுங் கட்டழகிற் கமலையாக விளங்கிய மாதேவியார் தனது ஆசானாகிய 'காளிங்கன்' எனும் நட்டுவனிடம் சொல்லி

*''பற்றுலகில் நல்ல நடம் சங்கீதம் பாவழகில்*
*மற்றுமிவள் சூடாமணி யென்று – உற்றதொரு*
*மட்டவிழ்த்தார் பொன்னி வளநாட்டிலே விருது*
*கட்டுவித்தான் மாதவியாள் காண்''*

நாட்டிய சூடாமணி யென்று விருது கூட்டி வீற்றிருக்கிறாள். அப்போதவள் கலைத்திறன் கண்டு அழுக்காறு கொண்ட நட்டுவர்கள் அவளது விருதுக் கொடியை அறுக்க வேண்டுமென அவாவுற்றவர்களாய் சோழராசனிடம் சென்று மாதேவி விருதுகட்டி எங்களெல்லோரையும் ஏளனஞ் செய்கிறாளென்று முறையிட்டனர். அதைக்கேட்ட சோழராசன் அதனை நான் நன்கறிந்து ஆவன செய்கின்றேனென்று காளிங்கனை அழைத்து நான் உனது மாதேவியாளின் நடனங்காண வேண்டுமென்றும் அதற்குரிய முகூர்த்தத்தைக் குறித்து அழைத்து வருமாறு கட்டளை இட்டான். நடன அரங்கும் முறைப்படி அமைக்கப்பட்டது. மாதேவியை அழைத்து வருமாறு தூது போக்கினான் சோழமன்னன்.

அந்நேரத்தில் அங்கு தோன்றிய விஞ்சையன் ஒருவன் சோழராசனை வணங்கினான். நீயார் இவ்விடம் வரக் காரணம் யாதென வினவிய சோழராசனை

விஞ்சையன் பார்த்து மன்னா நான் பொன்னுலகத்திலிருந்து வந்திருக்கின்றேன். இன்று மாதவியின் நடனம் காணவென்றே நாட்டம் கொண்டு வந்தேன். மாதேவியின் நடனம் மண்ணுலகிலுள்ளவர்கள் காணக்கூடியதொன்றல்ல. அவள் தேவமாதர்களில் ஒருவராகிய ஊர்வசியாவாள் என்று மாதேவி கோவலன் ஆகிய இருவரது பூர்வீகங்களையெல்லாம் எடுத்தும் புகன்றான். அவை அனைத்தையும் கேட்ட அரசன் ஆச்சரியமடைந்தனாய் இவ்வுண்மைகள் முழுவதையும் இன்னும் இருந்து பார்ப்போம் என்று விஞ்சையனோடு அரங்கேற்று மண்டபத்தையடைந்தான். அங்கே அரசனது கட்டளைப்படி அடையாபரண அலங்காரியாக அடரங்கில் வந்தடைந்த மாதேவி முதற்கண் மன்னனை வணங்கினாள். அவ்வளவில் மங்கள வாத்தியங்கள் யாவும் முழங்கின. பலவகை ஆரவாரங்களும் அலைகடல் போலொலித்தன.

அன்று கோவலன் கண்ணகியைத் திருமணஞ் செய்த நாலாந் நாள் மாதேவியின் நடன அரங்கேற்ற ஒலியானது கோவலன் செவிகளிற் படவே யாதென வினாவியறிந்த கோவலன் நடன அரங்கை நோக்கிப் புறப்படுகின்றான். அதைக்கண்ட மாநாகர் மாதேவி மையல் வினைப்பாளாகையிலங்கு போவது தகுதியல்லவெனத் தடுத்துக்கூறியும். அப்படியெதுவும் நடந்து விடாதெனத் தெரிவித்து புறப்பட்டுச் சென்ற கோவலன் அரங்கேற்று மண்டபத்தையடைந்து சோழனை வணங்கியவர் பக்கத்திலிருந்து நடனங் காண்கின்றான். மாதேவி, கோவலனாகிய இருவரது மனமுங் கண்ணும் ஒன்றோடொன்று மோதுகின்றன.

மாதேவியார் உரியமுறைப்படி இராக தாள வகைகள் தவறாத வண்ணம் யாவரும் பார்த்தும் கேட்டும் மகிழுமாறு நடனங்கள், நாட்டியங்கள், கூத்து வகைகள் ஆதியாடல் பாடல்களையெல்லாம் மிகவும் அழகாகவும், இனியவையாகவும் ஆடிப்பாடி அரங்கு ஏற்றினாள். பார்த்தவர்களனைவரும் பரவசமடைந்து அற்புதமற்புதமென மகிழ்ந்து மாதேவியைப் பாராட்டினர். மன்னவனாகிய சோழேசனும் அவ்வாறே மகிழ்ந்து மாதேவியாருக்கு வேண்டிய ஆடையாபரணங்களையும், பொற்காசுகளையும் வழங்கியும் திருப்தியடையாதவனாய் ஆயிரத்தெட்டுக் கழுஞ்சு பொன்னரிமாலை ஒன்றையும் வெகுமதியாகக் கொடுத்து இன்னும் வேண்டுவதியம்புதி என வினவினான்.

அப்போது மாதேவி மன்னனைப் பார்த்து மாநிலம் போற்றும் மன்னர் மன்னா! நான் பிறக்கும் போது என்னோடுடன் பிறந்த முத்தாபரணமொன்று என் கழுத்தில் இதோ உள்ளது. இதனை நான் அறுபதடிக் கம்பத்தின் மீது நின்று ஆகாயமார்க்கமாகச் சுற்றி வீசுவேன். இது யார் கழுத்தில் விழுகின்றதோ அவரை நான் என் கணவராக ஏற்று இல்லறம் நடாத்துவதற்கனுமதி தரவேண்டும். என்று பணிவுடன் வேண்டினள். அரசனுமதற் கியைந்தனுமதி கொடுக்கவே மாதேவியார் கம்பம் மீதேறினாள்.

கம்பத்தின் மீதேறிய மாதேவி தான் கற்றறிந்தாடிய கம்பங் கூத்தையுமாடியீற்றில் தனது முக்காரத்தைக் கழற்றி எறிய ஆரம்பிக்கும் போது தாயாகிய சித்திராபதி முத்து மாலையைக் கோவலன் கழுத்தில் விழும்படி எறிவாயாக என்று வேறெவருமறியா வண்ணம் வீணாகானம் செய்தாள். அதையுணர்ந்த மகளாம் மாதேவியும் அவ்வாறே அம்மாலை கோவலன் கழுத்தூற வேண்டுமென்று கடவுளை நினைந்து வணங்கி மாலையை வீசினாள். வீசிய மாலையும் வினை வசத்தால் போலும் விண்மீது சென்று சுற்றி வந்து ஆடரங்கில் அமர்ந்திருந்து ஆவலோடு தங்கள் கழுத்தில் விழ வேண்டுமென அவாவுற்றிருந்த அனைவரையும் விலக்கி, ஆடவர் திலகனான மணமகள் கோவலன் கழுத்தில் வந்துற்றது.

மாதேவியர் மனம் திரிந்தபோதுங் கணிகைபாற் சேரல் கௌரவக் குறைவாகுமென்றுணர்ந்த கோவலன் வெகுண்டெழுந்து விரைவாக மாலையைக் கழற்றி வீசவே மாலை மறுபடி சென்று மாதேவி கழுத்துற்றது. இவ்வாறாக மாதேவியார் மும்முறை வீசியும் மும்முறையும் வீசப் பெற்ற முத்தாரம் கோவலன் கழுத்திலேயே வீழ்ந்தலங்கரித்தது.

அதனைக் கண்ட மாதேவி கம்பத்தினின்று இறங்கினாள். வணிகர் குலதிலகராகிய கோவலர் தங்களுடன் தடையின்றி மனம் பொருந்தி வாழமாட்டாரென்றறிந்த சித்திராபதியின் மாதேவியின்

கரத்தில் ஒருவகை லேபனத் தைலத்தையும் தடவி வசியமாவதற்குரிய இருமருந்து பூசிய தாகிய தாம்பூலத்தையும் அவன் கையிற் கொடுத்து இத்தாம்பூலத்தைக் கோவலருக்குக் கொடுப்பாயாக வென கூறி விடுத்தனர். அங்கு நின்றவை கண் வந்த மாதேவி கோவலனைத் தன்னுடன் வருமாறழைக்க செட்டிக்குந் தாசிக்குந் தொடர்பில்லையெனக் கோவலன் மறுத்தனன். அப்போது மாதேவியாள் மனமுடைந்த வளாய் "அப்படியாயின் இத்தாம்பூலத்தையருந்தி எனது மாலையைத் தந்தருள்க." எனக் கூற அதற்கிசைந்து மாதேவியாற் கொடுக்கப்பட்ட தாம்பூலத்தை வாங்கியருந்தினார்.

வெற்றிலையை அருந்திய கொற்றவன் போற்கோடானு கோடி தனம் படைத்த கோவலன் மாதேவியிட்ட மருந்தினால் மையல் மிக்கடையவனாய் மதியிழந்து மனமுடைந்து மாதேவியாரைப் பின் தொடர்ந்தனன். கோவலன் தன்னை விட்டுப் பிரியானென்ற உண்மையை உணர்ந்த மாதேவி தான் கோவலரைக் கணவனாக ஏற்றுக் கொள்வதனால் கோவலன் தன்னனுமதியின்றித் தன்னை விட்டுப் பிரியக் கூடாதென்றும், தன் மனைவியாகிய கண்ணகையாரிடம் போகக் கூடாதென்றும், நாளொன்றுக்கும் தனக்கு ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் பணயமாக செலுத்தவேண்டுமெனவுந், தவறுங் காலத்திற் கோவலன் தனக்கு அடிமைப்பட்டவனாய் ஏவல் புரிய வேண்டுமென்றும் சோழனது முன்னிலையில் நிபந்தனையிட்டாள்.

நாரதரிட்ட சாபத்தால் நங்கை நல்லாள் மாதேவியின் மையல் வலையிற் சிக்கி மாநிலத்தில் மடிந்தொழியும் பொருட்டு வந்தவதரித்தவன் ஆகிய கோவலன் காம மயக்கத்தால் கருத்தழித்து, காரிகையாம் மாதேவியின் கருத்துக்கிசைந்து சோழராசன் முன்னிலையிலேயே சகல நிபந்தனை களுக்குமாகித் தான் நடந்து கொள்வதாக உடன்படிக்கை செய்து கொள்கின்றான். பின்னர் இந்த உண்மையை உலகறிந்து கொள்ளும் வண்ணமாக மாதேவியின் வேண்டுகோட்படி சோழரானது பட்டத்து யானை மீதமர்ந்து சோழ நாட்டைச் சுற்றி வலம் வருகின்றனர். யானை மீதமர்ந்த கோவலனும், மாதேவியும் நகர்வலம் செய்யும் போது கண்டவர்களெல்லோரும் கோவலனின் ஊழ்வினை இதுவோவென்றுள்ளுடைந்து வருந்தினர். ஆடலழகி யாம் மாதேவியாரின் மணமாலையைப் பெறும் வாய்ப்பு நமக்குக் கிடைக்க வில்லையேயென்று மனமுடைந்த காளையர் பலர் கோவலன் மீதழுக்காற்றடைந்தனர். கண்ணகையாரோ தனது கணவராகிய கோவலனாரின் மணக்கோலங் காணயான் செய்தமாதவப் பயன் யாதோ என்று மனமகிழ்ந்து அவர்கள் வரும் வழியில் பூரண கும்பம் பொலிவித்து விளக்கேற்றிச் சுடர்த்தட்டேந்திய தோழியர்கள் மூலம் ஆலாத்தியெடுத்து உபசரித் தருளினார். அந்நேரத்தில் கோவலன் நாணம் மிகுந்தவனாய் தலைகவிழ்ந்தப்பாற் சென்று மாதேவி வீட்டிற் போய் மதனும், ரதியும் போல் மலரனை மேவி மகிழ்ந்தினிதிருந்தனர்.

## கோவலரைப் பொன்னுக்கு மறித்த கதை

ஈருடலும் ஒருயிரும் போல் இணையில்லா இன்பந் நுகர்ந்திருந்த கோவலனும் மாதேவியும் இன்னலென்பதை அறியாதவர்களாய் இருவர் மனமுமொன்றாகி உண்டுடுத்து ஆடல்பாடலாதியாம் இன்ப நிகழ்ச்சிகளில் திளைத்தமையினால் நாட்கள் போவதே தெரியாமல் மறைந்தன. ஆறுவருடங்கள் அவை ஆறு நாட்கள் போல் அவர்கள் வாழ்நாளிற் கழிந்தன. அதற்கிடையில் நாளொன்றுக் ஆயிரத்தென் கழஞ்சு வீதம் பணயம் நல்கியதால், ஆணழகன் கோவலனின் அருநிதிக் குவியல்கள் ஆல் நல்லாள் மாதேவியின் மாளிகையிற் குவிந்தன.இதற்கிடையில் கோவலனது செய்குத்துக்கள் கப்பல்களிறகக் காணி பூமிகள், கால்நடைகள், யாவும் விலைப்படக் கோவலன் வறியவனானான். அவ்வாறவன் வறியவனானது மட்டுமல்ல மாதபொன்றுக்குரிய பணயக்கடன் காரனுமாயினன்.

ஒரு மாதகாலமாகப் பணயந் தவறியதால் கோபங்கொண்ட மாதேவியின் தாயாரான சித்திராபதி மாதேவியைப் பார்த்து இன்னுமேன் கோவலனிடம் குறித்த பொன்னை நீ வாங்கவில்லை. ஒரு மாதத்திற்குரிய பொன்னிலொன்றுங் குறையாமல் வாங்க வேண்டும் அல்லது அவனைப் பிடரியிற் பிடித்து தள்ளிவிட வேண்டுமென்று வற்புறுத்தினாள். மாதேவியார் கணிகையர் குலத்திற் பிறந்தாலுங் கற்பு, ஒழுக்கங் குன்றாதவளாகையால் கணவனாங்

கோவலனைப் பிரிதலாற்றாளாய் தாயைப் பார்த்துத் தாயே! தாலிகட்டிய தன்மனைவியாகிய கண்ணகையாரையும் மறந்து அன்று முதலின்றளவும் ஆறு வருடங்களாக என்னையே உறுதுணையாகக் கொண்டு நான் கேட்டுக் கொண்டபடி பணயமுந்தந்து பாதுகாத்து வந்தவராகிய என் கணவரை இன்று வறியவராகி விட்டாரென்று தள்ளிவிட நீதியுண்டோ? அவர் இன்றல்ல நாளையேனும் நமக்குத் தரவேண்டிய பொன்னைத் தருவாரென்றுரைத்தாள்.

அதைக் கேட்ட சித்திராபதி கோவலனோ வறியவனாயினன். மாதேவியோ கோவலனைப் பிரிவதற்கு மனமிசையாதவளாயினள். ஆதலினால் எப்படியும் இதற்கொரு சூழ்ச்சி செய்து இவர்களைப் பிரிக்க வேண்டுமெனத் துணிந்து இருவரையும் வேறு கூறாக்கும் மருந்து சேர்க்கப்பட்ட பலகாரமொன்றைச் செய்து மாதேவிக்குண்ணுமாறு கொடுத்தாள். அம்மருந்தின் வலிமையினாலே மாதேவியாரின் மனம் மாறியது. கோவலன் மீது கொண்ட அன்பு ஆசாபாசங்கள் அனைத்துமவளை விட்டகன்றன. அவற்றுக்குப் பதிலாக அவன் மீது வெறுப்பும் ஆத்திரமுங் கொண்ட மாதேவி தன் பணயப் பொருளை வாங்கிக் கொண்டு அவனைக் கொன்று விடத் திட்டமிட்டாள்.

ஒரு நாள் மாதேவி கோவலனை மடியிற் பிடித்து இழுத்து வீழ்த்தி நீ கூறிய படி கடந்த காலமாகிய ஒரு மாதத்துக்குரிய முப்பத்தினாயிரத்து இருநூற்று நாற்பது கழஞ்சு பொன்னையும் இப்போது தருகின்றாயா? இல்லையா? எனக் கேட்டாள். மாதேவியின் மனமாற்றங் கண்டு வியப்படைந்த கோவலன் மானே இப்போது என்னிடம் பொன்னேது நீ அறியாயா? இன்றில்லை இன்னும் சில நாட்களில் தந்து விடுகின்றேனென்றனன். அதைக்கேட்ட மாதேவி அடங்காக் கோபங் கொண்டவளாய் இப்பொழுதே எனது பொன்னைத் தரவேண்டும். இல்லையேலுன்னைச் சும்மா விடமாட்டேன் என்று கோவலரது கைகளைக் கட்டிச் சுடுமணலில் நிறுத்தி நெற்றியிற் கல்லுவைச் சவுக்காலடித்துத் தண்டித்துப் பொன்தந்தாலொழியக் கட்டு அவிழேனென்று கனன்று செல்கிறாள்.

கட்டியடித்தாலுங் கையிலில்லாப் பொன் வருமோ வென்றழ திரங்கிய கோவலன் தன் வாழ்வின் மாற்றங்களையெல்லாம் நினைந்து சுடுமணலில் சூரியனின் கிரணங்கள் கருக்கக் கதிரவனைப் பார்த்த வண்ணம் பதைபதைத்து என் செய்வேனென்று ஏங்கியழும் போது கண்ணகையாரின் நினைவு வருகின்றது. கற்பரசியாங் கண்ணகையே, அன்று மணவறையில் மேவிய போது எங்கள் இருவருக்குமிடையில் எழுந்தெரியும் பெரு நெருப்பை உண்டாக்கிய நீ எங்கள் குலதெய்வமல்லவா உன்னைப் பிரிந்து இம்மாதேவியைப் பின் தொடர்ந்ததாலல்லவா நான் இன்று இத்துயரத்துக் காளானேன். பேசுதற்கரிய பிழைகாரன் ஆன காரணத்தால் அவதியுறுமென் அல்லல் நீயறியாத தல்ல ஆசையென்னும் பாசவலையிற் சிக்கி அறிவிழந்து கணிகை பாற் சென்று கருத்தழிந்து நின்று கதியற்றுத் திகைக்கும் எனது குற்றத்தை மன்னித்தெனக்கருள் புரிய வேண்டும்.

*இலையில் சேர் விழியாளே– இத உனக்குத்*
*தெரியுமடி*
*கலைமுழது மளந்தவள் நீ – கற்பிலொரு தெய்வமும்*
*நீ*
*வலையறுக்கும் சுடரயில் நீ – மனதிலொரு*
*விளக்கொளி நீ*
*நிலைபார்த்தேன் வினையகற்ற – நீயருள்*
*செய்மாமயிலே.*

என்று நெஞ்சுருகி நின்று கண்ணகையாரைக் கோவலன் வேண்டுதல் செய்யும் பொழுது எங்கும் நிறைந்து நின்று அங்கங்களைத்தையும் ஆட்டுவிக்கும் ஆதிபராசக்தியும் அவதாரமாகிய கண்ணகைவார் அக்கோவலக்குற்ற துன்பத்தை நீக்கத் திருவுளங் கொண்டு தன் பாங்கியாரை அழைத்துத் தனது மணியணிப்பணிகள் பலவற்றையும் எடுத்துக் கொடுத்துத் தனது கணவரிடம் கொண்டு போய்க் கொடுத்து மாதேவியின கடனைத் தீர்த்ததன் பின் அவர் வருவதற்கு விரும்புவாராயின் சிவிகையில் ஏற்றியழைத்து வருமாறும் வருவதற்கு மனமில்லாது இன்னும் மாதேவி மேல் மையல் உளதாயின் நாகமணி சிலம்பிருக்கிறதென்றும் அதைவிற்றால் ஆறு நூற்றாண்டுகளானாலும் அல்லல் இன்றி ஆனந்தமாக

மாநிதியங் கொடுத்த மாதேவியை மருவி வாழலாமென்றுங் கூறிச் சிவிகையுங் கொடுத்தனுப்பு கின்றான்.

சிவிகையுடன் சென்ற சேடியர் கோவலனாரைக் கண்டு மணியணிகளெல்லா வற்றையும் அவரிடம் கொடுத்துக் கண்ணகையார் கூறியனுப்பிய செய்திகளையும் விண்ணப்பம் செய்து நின்றனர். அதைக்கேட்ட கோவலர் நான் மாதேவியின் அனுமதியின்றி எதையும் செய்ய முடியாத வகையில் சத்தியம் செய்திருப்பதால் அவளுக்குக் கொடுக்க வேண்டிய பணம் முழுவதையும் கொடுத்ததன் பின்னர் எப்படியாவது விடை பெற்று வீடு வந்து சேருகின்றேன். நீங்கள் போங்களென்றனுப்பி விட்டு மாதவியை அழைத்து ஆபரணங்களனைத்தையும் அவள் கையிற் கொடுக்கின்றார். அவளும் அதை வாங்கித் தாய் கையிற் கொடுக்கத் தாயாரும் அதனை உருக்கியுரைத்த மாற்றறிந்து நிறுத்துப் பார்த்த போது மேலும் இருநூற்றி நாற்பது கழஞ்சு பொன் கோவலனாற் கொடுக்க வேண்டியதாறிருந்தது. அந்நேரத்தில் மாதேவியினாற் கட்டவிழ்க்கப்பட்டுக் கட்டினின்றும் நீங்கிய கோவலன் மாதேவியைப் பார்த்து மாதே! என் மனைவி கண்ணகையார் சன்னி சுரத்தால் பீடிக்கப்பட்டு இறக்குந் தறுவாயில் இருப்பதாகச் செய்தி வந்துள்ளது. மாங்கல்யம் தரித்த காரணத்தினால்அவளுக்கு நான் செய்ய வேண்டிய அந்தியக் கடமைகளைச் செய்வதற்குக் கடமைப்பாடுடையேன். ஆதலால் நான் போய் அவைகளைச் செய்வதற்கு எனக்கனுமதி தருகவென்று வேண்டினான்.

அப்போது மாதேவியார் மிகுதியாகவுள்ள எனது பொன்னை எப்போது தருவீர்களென்று வினாவ, இன்னும் சில நாட்களுக்குள் தந்து விடுகிறேனென்ற கோவலனை அப்படியாயின் நீர் காவிரியாற்றின் கழுத்தளவு தண்ணீரில் நின்று சத்தியம் செய்து தருவீராயின் விடை தருவேனென விளம்பினாள். அதற்கிசைந்த கோவலன் காவிரியாற்றிற் சென்று இறங்கும் போது கூடிச் சென்ற மாதேவியார் அவரை ஆற்றில் தள்ளி வீழ்த்திவிட்டு வீடு திரும்பினான். எதிர்பாராத வகையில் ஆற்றிலமிழ்த்திய கோவலன் கண்ணகையாரை நினைக்கவே அவரின் திருவருளாலங்குள்ள சுறாவினங்கள் அவரைச் சுமந்து வந்து கரையில் விடுத்தன. கரையடைந்த கோவலன் மாதேவியின் வீட்டில் வந்து விடை தருமாறு கேட்டனன்.

ஆற்றினின்று ஆருயிர் பிழைத்தானென்று அதிசயமடைந்த மாதேவி கோவலனைப் பார்த்து நீர் போக வேண்டுமாயின் கற்கிணற்றிற் சென்று இந்தக் கும்மா குடத்தில் ஒரு குடந் தண்ணீர் கொண்டு வந்து வைத்து விட்டுப்போம். நான் உமது ஞாபகமாகப் பார்ப்பதற்கென்று பகர்ந்தனன். அவ்வாறுடன்பட்ட இருவரும் கிணற்றுக்குச் சென்று கோவலன் தண்ணீரள்ளும் சமயத்திலவனைக் கிணற்றினுள் தள்ளி வீழ்த்திப் பாரியதோர் பாறாங்கல்லையும் மேலே வீழ்த்தி வீடு திரும்பினாள் மாதேவி. அம்மாதேவியினாற் கிணற்றில் வீழ்த்தப்பட்ட கோவலன் கண்ணகையாரை நினைக்கவே, தலைக்கு மேல் வந்தகல் இடையில் அசைவற்று நின்று நிழல் கொடுத்தது. அச்சமயத்தில் கிணற்றிலுள்ள நீரானது பொங்கிப் பிரவாகித் தெழுந்த கோவலனைக் கொண்டு வந்து தரையிற் சேர்த்தது. வெளியே வந்த கோவலன் மாதேவி பாற் சென்று மனைக்கே விடைதருமாறு வேண்டினான்.

வேறு வழியில்லையெனக் கண்ட மாதேவி உமது ஆடையாபரணங்களை எனக்குத் தருவீராயின் அனுமதி வழங்குவேனென்றனள். அவ்வண்ணமே அரைஞான் முதலாக அவள் முன் கழற்றி வைத்து ஆத்திநாருங் கோவணமுமாக விடை பெற்று வீடுவந்த கோவலன் இக்கோலத்தில் நான் எப்படிக் கண்ணகையார் முன் இப்பொழுது போவது இரக்காலமானதும் போவோமென்று ஓர் ஆல மரத்தின் மீதேறியிருந்து பசியின் கொடுமையால் அதன் கண்ணுள்ள பழங்களைப் பிடுங்கி உண்ணுகின்றான்.

தண்ணீரெடுக்குமாறு அவ்வழியே சென்ற கண்ணகையாரின் பாங்கியர் கோவலனைக் கண்டு மீண்டு வந்து கண்ணகையாரிடம் விளம்பினர். கணவர் வந்திருக்கின்றாரென்றதும் அவருக்குரியதாகிய ஆடையாபரணங்களோடு சென்றவரை அழைத்து வருமாறாணையிட அவர்களுமவ்வாறே சென்று கோவலனை வருமாறு விண்ணப்பம் செய்யக் கோவலரும் ஆடையாபரணங்களை அணிந்து கால்

நடையாகக் கண்ணகையாரின் வீட்டுக்கு விரைந்து சென்றார். கண்ணகியாருங் கணவனாகிய கோவலரை எதிர்கொண்டழைத்து ஆசனத்திருத்தி சற்கரை வசனங்களை கூறி மகிழ்வித்து உணவருந்துமாறு செய்து ஒருவரோடொருவர் அளவளாவி நடந்த விபரங்களை ஒருவருக்கொருவர் கூறுகின்றனர்.

அந்நேரத்தில் அவமானத்துக்காளான கோவலன் மதுரை மாநகரம் சென்று வாணிபம் செய்து மாதேவியாரின் கடனைக் கொடுத்து விட்டுத் தாமும் வாழ்வாங்கு வாழவேண்டுமெனத் தெரிவிக்கவே கண்ணகையார் தானும் மதுரைக்கு வருவதாக விருப்பம் தெரிவிக்க இருவரும் புறப்பட்டு இரவோடிரவாகப் பிரயாணஞ் செய்கின்றனர்.

## *சிலம்பு கூறல்*

காட்டு வழிபல கடந்து கண்ணகையாருங் கோவலனும் கால்கடுக்க நடந்து மதுரை மாநகரை அடைந்தனர். ஆங்கேயவர்கள் இடைய சேரியிற் சென்று தம்மை எதிர் கண்டழைத்துச் சென்ற முதுமகள் ஒருத்தியின் வீட்டில் தங்கி இளைப் பாறியதன் பின் சமையல் செய்து சாப்பிட்டு அவர்கள் வீட்டிற் சில பகல் தங்கியிருந்தனர். ஒரு நாட் கோவலன் கண்ணகையாரைப் பார்த்து இடைய சேரியிலிருந்து இடுசோற்றை உண்டிருந்தால் உலககோரம்மை இகழ மாட்டார்களா?

ஏந்திழையாள் மாதேவியின் கடனை நாம் கொடுக்க வேண்டாமா, தன்மானத்தோடு வாழ்வதற் கொரு வழிகாண வேண்டாமோ என்று தன் வேதனைகளை ஒவ்வொன்றாக எடுத்து விளம்பினான். தன் கணவன் தாங்கொணாத் துயரால் வருந்துவதைக் கண்ட கண்ணகையார் தனது காலின் மணிச் சிலம்பைக் கழற்றி மதுரை மாநகரிற் கொண்டுபோய் விற்று வாணிபத்தை ஆரம்பிக்குமாறு சொல்லவே அதற்கிசைந்த கோவலன் காற் சிலம்பைக் கழற்றுகின்றான். சிலம்பு தவறுவதோடு துற்சகுனங்களு முண்டாகின்றன. அதனால் மனமுடைந்த கண்ணகையார், கோவலனுக்கு வேண்டுமறிவுரைகள் பலவற்றையும் எடுத்துச் சொல்லி ஆபத்துக்களிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்து கின்றார்.

அவற்றைக் கேட்ட கோவலன் கண்ணகையாரைத் தேற்றி விரைவில் வந்து விடுகிறேனென்று விழம்பிப் புறப்படும் போது இடைச்சியாகிய முதுமகளை அழைத்துத் தாயே!

*பொன்னே மணிவிளக்கே புருடராகமே*
*பொதுவர்குல நாயகியே பொற்கொடியே*
*அன்னேதவமே யறத்தின் பயனே*
*அடைந்தவர் தமக்குதவு மாருயிர்த்*
*துணையே*
*மின்நேர் பெறுங்காம விறல்பொற்*
*சிலம்பை*
*வெற்றி மதுரா புரியில் விற்றுவருமளவும்*
*தென்னாரு மாலைக்கருங்குழ வென்கின்ற*
*செய்யிளை யுந்தற் அடைக்கலம் அம்மா*

என்று கண்ணகையாரை ஆயர்குலக் கொழுந்தாமாச்சியிடம் அடைக்கலமாகக் கொடுத்துப் புறப்பட்டுச் செல்லுகின்றான்.

செல்லும் மார்க்கத்தில் ஒரு செம்மான் வீடு. வெளியே சென்றிருந்த செம்மான் வேர்த்துக் களைத்து மேனியெல்லாம் மெலிந்து வீட்டுக்கு வருகின்றான். வந்தவன் தன் மனைவியைப் பார்த்துத் தண்ணீர் கொண்டு வருமாறு பணிக்க மடியிற்கைக் குழந்தையை வைத்துப் பாலூட்டிக் கொண்டிருந்த செம்மாத்தி குடத்திலிருக்கிறது வார்த்துக் குடியுங்களெனச் சொன்னாள். தனது கட்டளைக்கமையாமையாற் கடுங்கோபங் கொண்ட செம்மான் மனைவியை அடித்தான். அதனால் ஆத்திரங் கொண்ட மனைவி "அங்கமிராண்டாய்க் கிடப்பாய் அரசனுன்னை முனித்திடுவான். அலியழைக்குமடா அநியாயம் செய்பவனே" என்று வாயில் வந்தபடி கூறி மண்ணள்ளிக் கொட்டித் திட்டுகிறாள். இதனைக் கண்ட கோவலன் ஏக்கங் கொண்டவனாய் இன்னலுற்றிரங்கி யொருவாறு தெளிந்து கடவுளை நினைந்து மனத்தைத் திடப்படுத்தியப்பாற் செல்கின்றான்.

சென்றுகொண்டிருக்கும் மார்க்கத்தில் மலைக் குறத்தி ஒருத்திதென்படவே அவளிடம் சாத்திரங் கேட்கின்றான். அவள் கோவலனுக்கு நடந்ததாகிய விருத்தாந்தங்களையெல்லாம் விபரமாகக் கூறி

நீர்மதுரைக்கேகுவது புத்தியல்ல உமக்கு அரசனாற் பகைவிளையுமெனக்குறி சொல்லுகிறாள். அதனையுங் கேட்டு அளவிலாத் துன்படைந்த கோவலன் ஆலவாயெம்பெருமானே உனது துணையன்றி யொன்றுமறியேனெனத் துணிந்து அப்பாற் சென்று மதுரைமாநகரத்தின் கண்ணுள்ளதாகிய அந்தணர், வணிகர், வேளாளர் ஆதியாந்தெருக்கள் தோறுஞ் சென்று சிலம்போ சிலம்பு என்று விலை கூறுகின்றான். சிலம்பைக் கண்டவர்களெல்லோரும் இச்சிலம்பை வாங்குவதற்கு எம்மிடந் தகுதியில்லை நீர் வேறெங்காவது கொண்டுபோய் வில்லுமெனக் கூறி அனுப்பினார்.

அவர்களைக் கடந்து அப்பாற் சென்ற கோவலன் கணிகையர் தெருவிற் சென்று விலை கூறினான். கட்டழகமைந்த கோவலனையும், கணித்தற்கரிய விலையுயர்ந்த சிலம்பையுங் கண்ட கணிகையர் கோவலனை ஏமாற்றிக் கவரப்பலவிதமான சூழ்ச்சிகளை கையாண்டனர். அவைகள் பலிக்காமற் பலனற்ற மையைக் கண்ட தவத் தாசியர்கள் ஒரு சிலர் கூடிக் கோவலனைத் துரத்திப் பிடித்து வீட்டுக் கிழுத்துச் சென்று சிலம்பைக் கவர்ந்து கொள்ளுமாறு தீண்டிய சமயத்தில் கண்ணகையாரின் கடாட்சத்தால் கடுங்கோபங் கொண்டது போல் நாகமணிச் சிலம்பும் கூறும்.

*"தாரை கொண்டு சலசலவெனச் .. சத்தமிட்டுப்*
*பேசியதே*
*பாரை கொண்டதே வடியாள் .. பரத்தையரே*
*கேளுமடி*
*ஆரை நான்கு சாதிகளும்.. அணையுந்*
*துணிவுடையவள் நீ*
*துணிவு பெறுசிவனிடத்திற் ... சோதியெனச்*
*சுடரொளியாய்*
*புனிதமுற்ற பூவைபதம்.. பூண்டவென்னைத்*
*தீண்டாதே"*

எனச் சீறிச் சினந்துரைப்பக் கேட்டுச் சித்தங் கலங்கிய விலைமாதர் கோவலனைப் பணிந்து தம்மை மன்னித்தருளுமாறு வேண்டி விரைவில் விடை கொடுத்தனுப்பினர்.

தாசியாரின் மோகனவலையைத் தாண்டிய கோவலன் அப்பாற் சென்று பாடசாலையொன்றை அடைந்து அங்குள்ள ஆசானாகிய அந்தணர் கேசரி ஒருவரிடம் பலனைச் சொல்லுமாறு கேட்க அவனும் நாள்கோளறிந்து நன்றாக ஆராய்ந்து முன்னர் குறத்தி கூறியது போலவே நீர்மதுரைக்கு ஏகுவது புத்தியல்ல வீடு திரும்புவதே நன்றெ‌ன விளம்பினன். வினைவசத்தால் கேடுவரும் போது மதிகெட்டு விடும் என்று வேறுவழியொன்றுமில்லையெனத் துணிந்த கோவலன் வீடு திரும்ப மனம் பொருந்தாதவனாகி நடப்பவை யாகவும் நடந்தேறட்டு மென்று துணிந்து அப்பாற் சிலம்பை விலை கூறிக் கொண்டே போகின்றான்.

இஃதிவ்வாறாக மதுரைக்கரசனாகிய பாண்டியன் பத்தினியாம் இராசமாதேவியின் பாதச் சிலம்பு பழுதடைந்து விடுகின்றது. பாண்டியன் தன்னரண்மனைப் பொற்கொல்லனாகிய வஞ்சிப் பத்தனையழைத்த மனையாளின் பாதச்சிலம்பிலுள்ள பழுது அகற்றி மூன்று நாட்களுக்குள் கொண்டு வந்து கொடுக்குமாறு பணித்துச் சிலம்பை ஒப்படைக்கிறான். சிலம்பை வாங்கிய பொற் கொல்லன் வீடு சென்று சிலம்பின் பழுது நீக்கி அரும்பொட்டிச் சிறுசுவரில் உலரவைத்துப் பிள்ளைகளிடம் கவனமாகப் பார்த்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டு வெளியே போகிறான். அந்நேரத்தில் அயல் வீட்டுப் பிள்ளைகளோடு விளையாடிச் சென்று மதுரைத் தட்டானின் மகன் ஓரால மரத்திலேறி அங்கிருந்த கருடன் குஞ்சை பிடித்த சமயத்தில் அது கைதவறி விடுகிறது. அதனால் துன்பங்கொண்ட தாய்க் கருடன் தன் குஞ்சின் பழியைத் தீர்க்கின்றேனென்று திட்டமிட்டு விரைவாக வந்து மதுரைத் தட்டான் தன் வீட்டுச் சுவரில் உலரவைத்திருந்த பாண்டிமாதேவியின் சிலம்பைக் கவர்ந்து சென்று சப்த சமுத்திரங்களையுங் கடந்து பொன்மலையின் கண்ணுள்ள ஓர் குகையில் வைத்துக் காத்திருந்தது.

வெளியே சென்ற வஞ்சிப்பத்தன் வீடு திரும்பினான். சிலம்பைக் காணவில்லை திகைத்தான் , திடுக்குற்றான் எங்குந் தேடினான் கிடைக்கவில்லை. மனைவி மக்களைக் கோட்டான். அவர்களுந் தெரியாதென்றனர்.

*"செல்லமுகிற் சிறைபுரிந்த.. செழியனெனைமுனி..*
*யமுன்னம்*
*கல்லில் விழுந்துயிர்விடட்டோ.. கத்தி தன்னைத் தாடி..*
*யென்றான்*
*சொல்லி லென்ன நஞ்சையுண்டு.. சோதியுயிர்*
*விடுவ..னென்றான்"*

இவ்வாறு செய்வதறியாது திகைப்பெய்தி மனைவி மக்கள் அனைவரையும் அடித்துத் துன்புறுத்தி தற்கொலை செய்து கொள்ளத் துணிந்த சமயத்தில் வஞ்சித்தட்டான் மகளாகிய வன்னித்தட்டான் தகப்பனை நோக்கித் தந்தையே சிறிது நேரத்தின் முன் ஒரு செட்டியார் இவ்வழியே நாகமணிச் சிலம்பொன்றை விலை கூறிச் சென்றார். நான் இப்போது தான் பார்த்து வந்தனெனக் கூறினான். சாமுடற்குயிர் வந்தெய்தியது போல் இச்செய்தியைக் கேட்ட பொற் கொல்லர் எங்கேயவரை நான் சென்று பார்த்தேன் வருகிறனென்று மிகவும் விரைவாகக் கோவலனைத் தேடிச்சென்று காண்கிறான்.

மணிச்சிலம்பு விலை கூறும் மாவணிகர் கோவலனைக் கண்ட மதுரைத் தட்டான் அறிந்தவன் போலருகே சென்றளவழாவி அவர் வரலாறனைத்து மறிந்து தான் அச் சிலம்பை அரசனாகிய பாண்டியனிடம் கொண்டுபோய் விற்றுத் தருகிறேனென்றழைத்த சென்று பாண்டியன் முன் நிறுத்தினன். பழுதகற்றி வைத்த பாதச் சிலம்பை திருடிச் சென்றானென்றும் தான் பின் தொடர்ந்து விற்றுத் தருவதாகச் சொல்லி இங்கழைத்து வந்தேனென்றும் இதோ உங்கள் சிலம்பெனக் கூறிக் கள்வனைக் கைப்பொருளுடன் கொண்டு வந்திருக்கின்றேனென்றனன். பாண்டியனும் பாங்கரில் நின்ற கோவலனைப் பார்த்து உமது வரலாறு கூறுக எனக் கோவலர் தன் வரலாறனைத்தையுங் கூறினார். அதைக்கேட்ட வஞ்சிப்பத்தன் அரசே! கள்ளனிடம் கேட்டால் உண்மையுரைப்பானா? இச்சிலம்பை இவ் ஏழை வணிகனின் மனைவி பூண்டானென்றால் இதை நீங்களும் நம்புகிறீர்களா? யாராவது சிலம்பு விற்பவர்கள் ஒற்றைச் சிலம்பையும் விற்பதுண்டா? அன்றியும் நான் செய்த சிலம்பை எனக்குத் தெரியாதா? இன்னும் சந்தேகமென் அரசே என்றனன்.. அதைக்கேட்ட பாண்டியன் என்ன இருந்தாலும் வேறு ஆதாரங்கள் உண்டோ என்றறியும் பொருட்டுத் தட்டானிடம் சிலம்பைக் கொடுத்துப் பாண்டிமாதேவியிடம் போய் உமது சிலம்பு தானோ என்றறிந்து வருமாறனுப்புகின்றான்.

பாண்டிமாதேவியிடம் சென்ற பொற் கொல்லன் மீண்டு வந்து தேவியார் தன் சிலம்பென்றே கூறுகின்றார் எனப் பொய் வார்த்தை கூறினான். தட்டானின் சொல்லை நம்பிய தமிழ்மாறன் கோவலரைக் கொல்ல நினைத்த யானைப் பாகர்களை வரவழைத்துக் கோவலனை யானையால் இடறும்படி கட்டளையிடு கின்றான். பாகர்கள் யானையை மதப்படுத்திக் கொண்டு வருகின்றனர். வஞ்சிப்பத்தன் கோவலன் கைகளைக் கட்டியிழுத்து வந்து யானை முன் விழுத்துகின்றான். யானையின் காலடியில் வீழ்ந்த கோவலன் தான் கள்வனல்லவென்றுங் கண்ணகையாரின் காற்சிலம்பை விற்பதற்காக வந்தேனென்றும் தன் மீது குற்றமில்லை என்றும் கூறிப்புலம்புகின்றார். பாகர்கள் யானையைத் தூண்டிக் கோவலனைக் கொல்லுமாறேவுகின்றனர். அந்நேரத்தில் கண்ணகையாரின் கணவரென்றதுமே.

*"ஏவுகின்ற வாரணமும் .. இயற்கை செறி கோவலரைக்*
*காவி விழிக் கண்ணகையார்.. கணவரென்று*
*சொன்னதனால்*
*மேவுகின்ற வுலகமெல்லாம்..வித்தெனவே*
*பெற்றெடுத்து*
*ஆவிகொண்ட உலகமெல்லாம்.. அறம் வளர்க்கும்*
*சீமாட்டி*
*ஆரணிதன் கணவனையான்.. அடித்துகளாய்*
*வதைத்தேனேல்*
*காரணிக்கத் தெரிவுமதால்.. கடுமை*
*யென்றுமனதிலெண்ணி"*

பாகர்களும் அஞ்சும் வண்ணம் பாகர்களைச் சீறிச் சினந்து கோவலனை வணங்கிக கையூதியவ்விடம் விட்டகன்றது.

இதையறிந்து பாண்டியனிடம் வஞ்சிப்பத்தன் சென்று சோழ நாட்டவன் மருந்து மந்திரத்தால் வல்லவனென்றும் அவன் யானையை மட்டுமல்ல வளர்ந்தெரியும் பெரு நெருப்பையும் தடுத்து விடுவானென்றும் அவனைச் சும்மா விடக்கூடாது.

விட்டோமேயானால் நம் நாட்டையும் நாட்டு மக்களையும் நாசமாக்கி விடுவானென்றும் மழுவாற் பிளப்பிக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்தனன். ஊழ்வினையின் பெருவலியால் மதியிழந்த மன்னன் பொன் செய் கொல்லன் வார்த்தையை நம்பி இராசமாதேவியின் சிலம்பைத் திருடியவன் இன்னும் என்னதான் செய்யாமாட்டானென்று முன்னரிலும் மிகுந்த கோபங் கொண்டு கொலைஞர்களை அழைத்துக் கோவலனை கொன்றுவிடுமாறு கட்டளையிடுகின்றான். கோவலருங் மால கருங் கொலைக்களங்குறுகினர்.

கோவலன் வரலாறறிந்த கொலைஞன் கோவலரை ஓடி உயிருய்யுமாறு உரைக்கின்றான். அதற்குடன்படாத கோவலன் தான் செய்த தவறுகளினால் தனக்கு உண்டான மானபங்கங் களனைத்தும் தன்னோடு மறைந்து மாய்ந்து போகட்டும் நீயென்னைப் பிளந்து வைப்பாயாக என ஆணையிட்டு அங்குள்ள கல்லிற்படுக்கின்றார். கடவுளை நினைத்து அரசனது கட்டளைப்படி பிளப்பதாலெங்கண் மீது குற்றமில்லை எனத் துணிந்த மாலகன் கோவலரைப் பிளந்து பாண்டியனிடம் சென்று விண்ணப்பம் செய்து வீடு திரும்பினன்.

## உயிர்மீட்சி

கோவலன் கொலையுண்ட வரலாறனைத்துங் கோதை நல்லாள் கண்ணகையார் இடைய சேரியில் கனவிற் காண்கின்றார்.

*"முத்து மணி தெறித்திடவும் – முன்றானை தீப்படவும்*
*ஒத்ததிரு முங்கிலியம் – உடனறுந்து வீழ்ந்திடவும்*
*தத்திவரு கொம்பனொன்று – தானிறந்து வீழ்ந்திடவும்*
*நந்துநிகர் நகை விழவும் – நாரியர்களலறிடவும்"*

கண்டெழுந்த கண்ணகையார் குணவனாகிய கோவலனை நினைந்து தலையில் அடித்துக் கொண்டு பூமியில் வீழ்ந்து புரண்டுருண்டு புலம்புகின்றார். இடைச்சியர்கள் ஓடோடி வருகின்றனர். பொன்னானமேனி புழுதிபடக் கூந்தல் குலைந்து சோரக் 'கூ' 'கூ' வென்றலறும் கோல் வளையாங் கண்ணகையாரைப் பார்த்து அம்மா! இப்படியேன் அழுகின்றீர்கள். இங்கே என்ன நடந்து விட்டது எனக் கேட்டனர். அதைக்கேட்ட கண்ணகையார் நான் என்னென்று என் வாயால் எடுத்துச் சொல்வேன். நடக்கக் கூடாதெல்லாம் நடந்துவிட்டது. என்கணவர் என்னை விட்டுப் பிரிந்து விட்டார். சிலம்பு விற்கச் சென்ற என் செல்வரைத் தன் சிலம்பைத் திருடிய கள்வன் என்று தமிழ்மாறன் கொன்று விட்டானென்றலறினாள்.

அதைக்கேட்ட முதுமகள் அம்மா வருந்தாதே அப்படியொன்றும் நடந்திருக்க முடியாது. இதோ நான் சென்று பார்த்து வருகிறேனென்று பால், தயிர், மோர் இவைகளைச் சுமந்து கொண்டு விலை கூறிச் செல்பவள் போல் கோவலனைத் தேடிச் செல்கின்றான் கோவலனைக் கொன்ற சங்கதியை யாராவது பேசுவார்களேயானால் அவர்களையும் பாண்டியராசன் கொன்றுவிடுவானென மதுரைப்பத்தன் மறைமுகமாக வதந்தியைப் பரப்பியிருந்ததால் இடைச்சியாகிய மதுமகன் எங்குந் தேடியீற்றில் கொலைக்களத்திலே கொலையுண்டிருந்த கோவலனைக் கண்டான். துயரந்தாங்க முடியவில்லை தான் கொண்டு சென்ற சுமையைப் போட்டடித்து அதற்காக அழுபவள் போலழுது பின்தேறி வீடுதிரும்புகிறாள். அவள் மனம் மாறுகிறது. கோவலன் இறந்து விட்டான். கண்ணகையோ கைமையாகி அநாதையாக இருக்கின்றாள். கட்டழகோ, குணமோ, ஒழுக்கமோ, இளமையோ ஒன்றுங் குறைவின்றி நிறைவு பெற்றவள் எப்படியும் எனது மகனுக்கே இவளை மணஞ் செய்ய வேண்டும் என்று துணிந்த இடைச்சியம்மை வீடுவந்ததும் தனது வரவையே எதிர்பார்த்திருந்த கண்ணகியாரே நோக்கி அப்படியொன்றும் நடந்து விடவில்லை. கோவலன் உயிரோடு வந்து சேருவானெனக் கூறினாள்.

இடைச்சியம்மையின் இதயபூர்வமான எண்ணங்கையெல்லாம் அறிந்த கண்ணகையார் கடுங் கோபங் கொண்டு நீ சென்று கொலையுண்டிருந்த என் கணவரைக் கண்டு உனது பாற்குடத்தைப் போட்டடித்து

புலம்பவில்லையா? உன் மனதிலுள்ளதாகிய எண்ணத்தை நான் அறியாதவளல்ல. உன்னிடத்திலே அடைக்கலம் புகுந்தவளாகிய எனக்குத் துரோகம் நினைத்தவன் நீ இதோ உன் வீட்டைப் பார் என்று உற்றுப் பார்க்கவே கண்ணிலிருந்து தோன்றிய தீயினால் வீடு தீப்பற்றி எரிந்தது. இவ் அதிசயத்தைக் கண்ட இடைச்சியர்கள் அச்சங்கொண்டு ஓடோடி வந்து அம்மா காப்பாற்றுங்கள். அறியாமற் செய்த குற்றத்தை மன்னித்தருள் புரிய வேண்டுமென்று பணிந்தனர். அடைக்கலம் புகுந்த இடத்து ஆதரித்தமையாலும் அடைந்தவர்களைக் காப்பாற்றும் அருட்டிறத்தாலும் அவ்வக்கினி குளிர அருள் செய்த நிரபராதியாகிய என் கணவரை வதைத்த நெடுஞ்செழியன் வீற்றிருக்கின்ற இந்தமதுரையை,

*எரிக்கிரையாய்த் தான் கொடுத்து*
*இருந்தரசன் முடியறுத்து*
*பரிக்கு மந்தத் தட்டானை*
*பழிவாங்கி மீளேனேல்*
*வரிக்குமிந்த முலை சுமந்த*
*மாதிரினி யல்லவென்று*
*எரிக்கு நிகர் சாபமிட்ட*
*ஏந்திழையா ளெழுந்தாளே.*

இவ்வாறு சபதஞ் செய்தெழுந்த கண்ணகையார் கண்ணீருங் கம்பலையுமாக மதுரை மாநகரெங்கும் தேடிப் பாடசாலை மாணவனொருவன் வழிகாட்டச் சென்று கொலைக்களத்தே பிளப்புண்டு கிடந்த தன் நாயகனின் உடலைக் கண்டு உளங்குலைய ஓடோடிச் சென்று மேலே வீழ்ந்து புலம்பினார். பின்னர் இறைவராகிய திருவாலவாயெம்பெருமானை வேண்டியவரினருள் பெற்றுக் கணவனாகிய கோவலனை உயிர்பெற்றெழச் செய்து நடந்த வரலாறனைத்தும் வழுவாது கேட்டு முன்னிலும் மூண்டெழுகின்ற கோபாவேசங் கொண்டு உமது களங்கந் துடைக்குமாறு நான் இப்பொழுதே பாண்டியனிடம் போகின்றேன். நீதி கேட்கின்றேன். நீட்டூரனாகிய பொற்கொல்லனையும் அவன் சொற் கேட்ட நியாயமாக உம்மை வதைத்த அப் பாண்டியனையும், அவனது பட்டணமாகிய மதுரையும் எரித்துச்சாம்பராக்குகின்றேன். நீரும் சாயுச்சிய பதமெய்தியின்புற்று இருப்பீராக என விடை கொடுக்கக் கோவலனுடலும் நிலை குலைந்தது. கண்ணகையார் கொற்கையர்கோன் கொலுமண்டபம் நாடிப் புறப்படுகின்றார்.

## *வழக்குரையும் மதுரை தகனமும்*

கொலைக்களத்திலிருந்து புறப்பட்ட கண்ணகையார் பாண்டியன் கொலுமண்டபம் நோக்கிச் செல்கின்றார். விரிந்த கூந்தலும் விறுவிறுப்பான நடையும் கையிற் பிடித்த காற் சிலம்பொன்றும் கண்ணீர் வழிந்தோடுங் கண்களும் மெய்யிற் படிந்த பூழியுமாகக் கமலமலரடி சிவக்கக் காசினியில் நடந்துவருங் கண்ணகையாரைக் கண்டவர் பலருமஞ்சினர். " கொஞ்சமும் அஞ்சாது குற்ற மற்ற என் கணவராங் கோவலனைக் கூர்மழுவாற் பிளப்பித்த கொடுங்கோல் வேந்தன் கோவில் எங்கே எங்கே " என்று வினாவிய வண்ணம் விரைந்து சென்ற கண்ணகையார் வேல் மாறன் வீற்றிருக்கும் கோட்டை வாயிலையடைகின்றனர்

இதற்கிடையில் பாண்டியன் மனைவி கோப்பெருந்தேவியார் பயங்கரக்கனவொன்றைக் கண்டெழுந்து பாண்டியனிடம் கூறப் பாண்டியன் மனையாளைத் தேற்றித் தனக்கு எந்த விதமான தீமைகளும் வராதென்றும் இந்திராதி தேவர்களே தன் பெயர் கேட்டால் அஞ்சி நடுங்குவார்கள் என்றும் கூறிக் கொலுமண்டபத்து வந்திருக்கின்றான். கோபுர வாயிலிற் குறுகிய கண்ணகையார் அங்கு நின்ற வாயிற் காவலனைப் பார்த்துக் காவலோய் பாண்டிய மாதேவியின் பாதச்சிலம்பைத் திருடிக் கொடிய மழுவுக்கிரையாகிய கோவலன் தன் தேவியாங் கள்வர் குலக்கள்ளி கண்ணகை வந்திருக்கின்றேன் என்ற செய்தியை உன் மன்னனிடம் தெரிவிப்பாயாக என்றனள். கண்ட மாத்திரத்தே கதிகலங்கிய காவலன், பாண்டியன் முன்சென்று பாதங்களை வணங்கி விண்ணப்பஞ் செய்தனன். அப்படியாயின் அவளை இங்கேயனுப்புக என்ற ஆஞ்ஞையின் படி கண்ணகையார் அரசசபையிற் சென்றார். அங்கு சென்றதும் அங்குள்ள அவையோருக்கபயமென்று தன் வணக்கத்தைத் தெரிவித்துப் பின்னர் அரசனை நோக்கினார்.

அரசரென்று படிபுரப்போர் அடாது செய்தவர்களைத் தண்டிப்பதேயன்று அநாதை வணிகனை ஆய்ந்தோய்ந்து பாராது அநியாயமாகக் கொலைபுரிபவர்களா, வறுமையின் கொடுமையை நீக்கி மறுமலர்ச்சி காணும் வண்ணம் மனைவியின் காற்சிலம்பை மதுரைமாநகரிலே வியாபாரஞ் செய்யும் பொருட்டு வந்த என் கணவனைக் கொன்ற கொடுங்கோலன் நீதானாவெனக் கேட்டார்.

கோல்கோடிய கொற்றவன் நீதானாவென்று கேட்ட மாத்திரத்திலேயே கோபங்கொண்டவனாகிய பாண்டியன் ஆத்திரத்தாலறிவிழந்து அளவறியாமற் பேசு மாடவளே! நீயார் உன் ஊரெது, பேரெது உரைக்குதி என்றனன். எனது நாடு சோழநாடு சோழவளநாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டணத்தில் கணித்தற்குரிய புகழால் மேம்பட்ட வணிகர். குலதிலகன் மாநகர் மகன், என் பெயர் கண்ணகை. அந்நகர் வாழ் மாசாத்துவான் மகன் கோவலன் என் கணவர். அவர் மாதேவிக்கு மாநிதியம் தோற்ற காரணத்தால் மாநாகமணி உள்ளீடாகச் சமைந்த காற்சிலம்பை நீ திருடியதுமல்லால் என் கணவரையும் இரு பிளவு செய்தனையே இதற்குரிய நீதிகோரியே இங்கு வந்திருக்கின்றேனென்றாள். அது கேட்ட பாண்டியன் உன் சிலம்பு நாகமணிச் சிலம்பொன்று சொல்லுகின்றாயே உனக்கு எப்படி நாகமணி கிடைத்தது என வினாவினான்.

என் தந்தையாகிய மாநகர் மாநாகத்திடம் போய் மணிவாங்கும் பொருட்டு மீகாமனை விடுத்த வழிமறித்த கடலரசனான வெடியரசனையும் அவன் துணைவரையும் வென்று நாகதீவிற் சென்று மணிவாங்கி வந்து சிலம்பு செய்த பின்னரே இரு பிளவான கோவலர்க்கும், எனக்கும் திருமணம் நிறைவேறியது. அத்தகைய சிலம்பையே நீயபகரித்தாய். என் கணவரை வதைத்தாய். அவரைப் பார்த்த மட்டிலேயே அவர் ஒரு செட்டியென்பதை உன்னால் கண்டு கொள்ள முடியவில்லையே எனவுரைத்தார்.

செட்டியானாலென்ன வேறு எந்தத் தேவ னானாலென்ன அரண்மனைப் பொருளாகிய அரச மாதேவியின் அணிச்சிலம்பைத் திருடினவனை சும்மா விடுவேனா? கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் அவர்தம் கடமையாதலினாற் கொன்றெனென்று கூறினான். அரண்மனையிற் திருடியதைக் கண்ட துண்டா இல்லைக் கேட்டதுண்டா? இல்லச் சாட்சிகள் ஏதாவதுண்டா எனக் கேட்க, ஆம் அரசமாதேவியின் சிலம்பைப் பழுதகற்றி வைத்த வஞ்சிப் பத்தன் வீட்டிலேயே சிலம்பு திருடப்பட்டது. அரண் மனைத் தட்டானாகிய வஞ்சிப்பத்தன் ஃகயும் களவுமாகப் பிடித்துக் கைப்பொருளோடு கொண்டு வந்தனன். அன்றியும் தட்டானையனுப்பி என் மனைவியின் சிலம்புதானா என்று விசாரித்தறிந்த பின்பே மரண தண்டனை வழங்கினேன் என்றனன் பாண்டியன்.

பாண்டியன் இவ்வாறு கூறிய மாத்திரத்தில் பத்தினியார் கண்ணகை, பாண்டியனைப் பார்த்து "மதிகெட்ட மன்னனே உன்சிலம்பைக் காணவில்லை யென்றதும் வஞ்சிப்பத்தன் வழிப்போக்கன் ஒருவனை பிடித்திழுத்து வந்து திருடன் இவன்தான் என்று விட்டால் உடனே அவனைக் கொன்று விடுவது தான் உன் நீதியோ? என் கணவரைக் கள்வன் இவன்தானெனக் கொண்டு வந்து நிறுத்திய கொற்கொல்லனையா இராசமாதேவியிடம் விடுவது. அவள் தன்னுடையவென்றோ அல்ல வென்றோ சொன்னதை நீ எப்படி உள்ளபடி அறிவாய். தூர்த்தனாகிய பொற்கொல்லன் சொல்லை மதித்துத் துண்டித்த என் கணவரை உன்னாலெனக்குத் தரமுடியுமா, உன்னிடத்திலே யான் அரசன் என்ன செய்யினும் என்னைக் கேட்பவர் யார்? என்ற மமதை குடிகொண்டு விட்டது. அதனையடக்குவதற்காகவே வந்திருக்கின்றேன். இதோ உன் மனைவியின் சாட்சியைக் கேட்டேனென்று சொல்லுகின்றாயே அஃதுண்மையானால் இப்போது உன்மனையாள் என் சிலம்பைத் தன்னுடையதென்றுரைப்பாளாயின் இப்பொழுதே தான் வழக்கிழந்து போகின்றேன் இல்லையேல் உன்னைப் பழிவாங்கியே தீருவேன் என்றனள்" என்ற மாத்திரத்தே தான் நீதி தவறி விட்டேனென்ற காரணத்தால் பாண்டியன் முகம் வாடியது. பாண்டியன் தலை கவிழ்ந்தான். பார்த்து நின்ற கண்ணகையார் அவையகத்தோரே கேட்டீர்களா அரசியின் சாட்சியத்தை இப்போது அரசர் என்ன

சொல்லப் போகின்றார். இது மட்டுமா இராசமாதேவியிறன் இணைச் சிலம்பு இவரிடம் இருந்ததல்லவா, அதனோடு என் சிலம்பை ஒப்பிட்டுப் பார்த்திருக்கலாமே. இவரின் முத்துச் சிலம்புக்கும் எனது நாகமணிச் சிலம்புக்குமுள்ள பேதத்தை உடனேயே உணர்ந்து கொள்ளலாமல்லவா? எங்கே என் சிலம்பு? இங்கே கொண்டு வருக. அதனையனைவரும் பார்த்து உண்மையை உணர்ந்து கொள்வதற்கு என்று கண்ணகையார் கேட்கப் பெண்ணின் சொல் கேட்டு ஏவல் செய்வதற்காக நானிங்கிருக்கவில்லை என்றனன் பாண்டியன். இதைக் கேட்ட கண்ணகையார் ஏளனமாகச் சிரித்து அரச சபையிலே ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியா, நல்லது நீ கொண்டு வரமாட்டாய் இதோ நான் எனது சிலம்பை இவ் இடம் வரவழைக்கின்றேனெக் கூறி,

*"அன்றெனக்கு மணமுடிக்க ... ஐயர் செய்து காலிலிட்ட*
*நன்று நாகமணிச் சிலம்பே... நற்சபையில் வருவாயே"*

என அழைத்த மாத்திரத்தில் கண்ணகையாரின் நாகமணிச் சிலம்பு பாண்டியனின் பெட்டகத்தின் பூட்டை முறித்துப் புறப்பட்டுச் சலசலவெனச் சத்தமிட்டுச் சபையில் சிலம்பே அங்கே நில்லெனக் கூறியருள அதைக்கண்டவர்களெல்லோரும் ஆச்சரியமும் அற்புதமும் கொண்டனர். அந்நேரத்தில் கண்ணகையார் அங்கு நின்ற தட்டானைப் பார்த்துப் புல்லறிவின் காரணத்தால் அன்னையர் தங்கழுத்தில் பொன்னையே திருடுகின்ற பொற்கொல்லனே நீ பழுதுபார்த்தரும் பொட்டிச்சிறுகவரில் வைத்த பாண்டிமாதேவியின் சிலம்பைக் கருடன் எடுத்துச் செல்ல அதைக் காணாத காரணத்தால் கலங்கிய வனாகிய நீ உன் மகன் வாயிலாகவறிந்து என் கணவனைத் தேடிப்பிடித்து மழுப்பு வார்த்தைகள் பேசி மயக்கி மன்னவன் முன் கொண்டு வந்து விட்டுக் கொடிய கள்வனென்று கொலைக்காளாக்கிய உனைச் சும்மா விடுவேனென்று மட்டுமென்னறக , என்றுரைக்க தட்டான் தட்டுத் தடுமாறிச் சிறிது தேறி மன்னனைப் பார்த்து மன்னவா! ஏன் கலங்குகின்றீர்கள். இதோ இவள் மகா கொடியவள். பாண்டிமாதேவியின் பாதச் சிலம்பைத் திருடிய பாதகனின் மனைவியல்லவா, இவள் யானையே தன்னைக் கொல்லாத வண்ணம் மயக்கி விரட்டிய மந்திரக்காரன் மனைவி மாயாசாலம் வல்லவள் இவள். தனது சிலம்பொன்று என்முன்னிலையிற் சொல்லிய பாண்டிமாதேவியையே மயக்கிய மாயை வல்லாள். இவளைச் சும்மா விடக்கூடாது மன்னவா இவளுக்குத் தகுந்த தண்டனை வழங்க வேண்டு மென்றனன்.

இதைக் கேட்ட கண்ணகையார் உண்மை தான். மாய மந்திரம் வல்லவனாக இருக்கலாம். கள்வர் குலக் கள்ளியாகவிருக்கலாம். அரசன் என்னைத் தண்டனைக் குள்ளாக்கலாம். ஆனால் உண்மையை நிலை நாட்டுவேன். கணவனின் பழிவாங்கியே தீருவேன். இதோ பாண்டியனின் சிலம்பை வரவழைக்கின்றேன் பாருங்கள் என்று கருடனை நினைத்து "ஏ கருடனே குஞ்சைக் கொன்ற குற்றத்துக்காகப் பழி தீர்க்கும் பொருட்டு நீ கொண்டுபோன சிலம்பை அவையோர் காண இவ்விடம் கொண்டு வருக" என்று திருவாய் மலர்ந்தருளிய மாத்திரத்தே கருடன் சிறகடித்துப் பறந்து சென்று சிலம்பை எடுத்துக் கொண்டு வந்து போட்டது. அரசன் முதலவையோரீறாகப் பாண்டிமாதேவியின் சிலம்பைக் கண்டனர். பாண்டிமாதேவியின் முத்துச் சிலம்பும், கண்ணகையாரின் நாகமணிச் சிலம்பும் பார்ப்பவளுடைய கண்களுக்கு வெள்ளிடை மலைபோற் தெள்ளுதற் புலயாயின.

அந்நேரத்தில் கண்ணகையார் அங்கிருந்த வர்களைப் பார்த்து அறிவாற்றல் மிக்க பெரியோர்களோ அறங்கூறி அரசனை அல்லவை செய்யாது நல்லழி நிறுத்தும் ஆற்றல் மிக்க அமைச்சர்களே இப்பொழுது பார்த்தீர்களா? உண்மை எங்கேயென்று . பாண்டியனே உனக்கு என் சிலம்பில் ஆசையிருந்தால் நீ சிலம்பை வாங்கிக் கொண்டு என் கணவரை வெட்டாது விட்டிருக்கலாமல்லவா? இல்லாது விட்டால் அவரைச் சிறைப்படுத்தி சில தினங்கள் பொறுமையாக இருந்து தகுதியான ஆதாரங்களை ஆராய்ந்தறிந்து அவரை விடுதலை புரிந்திருக்கலாமே, அவைகளனைத்தையும் விடுத்து அற்பனாகிய பொற்கொல்லன் வார்த்தையையே ஆதாரமாகக் கொண்டு கோனேன்னு மாங்காரத்தாற் கொடுங்கோல் புரிந்த கொடியவனே

நீயோர் கொற்றவன் தானா? கோல் கோடியவனாகிய உன்னையும் உன் உற்றதோழனாகிய இவ்வஞ்சிப் பத்தனையும் கொன்று யமலோகம் அனுப்பி வைப்பேன் காண்பாயாக, என்று பல வகை மொழிகளையும் சொல்லி மிகவும் மானபங்கமாக ஏசினார்.

கண்ணகையார் கழறிய வார்த்தைகளால் புண்பட்ட நெஞ்சத்தன்ன நெடுஞ்செழியன் கண்களிற் கனல் பறந்தன. பெண்ணே! என் பெருமைகளை நீயறியாய் இந்திரன் முடி மேல் வளை எறிந்தேன். கடல் கவற வேல் விடுத்தேன். சப்தமுகிற் கூட்டங்களையே தளையிட்டுச்சிறை செய்தேன். இமயத்திற் கொடி பொறித்த என் பெருமையை அறிந்த இந்திராதி தேவர்களை என்பெயர் கேட்டால் நடு நடுங்குவார்கள். என்ன செய்வது பெண்ணென்பதற்காக நான் இதுவரை பொறுத்திருக்கின்றேன். உனது வீண் பேச்சுக்கள் இங்கு வேண்டியதில்லை. இதோ உன் சிலம்பு எடுத்துக் கொண்டு போகலாம். வேண்டுமானால் இன்னும் ஏதாவது பொன் பொருள் தருகிறேன் கொண்டு செல் என்றனன்.

அதைக் கேட்ட கண்ணகையார் அளவுக் கடங்காத கோபங்கொண்டவராய் அண்டம் செவிடுபட நகைத்து, சிலம்பு செம் பொன்னும், பொருளும் பொக்கிசங்களும் எனக்கு வேண்டியதில்லை. எனக்கு வேண்டியவர் என் கணவர். அவர் நிரபராதி என்பதை நான் நிலை நாட்டிவிட்டேன். நீ குற்றவாழி, மாநிலம் போற்றும் மகா உத்தமராகிய என் கணவரைக் கள்வனாக்கிக் கொலைமாலை சூடிய உன்னைச் சில பகல் தானும் உயிருடன் உலகில் வாழ விடே னென்றனன். பாண்டியனால் அவமானம் தாங்க முடியவில்லை. பெண்ணே உன்மடியுங் கிழித்து மயிருங் கொய்து, மார்பையும் அரிந்து மானபங்கம் செய்து துரத்துவன் தன் முன் நீ போகின்றாயா? இல்லையா? என்றனன்.

இதைக்கேட்ட கண்ணகையார் ஆம் போகத்தான் போகிறேன். அதற்கிடையில் உன் ஆணவத்தையடக்கத்தான் போகின்றேன். இதோ பார்,

*ஆடுகின்றேன் திருநடனம் – ஆழலிடுவேன்*
*நின்மதுரை*
*பாடுகின்றேன் பெரும்புகழைப் – பந்தடிப் பேன்னுன்*
*சிரத்தை*
*சூடுகின்றேன் தட்டான்றன் – சோதிக்*
*குடல்மாலையென்றாள்*

என்றளவில் வேறுவழியில்லையெனக் கண்ட பாண்டியன் தொல்லைபுரியும் பாதகிமார்களையழைத்து கண்ணகையாரைப் பிடித்து விலங்கிட்டுச் சிறையிடுமாறு கட்டளையிட அவர்களுமணுகின்றனர்.

*நகைத்த பின் முருக்கின தரத்தினை மடித்தாள்*
*நச்சுலவு மைக்குவளை யிற்கனலை யிட்டாள்*
*உகத்தில் வட வைக்கன லெழும்பவும் விழித்தாள்*
*உற்றபல கொற்றவர் களித்துள நெரித்தார்*
*சகத்திலொரு மேருருவு காட்டியெதிர் நின்றாள்*
*சுங்கமுறு துங்கமுடி மன்னரத கண்டார்*
*எவர்க்குமரி தானதொரு பேருருவு கொண்டாள்*
*இந்திரன் முதல் வானவர்கள் யாவரது*
*கண்டார்*

*எடுத்ததொரு திருமுகமும்– இருக்குந்நாலு*
*பெருங்கரமும்*
*வடுத்திகழ மொருகரத்தில் – மழுவொருகை*
*சூலமுமாய்*
*சுடற் குலவு முடியுடனே – சோதிபெறு பாசமுமாய்*
*இடற் பொருவு முருவெடுத்தாள் – இமையவர்க்குங்*
*கிடையாதே*

இத்தகைய பயங்கரமான பாரிய பிரமாண்டமான தனது விசுவரூபத்தைக் கண்ணகையார் கொண்டருளுதலும் அதனைக் கண்ட இந்திராதி தேவர்கள், முனிவர்கள் திக்குப்பாலகர்கள், யாவரும் அஞ்சி நடுங்கி அம்மையாரின் கோபத்தாற் தாங்கள் ஆபத்துக்கோ, அழிவுக்கோ ஆளாகாத வண்ணம் போற்றித் தொழுது புட்பாஞ்சலி செய்தனர். பாண்டியனது கொலு மண்டபத்திருந்தோர் யாவரும் செய்வதறியாது திகைத்து மரம்போல் மதியிழந் திருந்தனர். பாண்டியனோ பார்த்தான். பயங்கரனாயினன். தன் முன்னிலையிற் தோன்றி நிற்கின்ற கண்ணகையார்

முன்னை நாளிற் தன்னைச் சபித்துத் தலைவனாகிய சிவபெருமானோடு மறைந்து சென்ற மலைமகளாகவே தோற்றினார். அன்றியும் மாங்கனியிற் தோன்றிய தனது மகள் தானிவளோ என்ற எண்ணமுந் தோன்றி நிலைத்தது. தன்வினை தன்னைச் சூழ்ந்து விட்டதென்றும் தான் இனித் தப்பமுடியாதென்றும் தனக்குத்தானே தேறிய மீனவன் தன்னிலையறிந்து – தவித்தான்.

அப்பொழுது கண்ணகையார் பாண்டியனைப் பார்த்து எனது தனத்தை அரிவேனென்று நீ சொன்ன காரணத்தினால் இதோ எனது தன்னியம். தனது இடது மார்பைத் தன் கையாற் திருகிப் பாண்டியன் மார்பகத்தெறிந்தருளினார். அதன் பின் நாகமணிச் சிலம்பை எடுத்துப் பாண்டியனின் முன்னிலையில் படியில் அடித்துடைத்தும் உடைந்த சிலம்பை நோக்கி,

*அடுத்துனையே மடுத்து வைத்த –*
*அரசனையும் கூடலையும்*
*பகுத்தபொறி பலவாகிப் – பற்றியெரி*
*யென்றனளே*

அந்நேரத்தில் அதிலிருந்துண்டாகிய தீயும் அன்னை கண்ணிலக்கினியும் அவ்விடத்தில் சுவாலித் தெரிந்தது. அப்போது திருகி எறிந்த இடது மார்பால் வடிகின்றதாகிய இரத்தத்தை மாற்றும் பொருட்டு இடைச்சியர்கள் கண்ணகையாரின் மார்பிலே பசுவெண்ணையைக் கொண்டுவந்த பின்னர் பறைச்சியர்கள் அதன்மீது பஞ்சை வைத்துக் கட்டிக் களையாற வீசித் தம்மைக் காத்தருளுமாறு வேண்டுதல் செய்யவே அவர்கள் சேரி அழியாவரங் கொடுத்து ஏனைய இடங்களெல்லாம் எரியட்டு மென்று எடுத்துச் சொல்லவே எவ்விடங்களிலும் தீ சுவாலித் தெரிந்தது.

இதற்கிடையில் கண்ணகையார் தட்டானை யுதைத்து வீழ்த்தியவன் குடலரைப் பிடுங்கி மன்னன் மார்பகத்தெறிய மன்னனும் மடிந்தனன். கண்ணகையார் அவ்விடம் விட்டுச் சென்று தட்டான் வீட்டிற் சென்று புகுந்து அவன் மகனைப் பிடித்து இரண்டாகக் கிழித்து,

*பிழந்து கெருடாவுன் – பிள்ளைதனைக் கொன்றபழி*
*வழைந்து வந்த வாங்கெனவே– வன்கெருடன்*
*சிறையடித்து*
*கிளம்பி வந்து மவனீரல் – கேடகலத் தானெடுத்து*
*உளம்புந்த குஞ்சு கொன்ற – ஒரு பழி கொண்டேகியதே*

## குளிர்ச்சி

இடையேசேரியையடைந்த கண்ணகியாரை இடைச்சியர்கள் எதிர்கொண்டழைத்துப் பன்னீர், புனுகு ஆகிய வாசனைச் சாந்து வகைகளை அணிந்து சாமரை கொண்டு விசிறிக் களைப்பகற்றிப் பூம்பந்தர் நிழலிருத்திப் பூசைபுரிந்து வணங்கி நின்று,

*ஆண்டவளே குளிர்ந்தருள்வாய் ஆயிழையே*
*குளிர்ந்தருள்வாய்*
*காண்டகை சேராயிரங்கண் காரிகையே*
*குளிர்ந்தருள்வாய்*
*வேண்டினோங் குளிர்ந்தருள்வாய் வித்தகியுன்*
*கோபமெல்லாம் என்று குளிர்ச்சி பாடி,*
*துங்கமட மாதரெல்லாம் சூழ்ந்து கரஞ் சிரங்குவித்து*
*மங்கைநல்லாய் மதுரைநகர் மாறு கொண்டு சீறுமனல்*
*அங்கதுவே தான்தணிய அருளி மழை பொழியுமென்றார்*

இவ்வாறு வேண்டுதல் செய்ய மழை பொழிவித்து வெப்பம் தணியவருள் புரிந்து அருளுருவங் கொண்டவரவர்க்காம் வரங்கள் பல கொடுத்துப் பலவிடங்களிலும் சென்று தம்மை வழிபட்டவர்கள் எல்லோருக்குங் கருணை பாலித்துத் திருவாலவாயான் வரங்கொடுத்தருளிய வண்ணம் இலங்கையில் வந்தருளினார்.

இலங்காபுரியடைந்த கண்ணகையார் பல்வேறிடங்களிலும் சென்று பலவகையான அற்புதங்களையும் காண்பித்து வற்றாப் பளையில் வந்தருளினார். வற்றாப்பளையில் நந்திக்கடற்கரையிலே மாடுகள் மேய்கின்ற பிள்ளைகள் விளையாட்டாகக் கோவில் கட்டிப் பூசை செய்து கொண்டிருந்தனர். அவர்கள் முன்னிலையில் நரைதிரை மூதாட்டியாராகத் தோன்றிய கண்ணகையார் அப்பிள்ளைகளைப் பார்த்து மீண்டும் ஓர்முறை பூசைபுரியுங்கள் பார்ப்போமென்றும், பூசை செய்வதற்கு நீங்கள் உங்கள் பாற்கலசத்தைக்

கொண்டு சென்று நதிகடலில் நீரள்ளிவந்து விளக்கேற்றுமாறும் திருவாய் மலர்ந்தருள அவர்களுமவ்வாறே செய்தனர். உப்புநீரில் விளக் கெரிவதைக் கண்ட கோபாலச் சிறுவர்கள். தாயே! நீயே எங்கள் தெய்வமெனத் தொழுது போற்றினர். அவர்கள் பூசையையேற்றருள் புரிந்த கண்ணகையார் அப்பாலகர்களைத் திரு நோக்கம் செய்து நான் இங்கெழுந்தருளிய தினமாகிய வைகாசிமாதம் விசாக நட்சத்திரம் கூடிய பூரணையில் வருகின்ற திங்கட்கிழமை தோறும் என்னையின்று போலென்றும் வழிபாடு செய்யுங்கள். கண்ணகையாகிய நான் என்றென்றும் வந்து தோன்றி உங்கள் இன்னல் தீர்த்தின்பமீயீந்தருள் வேனென்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

இவ்வாறு மறைந்த கண்ணகையார். இங்கிருந்து கதிர்காமஞ் சென்று கதிர்வேல் முருகன் கருணை பெற்றதன் பின் அங்கிருந்து புறப்பட்டுக் கைலயங் கிரிக்குச் சென்று தெய்வீகம் பெற்றுச் சிவபெருமானிடம் பாகத்தினிது வீற்றிருந்தருளினார்.

(இக்காவியம் வழமையாக வற்றாப்பளை பொங்கல் தினத்தோடு சேர்ந்த முன் ஏழு நாட்கள் தொடர்ச்சியாக படிக்கப்படுகின்றது)

* * *



# அம்மன் ஆலய பூசாரிமார்களுக்கு அம்மன் காட்டிய அற்புதங்களும் வரலாறும்

வன்னியில் மிகப்பழமையான கிராமம் வற்றாப்பளை. இதில் விருந்தோம்பி வேளாண்மை செய்யும் உயர் வேளாளர் குலத்தவர்கள் பின் பதவி வழியாக " உடையார்களாக" இருந்தமையால் உடையார் பரம்பரையினர் என அழைக்கப்பட்டனர் அப்பரம்பரையில் வந்தவர்களே "கட்டாடும் உடையார்" என அழைக்கப்படும் பூசாரியார்கள்.

அம்மனை நேரில் தரிசித்தவர்கள் இவர்களின் மூதாதையர்கள் என்பதால் இவர்களின் அனுட்டானத்துக்கு ஏற்ப அம்மன் வெளிப்படுவாள் இவர்கட்கு அம்மன் காட்சி கொடுத்த கதை அற்புதமானது நந்திக்கடற்கரையில் இடையர் குலச் சிறுவர்களும் கமக்கார் வீட்டுச் சிறுவர்களும் மாடுமேய்த்துக் கொண்டிருக்கின்றார்கள் அந்த நேரம் பாண்டியன் தலைநகரை தீயிட்ட பத்தினியாள் பருத்தித்துறையின் ஊடாக கரைவழியாக ஒன்பது தலங்களில் அருள்புரிந்து விட்டு பத்தாம் பதியாம் வற்றாப்பளைக்கு வருகிறாள் சிறுவர்களை காண்கிறாள் பசிக்கிறது என்கிறாள் பால் புக்கை பொங்க பால் கறக்கிறான் இடைச்சிறுவன் அரிசி எடுத்து வருகிறான் கமக்காரவீட்டுச் சிறுவன் பொங்கி முடிய படைக்க இலைதேடினர் விடத்தல் இலையில் படையுங்கள் என்கிறாள் மூதாட்டி மிகச்சிறிய விடத்தல் இலையை மூதாட்டி முன்வைக்க அது தாமரை இலையாகிறது இருள்கிறதே விளக்கெரிக்க நெய் எடுத்து வருகிறேன் என்று சிறுவன் புறப்பட ஆச்சி மறிக்கிறாள். பூரணை நிலவு வரும் நீங்கள் நந்திக்கடல் நீரில் விளக்கெரியுங்கள் அது போதும் என்கிறாள் விளக்கு எரிகிறது படைத்தவற்றைக் காணவில்லை சிறுவர்கள் திகைக்க ஆச்சி சொல்கிறாள் அவற்றை நான் ஏற்றுக்கொண்டேன் எனக்கு தலைகடிக்கிறது பேன்பாருங்கள் என்று தலையை விரித்த சிறுவர்கட்கு அதிசயம் ஆயிரம் கண்கள் பயந்து போன சிறுவர்களை பாட்டி தேற்றுகிறாள் தான் கண்ணகி என வெளிப்படுத்துகிறாள். செய்தி பரவ ஊரார் வந்து பார்க்கிறார்கள் பட்ட வேப்பம் படவாள் தழைத்திருக்கிறது. அந்தச்சிறுவர்களுக்கு அவள் சொன்னதுதான் ஆண்டுதோறும் வைகாசி மாதம் விசாகத்துக்கு அண்டிய பூரணையில் நான் வந்து உங்களுக்கு அருள் செய்வேன் என்பது அதில் இருந்து தொடங்கியதுதான் வருடாந்தப் பொங்கல் உற்சவம்.

இவ்வாறு வந்தமர்ந்த எங்கள் அம்மாளாச்சி அதன் பின்னும் எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்தினாள். எமது பூசாரிபரம்பரையில் வந்த சொத்திக் கட்டாடும் உடையார் என அழைக்கப்பட்ட பூசாரியின் காலத்தில்தான் பறங்கியன் ஒருவன் அம்மன் கோயிலுக்கு வந்து அற்புதம் என்னவென அதுட்ட பனிச்சை மரத்தையாட்ட முடியுமா எனக் கேட்க அவனை குறித்த நாளில் வரச்செய்து பனிச்சையை ஆட்டி தனது பக்தனாம் பூசாரியாரைக் காத்தவள் இதே இடத்தில் இருக்கின்ற எங்கள் ஆச்சிதான்.

இதேபோல 1970 இல் அம்மனின் நகையை திருடிய திருடன் கண்பார்வை இழந்து அகப்பட்டதும் இந்தத்தலத்தில்தான்.

இது மட்டுமா குட்டரோகி நோய்தீர்ந்து சுகதேகியானதும் இங்கேதான்.

இன்று உப்புநீரில் விளக்கெரிவதும் இங்கேதான்

இவ்வாறு அற்புதங்கள் புரியும் எங்கள் தாய் எமது அனுட்டானத்துக்கு ஏற்ப எமக்கு அருள்புரிவாள் எம்முடன் பேசுவாள். வன்னியில் தனது பக்தர்களுக்கு எந்த எந்தக் காலங்களில் யார் அநியாயம் செய்தார்களோ அந்த அந்தக்காலங்களில் அவர்களை சங்கரித்தவள் இவள்தான். அதில் அவள் "இவர் தமர் என நோக்காள் அரசியல் பிழைத்தவர்க்கு அவளே கூற்றம் ஆவதை நாம் கண்களால் கண்டிருக்கிறோம்.

2008 நவராத்திரியின் இறுதி நாள் விஜயதசமிப்பூசை நிறைவடைய இருக்கின்ற நேரம் "அம்மா குளிர்வாய்" என குளிர்த்தி பாடினோம் எப்படி அவள் குளிர்வாள்? சூழவர அநியாயங்கள் சூழ்ந்த வேளையில் தனது பிள்ளைகளின் அழுகுரலைக் கேட்டு துடிதுடித்தவள் எமக்கொரு செய்தி சொன்னாள். ஆம் அது வாயினால் அல்ல....

விழுந்து....நிலத்தில் விழுந்து சொன்னாள் "மக்காள் நீவிர் செய்த கொடு வினைக்கு நீவிர் அலைந்து வரப்போகிறீர்கள் நான் யாது செய்வேன்" என்று சொன்னாள்.

அலைந்தோம்..... அலைந்தோம்...... அவள் தாயல்லவா மீண்டும் எம்மைக் கூப்பிட்டாள் "குடியிருத்தமாட்டோம் என்றவர்களை கும்பிட வைத்தாள்..... வாருங்கடா மக்காள்... என எம்மை அழைத்தாள்....

அதனால்தான் இன்று வாழ்கிறோம்!

இறுதியாக ஒன்று இவ்வளவும் அவள் செய்தபின்பும் இன்னும் நாம் உணரவில்லை எனில் அது பெருந்தவறு தாயை துதிப்போம் பசுக்கொலை தவிர்ப்போம் பஞ்சமாபாதகங்கள் யாவையும் தவிர்த்து பத்தினியாள் பாதம் தொழும் பக்குவம் கிட்டுமெனில் அவள் வாய்பேசுவாள்.

இப்படியான எங்கள் தாய்க்கு பூசைசெய்யும் பூசாரி பரம்பரை பற்றியும் சிறிது கூறவேண்டும் பனிச்சையையாட்டுவித்த சொத்திக் கட்டாடும் உடையாரின் பரம்பரையில் வந்த பூசாரியாரால் பூசை செய்து வரும்போது பத்தஞானி என்ற பக்தர் இந்தியாவில் இருந்து வந்து வெள்ளிப் பிரம்பு, சிலம்பு, அம்மானை, உடுக்கு போன்றவற்றை பூசாரியாரிடம் கொடுத்து பத்ததி முறைகளை செப்பேட்டிலும் வாய்வழியாகவும் சொல்லி பொங்கலை நெறிப்படுத்தினார். அவரது சமாதி உள்ள இடம் நாவற்காட்டில் உள்ளது அதில் பொங்கல் முடிந்த பின் வரும் வெள்ளிக்கிழமை மடைபோடுவது இன்றும் வழக்கம்.

இந்த பூசாரியார் பரம்பரையில் வந்த சின்னத்துரை பூசாரியாருக்கு ஆண்பிள்ளைகள் இல்லாததால் அவரது மகளை திருமணம் செய்த சண்முகம் குலசேகரம் (எமது தந்தையார்) பூசாரியானார். அவரின் மறைவின் பின் எனது அண்ணன் பூசாரியாராக கடமைகளை செய்து வந்தார் தற்சமயம் அவர் வெளிநாட்டில் உள்ளதால் அடியேன் அத்தொண்டை செய்கிறேன்.

**"எல்லாம் அவனின் செயல்"**

- சிவத்திரு கு.கிருஸ்ணபவன் பூசாரியார்

# நன்றிகள்..........

இந்தக் கருணை மலர் சிறப்புற நிறைவுற ஒத்துழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

- மலராக்கக்குழு -




பொங்கல் கடமை செய்பவர்கள்



அன்னதான சபையினர்



பூசை குருக்கள்,பூசாரியார்,உதவியாளர்கள்



ஆலய குருக்கள்



பரிபாலன சபையினர்...



பக்தர் கூட்டம்...





எழுந்து நிற்கும் எங்கள் ஆலயம்

கோபுரத்தில்...



பொற்கொல்லனால் கோவலர் ஏமாற்றப்படுதல்




பாண்டியனின் கடும் தவமும் வரத்துக்குப் பதிலாக சாபம் பெறுதலும்



கண்ணகி வழக்குரையும் கொலையுண்ட கோவலரை
தன் மடி மீது வைத்தழுதலும்



பனிச்சையை ஆடவைத்து பறங்கியை விரட்டிய பூசாரியாரின் பக்தி




மாதவியிடம் சகலதும் இழந்த கோவலர் ஆலமரத்தின் மீதேறியிருக்கும்
கையறுநிலையை கண்ணகியின் தோழிகள் காணுதல்



நந்திக்கடற்கரையில் பாலர்களுக்கு காட்சி கொடுத்த எங்கள் ஆச்சி



மதுரையை எரித்தலும் வழிபடப்படுதலும்



கொலை யானை கோவலரை பணிதலும் மழுவர்கள் அவரை அழைத்துச் செல்லலும்



புஷ்பக விமானத்தில் கோவலர் வந்து கண்ணகியை அழைத்துச் செல்லுதலும் வேடுவர்கள் அதனைக் காணுதலும்.



கோவலரை அழைத்து வர ஆடைஅணிகளுடன் செல்லும் கண்ணகியின் தோழியர்



வற்றாப்பளைக் கண்ணகி அம்மனின் பொங்கல் பத்ததிகளை
வழங்கும் பக்தஞானி




எங்கள் தாய்

நிர்வாக உறுப்பினர்கள்



கும்பாபிஷேக நிகழ்விலிருந்து..............





பொருளாளர் கௌரவிக்கிறார்...



பவனி...



பவனி...



பாதங்களை சுத்தம் செய்கிறோம்...



பவனி...



பக்தியுடன்...



கிரியைகள்...



எங்கள் தாய்...



பத்திப்பரவசத்தில் கண்டாமனி தந்தவள்ளலும் குடும்பமும்



பக்தர் கூட்டம்...............



கும்பத்தில் ஆவாகிக்கும் சக்தியின் சக்தி...



தீப ஒளி எம்தாய்க்கு...



பக்திப்பரவசம்...............



பக்தர் கூட்டம்....

கும்பாபிஷேக நிகழ்விலிருந்து...............








சிரம் தாழ்த்தும் தலைவரும் செயலாளரும்



மகிழ்ச்சிக் கடலில்...



எங்கள் தாய்...



பத்ததி...



கோமாதா பூசை...



பக்திப்பரவசம்...



பூ.கிருபாகரன் உவந்தளித்த மணி...





பக்திக்களிப்பில்...



பக்தர் கூட்டம்...



பாரம்பரிய இசையுடன் பத்தினியாள்...



இராஜகோபுரத்துக்கு அடித்தளமிட்டவரின் மைந்தன் உண்டியலில் பணம் இடுகிறார்..



வணங்குகிறோம் உம்மை...



யாழ் மாவட்ட அரச அதிபர் நல்கும் பாராட்டு...



கௌரவிப்பு நிகழ்வில்...



தோள்மீது வருகிறாள் துயர்துடைக்கும் அன்னை...



குருக்களுக்கான கௌரவம்..



கௌரவிப்பு நிகழ்வில்...



தாயே சரணம் அம்மா...




வள்ளல் வணங்குகிறார்...




கௌரவிப்பு...



தலைமை தலைமைக்கு...



கௌரவிப்பு...



அமுதளிக்கும் குணத்துக்கு அன்புப்பரிசு...




பூசாரியாருக்கு கௌரவிப்பு...



தீர்த்தக்குடம் சுமக்கும் செம்மலுக்கு...



முன்னாள் உதவி அரச அதிபர் கௌரவிப்பை வழங்குகிறார்



சிறப்பத்தை பேசவைக்க வர்ணம் தந்த இந்திரனுக்கு...



இளையகுருக்களுக்கு எமது கௌரவம்...



மஞ்சம் அமைத்த விஸ்வப்பிரம்மத்தில் ஒருவருக்கு எங்கள் தலைவரின் கௌரவிப்பு..



வானுயந்த கோபரத்தில் பூஜை செய்யும் அந்தணர்கள்...



செயலின் சக்காரம் சிரம்தாழ்த்துகிறது..


கலைவாணி அச்சகம்
(ஆதவன்)